# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2018

www.tnpscthervupettagam.com


















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் ....... 12**

**தமிழ்நாடு செய்திகள் ....... 26**

ஸ்வச்சதா தரவரிசை விருதுகள் 2018 ....... 26
Dr. A. எட்வின் ஜோ. குழு அறிக்கை ....... 27
தமிழ்நாடு மற்றும் ACT நிறுவனத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் ....... 27
கிராமப்புற மேம்பாட்டில் சிறந்த மாநிலம் ....... 27
உலக ஆளில்லா விமானம் மருத்துவ எக்ஸ்பிரஸ் சேலஞ்ச் 2018 ....... 28
பெரியார் பல்கலைக்கழகத்தில் AR & VR படிப்புகள் ....... 28
சயோக் ஹோப் டாக் - 2018 ....... 28
NBE-ன் ஸ்க்ரோல் ஆஃப் ஹானர் விருதுகள் ....... 28
பாலியல் தாக்குதல்/அமிலத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் திட்டம் ....... 29
கைரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பு ....... 29
புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் பேருந்து நிலையம் ....... 29
புதிய பேருந்துகள் துவக்கம் ....... 30
தாமிரபரணி மஹா புஷ்காரம் ....... 30
ஸ்மார்ட் அடையாள அட்டை ....... 31
டாக்டர் மோகன் தாரியா ராஷ்டிர நிர்மான் புரஸ்கார் விருது ....... 31
ஐஐடி மெட்ராஸ்- தமிழ்நாடு மின் நிர்வாக அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ....... 31
5வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு ....... 32
தேசிக பிரபந்த பாடல்களைப் பாட தடை ....... 32
காற்றழுத்தக் குழாய் அமைப்புகள் - தமிழ்நாடு ....... 33
உலக முதலீட்டாளர்கள் மாநாடு - தமிழ்நாடு மற்றும் ஆஸ்திரேலியா ....... 33
சூரிய ஒளிப் பூங்கா - திருச்சி ....... 33
12வது நூற்றாண்டு பாறைக் கல்வெட்டு ....... 34
பிரவீன் சித்ரவேல் ....... 34
வருகையின் போது மின்னணு நுழைவு இசைவு - மதுரை விமான நிலையம் ....... 35
மக்களுக்கான பல்லுயிர்த் தன்மையின் பதிவேடு - தமிழ்நாடு ....... 35
சென்னை வெள்ள எச்சரிக்கை அமைப்பு ....... 36
பயிற்றாசிரியர் - 365 ....... 37
பேரிடரை முன்கூட்டியே தவிர்க்க குழு அமைப்பு ....... 37
ரக்சிதா ரவி - புதிய WIM ....... 38
TN ஸ்மார்ட் ....... 38
நா.முத்துசாமி மறைவு ....... 38

**தேசியச் செய்திகள் ....... 39**

விமான பாதுகாப்பு மேற்பார்வை மதிப்பெண் ....... 39
சிகரெட் பெட்டிகளில் மிகப்பெரிய எச்சரிக்கை படம் ....... 40
கர்நாடகா நல் உதவிபுரிபவர்களுக்கான பாதுகாப்பு மசோதா 2016 ....... 40
பராகிராம் பார்வ் ....... 41
குற்றஞ்சாட்டப்பட்ட MP/MLA-க்களை தகுதி நீக்கம் ....... 41

4வது இந்திய சர்வதேச அறிவியல் விழா-IISF (India International Science Festival)....42
புகையிலை உபயோகிப்போர் அதிலிருந்து மீள்வதற்கான உதவி எண்....43
பொருளாதார சுதந்திர குறியீடு....43
சமுத்திரா மைத்ரி நடவடிக்கை....44
வீட்டுவசதி வாரிய அமைச்சகத்துடன் NAREDCO புரிந்துணர்வு ஒப்பந்தம்....44
உலகின் மிகப்பெரிய குவிமாடம் திறப்பு....45
இப்ஸமார் - VI....45
சர்வதேச சூரியசக்தி கூட்டிணைவின் முதல் கூடுகை....45
ஸ்வச் சர்வெக்ஷான் கிராமின் விருதுகள் 2018....46
மின்னணு முறையிலான வழங்கீடுகளை ஏற்றுக்கொள்ளும் அரசு தரவரிசை (GEAR)- 2018....46
உதயம் அபிலாஷா....46
திறன் இடைவெளியை குறைப்பதற்கான பணிக்குழு....47
இந்தியா-இரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையேயான 19-வது வருடாந்திர உச்சி மாநாடு....47
ஜிம்மெக்ஸ் (Jimex) - 18....48
போட்டிச் சட்டம் மறுசீராய்வு குழு....48
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பிசிசிஐ உள்ளடக்கம்....49
தூய்மையான வளாகத்திற்கான தரநிலைகள்....49
இந்தியா திறன்கள் 2018....49
கங்கை நதி நீரோட்ட இலக்கு....50
மனித நேயத்திற்காக இந்தியா....50
2018 ஆம் ஆண்டின் ஆக்ஸ்பேமின் உலக சமமின்மைக்கான குறியீடு....50
சர்வதேச மொத்த சந்தை தொழிற்சங்கத்தின் 32-வது சர்வதேச கருத்தரங்கு....51
#MeToo (நானும் கூட) குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்வதற்கான 4 உறுப்பினர்கள் கொண்ட குழு....51
இந்தியா - அமெரிக்க நாடுகளுக்கிடையேயான முதலாவது முப்படைகளுக்கான பயிற்சி....52
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம்....52
இந்த் - இந்தோ கார்பட்....53
உலகளாவிய ஆர்டிஐ மதிப்பீடு....53
ஸ்வச் பாரத் யாத்ரா....54
இளைஞர் சாலைப் பாதுகாப்பு கற்றலுக்கான உரிமத் திட்டம்....54
'சௌபாக்கியா'வின் கீழ் விருது வழங்கும் திட்டம்....54
தேசிய சுகாதார விவரம் 2018....54
வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கானத் தடைகள்....55
மிக ஆழம் செல்லும் நீர்மூழ்கி மீட்பு வாகனம்....55
2018 ஆம் ஆண்டின் சமூக தொழில் முனைவோர் (SEOY)....55
12வது ஆசிய-ஐரோப்பிய சந்திப்பு உச்சி மாநாடு....56
உலகளாவிய போட்டித்திறன் குறியீடு 2018....56
கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்துடன் லேடி இர்வின் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்....57
உலகின் மிகவும் மன அழுத்தமுடைய நாடு - இந்தியா....57
தர்மா கார்டியன்....58
வட மத்திய இரயில்வே - கைபேசி செயலிகள்....58
ஆசாத் ஹிந்த் அரசு – 75 வது ஆண்டு....59
தேசிய பிராண்டுகள் 2018 அறிக்கை....59
இந்தியாவின் மிக நீண்ட ஆற்றுப்பாலம்....60

சுரங்கத்திற்குள் அமைக்கப்பட்ட முதலாவது இரயில் நிலையம் ....61
EPFO-ன் செயல்பாடுகளை ஆய்வு செய்ய பாராளுமன்றக் குழு ....61
காப்பீட்டு கோரிக்கைகளை தவணை முறையில் செலுத்துவதை ஆய்வு செய்ய குழு ....62
இந்தியாவின் முதல் உள்நாடு சொகுசுக் கப்பல் - அங்க்ரியா ....62
பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தம் ....63
சிட்வி துறைமுகத்தை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ....63
இந்தியாவின் முதலாவது என்ஜினல்லாத இரயில் வண்டி -Train 18 ....64
நாகேஸ்வர் ராவ் - மத்தியப் புலனாய்வு அமைப்பின் இடைக்கால இயக்குநர் ....64
ஆராய்ச்சித் தொடர்பான இரண்டு திட்டங்களின் வலைதளங்கள் ஆரம்பம் ....64
QS ஆசியத் தரவரிசைகள் 2019 ....65
ஊழல் கண்காணிப்பு வாரம் 2018 ....66
சாகர் பிரசங்கம் 2.0 ....66
ஜீன் மோனட் சிறப்புத்துவ மையத்திற்கான விருது ....66
உலகின் மிக உயர்ந்த ரயில்பாதை ....66
ஸ்டேப்கார் - 2018 (STAPCOR) ....67
பள்ளிக்கூட புத்தகப்பையின் சுமையைக் குறைப்பதற்கான வல்லுநர் குழு ....67
வடகிழக்குத் திருவிழா ....68
இந்திய கைபேசி மாநாடு ....68
**சர்வதேசச் செய்திகள் ....69**
அமெரிக்கா-மெக்சிகோ-கனடா ஒப்பந்தம் (USMCA) ....69
GCTF தீவிரவாத பயண முன்முயற்சி ....69
சிரியாவிற்கு S-300 ஏவுகணை அமைப்பை வழங்கல் ....70
சுகாதாரம் மற்றும் உடல்நலம் மீதான உலகளாவிய வழிகாட்டல் ....70
உலக இணைய மாநாடு (WIC – World Internet Confernece) ....70
கௌரவக் குடியுரிமை பறிப்பு ....71
ஈராக்கின் புதிய ஜனாதிபதி ....71
அமெரிக்க உச்சநீதி மன்றத்தின் 114வது நீதிபதி ....72
தீவிரவாத நிதித்தடுப்பு மசோதா - ஈரான் ....72
முதலாவது பெண் மேஜர் ஜெனரல் - வங்க தேசம் ....72
ஐஎஸ்ஐ அமைப்பின் புதிய தலைவர் ....72
தற்கொலைத் தடுப்பிற்கான உலகின் முதல் அமைச்சர் ....73
அனைத்து குற்றங்களுக்கும் மரண தண்டனை ஒழிப்பு ....73
உலகின் மிகச்சிறந்த புத்தாக்க பல்கலைக்கழகம் ....74
வங்காள தேசத்தின் டிஜிட்டல் பாதுகாப்பு மசோதா 2018 ....74
உலகளாவியப் பட்டினிக் குறியீடு 2018 ....74
உலகின் மிகச் சிறந்த கடவுச்சீட்டு ....76
சர்வதேச இந்தியப் பெருங்கடல் மாநாடு ....77
பொழுதுபோக்குப் பயன்பாட்டிற்கான போதைப் பொருள் (கஞ்சா) ....77
உலகின் முதல் இடைநில்லா விமானம் ....78
ஃபுல்பதி திருவிழா ....78
இந்திய யுக்திகள் குழுவில் நுழைதல் - இலங்கை ....78
ஹாங்காங் - சுஹாய் - மக்காவ் பாலம் ....78
நீரிலும் நிலத்திலும் இயங்கக்கூடிய விமானம் - சீனா ....80

செயற்கை நிலவு - சீனாவின் திட்டம் ....80
அமெரிக்கத் தூதரகமும் இணைத் தூதரகமும் இணைதல் ....81
12வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு மற்றும் 5வது ADMM Plus சந்திப்பு ....81
பூடான் பொதுத் தேர்தல்கள் ....82
யுனிசெப்பின் உலகளாவிய பங்குதாரர்கள் கருத்துக் களம் ....82
ஏமனின் புதிய பிரதமர் ....82
துருஷ்பா III ....83
அயர்ன் மேஜிக் 19 ....83
இடைநிலை அணு ஆயுத (INF – Intermediate Range Nuclear Forces) ஒப்பந்தத்திலிருந்து வெளியேற முடிவு ....83
சிரியா நெருக்கடி நிலை குறித்த 4 நாடுகள் உச்சி மாநாடு ....84
கேமரூனின் ஜனாதிபதி - பால் பியா மறுமுறை தேர்ந்தெடுக்கப்படுதல் ....84
முதலாவது முத்தரப்பு சந்திப்பு - சாபஹார் துறைமுக திட்டம் ....84
தெற்காசியப் பிராந்தியத்திற்கான WASH புதுமைத் திட்டம் ....85
முதல் பெண் அதிபர் – எத்தியோப்பியா ....86
முத்தரப்பு சந்திப்பு 2018 ....87
இலங்கையின் புதிய பிரதமர் ....87
பாகிஸ்தானின் முதல் மனித விண்வெளித் திட்டம் அறிவிப்பு ....88
அயர்லாந்தின் அதிபராக மைக்கேல் டி ஹிக்கின்ஸ் மறுதேர்வு ....88
ஒரு குடையின் கீழான உலகின் மிகப்பெரிய விமானநிலையம் ....88
**பொருளாதாரச் செய்திகள் ....89**
பொருட்களின் வகையீட்டு ஒப்பந்தத்தை துவங்க முதல் பங்குச்சந்தை ....89
மையப்படுத்தப்பட்ட தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (CIMS - Centralised Information and Management System) ....90
உயர்மட்ட ஆலோசனைக் குழு ....91
ஐ.எல் அண்ட் எப்.எஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள NCLT ஒப்புதல் ....91
உலகளாவிய சிறந்த 100 பிராண்டுகள் 2018- அறிக்கை ....91
மேலாண்மையின் கீழுள்ள சொத்துக்களின் (Assets Under Management) அதிகபட்ச சராசரியைக் கொண்ட மாநிலங்கள் ....92
மின் வர்த்தக தளங்களுக்கான நெறிமுறைகள் அமைப்பு ....92
நான்காவது தொழிற்புரட்சிக்கான மையம் - இந்தியா ....92
சிந்து உணவு - II வர்த்தக கண்காட்சி ....93
CA நிறுவனத்தின் ஒன்பது உறுப்பினர்கள் குழு ....93
பேங்க் பஜார் ஆலோசகர் ....93
இந்தியாவின் முதல் இணைய சங்கேதப் பண (Cryptocurrency) தானியங்கி பணமளிப்பு இயந்திரம் (ATM) ....93
ஃபோர்ப்ஸ்-ன் உலகின் சிறந்த 2000 வேலையளிப்போர் பட்டியல் ....94
துபாய் இணைய நகரத்துடன் நான்காம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ....94
UNICITRAL மாதிரி பரிந்துரை ....95
SBI-ன் செல்வ வளமையம் திறப்பு ....96
பாதிக்கப்பட்ட சொத்துக்கள் விவகாரத்தைத் தீர்ப்பதற்காக 6 உறுப்பினர்கள் குழு ....96
7வது உலக கூட்டுறவிற்கான கண்காணிப்பு அறிக்கை 2018 ....96
மீன் பிடி மற்றும் மீன் வளர்ப்பு மேம்பாட்டு நிதி (FAIDF) ....97

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....97**

ஜப்பானின் தரையிறக்க ஊர்தி குறுங்கோளில் தரையிறக்கம் ....97
இரயில் பாரம்பரியத்தை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் ....98
மைசூரக்ஷா செயலி ....99
டிஜி யாத்ரா ....99
மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டம் ....99
பொருட்களின் இணையத்திற்கான(IOT – Internet of Things) சிறப்பு மையம் ....99
சைபர் ஷிக்ஷா திட்டம் ....100
கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை - கௌரி ....100
உலகின் முதல் உயிர் மின்னணு மருந்து ....101
ஆன்லைன் உத்தரவாத கண்காணிப்பு அமைப்பு (OAMS) ....101
இந்தியாவின் முதலாவது 2 EMV சிப்புடைய (சில்லு) டெபிட்டுடன் கூடிய கிரெடிட் அட்டை ....102
இந்தியாவின் முதலாவது தளம் - விவசாய வணிக கற்றல் ....102
செயற்கை நுண்ணறிவு செயல்படுத்தப்பட்ட மின் மட்டை (Power Bat) -மைக்ரோசாப்ட் ....102
ஆஸ்க் திஷா ....103
உலகின் அதிவேக கேமரா - டி-கப் (T-Cup) ....103
பயிர்க்கதிர்கள் எரிக்கப்படுவதைக் கண்டறிய 3 கைபேசி செயலி ....104
பீபி கொலம்போ திட்டம் ....104
இணைவு ஆற்றல் மாநாடு ....105
உலகின் மிகப்பெரிய ஆளில்லாப் போக்குவரத்து விமானம் ....106
பாலி ஆக்சைம் ....106
இளஞ்சிவப்பு சிறிய நட்சத்திரங்களிலிருந்து ஒளிக் கீற்றுகள் ....106
SPARC-ன் வலைப் பக்கம் – தொடக்கம் ....107
உயிரணு அளவிலான இயந்திர மனிதன் - சின்செல்ஸ் (Syncells) ....107
மெய்ன் நஹீம் ஹம் - தளம் மற்றும் செயலி ....108
UAE-ஆல் தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள் ....108
பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்வதற்கான முதலாவது பிரான்ஸ்-சீனா செயற்கைக்கோள் ....109

**சுற்றுச்சூழல் செய்திகள் ....110**

குடிமக்கள் அறிவியல் தளம் ....110
உலகின் மிகப்பெரிய பறவை ....110
செயற்கை கருவூட்டலைப் பயன்படுத்தி பிறந்த உலகின் முதலாவது சிங்கக் குட்டிகள் ....111
அல்போன்சா மாம்பழத்திற்கு புவிசார் குறியீடு ....111
ஆசியாவின் முதல் ஓங்கில் *(டால்பின்)* ஆராய்ச்சி மையம் ....112
இந்தியாவின் முதல் ‘மெத்தனால் சமையல் எரிபொருள் திட்டம்’ ....112
சுற்றுச்சூழல் மாசுபாடு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையம் மீண்டும் அமைப்பு ....113
சுற்றுச்சூழல் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ....113
இந்தியாவின் 2017 ஆம் ஆண்டின் சுற்றுப்புற இரைச்சல் அளவு அறிக்கை ....114
ஆபத்தான கேனைன் டிஸ்டம்பர் (Canine Distemper Virus - CDV) வைரசிற்கு எதிரான தடுப்பூசி ....114
எலிகளில் ஏற்படும் கல்லீரல் அழற்சி (Hepatitis E) உலகில் முதன்முறையாக மனிதனிடம் கண்டுபிடிப்பு ....115
திரவியாவதி நதி புனரமைப்புத் திட்டம் ....115
முதலாவது தேசிய சுற்றுச்சூழல் ஆய்வு (NES) ....116
ஹரித் தீபாவளி- ஸ்வஸ்த் தீபாவளி பிரச்சாரம் ....116
பயோஃபேக் (BIOFACH) இந்தியா ....116

மனித சிறுநீரிலிருந்து உலகின் முதல் உயிரி செங்கல் ... 117
இந்திய பாலூட்டிகளுக்கான "குடிமகன்" அறிவியல் களஞ்சியம் ... 117
**மாநிலச் செய்திகள் ... 118**
இந்தியாவின் முதல் சோள திருவிழா ... 118
மத்தியப் பிரதேசத்தின் 52வது மாவட்டம் - நிவாரி ... 118
பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா ... 119
மாநிலம் தழுவிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் ... 119
8 வது ஆசிய யோகா விளையாட்டு சாம்பியன்ஷிப் ... 119
பிரதம அமைச்சரின் குஜராத் பயணம் ... 120
உணவுப் பாதுகாப்புத் திட்டம் - ஒடிசா ... 120
நிர்மான் குசுமா திட்டம் ... 120
வறட்சி நிலையை ஆய்வு செய்வதற்கான வலைதளம் மற்றும் செயலி ... 120
ஊதிய இழப்பீட்டுத் திட்டம் ... 121
கர்நாடகாவின் உன்னதி திட்டம் ... 121
ஜம்மு காஷ்மீரில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் ... 121
பூரி ஜெகன்நாத் கோவிலில் காவல்துறை நுழைய அனுமதி மறுப்பு ... 122
நாட்டின் முதல் உயிரி எரிபொருள் ஆலை - ஒடிசா ... 122
சர்வதேச திரைப்படத் திருவிழா - கோவா ... 122
முதலமைச்சரின் நகர்ப்புற தலைவர்கள் தோழமை திட்டம் ... 123
ஹரியானாவின் முதல் மன இறுக்கத்திற்கான ஆராய்ச்சி மையம் ... 123
தரப்படுத்தப்பட்ட பதில்செயல் திட்டம் ... 123
முன் கூட்டிய எச்சரிக்கை அமைப்பு - காற்று மாசுபாடு ... 123
காத்யா சக்தி திட்டம் ... 124
பாரோசா - வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மையம். ... 124
முசாபர்பூரின் ஷாஹி லிச்சிக்கு புவிசார் குறியீடு ... 124
கோவா கடற்சார் கருத்தரங்கு 2018 ... 125
மேகாலயாவில் நீலப்புரட்சி ... 125
மனித-மிருக மோதல் இறப்புகள் மாநிலப் பேரிடராக அறிவிப்பு ... 125
புகையில்லா முதல் மாநிலம் - கேரளா ... 126
காடி பிஹூ திருவிழா ... 126
பஞ்சாபில் க்ளைபோசாட்டிற்குத் தடை ... 126
TECH 2018 ... 127
கிருஷி கும்பம் 2018 ... 127
ஒடிய மொழி மற்றும் இலக்கியங்களை ஊக்குவிக்க புதிய தளம் ... 127
ஒடிசா பேரிடர் தயார் நிலை தினம் - அக்டோபர் 29 ... 128
கோகா தாஹேஜ் ரோ-பாக்ஸ் படகுச் சேவை ... 128
**பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ... 129**
ஐ.நா அகதி விருது ... 129
சரியான வாழ்வாதாரத்திற்கான விருது (Right Livelihood Award) ... 130
2018 ஆம் ஆண்டின் உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு ... 130
சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார வல்லுநர் ... 131
சர்வதேச கோல்கீப்பர்கள் விருதுகள் ... 132
சாந்தி ஸ்வரூப் பட்னாகர் பரிசு ... 133

தேசிய சுற்றுலா விருதுகள் 2016 - 2017 ..... 134
கோவிந்தப்பா வெங்கடசாமியின் 100வது பிறந்த ஆண்டு ..... 135
நால்சாவின் நிர்வாகத் தலைவர் ..... 135
புதிய துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ..... 136
இயற்பியலுக்கான நோபல் பரிசு 2018 ..... 136
வேதியியலுக்கான நோபல் பரிசு 2018 ..... 137
ஐ.நா ஆயுதக் குறைப்பு மாநாடு - பங்கஜ் ஷர்மா ..... 138
2018 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு ..... 139
ஏகலபியா விருது - 2018 ..... 140
இந்தியாவின் தலைமைப் புள்ளியியலாளர் ..... 140
அன்னா பொலிட்கோவ்ஸ்கயா விருது ..... 140
பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு - 2018 ..... 141
ISSA நல்ல நடைமுறை விருது ..... 142
சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருது - விக்கு விநாயக ராம் ..... 142
இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குநர்கள் ..... 143
சொலிசிட்டர் ஜெனரல் - துஷர் மேத்தா ..... 143
இந்தியாவின் முதல் 'மிஸ் டிரான்ஸ் குயின்' ..... 144
FAO-ன் எதிர்கால கொள்கை விருது 2018 ..... 144
இலக்கியத்தில் புதிய அகாடமி பரிசு ..... 145
வாழ்நாள் சாதனையாளர் 2018க்கான ஹிருதயநாத் விருது ..... 145
மேன்புக்கர் பரிசு - 2018 ..... 145
விஸ்வ கொங்கணி புத்தக விருது ..... 147
கார்னட் பரிசு - பியூஷ் கோயல் ..... 147
2018 புகுவோகா கலை மற்றும் பண்பாட்டு விருது ..... 147
உலக எஃகு மன்றம் - சாஜன் ஜிண்டால் ..... 148
ஆண்டின் சிறந்த வனவிலங்கு புகைப்படக் கலைஞர் ..... 148
உஸ்தத் சந்த் கான் வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 149
ஆசிய காது கேளாதோர் அழகிப் போட்டி ..... 150
சக்தி  பட் முதல் புத்தக பரிசு 2018 ..... 150
லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது ..... 151
வியாஸ் சம்மான் விருது ..... 152
சிறப்புத்துவத்திற்கான ஐ.நா விருது ..... 152
2018 ஆம் ஆண்டு சியோல் அமைதி விருது ..... 153
ICFAவின் முதலாவது உலக வேளாண்மைக்கான பரிசு ..... 154
INSA ஆசிரியர்கள் விருது 2018 ..... 155
இலக்கியத்திற்கான JCB விருது ..... 155
அமலாக்கத் துறை இயக்குநரகத்தின் தலைவர் - சஞ்சய் குமார் மிஸ்ரா ..... 156
ஐ.நா. மனித உரிமைகள் விருது 2018 ..... 156
கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருது ..... 157
முதல்நிலை சாதனையாளர்கள் விருது 2018 மற்றும் சிறந்த சுரங்கக் கருவிகள் விற்பனை விருது ..... 158

**விளையாட்டுச் செய்திகள் .......... 159**
ஆசிய கோப்பை 2018 .......... 159
நீளம் தாண்டுதலில் ஸ்ரீசங்கர் புதிய தேசிய சாதனை .......... 159
5-வது டிராக் ஆசிய கோப்பை (சைக்கிள் போட்டி) - 2018 .......... 159
அதிக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய 2வது இந்திய வீரர் .......... 160
சர்வதேச சிலிசியான் மகளிருக்கான குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் .......... 161
வில்வித்தை உலகக் கோப்பை .......... 161
ஆசிய ஜூனியர் தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் .......... 161
2018 கோடைக்கால இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுகள் - டூடுல் .......... 162
முதல் டெஸ்ட் போட்டியில் 100 ஓட்டங்கள் எடுத்த இளம் இந்திய வீரர் .......... 162
IBSF உலக U-16 ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் .......... 162
ஜப்பானிய பார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ் .......... 162
காது கேளாதோருக்கான ICC T20 உலக கோப்பை .......... 163
ஆஸ்பின் கோப்பை - 2018 .......... 163
இளைஞர் ஒலிம்பிக்-ஜெர்மி லல்ரின்னுங்கா .......... 163
ஹால் ஆஃப் பேம் - ஆஸ்திரேலிய விளையாட்டு .......... 164
ஹர்விந்தர் சிங் - ஆசிய பாரா விளையாட்டுகள் .......... 165
துப்பாக்கி சுடுதல் - இளையோர் ஒலிம்பிக்ஸ் .......... 165
ஆசிய பாரா விளையாட்டு 2018 .......... 165
இளைஞர் ஒலிம்பிக் 2018 .......... 166
உலக சாம்பியன்ஷிப்பிற்கு தகுதிபெற்ற முதல் இந்திய மல்யுத்த வீரர் .......... 166
2019 IAAF உலக தொடர் ஓட்டம் (Relays) .......... 167
2018 சுல்தான் ஜோஹோர் கோப்பை இளையோர் ஹாக்கி .......... 167
2018 ஷாங்காய் மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டித் தொடர் .......... 168
டச்சு பாட்மிண்டன் ஓபன் 2018 .......... 168
சூரஜ் பன்வார் - நடைப் பந்தயம் .......... 168
இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுகள் 2018 .......... 168
2018 பார்முலா த்ரீ ஐரோப்பிய பந்தயம் .......... 169
அதிகமாக சம்பளம் பெறும் தடகள வீரர் .......... 169
விஜய் ஹசாரே டிராபி 2018-19 (கிரிக்கெட்) .......... 170
டென்மார்க் ஓபன் BWF சூப்பர் 750 போட்டித் தொடர் .......... 170
2018 மோட்டோ GP உலக சாம்பியன் .......... 170
சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 10,000 ரன்களை வேகமாக அடைதல் .......... 171
உலக மல்யுத்த சாம்பின்ஷிப் .......... 171
உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் 2018 .......... 172
WBL உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் 2018 .......... 173
டென்மார்க் ஓபன் .......... 173
வாலன்சியா பாதி மாரத்தான் .......... 173
ஸ்விஸ் உள்ளரங்க டென்னிஸ் .......... 174
ஆஸ்திரேலியன் மோட்டோ கிராண்ட் பிரிக்ஸ் .......... 175
கிறிஸ் எவர்ட் பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் முதலாவது உலகக் கோப்பை .......... 175
**முக்கிய தினங்கள் .......... 175**
உலக இருதய தினம் - செப்டம்பர் 29 .......... 175

சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30 ..... 176
உலக வாழ்விட தினம் - அக்டோபர் 01 ..... 176
சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01 ..... 176
சர்வதேச காபி தினம் - அக்டோபர் 01 ..... 177
சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 2 ..... 177
உலக விலங்குகள் தினம் - அக்டோபர் 04 ..... 178
உலக ஆசிரியர்கள் தினம் - அக்டோபர் 05 ..... 178
உலக விண்வெளி வாரம் (WSW - World Space Week) - அக்டோபர் 4 - 10 ..... 178
இந்திய வனவிலங்கு வாரம் - அக்டோபர் 2 - 8 ..... 179
விமானப்படை தினம் - அக்டோபர் 8 ..... 179
உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 9 ..... 179
உலக மனநல நாள் - அக்டோபர் 10 ..... 180
சர்வதேச பெண் குழந்தைகள் தினம் - அக்டோபர் 11 ..... 180
உலக உடல் பருமன் தினம் ..... 181
உலக முட்டை தினம் - அக்டோபர் 12 ..... 181
தேசிய மனித உரிமைகள் ஆணைய வெள்ளி விழா - அக்டோபர் 12 ..... 182
உலக புலம்பெயரும் பறவைகள் தினம் - அக்டோபர் 13 ..... 182
ராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸ் - அக்டோபர் 15 ..... 183
சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15 ..... 183
உலக மாணவர்கள் தினம் - அக்டோபர் 15 ..... 183
சர்வதேச உணவு தினம் - அக்டோபர் 16 ..... 184
உலக மயக்கவியல் தினம் - அக்டோபர் 16 ..... 184
வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் - அக்டோபர் 17 ..... 184
தேசிய ஆயுர்வேத தினம் - அக்டோபர் 17 ..... 185
தேசிய ஒற்றுமை நாள் - அக்டோபர் 20 ..... 186
உலக எலும்புப் புரை நாள் - அக்டோபர் 20 ..... 186
காவல்துறை நினைவு தினம் - அக்டோபர் 21 ..... 186
ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24 ..... 187
உலக வளர்ச்சிக்கான தகவல் தினம் - அக்டோபர் 24 ..... 187
உலக போலியோ தினம் - அக்டோபர் 24 ..... 187
உலக கேட்பொலிக் காட்சிக்கான பாரம்பரிய தினம் - அக்டோபர் 27 ..... 188
72வது காலாட்படை தினம் - அக்டோபர் 27 ..... 189
சர்வதேச அனிமேஷன் தினம் - அக்டோபர் 28 ..... 189
உலக பக்கவாத தினம் - அக்டோபர் 29 ..... 190
உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31 ..... 190
உலக சேமிப்பு நாள் / உலக சிக்கன நாள் - அக்டோபர் 31 ..... 191
**இதரச் செய்திகள் ..... 191**
சர்வதேச ரைபெய்சென் தொழிற்சங்கத்தின் மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்திய பெண் ..... 191
தேசிய நிதிச் செயல்பாடுகள் கண்காணிப்பு ஆணையத்தின் முதலாவது தலைவர் ..... 191
ஏரோ இந்தியா 2019 ..... 192
ஒடிசா ஹாக்கி ஆண்கள் உலகக் கோப்பைக்கான அதிகாரப் பூர்வ சின்னம் ..... 192
இந்தியாவின் மிக உயர்ந்த மூவர்ண கொடி ..... 192
உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனை ..... 192

2018 ஆம் ஆண்டில் ஹெச்-1பி விசா வைத்திருப்பவர்கள் ..... 193
இமயமலையின் 4 சிகரங்களுக்கு அடல் பிஹாரி வாஜ்பாயின் பெயர் ..... 193
விஷ்வ சாந்தி அஹிம்சா சம்மேளன் ..... 193
UTS கைபேசி செயலி (முன்பதிவு அல்லாத பயணச்சீட்டு முறை) ..... 194
மெட்ரோ ஐநாக்ஸ் ..... 194

## TNPSC துளிகள்

- தற்போது நமீபியாவிற்கான இந்திய உயர் ஆணையராக பணியாற்றும் குமார் டுஹின் (IFS:1991) அவர்கள் ஹங்கேரி குடியரசிற்கான அடுத்த தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது மியான்மருக்கான இந்திய தூதுவராக பணியாற்றும் விக்ரம் மிஸ்ரி (IFS:1989) அவர்கள் சீனாவிற்கான அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- புதுடெல்லியின் விக்யான் பவனில் எழுச்சிக்கான கல்வியில் அறிவார்ந்த தலைமைத்துவம் என்ற மாநாட்டை பிரதமர் துவங்கி வைத்தார்.
- அக்டோபர் 21-ம் தேதி நடைபெறவுள்ள டெல்லி பாதி மாரத்தான் போட்டிக்கான நிகழ்ச்சி தூதுவராக 4 முறை ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற தடகள வீரர் சான்யா ரிச்சர்ட்ஸ் - ரோஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மலிவானப் போக்குவரத்தை நோக்கிய நிலையான மாற்று வழியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு பெட்ரோலியம் மற்றும் எரிவாயு அமைச்சகமானது மலிவானப் போக்குவரத்தை நோக்கிய நீடித்த மாற்று வழி (Sustainable Alternative Towards Affordable Transportation-SATAT) என்ற முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது.
    - இந்த முன்முயற்சியானது பொதுத்துறை எண்ணெய் விற்பனை நிறுவனங்களுடன் (IOC, BPCL & HPCL) தொடங்கப்பட்டுள்ளது.
- அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி ஆணையமானது (AICTE - All India Council for Technical Education) நாட்டின் முதல் AICTE பயிற்சி மற்றும் கற்றல் (ATAL - AICTE Training and Learning) கழகத்தை ராஜஸ்தானின் தலைநகரான ஜெய்ப்பூரில் நிறுவப்பட உள்ளது. மேலும் 3 ATAL கழகங்கள் திருவனந்தபுரம் (கேரளா), கவுஹாத்தி (அஸ்ஸாம்) மற்றும் பரோடா (குஜராத்) ஆகிய இடங்களில் 2019ல் அமைக்கப்பட உள்ளன.
- 2018 செப்டம்பர் 24-ம் தேதி சிக்கிமின் முதல் விமான நிலையத்தை பிரதமர் திறந்து வைத்தார். இந்த விமான நிலையமானது இந்தியாவின் 100வது செயல்பாட்டு விமான நிலையமாகும். சிக்கிம் மட்டுமே இதுவரை செயல்பாட்டு விமான நிலையமல்லாத ஒரே மாநிலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.
- உச்ச நீதிமன்றமானது, ஒரே நேரத்தில் வழக்கறிஞர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் (MP/MLA) ஆகிய இரண்டு பணிகளை வகிப்பதை அனுமதிக்கக் கூடாது என தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை தள்ளுபடி செய்தது. மேலும் MP/MLA-க்கள் வழக்கறிஞர்களாக பணியாற்றுவதை கட்டுப்படுத்த முடியாது எனவும் தீர்ப்பளித்தது.
- மலேசியாவிலிருந்து M.V. அரேலியா என்ற சரக்கு கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 56,750 மெட்ரிக் டன் மணலை 48 மணி நேரத்திற்குள் இறக்கி சென்னை காமராஜர் துறைமுகமானது புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது.
- ஜம்மு மாவட்டத்தில் 9 மாதங்கள் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தட்டம்மை-மணல்வாரி தடுப்பூசிப் பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சாரமானது இந்தியாவில் முதல்முறையாக குழந்தைப் பருவ நோய்த்தடுப்பு திட்டத்தில் மணல்வாரி தடுப்பூசியானது அறிமுகம் செய்யப்பட்டதைக் குறிக்கிறது.
- நீலகிரி காவல் துறையானது பாரம்பரிய ‘குரும்பா’ ஓவியத்தை ஊக்குவிக்க முடிவு

செய்துள்ளது. காவல்துறையானது அழிந்துவரும் கலை வடிவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கேரள-தமிழ்நாட்டின் எல்லையில் அமைந்திருக்கும் நீலகிரி மாவட்டத்தின் வனப்பகுதிகளில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் எல்லைப்பகுதி கிராமங்களை தத்தெடுக்க உள்ளது.

- ஹரியானா அரசானது, சூரியசக்தி துறையில் அறிவியலாளர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்க இந்தியாவில் பிறந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனையின் பெயரில் கல்பனா சாவ்லா ஹரியானா சோலார் விருது என்ற விருதினை உருவாக்க முடிவு செய்துள்ளது.
- தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமானது (TRAI – Telecom Regulatory Authority of India) இந்திய டிஜிட்டல் தகவல்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் என பெயர் மாற்றப்படவுள்ளது.
- தமிழ்நாட்டின் ஏழு மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் ஆறு முதன்மை சுகாதார மருத்துவ மையங்கள் மாநில சுகாதார சேவைகளின் மேன்மைக்கான மையத்திலிருந்து தரத்திற்கான தேசிய உத்திரவாத விருதினைப் பெற்றுள்ளன.
- உத்திரப் பிரதேச மாநிலம் ராம் நகரில் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி நினைவகமான லால் பகதூர் சாஸ்திரி ஸ்மிரிதி பவன் சங்ரஹாலேவை மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் திறந்து வைத்தனர்.
- மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன (FTII - Film and Television Institute of India) சங்கத்தை உருவாக்கியுள்ளது. மேலும் நடிகை கங்கனா ரனவத், பாடகர் அனுப் ஜலோதா, பிரபல இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர்களான ராஜ்குமார் ஹிரானி மற்றும் விது வினோத் சோப்ரா ஆகியோரை மற்ற உறுப்பினர்களுடன் நியமனம் செய்துள்ளது.
  - இந்த நியமனமானது FTII-ன் தலைவராக நடிகர் அனுபம் கெர் நியமிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குப் பிறகு வந்துள்ளது.
- மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சகத்தின் இந்தியப் பழங்குடிகள் மற்றும் ட்ரைஃபெட் (Tribes India and TRIFED) அமைப்பானது 'பஞ்ச் தந்திரா சேகரிப்பை' (Punch Tantra Collection) தொடங்கியுள்ளது. மேலும் இந்திய பழங்குடியினரின் விளம்பரத் தூதுவராக மேரி கோம்-ஐ அது நியமித்துள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராஞ்சியில் 4 நாள் தேசிய இலக்கிய மற்றும் அறிவுசார்ந்த மாநாடான 'லோக் மன்தன் 2018' ஆனது (Lok Manthan 2018) துணைக் குடியரசு தலைவர் M. வெங்கையா நாயுடுவால் தொடங்கி வைக்கப்பட்டது.
- வரும் 2024-ல் நடக்கவுள்ள ஐரோப்பிய சாம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதற்கான பந்தயத்தில் ஒரே ஒரு மாற்று ஏலக்காரரான துருக்கியை வீழ்த்தி ஜெர்மனி வெற்றி பெற்றுள்ளது. இதற்குமுன் 2006 உலக கோப்பைப் போட்டியை ஜெர்மனி கடைசியாக நடத்தியது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் சென்னை விமான நிலையத்தில் எந்தத் திசையிலிருந்தும் விமானங்களானது எளிதில் ஓடு பாதையை அணுகவும் தரையிறக்கத்தை எளிதாக்கவும் உதவக்கூடிய ஒரு செயற்கைக்கோள் அடிப்படையிலான GBAS என்ற அமைப்பை அமைக்க இந்திய விமான நிலைய ஆணையம் (AAI – Airports Authority of India) திட்டமிட்டுள்ளது.

- சென்னையில் உள்ள ரியல் எஸ்டேட் நிறுவனமான அர்பன் ட்ரீ (Urban tree) என்ற அமைப்பானது அதன் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வின் ஒரு பகுதியாக ஸ்வச் சென்னை திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- புதுச்சேரி ஆளுநர் கிரண் பேடியின் அலுவலக இல்லமான ராஜ் நிவாஸ்க்கு 10,000வது வருகையாளராக லைப் ஆப் பை திரைப்படத்தின் நடிகர் அடில் ஹூசைன் ஆகியுள்ளார். இவர் பாண்டிச்சேரி சர்வதேச திரைப்பட விழாவின் அறிவுரையாளர் மற்றும் விளம்பரத் தூதுவர் ஆவார்.
    - யூனியன் பிரதேசத்தின் பாரம்பரிய கட்டிடமான ராஜ் நிவாஸ் 2017, மே 1 முதல் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக அனுமதிக்கப்பட்டது.
- மத்திய அமைச்சரவையானது அதன் முந்தைய முடிவை மறுசீரமைத்து மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரத்திற்கு பதிலாக சேஹோர் மாவட்டத்தில் (போபால்-சேஹோர் நெடுஞ்சாலை) தேசிய மனநல சுகாதார மறுவாழ்வு மையத்தை (NIMHR - National Institute of Mental Health Rehabilitation) நிறுவ முடிவு செய்துள்ளது.
    - NIMHR ஆனது நாட்டின் முதலாவது மனநல சுகாதார மறுவாழ்வு மையமாகும்.
- உலகப் பொருளாதார மன்றத்தால் (WEF - World Economic Forum) சமீபத்தில் வெளியிடப்பட்ட ‘இந்தியாவில் எதிர்கால வேலை’ என்ற அறிக்கையின்படி இந்தியாவில் அதிக வளர்ச்சியை எதிர்நோக்கும் நிறுவனங்களானது வருங்காலத்தில் பெண்களை விட ஆண்களை பணியமர்த்துவதற்கே தக்க முன்னுரிமை அளிக்கும் எனத் தெரிகிறது.
    - இந்த அறிக்கையானது WEF மற்றும் அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளை (ORF) மூலம் தயாரிக்கப்பட்டது.
- புவனேஸ்வரில் நடைபெற்ற 58வது தேசிய ஓபன் தடகள சாம்பயின்ஷிப் போட்டிகளின் ஆண்களுக்கான 3000 மீட்டர் தடை தாண்டும் பந்தயத்தில் அவினாஷ் சபில் புதிய தேசிய சாதனையைப் படைத்துள்ளார். 1981 ஆம் ஆண்டில் கோபால் சைனியின் சாதனையை இவர் முறியடித்தார்.
- நாட்டின் அச்சு தொழில் நுட்பத்தின் உச்ச அமைப்பான ‘இந்திய செய்தித்தாள் சங்கத்தின்’ (Indian Newspaper Society) தலைவராக மலையாள மனோரமாவின் நிர்வாக ஆசிரியரான ஜெயந்த் மம்மென் மேத்யூ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - இவர் பிசினஸ் ஸ்டான்டார்டு நிறுவனத்தின் அகிலா உரங்கர்-ஐ அடுத்து பதவியேற்றுள்ளார்.

- உலகப் பொருளாதார மன்றத்தால் (WEF - World Economic Forum) சமீபத்தில் வெளியிடப்பட்ட ‘இந்தியாவில் எதிர்கால வேலை’ என்ற அறிக்கையின்படி இந்தியாவில் அதிக வளர்ச்சியை எதிர்நோக்கும் நிறுவனங்களானது வருங்காலத்தில் பெண்களை விட ஆண்களை பணியமர்த்துவதற்கே தக்க முன்னுரிமை அளிக்கும் எனத் தெரிகிறது.
    - இந்த அறிக்கையானது WEF மற்றும் அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளை (ORF) மூலம் தயாரிக்கப்பட்டது.
- புவனேஸ்வரில் நடைபெற்ற 58வது தேசிய ஓபன் தடகள சாம்பயின்ஷிப் போட்டிகளின் ஆண்களுக்கான 3000 மீட்டர் தடை தாண்டும் பந்தயத்தில் அவினாஷ் சபில் புதிய தேசிய சாதனையைப் படைத்துள்ளார். 1981 ஆம் ஆண்டில் கோபால் சைனியின் சாதனையை

இவர் முறியடித்தார்.

- நாட்டின் அச்சு தொழில் நுட்பத்தின் உச்ச அமைப்பான 'இந்திய செய்தித்தாள் சங்கத்தின்' (Indian Newspaper Society) தலைவராக மலையாள மனோரமாவின் நிர்வாக ஆசிரியரான ஜெயந்த் மம்மென் மேத்யூ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - இவர் பிசினஸ் ஸ்டான்டார்டு நிறுவனத்தின் அகிலா உரங்கர்-ஐ அடுத்து பதவியேற்றுள்ளார்.
- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதியன்று ஐசிஐசிஐ வங்கியின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் நிர்வாக இயக்குநரான சந்தா கோச்சர், தனது பதவியை உடனடியாக ராஜினாமா செய்தார். இவரது பதவி விலகலைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அந்த வங்கியின் தலைமை செயல் அதிகாரியாக (100 Chief Operation Officer) நியமிக்கப்பட்ட சந்தீப் பக்ஷி, ஐசிஐசிஐ வங்கியின் புதிய மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் 2023 ஆண்டு அக்டோபர் 3 வரை 5 வருட காலத்திற்கு இப்பதவியில் நீடிப்பார்.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் கூடுதல் செயலாளராக தற்பொழுது பணியாற்றிக் கொண்டிருக்கும் மூத்த இராஜ்ஜிய அதிகாரியான சஞ்சய் வெர்மா ஸ்பெயினுக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- குரோஷியக் குடியரசுக்கான இந்தியத் தூதராக அரிந்தம் பக்சி நியமிக்கப்பட்டுள்ளார்.
- சமீபத்தில் இந்தியா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகளின் மாணவர்களுக்கிடையே புத்தாக்க ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக இந்தியாவின் அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் இரஷ்ய கூட்டமைப்பின் சைரஸ் (SIRIUS) ஆகிய இரண்டும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்திய தேசிய பங்குச் சந்தையின் மேலாண் இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலரான விக்ரம் லிமாயே, சர்வதேச தொழிற்துறை அமைப்பான சர்வதேச சந்தைக் கூட்டமைப்பினால் (WFE - World Federation of Exchange) அம்மன்றத்தின் இயக்குநர் மற்றும் பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இம்முடிவு கிரீஸ் நாட்டில் ஏதென்ஸில் நடைபெற்ற சர்வதேச அமைப்பின் 58வது பொதுச் சபை மற்றும் வருடாந்திரக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.
- அக்டோபர் 05 அன்று இமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் பொறுப்பேற்றார். அம்மாநில ஆளுநர் ஆச்சார்யா தேவ்ராத் -ஆல் இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
- இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் 10-வது பதிப்பான "இந்தியா செம் 2018" மும்பையில் நடைபெற்றது. இது இந்தியாவில் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய வேதிப்பொருட்கள் தொழிற்துறையின் மிகப்பெரிய நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி அக்டோபர் 4 முதல் அக்டோபர் 6 வரை நடைபெற்றது.
- புகழ்பெற்ற சர்வதேச குளிர்பான நிறுவனமான பெப்சிகோவின் தலைமை நிர்வாக அதிகாரியாக (6-வது) ராமோன் லகுவார்டா பொறுப்பேற்றார். இதற்குமுன் அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இந்தியாவில் பிறந்த இந்திரா நூயி 12 ஆண்டுகள் பதவி வகித்தார்.
  - பெப்சிகோ நிறுவனம் தொடங்கி 41 ஆண்டு கால வரலாற்றில் இந்திரா நூயி 2006

ஆம் ஆண்டில் அந்நிறுவனத்தின் 5-வது தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அந்நிறுவனத்தின் முதலாவது பெண் தலைமை நிர்வாக அதிகாரியாக பணியாற்றியவர் இந்திரா நூயி ஆவார்.

❖ 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் சிம்லாவில் “தடுப்புக் காவலில் பெண்கள் மற்றும் நீதிக்கான அணுகல்” மீதான முதலாவது பிராந்தியக் கருத்தரங்கு மத்திய உள்துறை அமைச்சகத்தின் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (BPR & D - Bureau of Police Research and Development) நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கு இமாச்சலப் பிரதேச சிறைத் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டது.

❖ சமீபத்தில் காவல் நிலையத்தில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்தியதற்காகவும் தூய்மையைப் பராமரித்ததற்காகவும் வடபழனி காவல் நிலையத்திற்கு ISO தரச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

❖ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின்படி, உத்தரப் பிரதேசத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அலைபேசிகளில் பொருத்தப்பட்டுள்ள “அவசர கால பொத்தான்” (Panic button) சோதனைத் திட்டம் முழுமையாக வெற்றி பெற்றுள்ளது.

❖ 2019 ஆம் ஆண்டு மார்ச் 30 முதல் ஏப்ரல் 14 வரை நடைபெறவிருக்கும் 36-வது தேசிய விளையாட்டுகளை கோவா மாநிலம் நடத்தவிருக்கிறது.

❖ ஜெய்ப்பூரில் இந்தியப் பொலிவுறு நகரங்களுக்கான கண்காட்சியை (Smart City Expo India) துணை குடியரசுத் தலைவர் எம். வெங்கய்யா நாயுடு துவக்கி வைத்தார்.

❖ மத்திய அரசு இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர்கள் ஏற்படும்போது வருவாய் திரட்டும் மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக பீகார் துணை முதல்வர் சுஷில் மோடி தலைமையில் 7 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைக் குழுவை ஏற்படுத்தியுள்ளது.

❖ போர்ச்சுக்கீசிய சுற்றுச்சூழல் அமைச்சகமும் கோவா பொதுப்பணித் துறையும் இணைந்து குடிநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளன.

❖ அக்டோபர் 6 முதல் 18 ஆம் தேதி வரை பியுனஸ் அயர்ஸில் நடைபெற உள்ள 3வது இளைஞர் ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய அணிக்காக கொடியைத் தாங்கிச் செல்லும் வீரராக இளம் துப்பாக்கி சுடுதல் வீரரான மனு பக்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ தேசியத் தூய்மை கங்கைத் திட்டமானது (NMCG - National Mission for Clean Group) டாடா எஃகு சாகச மன்றத்துடன் இணைந்து 1 மாத கால படகுப் பயணத்தைத் தொடங்கியது. இந்தப் படகுப் பயணமானது எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது இந்தியப் பெண்மணியான பச்சேந்த்ரி பால் தலைமையில் நடைபெறுகிறது.

  - இந்தப் பயணமானது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 5-ல் ஹரித்துவாரில் தொடங்கி பீகாரின் பாட்னாவில் நிறைவடையவிருக்கிறது.

❖ நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் 36வது தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக ராகேஷ் குமார் பொறுப்பேற்றுள்ளார்.

❖ சர்வதேச கிரிக்கெட் குழுமமானது (ICC - International Cricket Council) ஆட்ட நிபந்தனைகளை மேம்படுத்தப்பட்ட டக்வொர்த்-லெவிஸ்-ஸ்டென் (DLS/ Duckworth-Lewis-Stern) முறைகளுடன் புதிய ICC நடத்தை விதிமுறைகள் மற்றும் ICC விளையாட்டு விதிமுறைகளை

வெளியிட்டுள்ளது.

- இது செப்டம்பர் 30 அன்று தென் ஆப்பிரிக்கா மற்றும் ஜிம்பாபே அணிகளுக்கிடையே கிம்பெர்லியில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நடைமுறைக்கு வந்தது.

❖ Paytm ஆனது செப்டம்பர் மாதத்தில் 13 மில்லியன் UPI பரிவர்த்தனைகளை பதிவு செய்துள்ளது. ஒட்டுமொத்த சந்தைப் பங்குகளில் 33% உடன் ஒருங்கிணைக்கப்பட்ட பணவழங்கீட்டு இடைமுக (UPI - Unified Payments Interface) செலுத்தல்களில் முன்னணிப் பங்களிப்பாளராக அது உருவெடுத்துள்ளது.

❖ 'விளக்குடன் பெண்' என்று அறியப்படும் 'நம்பிக்கையின் ஒளி' (Glow of Hope) உருவப்பட ஓவியத்தில் விளக்கை வைத்திருக்கும் பெண்மணியான கீதா உப்லேக்கார், தனது 102வது வயதில் காலமானார்.

❖ மகாத்மா காந்தியின் பிறந்த நாளையொட்டி அசாம் மாநிலமானது இந்தியாவின் மூன்றாவது பெரிய மற்றும் நகரத்தின் சராசரி உயரத்திலிருந்து மிகவும் உயர்ந்த தேசியக் கொடியை பறக்க விட்டது.

- நகரத்தின் சராசரி உயரத்திலிருந்து 319.5 அடி உயர கொடிக் கம்பமான இது நாட்டின் மிக உயரமானது ஆகும்.

❖ கூகுள் நிறுவனமானது அதன் அதிகமாக பயன்படுத்தப்படாத சமூக வலைதளமான கூகுள் பிளஸ்ஸின் (Google +) நுகர்வோர் பதிப்பை மூடவுள்ளது.

❖ ஏர் ஆசியா இந்தியாவின் புதிய தலைமை நிர்வாகி மற்றும் நிர்வாக இயக்குநராக சுனில் பாஸ்கரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

    - ஏர் ஆசியா நிறுவனமானது டாடா குழுமம் மற்றும் மலேசியாவின் ஏர் ஆசியா பெர்ஹாட் நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுச் சொந்தமாக உள்ளது.

❖ நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG - Sustainable Development Goals) இந்தியாவின் முதலாவது ஐக்கிய நாடுகளின் இளம் வணிக சாம்பியனாக கிர்லோஸ்கர் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலரான மானாசி கிர்லோஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் மிகவும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்திய "வண்ணத்துப்பூச்சி" என்று இந்தியில் பொருள் கொண்ட "டிட்லி" புயல் "மிகவும் கடுமையான சூறாவளிப் புயல்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கிடையேயான "2 + 2" செயலாளர் நிலையிலான பேச்சுவார்த்தையின் 2-வது பதிப்பு கான்பெராவில் நடைபெற்றது.

❖ புது தில்லியில் 29 வது கணக்குத் தணிக்கையாளர் மாநாடு (Accountant General Conference) குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்-ஆல் தொடங்கி வைக்கப்பட்டது. இரு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கானது இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரால் (Comptroller and Auditor General of India) ஒருங்கிணைக்கப்பட்டது.

❖ மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் (Ministry of Environment and Forests and Climate Change - MoEFCC) மற்றும் உலக வங்கி ஆகியவை கூட்டாக இணைந்து 'நாட்டில் காட்டுத்தீ மேலாண்மையை வலுப்படுத்துதல்' மீதான அறிக்கையை வெளியிட்டன.

- தேசிய, மாநில மற்றும் உள்ளூர் நிலைகளில் காட்டுத்தீ தடுப்பு மற்றும் மேலாண்மை மீதான கொள்கைகள் குறித்து இந்த அறிக்கை விவாதிக்கிறது.

❖ 2018 ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் விவசாய அமைப்பின் "விஷன் விருது" ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பினால் உருவாக்கப்பட்ட "சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்க பொருளாதாரத்தின்" (TEEB- The Economics of Ecosystem and Biodiversity) முன்முயற்சியான "TEEBAgriFood" என்ற முயற்சிக்கு வழங்கப்பட்டது.

- TEEBAgriFood ஆனது உணவு முறைகளை மேலும் துல்லியமாக மதிப்பிடுவதற்காக விரிவான மதிப்பாய்வு செயல்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

❖ நாட்டின் முதலாவது தொழில்முனைவு தொழில்நுட்ப மையமான இந்திய - இஸ்ரேல் புத்தாக்க மையம் (IIIC - India - Israel Innovation Centre) பெங்களூருவில் தொடங்கப்பட்டது. IIIC என்பது இந்தியாவில் இஸ்ரேல் நிறுவனங்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கான குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

❖ ஜம்முவில் உள்ள ஜம்மு மத்தியப் பல்கலைக்கழகத்தில் (CUJ - Central University of Jammu) விண்வெளி அறிவியலுக்கான சதீஷ் தவான் மையம் அமைப்பதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) ஜம்மு மத்திய பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- ஜம்மு காஷ்மீரில் இந்த வகையான மையம் அமைவது இதுவே முதல்முறையாகும்.

❖ டெல்லி அரசாங்கமானது அடுத்த 3 ஆண்டுகளுக்கு சுற்றுச்சூழல், கலாச்சாரம் மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு நல்கிட மாஸ்கோ அரசாங்கத்துடன் இரட்டை நகர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

❖ பிராந்தியப் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தின் (Regional Comprehensive Economic Partnership - RCEP) 6வது பிராந்தியங்களுக்கிடையேயான அமைச்சரவை நிலையிலான சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெற்றது.

❖ நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது டாக்டர் சேகர் மண்டே-வை அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தின் (CSIR - Council of Scientific and Industrial Research) பொது இயக்குநர் மற்றும் அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறையின் செயலாளராக (DSIR - Department of Scientific and Research) நியமித்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பரில் இப்பதவி வகித்த கிரிஷ் சஹினி வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ பெருநகர நொய்டாவின் இந்திய கண்காட்சி மற்றும் சந்தையில் உலகின் மிகப்பெரிய ஐஎச்ஜிஎப்-தில்லி கண்காட்சியின் 46வது பதிப்பு நடைபெற்றது. ஐஎச்ஜிஎப் (IHGF) கண்காட்சியானது கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி ஊக்கமளிப்பு ஆணையத்தால் ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தப்படுகிறது.

❖ மத்திய தகவல் ஆணையத்தின் (CIC - Central Information Commission) 13வது மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது. இம்மாநாடு குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த்-ஆல் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ இந்தியா மற்றும் அசர்பைஜான் ஆகிய நாடுகள் வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான நெறிமுறையில் கையெழுத்திட்டுள்ளன. இது புது தில்லியில் நடைபெற்ற இந்திய-அசர்பைஜான் நாடுகளுக்கிடையேயான

ஆணையத்தின் 5வது சந்திப்பின்போது கையெழுத்திடப்பட்டது.

❖ இந்தியப் பிரதமர், விவசாயத் தலைவரான சர் சோட்டு ராம் என்பவரின் 64 மீ உயரம் கொண்ட உருவச் சிலையை ஹரியானாவின் ரோத்தாக் மாவட்டத்தில் அவரது சொந்த ஊரான சம்பலா கிராமத்தில் திறந்து வைத்தார். இச்சிலை புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் மற்றும் பத்ம பூஷன் விருது பெற்றவரான ராம் வன்ஜி சுதர் என்பவரால் வடிவமைக்கப்பட்டது.

❖ ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியானது (OED - Oxford English Dictionary) ‘Idiocracy’ என்ற சொல்லை அதிகாரப்பூர்வமாக அதனுள் இணைத்தது. OED-ன் சமீபத்திய புதுப்பித்தலில் சேர்க்கப்பட்ட 1400 புதிய வார்த்தைகள், இயலுணர்வுகள் மற்றும் சொற்றொடர் ஆகியவற்றில் இதுவும் ஒன்றாகும். மேலும் OED ஆனது ‘trapo’ என்ற வார்த்தையையும் சேர்த்துள்ளது.

  - Idiocracy - சமூகமானது முட்டாள்கள் என்று கருதப்பட்ட மக்கள் அல்லது அறிவற்ற, ஒதுக்கப்பட்ட/மூடத்தனமாக என்று கருதப்பட்ட மக்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கம் ஆகியவற்றைக் கொண்டது அல்லது அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.
  - Trapo - வழக்கமான மற்றும் ஊழல் நிறைந்த ஆளும் வர்க்கம் சார்ந்ததாக உணரப்பட்ட அரசியல்வாதிகள்.

❖ புது தில்லியின் பிரகதி மைதானில் இந்திய சர்வதேச ஜவுளி கண்காட்சியானது மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணியால் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR - National Commission for Protection of Child Rights) புதிய தலைவராக பிரியங்க் கானூங்கோ நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 3 ஆண்டுகள் இந்த ஆணையத்தின் தலைவராக பணியாற்றுவார். சமீபத்தில் இப்பதவி வகித்த ஸ்துதி காக்கரின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

  - குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம், 2005-ன் கீழ் 2007 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் மூலம் இயற்றப்பட்ட சட்டத்தினால் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது. NCPCR ஆனது தன்னாட்சி பெற்ற சட்டபூர்வமான அமைப்பாகும்.

❖ இந்தியா, சீனா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான மும்முனை ஒத்துழைப்பின் கீழ் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்து முதலாவது கூட்டுத் திட்டமான ஆப்கானிஸ்தான் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கின.

❖ புது தில்லியின் பிரகதி மைதானில் இந்திய சர்வதேச ஜவுளி கண்காட்சியானது மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணியால் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR - National Commission for Protection of Child Rights) புதிய தலைவராக பிரியங்க் கானூங்கோ நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 3 ஆண்டுகள் இந்த ஆணையத்தின் தலைவராக பணியாற்றுவார். சமீபத்தில் இப்பதவி வகித்த ஸ்துதி காக்கரின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

  - குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையச் சட்டம், 2005-ன் கீழ் 2007 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் மூலம் இயற்றப்பட்ட சட்டத்தினால் இந்த ஆணையம்

அமைக்கப்பட்டது. NCPCR ஆனது தன்னாட்சி பெற்ற சட்டபூர்வமான அமைப்பாகும்.

- இந்தியா, சீனா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான மும்முனை ஒத்துழைப்பின் கீழ் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்து முதலாவது கூட்டுத் திட்டமான ஆப்கானிஸ்தான் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கின.
- இங்கிலாந்து அரசால் இந்த ஆண்டில் உலகின் முதல் தனிமைக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ட்ரேசே குரோச், தனிமைப்படுத்தும் கொடுமையை எதிர்த்து தனது முதல் தனிமை-எதிர்ப்பு மூலோபாயத்தை தொடங்கவுள்ளார்.
- ஐசிஐசிஐ ப்ருடென்ஷியல் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான நிமேஷ் ஷா, இந்தியாவின் பரஸ்பர நிதியகங்களின் சங்கத்தின் (Association of Mutual Funds in India -AMFI) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் ஆதித்யா பிர்லா சன் லைப் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான பாலசுப்பிரமணியனுக்குப் பதிலாக பதவியேற்றுள்ளார்.
- இந்திய கட்டிடத் துறையில் புதுமையான அமைப்புகள் மற்றும் கட்டுமான நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னோடியாக இருந்த அனுமோலு ராமகிருஷ்ணாவின் சுயசரிதையான ‘பில்டிங் எ லெகஸி’ (Building a Legacy) எனும் புத்தகத்தை குடியரசு துணைத் தலைவர் வெளியிட்டார்.
    - இப்புத்தகமானது பட்டயக் கணக்கரான V. பட்டாபி ராம் என்பவரால் எழுதப்பட்டது.
- உத்திரப்பிரதேச அமைச்சரவையானது வரலாற்று சிறப்பு மிக்க நகரமான அலகாபாத்தை பிரயாக்ராஜ் என மறுபெயரிட ஒப்புதல் அளித்துள்ளது. இந்த புதுப்பெயரானது மாநிலத்தில் பாயும் 3 நதிகள் சந்திக்குமிடமான பிரயாக் என்ற இடத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.
- டொமினிகன் குடியரசில் நடைபெற்ற சாண்டோ டோமிங்கோ ஓபன் கோப்பையை இந்தோ-மெக்சிகன் ஜோடியான லியாண்டர் பயஸ் மற்றும் மிகுவேல் ஏஞ்சல் ரேய்ஸ்-வரேலா ஜோடி வென்றுள்ளது.
- மைக்ரோசாப்டின் இணை நிறுவனரான பால் ஆலன் தனது 65வது வயதில் காலமானார்.
- ஹெம்டி குளோபல் என்ற நிறுவனம் இந்தியாவில் நோக்கியா கைபேசிகளுக்கான தூதராக பாலிவுட் நடிகை ஆலியா பட்டை நியமித்திருக்கின்றது.
    - ஹெம்டி குளோபல் ஆனது நோக்கியா பிராண்டுகளின் கீழ் கைபேசிகளின் வடிவமைப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றை மேற்கொள்கிறது.
- ஜெர்மனியைத் தலைமையிடமாகக் கொண்ட, நுகர்வோருக்கான டிஜிட்டல் கடன் தளமான கிரெடிடெக் நிறுவனம் இந்தியாவில் வங்கி சாரா நிதி நிறுவனமாக செயல்படுவதற்கான அனுமதியை இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்துப் பெற்றுள்ளது.
- சந்தா கோச்சாரின் ராஜினாமாவிற்குப் பிறகு, ஐசிஐசிஐ வங்கியின் தலைமை செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் பதவிக்கு சந்தீப் பக்ஷியின் நியமனத்தை இந்திய ரிசர்வ் வங்கி மூன்று வருட காலத்திற்கு அங்கீகரித்து இருக்கின்றது.
- பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் ஏவுகணை நாயகரான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 87வது பிறந்த தினத்தை

முன்னிட்டு (2018 அக்டோபர் 15) "கலாமின் பார்வை - கனவிற்கான தைரியம்" என்ற கருத்தின் அடிப்படையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தின் இணைய தளத்தை நாட்டிற்காக அர்ப்பணித்தார்.

❖ ஆசியாவிலிருந்து அதிகபட்சமாக ரன்கள் குவித்த டெஸ்ட் போட்டிக்கான அணித் தலைவராக பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கை விராட் கோலி முந்தினார்.

❖ வங்கிகளில் வைப்புத் தொகையாக உள்ள கருப்புப் பணம் தொடர்பான தகவல்களை அணுகிட சுவிட்சர்லாந்திற்குப் பிறகு லிச்டென்ஸ்டீன் நாட்டுடன் நிதிக் கணக்குத் தகவல்களுக்கான தானியங்கி பரிமாற்ற ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு உள்ளது.

❖ பருவநிலை மற்றும் பேரிடர் பாதிப்புகளால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் ஜெர்மனி மற்றும் ஐக்கியப் பேரரசு அரசுகள் ஒரு புதிய உலகளாவிய பேரிடர் தடுப்பு நிதி வசதியை ஆரம்பித்திருக்கின்றன.

❖ சமூக தொழில் முனைவரான சுஹைல் F. தாண்டடன், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் விளையாட்டு மற்றும் சமூக செயற்சங்க குழுவின் கிராண்ட் விருதினை தனது விளையாட்டு அபிவிருத்திற்கான பங்களிப்பிற்காக வென்றுள்ளார்.

   ○ இவர் ப்ரோ ஸ்போர்ட் டெவலப்மெண்ட் (PSD - Pro Sport Development) நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் மார்த்தா ஃபரேல் பவுண்டேஷனின் நிர்வாக இயக்குநர் ஆவார்.

❖ நோக்கியாவின் சென்னை ஆலையில் அதிக திறன் வாய்ந்த செயல்பாட்டுத் திறனை செயல்படுத்துவதற்காக 4G LTE தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் மற்றும் ஆலையை 5G சகாப்தத்திற்காக ஸ்மார்ட் தயாரிப்புடன் உருவாக்குவதற்காகவும் நோக்கியாவும் அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் நிறுவனமும் கூட்டிணைவதாக அறிவித்துள்ளன.

❖ துப்புரவு, குடிநீர், சுகாதாரம், குழந்தைகள் நலம், மகப்பேறு ஆரோக்கியம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக நீலகிரி மாவட்டமானது JRD டாடா நினைவு விருதைப் பெற்றுள்ளது.

   ○ இந்த விருதானது 1997 ஆம் ஆண்டில் சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களை கவுரவிப்பதற்காக இந்திய மக்கள் தொகை நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

❖ உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தரகண்ட் மாநில முன்னாள் முதல்வரான நாரயண் தத் திவாரி தனது 93வது வயதில் புது டெல்லியில் காலமானார். இரண்டு மாநிலங்களில் முதல்வராக பணியாற்றிய ஒரே அரசியல்வாதி இவரேயாவார்.

   ○ இவர் உத்திரப் பிரதேசத்தில் மூன்று முறை முதல்வராகவும் உத்தரகண்ட் மாநிலத்தின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராகவும் இருந்தவராவார். இவரது பிறந்த தேதியும் இறந்த தேதியும் ஒன்றாகும்.

❖ 'பிராக்ரிதி' திட்டத்தைத் துவங்குவதற்காக இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வியல் மன்றமானது (ICFRE - Indian Council of Forestry Research and Education) கேந்திரிய வித்யாலா சங்கதன் (KVS - Kendriya Vidyalaya Sangathan) மற்றும் நவோதயா வித்யாலா சமிதி (NVS - Navodaya Vidyalaya Samiti) ஆகியோருடன் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில்

கையெழுத்திட்டுள்ளது.

- ○ இந்த இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் 10 ஆண்டு காலத்திற்கு கையெழுத்தாகியுள்ளன.

❖ டிஜிட்டல் பாதுகாப்பு நிறுவனமான ஜெமால்ட்டோ ஆனது பொதுமக்கள் தரவு மீறல்களின் நிலை குறித்த உலகளாவிய தரவு தளமான மீறல் நிலை குறியீட்டின் (Breach Level Index) சமீபத்திய கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளது. இந்தக் குறியீடானது தரவு மீறல் அடிப்படையில் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக 2-ம் இடத்தில் இந்தியாவை மதிப்பிட்டுள்ளது.

❖ டிசம்பர் மாதம் சீனாவின் செங்டு பகுதியில் இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையே ஹேண்ட்-இன்-ஹேண்ட் இராணுவப் போர் பயிற்சியின் 7வது பதிப்பு மீண்டும் தொடங்க உள்ளது. 2017-ம் ஆண்டில் டோக்லாம் சிக்கலுக்குப் பிறகு இந்த வருடாந்திரப் பயிற்சியானது ரத்து செய்யப்பட்டது.

❖ காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரான சசிதரூர் தனது புதிய புத்தகமான ‘முரண்பாடான பிரதம அமைச்சர்’ என்ற புத்தகத்தை “ப்ளோச்சிநௌசினிஹிலிபிலிஃபிகேஷன்” என்ற 29 எழுத்துக்கள் கொண்ட வார்த்தையுடன் அறிமுகப்படுத்தினார்.

- ○ இந்த floccinaucinihilipilification என்ற வார்த்தையானது ஏதேனும் ஒன்றை மதிப்பற்றது என மதிப்பிடும் நடவடிக்கை அல்லது பழக்கம் என பொருள்படும்.

❖ சமீபத்தில் நடந்து முடிந்த பாரா ஆசியன் விளையாட்டுகள் 2018ல் தமிழ்நாட்டைச் சேர்ந்த K. ஜெனிதா அண்டோ பெண்கள் ஒற்றையர் பிரிவு விரைவு P1 சதுரங்க போட்டியில் இந்தோனேசியாவின் மனுரங்க் ரோஸ்லிண்டாவை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றார்.

❖ மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானத்தின் (ம.பொ.சி) சுயசரிதையான ‘எனது போராட்டம்’ என்ற புத்தகத்தை சமீபத்தில் சென்னையில் இந்தியக் குடியரசு துணைத் தலைவர் வெளியிட்டார். மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் அவர்கள் ம.பொ.சி மற்றும் சிலம்பு செல்வர் என அன்புடன் அழைக்கப்படுகிறார்.

❖ ஸ்டீபன் ஹாக்கின்ஸின் கடைசிப் புத்தகமான “பெரு வினாக்களுக்கான சிறு விடைகள்” (Brief Answers to the Big Questions) என்ற புத்தகம் அவரது இறப்பிற்குப் பின்பு சமீபத்தில் வெளியிடப்பட்டது.

❖ பிரதம அமைச்சர் புது தில்லியில் நடைபெற்ற தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (NDMA - National Disaster Management Authority) 6வது கூட்டத் தொடருக்குத் தலைமை தாங்கினார்.

❖ பிரதம அமைச்சர் புதுதில்லியில் தேசிய காவல்துறை நினைவு தின விழாவின்போது (அக்டோபர் 21 அன்று அனுசரிக்கப்பட்டது) தேசிய காவலர் நினைவகத்தை திறந்து வைத்து (NPM - National Police Memorial) நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

❖ இந்திய அமெரிக்கரான மினல் படேல் டேவிஸ் ஆள் கடத்தலை எதிர்த்து போராடியதற்காக ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆட்கடத்தலுக்கு எதிராக மிகச் சிறப்பான பங்களிப்பை அளித்ததற்காக அமெரிக்க செயலாளர் மைக் போம்பியோவால் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

- ○ இது இந்தத் துறையில் அமெரிக்காவின் உயரிய விருதாகும்.

❖ கஜகஸ்தானின் தலைநகரான அஸ்தானாவில் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் (Shanghai

Cooperation Organisation - SCO) உறுப்பு நாடுகளின் கல்வி அமைச்சர்களுக்கிடையேயான 7வது கூட்டம் நடைபெற்றது.

- பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக சுதா என்ற மாணவி உருவாக்கிய ரௌத்திரம் எனும் கைபேசி செயலியை நடிகரும் அரசியல்வாதியுமான கமல்ஹாசன் துவக்கி வைத்தார். இது அவசர காலங்களில் பெண்களுக்கு உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1971 ஆம் ஆண்டு முதல் நடத்திய புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களின் நேர்காணல்களின் தொகுப்பை புத்தகமாக "இந்திய விளையாட்டுக்கள்: உரையாடல்கள் மற்றும் பிரதிபலிப்புகள்" என்ற பெயரில் மூத்த விமர்சகர் மற்றும் கிரிக்கெட் புள்ளியியலாளரான விஜயன் பாலா வெளியிட்டுள்ளார்.
- இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவை இருதரப்பு விமானப்படை பயிற்சியான 'கோப் இந்தியா" என்ற பயிற்சியை முத்தரப்பு வடிவத்திற்கு மாற்றுவதற்காக முனைந்துள்ளன. ஏற்கனவே மூன்று நாடுகளும் விரிவுபடுத்தப்பட்ட மலபார் கடற்படை போர்ப்பயிற்சியின் கீழ் கடற்படை பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.
- Paytm நிறுவனமானது சாப்ட் பேங்க் கார்ப்பரேஷன் மற்றும் யாஹூ ஜப்பான் கார்ப்பரேஷன் உடன் இணைந்த கூட்டு முயற்சியாக பேபே (PayPay) என்ற QR குறியீட்டு அடிப்படையிலான திறன்பேசி பணவழங்கீட்டு சேவையை ஜப்பானில் அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இந்த தொடக்கத்தின் மூலம், யாஹூ ஜப்பான் ஆனது தனது தற்போதைய திறன்பேசி தீர்வு செயல்பாடான யாஹூ பணப்பை (Wallet) சேவையை நிறுத்துகிறது.
- தி ஹிந்து வெளியீட்டாளர் குழுமத்தின் இயக்குநர்கள் குழு உறுப்பினர்கள், ஒருமனதாக சுரேஷ் நம்பாத்தை தி ஹிந்துவின் பதிப்பாசிரியராக நியமித்துள்ளனர், இது மார்ச் மாதம் 1, 2019 முதல் அமலுக்கு வரவுள்ளது. இவர் முகுந்த் பத்மநாபனுக்கு அடுத்து பதவியேற்கவுள்ளார்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (RIL - Reliance Industries Ltd) ஆனது பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவர் அருந்ததி பட்டாச்சார்யாவை தனது நிறுவனத்தின் தனிச் சுதந்திரமுடைய இயக்குநராக அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு நியமித்துள்ளது.
    - நிதா அம்பானிக்குப் பிறகு ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்க்கு நியமிக்கப்பட்ட இரண்டாவது பெண் இயக்குநர் பட்டாச்சார்யா ஆவார்.
- அக்டோபர் 26 முதல் நவம்பர் 4 ம் தேதி வரை இந்தியப் பெண்கள் இயற்கை விவசாயத் திருவிழாவின் 5வது பதிப்பு புதுடெல்லியில் நடைபெறவுள்ளது. இது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால், பெண் இயற்கை விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- SME-க்களுக்கான (சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்/ Small and Medium Enterprises) ஐரோப்பிய மாநாட்டின் 8வது பதிப்பு போலந்து நாட்டின் கோடாவைஸ் நகரத்தில் "Business-Self-Government Together for Economy" என்ற கருத்துருவுடன் நடைபெற்றது.
    - திருமதி அல்கா அரோரா (MSME அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர்) 32 SME-க்களின் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமை தாங்குகின்றார்.

- உத்தரகண்ட் உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான விஜய் குமார் பிஸ்த் சிக்கிம் உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தனியார் உயிர்க் காப்பீட்டு நிறுவனமான பிஎன்பி மெட்லைப் என்ற நிறுவனமானது தனது பாலிசிதாரர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு 'குஷி' (Kushi) என்ற செயற்கை நுண்ணறிவால் செயல்படுத்தப்படும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அமெரிக்காவின் தொழிலாளர் துறையிடம் உள்ள தகவலின்படி, 2018 ஆம் நிதியாண்டில் H-1B நுழைவு இசைவிற்கான (விசா) அயல்நாட்டு தொழிலாளர் சான்றிதழைப் பெற்ற முதல் 10 நிறுவனங்களில் இந்தியாவைச் சேர்ந்த டாடா கன்சல்டன்சி சர்வீஸ் என்ற நிறுவனம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.
- 2018ம் ஆண்டின் WETEX கண்காட்சி (WETEX - Water, Energy, Technology and Environment Exhibition/ நீர், ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் கண்காட்சி) துபாயில் உள்ள துபாய் சர்வதேச கண்காட்சி மையத்தில் தொடங்கியிருக்கின்றது.
- சர்வதேச நடனத் திருவிழாவான 'உத்பாவ் உத்சவ்' (2018) என்பதின் 15வது பதிப்பு மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் நடத்தப்பட்டது.
- இந்திய அரசானது பணியிடத்தில் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளான விவகாரங்கள் தொடர்பான சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக நடைமுறைகளை ஆய்வு செய்ய அமைச்சர்கள் குழு ஒன்றை சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளது.
    - இக்குழு மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கால் தலைமை தாங்கப்படும்.
- குடியரசுத் தலைவர் டெல்லியில் சர்வதேச ஆர்ய மகா சம்மேளனம் - 2018 என்ற மாநாட்டைத் துவக்கி வைத்தார்.
- மத்திய அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணையமைச்சர் (தனிப் பொறுப்பு) டாக்டர் ஜித்தேந்திர சிங் புது தில்லியில் 10வது அணுசக்தி மாநாட்டை துவக்கி வைத்தார். இதற்கான கருத்துரு - "அணுசக்தி - சுத்தமான மற்றும் அடிப்படையான ஆற்றல்" என்பதாகும்.
    - இது இந்திய ஆற்றல் மன்றத்தால் (Indian Energy Forum – IEF) ஏற்பாடு செய்யப்பட்டது.
- நாசா விஞ்ஞானிகள் 21 கூறுகள் கொண்ட ஒரு புதிய அதி நவீன காமாக் கதிர்கள் கூட்டமைப்பை உருவாக்கியிருக்கின்றனர். அதற்கு கற்பனைக் கதாபாத்திரங்களின் பெயர்களான ஹல்க் மற்றும் காட்ஜில்லா என்று பெயரிட்டுள்ளனர். மிகவும் புகழ்பெற்ற மைல்கற்களான வாசா என்ற சுவீடனின் மீட்டெடுக்கப்பட்ட போர்க் கப்பல், வாஷிங்டன் நினைவுச் சின்னம் மற்றும் ஜப்பானின் ப்யூஜி எரிமலை போன்றவைகளையும் இப்பெயர்கள் கொண்டிருக்கும்.
- மியான்மர் ஒன்றியக் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக சௌரப் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் இவர் ஈரானின் இந்தியத் தூதராக உள்ளார். இவர் விக்ரம் மிசிரி என்பவருக்குப் பதிலாக பதவியேற்பார்.
- சதீஷ் குமார் குப்தா PayTM நிறுவன பணமளிப்பு வங்கியின் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ரேணு சாட்டி என்பவருக்குப் பதிலாக பதவியேற்பார்.
- அரியானா மாநில அரசு நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் மூலம்

கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவ சேவைகளை அளிக்க "பசு சஞ்சீவனி சேவா" என்ற திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.

- முன்னாள் பிரதமர் H.D. தேவ கவுடா அக்டோபர் 24-ம் தேதியன்று வால்மீகி ஜெயந்தி நிகழ்ச்சியின் போது கர்நாடகாவில் பெங்களூருவில் உள்ள விதான் சவுதாவில் மகரிஷி வால்மீகி ஜெயந்தி விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்.
    - பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சமூகத்தினருக்கு செய்த நன்மைகளுக்கான பங்களிப்பின் காரணமாக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 23-ம் தேதி தொடங்கி 5 ஆண்டுக் காலத்திற்கு TVS மோட்டார்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக K.N. இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
- 2018 ஆம் ஆண்டின் உலகளாவிய விவசாயத் தலைமைக்கான மாநாடு புது தில்லியில் துவங்கியது. இந்த இரண்டு நாள் மாநாட்டின் கருத்துரு : "சந்தையுடன் விவசாயிகளை இணைத்தல்" என்பதாகும்.
- பிரதமர் உத்திரப் பிரதேசத்தின் வாரணாசியில் 36வது இந்திய தரைவிரிப்புகள் கண்காட்சியைத் துவக்கி வைத்தார்.
- கோவாவின் பனாஜியில் உள்ள ஐஎன்எஸ் ஹன்சா என்ற இந்தியக் கடற்படை விமான தளத்தில் நீர்மூழ்கிக் கப்பலுக்கு எதிரான இரண்டு நாள் பயிற்சியில் இந்தியக் கடற்படையின் P-8i விமானமும் அமெரிக்கக் கடற்படையின் P-8A போசிடான் என்ற விமானமும் பங்கு பெற்றன.
    - INS ஹன்சா கப்பலுக்கு P-8A போசிடானின் வருகை இதுவே முதல் தடவையாகும்.
- சர்வதேச விமானப் போக்குவரத்து கூட்டிணைவின் (IATA - International Air Transport Association) 20வது ஆண்டு விமானப் பயணிகள் முன்னறிவிப்பு அறிக்கையின்படி 2024-ம் ஆண்டில் உலகின் முதல் 3 விமானப் பயணச் சந்தையில் ஒன்றாக இந்தியாவும் இருக்கும். தற்போது உலகளாவிய விமானப் போக்குவரத்துச் சந்தையில் இந்தியாவானது 7வது இடத்தில் உள்ளது.
- பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவர் அருந்ததி பட்டாச்சார்யாவை தன்னிச்சையான இயக்குநராக விப்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. இவரது பதவிக்காலம் ஜனவரி 1, 2019 முதல் தொடங்கி அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு நீடிக்கும்.
    - இவர் சமீபத்தில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் தன்னிச்சையான இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார்.
- சுகன்யா சம்ரிதி திட்டத்தின் கீழ் 16 லட்சம் அஞ்சலக சேமிப்பு கணக்குகளை துவங்கி தேசிய அளவில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது.
- புதுடெல்லியின் DRDO பவனில் இணையவெளியில் புத்தாக்கம், இணையப் பாதுகாப்பு, சவால்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் மீதான ஒருநாள் மாநாட்டை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO - Defence Research and Development Organization) ஏற்பாடு செய்திருந்தது.
- இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பிறகான உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து துறையில் உள்நாட்டுக் கப்பல் மூலமான நாட்டின் முதலாவது சரக்குப் பெட்டகத்திற்கான

போக்குவரத்தின் ஒரு பகுதியாக இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையமானது கொல்கத்தாவிலிருந்து வாரணாசி வரை கங்கை நதியில் உள்ள தேசிய நீர்வழிப் போக்குவரத்தில் (தடம் ஒன்று) பெப்சிகோ இந்திய நிறுவனத்தின் சரக்குப் பெட்டகத்தை இயக்க உள்ளது.

- மத்திய உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைத் துறை அமைச்சர் திருமதி ஹசிம்ரத் கௌர் பாதல் குஜராத்தின் சூரத்தில் அம்மாநிலத்தின் முதல் மெகா உணவுப் பூங்காவான குஜராத் அக்ரோ மெகா உணவுப் பூங்காவைத் தொடங்கி வைத்தார்.

## தமிழ்நாடு செய்திகள்

### ஸ்வச்சதா தரவரிசை விருதுகள் 2018

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகமானது உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஸ்வச்சதா தரவரிசை விருதுகள் 2018-ஐ புதுடெல்லியில் வழங்கியது.
- ஸ்வச்சதா தரவரிசை விருதுகளுக்கான சிறந்த 51 உயர்கல்வி நிறுவனங்கள் 8 வெவ்வேறு பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டன.
- தரவரிசையில் 18 நிறுவனங்களைக் கொண்டு தமிழ்நாடானது தேசிய அளவில் இரண்டாம் ஆண்டாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது.




- மொத்தமுள்ள 8 பிரிவுகளில் தமிழ்நாட்டு நிறுவனங்கள் கீழ்க்காணும் 4 பிரிவுகளில் முதலிடத்தைப் பிடித்தன.
    - உறைவிட தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (அமிர்தா விஷ்வ வித்யபீடம், கோயம்புத்தூர்)
    - உறைவிட தொழில்நுட்பக் கல்லூரி (பனிமலர் பொறியியல் கல்லூரி, சென்னை)
    - உறைவிடமற்ற கல்லூரி (ஸ்ரீ பராசக்தி பெண்கள் கல்வியியல் கல்லூரி, திருநெல்வேலி)
    - உறைவிடமற்ற தொழில்நுட்பக் கல்லூரி (ஈஸ்வரி பொறியியல் கல்லூரி, சென்னை)

- PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது உறைவிட கல்லூரிப் பிரிவில் 2-ம் இடத்தை பிடித்தது.
- IIT-சென்னையானது உறைவிடப் பிரிவின் தொழில்நுட்பக் கல்லூரி/ பல்கலைக் கழகங்கள் பிரிவில் 8-ம் இடத்தைப் பிடித்துள்ளது.
- உறைவிட தொழில்நுட்ப கல்லூரிகள் பிரிவில் 4 தமிழக கல்லூரிகள் முதல் 6 இடங்களைப் பிடித்துள்ளன.

## Dr. A. எட்வின் ஜோ. குழு அறிக்கை

- மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் A. எட்வின் ஜோ தலைமையிலான 2 நபர் குழுவானது சுகாதாரத்துறை செயலர் J. ராதாகிருஷ்ணனிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.
- உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மோசடி சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள மாநில சுகாதாரத் துறையால் இக்குழு நியமிக்கப்பட்டது.
- இந்தக் குழுவானது உறுப்பு மாற்று சிகிச்சைக்கென காத்திருக்கும் நோயாளிகளுக்கு கீழ்க்காணும் 3 தனித்தனி காத்திருப்பு பட்டியல்களை பரிந்துரைத்துள்ளது.
  - தமிழகத்தில் உள்ள நோயாளிகள்
  - பிற மாநில நோயாளிகள்
  - வெளிநாட்டு நோயாளிகள்

## தமிழ்நாடு மற்றும் ACT நிறுவனத்திற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- 100 பொது நூலகங்களுக்கு இலவச இணைய சேவையை வழங்குவதற்காக, தனியார் இணைய சேவை வழங்குநரான ACT பைபர் நெட் உடன் தமிழ்நாடு பள்ளிக்கல்வி துறையானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.
- சென்னை, கோயம்புத்தூர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளின் நூலகங்களுக்கு இலவச இணைய வசதியை வழங்குவதற்காக தனது பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR – Corporate Social Responsibility) நிதியை ACT பயன்படுத்தவுள்ளது.

## கிராமப்புற மேம்பாட்டில் சிறந்த மாநிலம்

- புது டெல்லியில் நடைபெற்ற ET (Economic Times) கிராமப்புற உத்தி மாநாடு 2018 என்பதன் 6 வது பதிப்பில் தமிழ்நாடானது கிராமப்புற மேம்பாட்டில் சிறந்த மாநிலத்திற்கான விருதை வென்றுள்ளது.
- இந்த விருதினை நகர்ப்புற நிர்வாகம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் S.P. வேலுமணி பெற்றுக் கொண்டார்.

## உலக ஆளில்லா விமானம் மருத்துவ எக்ஸ்பிரஸ் சேலஞ்ச் 2018

- ❖ ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லேண்டில் நடைபெற்ற பந்தயத்தில் தென்னிந்திய நடிகர் அஜித்தின் குழுவான 'தக்க்ஷா' இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ சென்னையில் உள்ள மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் (MIT – Madras Institue of Technology) மூலமாக ஆளில்லா விமான அமைப்பு ஆலோசகர் மற்றும் சோதனை ஓட்ட விமானியாக நடிகர் அஜித் நியமிக்கப்பட்டார்.
- ❖ அண்ணாப் பல்கலைக்கழகத்தினுடைய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இந்த தக்க்ஷா (UAV – Unmanned Aerial Vehicle) குழுவானது 2018 ஆம் ஆண்டிற்கான Dr. APJ அப்துல் கலாம் விருதினைப் பெற்றது.
- ❖ பல்வேறு அரசு துறைகளில் பயன்படக்கூடிய வகையில் மூன்று ஆளில்லா விமானங்களை உருவாக்கியதற்காக இந்த விருது வழங்கப்பட்டது.

## பெரியார் பல்கலைக்கழகத்தில் AR & VR படிப்புகள்

- ❖ பெரியார் பல்கலைக்கழகமானது நாட்டிலேயே முதன்முறையாக மெய்நிகர் உண்மைத் தோற்றம் (VR - Virtual Reality) மற்றும் இணைப்பு உண்மைத் தோற்றம் (AR - Augmented Reality) ஆகிய படிப்புகளை வழங்க உள்ளது.
- ❖ இந்த படிப்புகளானது பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் அதன் தொழில்நுட்ப கூட்டாளியான சென்னையின் ஸ்கோபிக் கல்வியியல் சேவைகள் நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## சயோக் ஹோப் டாக் - 2018

- ❖ இந்திய மற்றும் வியட்நாமிய கடலோரக்காவல் படையின் கூட்டுப் பயிற்சியான சயோக் ஹோப் டாக் - 2018 (Sahyog HOP TAC -2018) ஆனது தமிழ்நாட்டின் சென்னை வங்காள விரிகுடா கடற்கரைப் பகுதியில் நடைபெற்றது.
- ❖ இது இரு நாட்டு கடலோரக்காவல் படைகளுக்கிடையே பணி நிலையிலான உறவை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இந்திய தரப்பிலிருந்து கடலோரக் காவல்படை கப்பல்களான சௌரியா, அர்ன்வேஷ் மற்றும் இடைமறிப்பு படகான C-431 ஆகியவற்றுடன் டோர்னியர் விமானம் மற்றும் சீட்டா ஹெலிகாப்டரும் இணைந்து கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றன.
- ❖ இதில் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (NIOT - National Institute of Ocean Technology) சாகர் மஞ்சுசா கப்பலும் கலந்து கொண்டது.

## NBE-ன் ஸ்க்ரோல் ஆஃப் ஹானர் விருதுகள்

- ❖ புதுடெல்லியின் விக்யான் பவனில் தேசிய தேர்வுகள் மன்றத்தின் (National Board of Examinations - NBE) 19வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

- பெரம்பூரில் உள்ள தென்னக ரயில்வே தலைமையக மருத்துவமனைக்கு 2014 ஆம் ஆண்டிற்கான "கல்வி நிறுவனங்களுக்கான NBE ஸ்க்ரோல் ஆஃப் ஹானர்" பிரிவின் கீழ் கேடயம் மற்றும் சான்றிதழ் அளிக்கப்பட்டது.
- உயர் மருத்துவக் கல்வி, மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் மிக உயர்ந்த தரங்களை பின்பற்றுவதின் பேரில் உள்ள அதன் சிறந்த அர்ப்பணிப்பிற்காக தேசிய தேர்வுகள் மன்றத்தால் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## பாலியல் தாக்குதல்/அமிலத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் திட்டம்

- தமிழ்நாடு அரசானது உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு பாலியல் தாக்குதல் / இதர குற்றங்களில் பாதிக்கப்பட்ட / உயிர் பிழைத்த பெண்களுக்காக புதிய இழப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நிப்புன் சக்சேனா எதிர் மத்திய அரசாங்கம் என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்படி, மாநில சட்ட சேவைகள் ஆணையம் மற்றும் மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் அறிக்கையின்படி பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் இழப்பீட்டைப் பெற முடியும்.

## கைரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பு

- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட தலைமையகங்களிலும் காவல்துறை ஆணைய அலுவலகங்களிலும் புதிய கைரேகை அடையாளம் காணும் அமைப்பான FACTS 7.0 (Fingerprint Analysis and Criminal Tracing System-கைரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பு) என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.
- FACT 7.0 ஆனது டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு அக்டோபர் 4 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- இது சென்னையின் மாநில ஆவணக் காப்பகத்தின் (SCRB - state crime records bureau's) தரவுத்தளத்துடன் இணைக்கப்படும்.

## புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் பேருந்து நிலையம்

- கோயம்பேட்டில் உள்ள சென்னை புறநகர் பேருந்து நிலையமானது (CMBT - Chennai Mofussil Bus Terminus) புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் பேருந்து நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இந்த பெயர் மாற்றமானது அக்டோபர் 10, 2018 லிருந்து நடைமுறைக்கு வந்தது.




## புதிய பேருந்துகள் துவக்கம்

- தமிழ்நாட்டின் முதலமைச்சர் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் அக்டோபர் 10, 2018 அன்று 471 பேருந்துகளை புதிதாக துவங்கி வைத்தார்.
- கழிப்பறை வசதிகளுடன் கூடிய, மித படுக்கை வசதி (Semi-Sleeper) இருக்கைகளைக் கொண்ட 8 பேருந்துகள் சென்னை- கரூர் - கோயம்புத்தூர், சென்னை - சேலம், சென்னை - திருச்சி மற்றும் சென்னை - தஞ்சாவூர் ஆகிய வழித்தடங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.
- மேலும் இவர், பெருநகர வளர்ச்சி ஆணையத்தால் கட்டப்பட்ட மாதவரம் புறநகர் பேருந்து நிலையத்தை காணொளிக் காட்சி மூலம் துவக்கி வைத்தார்.



## தாமிரபரணி மஹா புஷ்காரம்

- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று திருநெல்வேலி மாவட்டத்தின் பாபநாசத்தில் தாமிரபரணி மஹா புஷ்காரம் தொடங்கியது. இது அக்டோபர் 23 வரை கடைப்பிடிக்கப்படவிருக்கிறது.
- இந்நிகழ்ச்சியானது கடைசியாக 1864 ஆம் ஆண்டு தாமிரபரணி ஆற்றங்கரையில்

நடைபெற்றது.

- புஷ்காரம் 12 இராசிகளுக்காக 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
- 144 ஆண்டுகள் கழித்து நடத்தப்படுகிற இந்தப் புஷ்காரம் (12 இராசிகளுக்கு முழுவதுமாக நடத்தப்பட்ட பிறகு) மஹா புஷ்காரம் என்று அழைக்கப்படுகிறது.

## ஸ்மார்ட் அடையாள அட்டை

- தமிழகத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலாவதாக மாணவர்களுக்கான ஸ்மார்ட் அடையாள அட்டையை வழங்கிய பள்ளியாக போரூரைச் சேர்ந்த அரசு மேல்நிலைப்பள்ளி ஆகியுள்ளது.
- இத்திட்டத்தை அரசானது ப்ரிகான்ஷ்யா என்ற நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தியுள்ளது.
- இத்திட்டமானது இரண்டு முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது.
    - ரேடியோ அதிர்வெண் அடையாள (RFID - Radio Frequency Identification) வருடி மற்றும்
    - மைக்ரோ சில்லுகள் பொருத்தப்பட்ட அடையாள அட்டை
- இந்த அடையாள அட்டைகளானது மாணவர்களின் நுழைவு மற்றும் அவர்கள் வெளியே செல்வதை கண்காணிக்கவும், மாணவர்கள் வகுப்புகளை புறக்கணிக்க முற்படும்போது தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோரை எச்சரிக்கை செய்யவும் உதவுகிறது.

## டாக்டர் மோகன் தாரியா ராஷ்டிர நிர்மான் புரஸ்கார் விருது

- ராஜ்பவனில் வேளாண் விஞ்ஞானி M.S. சுவாமிநாதனுக்கு மறைந்த டாக்டர் மோகன் தாரியா ராஷ்டிர நிர்மான் புரஸ்கார் விருதினை தமிழக ஆளுநர் வழங்கினார்.
- இவ்விருது மூலம் வழங்கப்பட்ட பரிசுத் தொகையான 1 லட்ச ரூபாயை வைத்து டாக்டர் மோகன் தாரியா கடலோர சூழலியல் பாதுகாப்பிற்கான விருது உருவாக்கப்படும் என்று M.S. சுவாமிநாதன் அறிவித்தார்.
- இவ்விருது மகாராஷ்டிரக் கடற்கரையோரம் உள்ள மாங்குரோவ் காடுகளை பாதுகாப்பதற்கான குறிப்பிட்ட நோக்குடன் மும்பை பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறையில் கல்வி பயிலும் பெண் ஆராய்ச்சியாளர்க்கு வழங்கப்படும்.

## ஐஐடி மெட்ராஸ்- தமிழ்நாடு மின் நிர்வாக அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தகவல்களால் இயக்கப்படும் நிர்வாகத்தை செம்மைப்படுத்த மெட்ராஸ் ஐஐடி ஆனது தமிழ்நாடு மின் ஆளுகை அமைப்புடன் இணைந்து செயல்பட உள்ளது.
- இந்த ஒப்பந்தம் மூலம், மெட்ராஸ் ஐஐடியில் உள்ள தகவல் அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவிற்கான ராபர்ட் பாஸ்க் மையம் (RBC DSAI -Robert Bosch Centre for Data Science and Artificial Intelligence) தகவல் அறிவியல் மற்றும் தகவல் தொலைத் தொடர்பு சம்பந்தமான பலதரப்பட்ட சவால்களை தீர்ப்பதற்கு தமிழக அரசிற்கு ஒத்துழைப்பு அளிக்க ஒத்துக்

கொண்டிருக்கின்றது.

- தமிழ்நாடு மின் ஆளுகை நிறுவனமானது (Tamil Nadu e-Governance Agency-TNeGA) மாநில அரசின் அனைத்து மின் நிர்வாக முயற்சிகளையும் மேம்படுத்தி செயல்படுத்திட மாநில தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் மாநில செயல்பாட்டு நிறுவனமாகும்.
- RBC DSAI என்பது செயற்கை நுண்ணறிவில் செயல்படும் பல்துறை ஆராய்ச்சி மையம் ஆகும்.

## 5வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு

- புதுச்சேரியின் முதலமைச்சர் மற்றும் கயானா நாட்டின் பிரதமர் ஆகியோர் சமீபத்தில் பாண்டிச்சேரி உலகளாவிய பொருளாதார மாநாடு 2018 உடன் 5வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினையும் தொடங்கி வைத்தனர்.
- இது டர்பன் இந்திய சமூகத்தின் ஆதரவுடன் உலகத் தமிழர் பொருளாதார நிறுவனம் மற்றும் சென்னை அபிவிருத்தி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இதன் கடைசி மாநாடானது தென்னாப்பிரிக்காவின் டர்பனில் நடைபெற்றது.

## தேசிக பிரபந்த பாடல்களைப் பாட தடை

- காஞ்சிபுரத்தில் உள்ள தேவராஜ சுவாமிகள் கோவிலில் மறு அறிவிப்பு வரும்வரை ஆச்சார்யா வேதாந்த தேசிகரின் தமிழ் பிரபந்த பாடல்களை பாடுவதோ/ஓதுவதோ கூடாது என சென்னை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.



- இந்த விவகாரமானது வடகலை மற்றும் தென்கலை பிரிவு அய்யங்காருக்கிடையே எழுகின்ற தீர்க்கப்படாத பிரச்சனைகளின் காரணத்தால் உருவானதாகும்.

## காற்றழுத்தக் குழாய் அமைப்புகள் - தமிழ்நாடு

- எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல நிறுவனம் (ICH - Institute of Child Health) மற்றும் இராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை ஆகியவை இணைந்து காற்றழுத்தக் குழாய் அமைப்புகள் மற்றும் மாதிரிகளை தானியங்கு மூலம் செயல்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய 'தடையற்ற ஆய்வகங்களை' விரைவில் தொடங்கவிருக்கின்றன.
- மாதிரிகள் காற்றழுத்தக் குழாய் அமைப்புகளின் மூலம் எடுத்து செல்லப்படும். மேலும் வளாகத்திற்குள் மாதிரிகளை மனிதர்கள் எடுத்துச் செல்ல மாட்டார்கள்.
- காற்றழுத்த அமைப்பின் முன்வடிவம் குழந்தைகள் நல நிறுவனத்தில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் இது நவம்பர் 14 அன்று, ICH நிறுவனத்தின் பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது தொடங்கப்படவிருக்கிறது.

## உலக முதலீட்டாளர்கள் மாநாடு - தமிழ்நாடு மற்றும் ஆஸ்திரேலியா

- ஆஸ்திரேலியாவானது கல்வி, சாலைப் பாதுகாப்பு தொழில்நுட்பம், நகர்ப்புற உட்கட்டமைப்பு, மீன்வளத்துறை மற்றும் விவசாயத் துறை ஆகியவற்றில் உள்ள வாய்ப்புக்களை ஆராய வருகின்ற 2019-ம் ஆண்டின் உலக முதலீட்டாளர் மாநாட்டில் தமிழ்நாட்டுடன் இணைந்து செயல்பட இருக்கின்றது.
- ஆஸ்திரேலியாவுடனான அதிகப்படுத்தப்பட்ட பிணைப்பிற்கு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கும்.
- தற்சமயம் ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களுக்கும் தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களுக்கும் இடையே 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயல்முறையில் உள்ளன.

## சூரிய ஒளிப் பூங்கா - திருச்சி

- திருச்சி மாநகராட்சியானது பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதற்காக 2.5 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளிப்பூங்கா ஒன்றை நிறுவுவதற்காக தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் தரப்பு ஒப்புதல்களை பெற்றிருக்கின்றது.
- பஞ்சப்பூர் என்ற இடம் தகுதியான இடமாக கண்டறியப்பட்டு இருக்கின்றது.
- சூரிய ஒளிப் பூங்காவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை பொது விநியோகக் கட்டமைப்பு மூலம் விநியோகித்திட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துடன் (Tamil Nadu Generation and Distribution Corporation - TANGEDCO) இணைந்து செயலாற்ற திருச்சி மாநகராட்சியானது திட்டமிட்டிருக்கின்றது.

## 12வது நூற்றாண்டு பாறைக் கல்வெட்டு

- உத்தமசீலியில் உள்ள கைலாசநாதர் கோவிலில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது 12வது நூற்றாண்டைச் சேர்ந்த பாறைக் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- உத்தமசீலி திருச்சி அருகேயுள்ள ஒரு குக்கிராமமாகும்.
- அந்த பாறைக்கல்வெட்டு மகிஷாசுரமர்த்தினி என்ற பெண் கடவுளின் உருவத்தை மிகச்சிறிய அளவில் பிரதிபலிக்கின்ற வடிவில் உள்ளது.



- மேலும் அக்கோவிலில் நரசிம்மக் கடவுள் தனது மனைவியருடன் யோகாசனத்தில் உள்ள நிலையில் செவ்வக வடிவிலான பீடத்தில் அமர்ந்தவாறு உள்ள சிலை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு உள்ளது.
- டாக்டர் ராஜமாணிக்கனார் வரலாற்று மையத்தைச் சேர்ந்த குழு விக்ரம சோழனின் கல்வெட்டு ஒன்றை சிதைந்த நிலையில் கண்டெடுத்துள்ளது.
- தமிழ்நாட்டில் சாளுக்கிய சோழ மரபினை உருவாக்கிய முதலாம் குலோத்துங்க சோழனின் மகன் விக்ரம சோழன் ஆவார்.

## பிரவீன் சித்ரவேல்


- தமிழ்நாட்டைச் சேர்ந்த விவசாயியின் மகனான பிரவீன் சித்ரவேல் பியுனஸ் அயர்ஸில் நடைபெற்ற இளைஞர் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான ட்ரிபிள் ஜம்ப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- இந்தப் பதக்கம் இந்தியாவிற்கு தடகளப் போட்டிகளில் இரண்டாவது பதக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளது.
- பிரவீன் சித்ரவேல் தஞ்சாவூரைச் சேர்ந்த விவசாயியின் மகனாவார்.
- இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (Sports Development Authority of India) கீழ் சென்னையில் இயங்கும் சிறுவர்களுக்கான மேம்பாட்டு மையத்தில் தடகளப் பயிற்சியாளராக உள்ள இந்திரா சுரேஷ் என்பவரால் பிரவீனுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

## வருகையின் போது மின்னணு நுழைவு இசைவு - மதுரை விமான நிலையம்

- ❖ மதுரை சர்வதேச விமான நிலையத்தில் வருகையின் போதான மின்னணு நுழைவு இசைவு வசதி (Visa - விசா) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- ❖ இது இவ்வசதியைப் பெறும் தமிழ்நாட்டின் நான்காவது மற்றும் ஒட்டுமொத்த அளவில் இந்தியாவின் 26 வது விமான நிலையமாகும்.
- ❖ முன்பு பயணிகள் தங்கள் வேலை முடிவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகளின் இந்திய உயர் ஆணையத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது.
- ❖ பயணிகள் தற்போது தங்களது பயணத்திற்கு குறைந்தபட்சம் நான்கு நாட்களுக்கு முன்பாகவும் அதிகபட்சம் 120 நாட்களுக்கு முன்பாகவும் நேரடியாக இணைய தளத்தில் விசாவை விண்ணப்பிக்க முடியும்.

## மக்களுக்கான பல்லுயிர்த் தன்மையின் பதிவேடு - தமிழ்நாடு

- ❖ தமிழ்நாடு அரசானது மக்களுடைய பல்லுயிர்த் தன்மைக்கான பதிவேட்டினை (People's Biodiversity Registers - PBR) இணைய தளத்தில் நேரடியாக வெளியிடுவதற்குத் திட்டமிடுகின்றது.
- ❖ இது தனது மக்களுடைய பாரம்பரிய அறிவையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்கும் ஒரு முயற்சியாகும்.
- ❖ மதிப்புமிக்க இயற்கை வளங்களின் இருப்பை நேரடியாக இணைய தளத்தில் வெளியிடுவது நாட்டில் இதுவே முதல் முறையாகும்.




- ❖ 2002ம் ஆண்டின் தேசிய பல்லுயிர் பெருக்கச் சட்டத்தின்படி தாவரங்கள் மற்றும் விலங்குகளின் இருப்புப் பட்டியலை வெளியிடுவது கட்டாயமாகும்.
- ❖ தாவரங்கள், வன உயிர்கள் மற்றும் மூலிகைகள் ஆகியவற்றைத் தவிர இப்பதிவேடு

விவசாய நிலம், தீவனப் பயிர்கள், நில அமைப்பு, நீரமைப்பு மற்றும் மக்கள் தொகை அமைப்பு ஆகிய தகவல்களையும் கொண்டிருக்கும்.

## சென்னை வெள்ள எச்சரிக்கை அமைப்பு

- சென்னை பெருநகரத்திற்குள் வெள்ளம் ஏற்படுவதை கணிப்பதற்காக சென்னை வெள்ள எச்சரிக்கை அமைப்பு (C-Flows) என்ற அமைப்பை தேசிய கடல் ஆராய்ச்சி மையம் (National Centre for Coastal Research - NCCR) ஆரம்பித்துள்ளது.
- மிக அதிக மழைப் பொழிவினால் கடல் மட்ட உயர்வின் மூலம் நகருக்குள் வெள்ளம் ஏற்படுவதை 6 தொகுதிகளைக் கொண்ட இந்த அமைப்பு கணிக்கும். மேலும் சென்னை நகரத்தில் அமைந்துள்ள
    - கூவம்
    - அடையாறு
    - கொசஸ்தலையர்

  ஆகிய மூன்று ஆறுகளின் நீர் நிலைகளின் அளவை இந்த அமைப்பு கணிக்கும்.
- மாநில அரசாங்கமானது எச்சரிக்கை அமைப்பில் பயன்படுத்தப்படும் நிர்வாக எல்லைகள் (ward boundaries), மக்கள் தொகை விவரங்கள் மற்றும் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் போன்றவற்றைப் பகிர்ந்துள்ளது.
- மேலும் C-Flows ஆனது TN-SMART உடன் ஒருங்கிணைக்கப் படவிருக்கிறது.




## பயிற்றாசிரியர் - 365

- ‘பயிற்றாசிரியர் 365’ என்ற புதிய மின்னணு கற்றல் பகுப்பாய்வு மென்பொருளை திருச்சியின் அரசுப் பள்ளிகளுக்கு அதன் தலைமை கல்வி அதிகாரி தொடங்கி வைத்துள்ளார்.
- இது XI மற்றும் XII-ன் பொதுத் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு உதவுகிறது.
- இது ‘எபெக்’ என்றழைக்கப்படும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

## பேரிடரை முன்கூட்டியே தவிர்க்க குழு அமைப்பு

- தமிழக அரசானது பொதுப் பணித்துறைச் செயலாளர் தலைமையிலான பத்து உறுப்பினர்களைக் கொண்ட துணைக் குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது முல்லைப் பெரியாறு அணை சம்பந்தப்பட்ட பேரிடர்களை முன்கூட்டியே தடுப்பதற்கென உயர்மட்ட தயார் நிலையை பராமரிப்பதற்காக

அமைக்கப்பட்டுள்ளது.

- தேனி மாவட்ட ஆட்சியர் (இவரின் அதிகார எல்லைக்குள் அணை அமைந்துள்ளது) இக்குழுவின் துணைத்தலைவர் ஆவார்.
- தேனியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இக்குழுவானது அணையின் பாதுகாப்பிற்கென ஏற்படுத்தப்பட்ட நான்காவது குழுவாகும்.
- 2014 ஆம் ஆண்டு மே மாதத்தில் அணையானது அனைத்து அளவுருக்களிலும் பாதுகாப்பாக இருப்பதாக நீதிபதி A.S. ஆனந்த் தலைமையிலான உச்சநீதிமன்றக்குழு சான்றளித்துள்ளது.

## ரக்சிதா ரவி - புதிய WIM

- 13 வருடங்கள் 6 மாதங்கள் 3 நாட்கள் வயதுடைய ரக்சிதா ரவி இந்தியாவின் சமீபத்திய சர்வதேச மகளிர் மாஸ்டர் (Woman International Master - WIM) ஆகியுள்ளார்.
- நெதர்லாந்தில் நடைபெற்ற 22வது ஹுகிவின் ஓபன் சதுரங்க போட்டித் தொடரில் இவர் தனது 3வது மற்றும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இதனை சாதித்துள்ளார்.

## TN ஸ்மார்ட்

- வடகிழக்கு பருவமழைக் காலத்தின் போது பயன்படுத்துவதற்கென வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் புதிய முயற்சியான பல்வேறு அபாயங்களின் தாக்க மதிப்பீடு மற்றும் அவசரநிலை பதில் கண்காணிப்புக்கான தமிழ்நாடு அமைப்பை (TN-SMART) தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- இந்த அமைப்பானது வெள்ளத்தால் மூழ்கக் கூடிய பகுதிகளுக்கான மழைப்பொழிவின் அளவை முன்கூட்டியே கணிக்கவும், பேரழிவுகள், பருவமழை, வறட்சிக் காலங்களில் உயிர் இழப்புகள் மற்றும் அசையும் சொத்துக்கள் சேதப்படுவதைத் தடுப்பதற்குத் தக்க பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரிடர் மேலாண்மைத் துறையின் திட்டமிடுதலுக்கு உதவும்.
- TN-SMART ஆனது ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவிற்கான பிராந்திய ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்புடன் இணைந்து (Regional Integrated Multi-Hazard Early Warning System -RIMES) உருவாக்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட தாய்லாந்தை அடிப்படையாகக் கொண்ட அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.

## நா.முத்துசாமி மறைவு

- புகழ்பெற்ற நாடக எழுத்தாளரும் தமிழ் சினிமாவில் பல நடிகர்களை அறிமுகப்படுத்திய புகழ்பெற்ற நாடகக் குழுவான கூத்துப் பட்டறையின் நிறுவனருமான நா.முத்துசாமி சென்னையில் காலமானார்.

- இவர் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 24-ம் தேதியன்று தனது 82வது வயதில் காலமானார்.
- தஞ்சையில் பிறந்த இவர் 1977 இல் தனது நாடகங்களுக்காக நடிகர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக கூத்துப் பட்டறையைத் தொடங்கினார்.
- முதலாவது நவீன தமிழ் நாடக ஆசிரியராக அறியப்படும் இவர், "காலம் காலமாக" என்ற நாடகத்தை அரங்கேற்றியதற்குப் பிறகு மிகவும் பிரபலமடைந்தார்.



- 2012 இல் பத்மஸ்ரீ விருதும் 1999 ஆம் ஆண்டில் சங்கீத நாடக அகாடமி விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.
- 2000 முதல் 2007 வரையிலான காலகட்டத்தில் கூத்துப் பட்டறை நாடகக் கலையைக் கற்பதற்கான 5 பயிற்சி மையங்களில் ஒன்றாக யுனெஸ்கோவால் அடையாளம் காணப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## விமான பாதுகாப்பு மேற்பார்வை மதிப்பெண்

- சமீபத்தில் சர்வதேச உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைப்பால் விமானப் பாதுகாப்பு மேற்பார்வை மதிப்பெண் ஆனது (ICAO - International Civil Aviation Organisation) வெளியிடப்பட்டது.
- இது பாதுகாப்பு மேற்பார்வை அமைப்பின் முக்கிய அம்சங்களை திறம்படவும் மற்றும் உறுதியான முறையிலும் செயல்படுத்திய நாடுகளை அடையாளம் காண முயல்கிறது.
- இந்தியாவின் தரவரிசையானது முன்னிருந்த 66% லிருந்து 57% க்கு குறைந்துள்ளது. மேலும் குறைந்தபட்ச இலக்கிற்கு கீழுள்ள 15 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா உள்ளது.
- இந்தியாவின் மதிப்பானது ஆசிய பிராந்தியத்தில் மியான்மர், வங்காள தேசம், மாலத்தீவு, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, நேபாளம் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளை விட குறைவாக உள்ளது.
- இந்தியாவின் மதிப்பெண்ணுக்கு கீழ் சிறிய மற்றும் மிகச்சிறிய நாடுகளான பப்புவா, நியூகினியா, தைமூர்-லெஸ்தே, வனுவாட்டு, சமோவா ஆகியவை மட்டுமே உள்ளன.

- இதுபோன்ற தரமதிப்பு குறைவின் காரணமாக இந்திய விமானங்களை அமெரிக்காவிற்கு இணைக்கவோ அல்லது அமெரிக்க விமானங்களுடன் கூட்டணியையோ அமைக்க முடியாது.
- இது இந்தியப் போக்குவரத்து விமானங்களின் உலகளாவிய விரிவாக்க திட்டத்தை முடக்கக் கூடியது ஆகும்.

## சிகரெட் பெட்டிகளில் மிகப்பெரிய எச்சரிக்கை படம்

- கனடாவைச் சேர்ந்த புற்றுநோய் சங்கத்தால் வெளியிடப்பட்ட 'சிகரெட் பொட்டலங்களில் சுகாதார எச்சரிக்கை: சர்வதேச நிலை அறிக்கை 2018'ன் படி சிகரெட் பொட்டலங்களில் சுகாதார எச்சரிக்கைகளில் உலகின் 206 நாடுகளில் இந்தியா 5வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியாவானது ஹாங்காங் மற்றும் தாய்லாந்து உடன் 85% இட எச்சரிக்கைப் படங்களுடன் 5வது இடத்தைப் பிடித்துள்ளது.
- சிகரெட் பெட்டிகளில் மிகப்பெரிய எச்சரிக்கை பட சித்தரிப்பு அடிப்படையில் நாடுகள் தரவரிசையிடப்படுகின்றன.
- இந்தியாவில் சிகரெட் பெட்டிகளின் இரண்டு பக்கங்களும் 85% அளவில் எச்சரிக்கைகளால் நிரப்பப்பட்டுள்ளன.
- 2018ன் அறிக்கைப்படி, தைமூர்-லெஸ்டே ஆனது சிகரெட் பெட்டிகளின் முன் மற்றும் பின் பக்கங்களில் 92.5% இட அளவில் மிகப்பெரிய எச்சரிக்கையை கொண்டுள்ளது.
- இதனையடுத்து, நேபாளம் மற்றும் வனுவாட்டு ஆகியவை 90% உடன் மூன்றவாது இடத்தையும் நியூசிலாந்து 87.5% உடன் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது.
- இது ஜெனிவாவில் புகையிலை கட்டுப்பாடு பற்றிய WHO (World Health Organization) கட்டமைப்பு ஒப்பந்த மாநாட்டின் (Framework Convention on Tobacco Control - FCTC) 8வது அமர்வில் வெளியிடப்பட்டது.

## கர்நாடகா நல் உதவிபுரிபவர்களுக்கான பாதுகாப்பு மசோதா 2016

- கர்நாடகா நல் உதவிபுரிபவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் (அவசர கால சூழ்நிலைகளில் பாதுகாப்பு மற்றும் நெறிமுறைகள்) மசோதா 2016-க்கு அரசியலமைப்பின் 200வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

**SALIENT FEATURES OF THE BILL**

- No hospital should deny or delay treatment
- No good Samaritan to be detained in hospital
- All hospitals should display the rights of a good Samaritan
- Hospitals must inform the police as soon as an injured person is brought to hospital
- The Good Samaritan Fund to be set up
- Remuneration of reasonable expenses to good Samaritan
- Police officer who violates the law will be guilty of offence and will be subjected to penalties
- A good Samaritan need not fulfil any of the procedures related to the admission of an injured person at hospital
- Doctor will attract punishment if he/she refuses to provide emergency care
- Educational institutions to impart training in first-aid emergency care to students

- ❖ இதனால் கர்நாடகா மாநிலமானது, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொன்னான நேரத்திற்குள் அவசரகால மருத்துவ உதவி வழங்கும் நல் உதவிபுரிபவர்களுக்கு சட்டப்பூர்வமான பாதுகாப்பை வழங்கிய முதல் மாநிலமாக ஆகியுள்ளது.
- ❖ பொன்னான நேரம் என்பது அதிர்ச்சிகரமான காயம்பட்டவருக்கு அவசரகால மருத்துவ உதவி தேவைப்படுகின்ற முதல் ஒரு மணி நேரத்தின் மருத்துவத் துறை சொல் ஆகும்.
- ❖ இந்தச் சட்டத்தின் கீழ் கர்நாடக அரசானது உரிய நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நல் உதவிபுரிபவர்களுக்கு நிதியுதவியை வழங்கும்.

## பராகிராம் பார்வ்

- ❖ இந்திய இராணுவத்தால் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 மற்றும் செப்டம்பர் 30 ஆகிய தேதிகளில் துல்லியத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவாக "பராகிராம் பார்வ்" அல்லது "துல்லியத் தாக்குதல் தினம்" அனுசரிக்கப்பட்டது.
- ❖ 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 அன்று துணிவுமிக்க இந்திய இராணுவம் துல்லியத் தாக்குதல் நடத்தியதை வெளிக் கொணரும் விதமாக இது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ மேலும் "உரி தாக்குதலின்" போது உயிர்த்தியாகம் செய்த இந்திய வீரர்கள் நினைவாகவும் இது அனுசரிக்கப்படுகிறது.

## குற்றஞ்சாட்டப்பட்ட MP/MLA-க்களை தகுதி நீக்கம்

- ❖ தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள், குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்கள் போட்டியிட தகுதி நீக்கம் செய்ய முடியாது என உச்சநீதிமன்றமானது கூறியுள்ளது.

- மேலும் உச்ச நீதிமன்றமானது ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தலில் போட்டியிடும் முன்பு தேர்தல் ஆணையத்திடம் அத்தகைய குற்றச்சாட்டுகளை அறிவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.




- இந்த உத்தரவானது, வழக்கறிஞர்கள் அஸ்வினி குமார், உபாத்யா, முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் J.M. லின்ங்டோ மற்றும் பொது நல அறக்கட்டளை என்ற அரசு சாரா நிறுவனம் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீதானதாகும்.

## 4வது இந்திய சர்வதேச அறிவியல் விழா-IISF (India International Science Festival)

- லக்னோவில் இந்திய அறிவியல் சம்மேளனத்தின் 4-வது பதிப்பு குடியரசுத் தலைவரால் அக்டோபர் 6, 2018 அன்று தொடங்கி வைக்கப்பட உள்ளது.
- இவ்விழாவின் கருத்துரு: அறிவியல் & தொழில்நுட்பம், கூட்டுறவு கட்டமைப்பு, சமூகத்தை பாதித்தல் (Science & Technology- Building Partnerships, Impacting Societies).
- இவ்விழாவின் குவிய கருத்துரு: மாற்றத்திற்கான விஞ்ஞானம் (Science for transformation) ஆகும்.
- இவ்விழாவை விஞ்ஞான பாரதியுடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், புவி அறிவியல் அமைச்சகங்கள் ஏற்பாடு செய்ய உள்ளன.
- IISF 2018-ல் VIII முதல் X வகுப்பு வரையிலான 500 மாணவர்களால் ‘DNA-வை தனிமைப்படுத்தும்’ (isolate DNA) ஒரு உலக சாதனை முயற்சி செய்யப்படவுள்ளது.
- அறிவியலை வளர்ப்பதற்காக ‘ஜெய் விஞ்ஞான்’ என்ற முழக்கத்தை உருவாக்கிய முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு இவ்விழாவானது அர்ப்பணிக்கப்படுகிறது.
- 3வது IISF ஆனது தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள IIT சென்னை மற்றும் அண்ணா

பல்கலைக் கழகத்தில் அக்டோபர் 2017-ல் நடைபெற்றது.

## புகையிலை உபயோகிப்போர் அதிலிருந்து மீள்வதற்கான உதவி எண்

- இந்தியாவானது, அனைத்து புகையிலை தயாரிப்புகளின் பொட்டலங்களிலும் புகையிலை உபயோகிப்பிலிருந்து மீள்வதற்கான உதவி எண் 1860-11-2356 என்ற எண்ணை செப்டம்பர் 01, 2018-முதல் வெளியிட்டுள்ளது.




- ஆசியாவில் தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு அடுத்து புகையிலை பொருட்கள் உபயோகத்திலிருந்து மீள்வோர்க்கு உதவுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட உதவி எண்ணை உடைய 4வது நாடாக இந்தியா மாறியுள்ளது.
- மேலும் இந்த உதவி எண்ணைத் தொடங்கியுள்ள ஒரே சார்க் நாடு இந்தியாவாகும்.

## பொருளாதார சுதந்திர குறியீடு

- கனடாவின் பிரேசர் நிறுவனத்துடன் இணைந்து சிவில் சமூக மையத்தினால் (CCS - Centre for Civil Society) 2018 ஆம் ஆண்டிற்கான பொருளாதார சுதந்திரக் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- பொருளாதார சுதந்திரக் குறியீட்டில் உலகின் 162 நாடுகளில் இந்தியா 96 வது இடத்தில் உள்ளது. ஒட்டுமொத்த தரவரிசையில் பிரிக்ஸ் நாடுகளுக்கிடையேயான தரவரிசையில் இந்தியா சமநிலையில் உள்ளது.
- இரஷ்யா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் இந்தத் தரவரிசையில் இந்தியாவை விட முன்னிலையில் உள்ளன. இரஷ்யா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் முறையே 87வது மற்றும் 94வது இடத்தைப் பிடித்துள்ளன. இந்தத் தரவரிசைப் பட்டியலில் சீனா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் முறையே 108 மற்றும் 144வது இடத்தைப் பிடித்து இந்தியாவை விட பின்னிலையில் உள்ளன.
- 2017 ஆம் ஆண்டிற்கான பொருளாதார சுதந்திரக் குறியீட்டில் இந்தியா 98வது இடத்தில் இருந்தது. 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்தக் குறியீடானது 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

- இந்தக் குறியீட்டில் ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் முறையே முதலாவது மற்றும் இரண்டாவது இடத்தை மீண்டும் பிடித்துள்ளன.

## சமுத்திரா மைத்ரி நடவடிக்கை

- இந்தோனேசியாவில் பூகம்பம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் மிகப்பெரிய மனிதாபிமான சமுத்திரா மைத்ரி நடவடிக்கையை இந்தியா தொடங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையின் கீழ் இந்தியாவிலிருந்து 2 விமானங்கள் மற்றும் 3 கடற்படைக் கப்பல்கள் ஆகியவை நிவாரணப் பொருள்கள் மற்றும் பணியாளர்களுடன் அனுப்பப்பட்டுள்ளது.
    - C - 130J மற்றும் C - 17 விமானங்கள்
    - INS திர், INS சுஜாதா மற்றும் INS ஷர்துல்
- 2018 செப்டம்பர் 28 அன்று இந்தோனோசியாவில் உள்ள மினஹாசா தீபகற்பத்தின் கழுத்துப் பகுதியை 7.5 ரிக்டர் அளவிலான ஆழமற்ற பூகம்பமானது தாக்கியது.
- இந்த பூகம்பத்தின் வெளிப்படும் இடமானது (epi centre) மத்திய சுலோவேசியின் மலைப் பிரதேசமான டோங்க்கலா ஆட்சி பகுதியில் அமைந்தது. இதனைத் தொடர்ந்து தலைநகரான பாலு வட்டாரப் பகுதியை சுனாமி தாக்கியது.
- 2006-ல் இந்தோனோசியாவில் ஏற்பட்ட யோக்யகர்த்தா பூகம்பத்திற்குப் பிறகு ஏற்படும் மிகப்பெரிய நிலநடுக்கம் இதுவேயாகும்.

## வீட்டுவசதி வாரிய அமைச்சகத்துடன் NAREDCO புரிந்துணர்வு ஒப்பந்தம்

- 2.5 லட்சம் ஏழை மக்களுக்கு கட்டுமானத் துறையில் திறன்வளர் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்காக தேசிய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு கழகம் (NAREDCO - National Real Estate Development Council) ஆனது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த கூட்டாண்மையானது நகர்ப்புற ஏழைகளுக்கு தீன்தயாள் அந்த்யோதயா தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கட்டுமானத் துறையில் திறன்வளர் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்துகிறது.

### *தேசிய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு கழகம் (NAREDCO)*

- இது 1988-ல் தொடங்கப்பட்டு புதுடெல்லியை தலைமையகமாகக் கொண்டது. இது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி கொண்ட சுய-கட்டுப்பாட்டு அமைப்பு ஆகும்.
- இது ரியல் எஸ்டேட் துறையில் மிக உயர்ந்த தேசிய அமைப்பாகும்.

## உலகின் மிகப்பெரிய குவிமாடம் திறப்பு

- மஹாராஷ்டிராவின் புனேயில் லோனி கல்பார் பகுதியில் உள்ள மஹாராஷ்டிரா தொழில்நுட்ப நிறுவனத்தின் (MIT) உலக அமைதி பல்கலைக்கழக (MIT - WPU) வளாகத்தில் உலகின் மிகப்பெரிய குவிமாடம் திறக்கப்பட்டது.
- மஹாராஷ்டிராவில் பக்தி இயக்கத்தின் முக்கிய நபராக விளங்கிய 13-ம் நூற்றாண்டின் கவிஞரும் தத்துவ ஞானியுமான ஞானேஷ்வரின் பெயர் இம்மாடத்திற்கு சூட்டப்பட்டுள்ளது.
- இந்த குவிமாடமானது 160 அடி விட்டம் கொண்டுள்ளது. இது 139.6 அடி விட்டத்தை உடைய வாடிகன் குவிமாடத்தின் சாதனையை முந்தியுள்ளது.
- 263 அடி உயரமான இக்குவி மாடம் மையத்திலிருந்து தொங்கும் மணியையும் 30,000 சதுர அடிகள் பரப்பளவில் பிராத்தனை மண்டபத்தையும் கொண்டுள்ளது.

## இப்ஸமார் - VI

- இந்திய, பிரேசிலிய மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகளுக்கிடையேயான பன்னாட்டுக் கூட்டுக் கடற்பயிற்சியான IBSAMAR-ன் 6வது பதிப்பு தென்ஆப்பிரிக்காவின் சைமோன்ஸ் நகரத்தில் நடைபெற்றது.
- இந்த கடற்பயிற்சியின் நோக்கமானது பங்குபெறும் கடற்படைகளுடன் கூட்டுப்பயிற்சியை மேற்கொள்வதையும் இணைந்து பணியாற்றுவதைக் கட்டமைப்பதையும் பரஸ்பர புரிதல்களை ஏற்படுத்துவதுமாகும்.
- இந்த IBSAMAR பயிற்சியானது 2006-ல் ஆரம்பிக்கப்பட்டது.
- கடைசி பதிப்பான IBSAMAR – Vவது பதிப்பானது 2016-ன் பிப்ரவரி மாதம் இந்தியாவின் கோவாவில் நடைபெற்றது. அதற்கு முந்தைய அனைத்துப் பயிற்சிகளும் தென்ஆப்பிரிக்காவில் நடைபெற்றன.

## சர்வதேச சூரியசக்தி கூட்டிணைவின் முதல் கூடுகை

- சர்வதேச சூரியசக்தி கூட்டிணைவின் (ISA) முதல் கூடுகையை புதுடெல்லியில் பிரதமர் துவங்கி வைத்தார்.
- இதே நிகழ்வானது 2வது இந்தியப் பெருங்கடல் கரையோர கூட்டமைப்பின் (Indian Ocean Rim Association - IORA) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 2வது உலகளாவிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முதலீடு (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் சந்திப்பு மற்றும் கண்காட்சி) ஆகியவற்றை தொடங்கி வைப்பதாகவும் அமைந்தது.
- Renewable Energy முதலீடு என்பது புதுப்பிக்கக்கூடிய ஆற்றல்களின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டிற்கான உத்திகளை ஆராய்வதற்கான உலகளாவிய தளமாகும்.
- இந்தியப் பெருங்கடல் கரையோர கூட்டமைப்பானது இந்தியப் பெருங்கடல் பிராந்தியங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மீதான டெல்லி பிரகடனத்தை ஏற்றுக்

கொண்டது.

## ஸ்வச் சர்வெக்ஷான் கிராமின் விருதுகள் 2018

- நாட்டில் முன்னிலை வகிக்கும் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு ஸ்வச் சர்வெக்ஷான் கிராமின் விருதுகள் 2018-ஐ அண்மையில் பிரதமர் வழங்கினார்.
- சிறந்த மாநிலமாக ஹரியானாவும் அதனைத் தொடர்ந்து குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவையும் உள்ளன.
- சிறந்த மாவட்டமாக மஹாராஷ்டிராவின் சதாரா மாவட்டமும் அதனைத் தொடர்ந்து ரேவாரி (ஹரியானா) மற்றும் பெடப்பள்ளி (தெலுங்கானா) ஆகியவையும் இடம் பிடித்துள்ளன.
- குடிமக்களின் அதிகபட்ச பங்களிப்பை வழங்கியதற்கான விருது உத்திரப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது.
- குடிமக்களின் அதிகபட்ச பங்களிப்பை வழங்கிய மாவட்டத்திற்கான விருது மஹாராஷ்டிராவின் நாசிக்கிற்கும் அதனைத் தொடர்ந்து சோலாப்பூர் (மஹாராஷ்டிரா) மற்றும் சித்தோர்கர் (ராஜஸ்தான்) ஆகிய மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டது.
- இந்தத் தரவரிசையானது மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகத்தின் தேசிய ஸ்வச் சர்வெக்ஷான் கிராமின் 2018-ஐ அடிப்படையாகக் கொண்டது.

## மின்னணு முறையிலான வழங்கீடுகளை ஏற்றுக்கொள்ளும் அரசு தரவரிசை (GEAR)-2018

- 2018 ஆம் ஆண்டிற்கான மின்னணு முறையிலான வழங்கீட்டை ஏற்றுக் கொள்ளும் அரசு தரவரிசைப் பட்டியலில் (GEAR - Government e-Payments Adoption Ranking) 78 நாடுகளில் இந்தியா 28வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் 36வது இடத்தில் இருந்த இந்தியாவானது 8 இடங்கள் முன்னேறியுள்ளது. இது டிஜிட்டல் மாற்றம் நோக்கிய நாட்டின் முன்னேற்றத்திற்கு வலுவூட்டுகிறது.
- ஏழு பிரிவுகளில் 89.7 புள்ளிகள் பெற்று நார்வேயானது GEAR தரவரிசையில் முதலிடம் வகிக்கிறது.
- 2018 GEAR ஆனது ஒரு பொருளாதார புலனாய்வு அலகுடன் (EIU - Economist Intelligence Unit) உலகளாவிய குறியீடு மற்றும் நிதிச் சேவைகள் கூட்டுறவு விசா மூலம் நியமிக்கப்பட்ட திறனளவிடல் ஆய்வாகும்.

## உதயம் அபிலாஷா

- இந்திய சிறுதொழில் அபிவிருத்தி வங்கியானது (SIDBI - Small Industries Development Bank of India) தேசிய அளவிலான தொழில் முனைவோர் விழிப்புணர்வுப் பிரச்சாரமான “உதயம் அபிலாஷாலா”வை தொடங்கியுள்ளது.

- இது 28 மாநிலங்களிலிருந்து நிதி ஆயோக்கால் அடையாளம் காணப்பட்ட 115 லட்சிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.
- இந்த பிரச்சாரத்தைச் செயல்படுத்துவதற்காக, SIDBI ஆனது சிறப்பு நோக்க வாகனமான (SPV - Special Purpose Vehicle) CSC இ-கவர்னன்ஸ் சர்வீசஸ் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது. CSC SPV-யானது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் பொது சேவை மையங்களின் (Commone Service Centres - CSC) மூலம் இணைந்துள்ள ஒரு அமைப்பாகும்.

## திறன் இடைவெளியை குறைப்பதற்கான பணிக்குழு

- மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகமானது உலகப் பொருளாதார மன்றத்தின் (World Economic Forum) ஒத்துழைப்புடன் இந்தியாவில் திறன் இடைவெளியை குறைப்பதற்கான பணிக்குழுவை தொடங்கியுள்ளது.
- இன்போசிஸின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநரான சலில் பரேக் உடன் மத்திய திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறைக்கான அமைச்சர் தர்மேந்திர பிரதானும் இதன் இணை தலைவர்களாக நியமிக்கப்படுவர்.
- இந்தியாவில் உள்ள இடைவெளிகளை எதிர்கொள்ளவும் எதிர்கால வேலைகளுக்காக இந்திய தொழிலாளர்களை தயார் செய்யவும் செயல்திட்டங்களை உருவாக்குவதே இந்த பணிக்குழுவின் இலக்காகும்.

## இந்தியா-இரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையேயான 19-வது வருடாந்திர உச்சி மாநாடு

- இந்தியா-இரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான 19-வது வருடாந்திர உச்சி மாநாடு புது தில்லியின் ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்றது.
- இந்தியா இரஷ்யாவிடமிருந்து S-400 ஏவுகணை அமைப்பை வாங்குவதற்கான 5.43 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.
- இது அமெரிக்காவின் எதிரிகளை பொருளாதாரச் சட்டத்தின் மூலம் எதிர்ப்பது (CAATSA - Countering Adversaries through Sanctions Act) என்ற சட்டத்தின்படி இந்தியாவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்க வழிவகுக்கும்.

### S - 400

- S-400 என்ற ஏவுகணையானது S-300 என்ற ஏவுகணையின் மேம்படுத்தப்பட்ட அமைப்பாகும்.
- இந்த S-400 ஏவுகணையானது தரையிலிருந்து பாய்ந்து சென்று எதிரி நாட்டு விமானங்கள்/ஏவுகணைகளை வான் பரப்பிலேயே தாக்கி அழிக்கும் அமைப்பாகும்.
- 2007 ஆம் ஆண்டு முதல் இரஷ்யாவில் பயன்பாட்டில் இருக்கும் இந்த ஏவுகணை அல்மேஸ் அண்டே என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

## ஜிம்மெக்ஸ் (Jimex) - 18

- ஜப்பான் - இந்தியா கடல்சார் பயிற்சியின் (Japan-India Maritime Exercise -Jimex) 3வது பதிப்பு ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் தொடங்கியுள்ளது.
- ஜிம்மெக்ஸ்–18 இன் நோக்கமானது இரு நாடுகளின் கடற்படைகளுக்கிடையே இயங்குத் தன்மையை மேம்படுத்துதல், சிறந்த நடைமுறைகளை புரிந்து கொள்ளுதல் மற்றும் இணைத்துக் கொள்ளுதல் ஆகும்.

***ஜிம்மெக்ஸ் - 18***

- ஜனவரி 2012-ல் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு மீது சிறப்பு கவனம் செலுத்துவதற்காக இந்தியா மற்றும் ஜப்பான் கடல்சார் பயிற்சி தொடங்கப்பட்டது.
- முதல் பயிற்சியானது ஜப்பானின் கடற்கரைப்பகுதியில் நடைபெற்றது.
- 2013 ஆம் ஆண்டு ஜிம்மெக்ஸ்-ன் 2வது பதிப்பு சென்னையில் நடத்தப்பட்டது.

## போட்டிச் சட்டம் மறுசீராய்வு குழு

- மத்திய நிதி அமைச்சகமானது மாறிவரும் வியாபாரச் சூழல்களுக்கேற்ப சட்டத்தை மாற்றியமைப்பதை உறுதி செய்வதற்காக 9 உறுப்பினர்கள் கொண்ட போட்டிச் சட்ட சீராய்வுக் குழுவை அமைத்திருக்கின்றது.
- இக்குழுவானது பெருநிறுவன விவகாரங்கள் துறை செயலாளர் இஞ்செட்டி சீனிவாஸ் தலைமையில் அமைக்கப்படும்.
- இது இந்திய திவால் மற்றும் கடன் சீரமைப்பு மன்றத்தின் தலைவர் M.S. ஷாஹுவையும் இந்தியப் போட்டி ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களாகக் கொண்டது ஆகும்.
- 2002 ஆம் ஆண்டு போட்டிச் சட்டம் ஏற்படுத்தப்பட்டதோடு 2009 ஆம் ஆண்டு இந்தியப் போட்டி ஆணையமும் ஏற்படுத்தப்பட்டது.


COMPETITION COMMISSION OF INDIA

Competition Commission of India is a body of the Government of India responsible for enforcing The Competition Act, 2002 throughout India and to prevent activities that have an adverse effect on competition in India. It was established on 14 October 2003. It became fully functional in May 2009 with Dhanendra Kumar as its first Chairman

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பிசிசிஐ உள்ளடக்கம்

- மத்திய தகவல் ஆணையமானது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தை தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கொணர்ந்துள்ளது.
- தகவல் உரிமை விவகாரங்களுக்கான உச்ச அமைப்பான இந்த தகவல் ஆணையம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தன்மை, நிலை மற்றும் செயல்பாட்டு அம்சங்கள் ஆகியன தகவல் உரிமைச் சட்டத்தின் பிரிவு 2(h) என்பதுடன் ஒத்துப்போவதாக தெரிவித்துள்ளது.
- இச்சட்டத்தின் பிரிவு 2(h) என்பது தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் எந்த அமைப்புகள் பொது அமைப்புகளாக தகுதி பெறும் என்ற விதியை விளக்குகின்றது.




## தூய்மையான வளாகத்திற்கான தரநிலைகள்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் பல்வேறு பிரிவுகளின் கீழ் தூய்மையான வளாகத்திற்கான தரநிலைகளை (Swacch Compus rankings) அறிவித்துள்ளது.
- இந்த தரநிலைகள் ஸ்வச்சதா ஹை சேவா என்ற கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்பட்டன.
- இந்தத் தரநிலைகளின் கீழ் தூய்மையான தொழில்நுட்ப நிறுவனங்கள் என்ற பிரிவில் கோயம்புத்தூரைச் சேர்ந்த அம்ரிதா விஸ்வ வித்யபீடம் முதலிடம் பிடித்திருக்கின்றது.
- அரியானாவின் மகரிஷி தயானந்தா பல்கலைக்கழகம் தூய்மையான அரசுப் பல்கலைக்கழகங்கள் பிரிவில் முதலிடம் பிடித்திருக்கின்றது.
- தனியார் பல்கலைக்கழகங்களுக்கான தூய்மையான உறைவிட வளாகங்களுக்கான தரவரிசையில் புனேவின் சிம்பயாசிஸ் சர்வதேச பல்கலைக்கழகம் முதலிடத்தில் இருக்கின்றது.

## இந்தியா திறன்கள் 2018

- நாட்டின் மிகப்பெரிய திறன் போட்டியான இந்திய திறன்கள் 2018 ஆனது புதுடெல்லியில் நடந்து முடிந்தது.

- இந்திய திறன்கள் 2018 ஆனது பல்வேறு திறன்களில் சிறந்த செயல்திறனுடையவர்களை அடையாளம் காணவும், அவர்களை அங்கீகரிக்கவும், ஊக்குவிக்கவும் மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய அளவிலான போட்டியின் இரண்டாம் பதிப்பு ஆகும்.
- 2019-ல் ரஷ்யாவின் கஸானில் நடைபெறவுள்ள 45வது உலக திறன்கள் போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு முன்னதாக இந்தப் போட்டிகளின் வெற்றியாளர்களில் சிலருக்கு கூடுதல் பயிற்சி அளிக்கப்படும்.

## கங்கை நதி நீரோட்ட இலக்கு

- மத்திய அரசானது கங்கை நதியின் வெவ்வேறு நீட்டிப்புகளில் குறைந்தபட்ச சூழலியல் ஓட்டத்தை கட்டாயமாக்கியுள்ளது.
- சூழலியல் ஓட்டம்/சுற்றுச்சூழல் ஓட்டம் என்பது நன்னீர், கழிமுக சூழலியல் அமைப்புகள், மனித உயிரினங்கள் மற்றும் அந்தச் சூழலியலை சார்ந்துள்ள உயிரினங்களின் நல்வாழ்விற்கான குறைந்தபட்ச தண்ணீரின் அளவு, நேரம் மற்றும் தரத்தைக் குறிக்கிறது.

## மனித நேயத்திற்காக இந்தியா

- மகாத்மா காந்தியின் 150 வது பிறந்தநாளை முன்னிட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மனிதநேயத்திற்காக இந்தியா என்ற முன்முயற்சியை துவங்கி வைத்துள்ளார்.
- இந்த முன்முயற்சியானது பல நாடுகளில் ஒரு வருட காலத்திற்கு செயற்கை மூட்டுகளைப் பொருத்துவதை அம்சமாகக் கொண்டது.
- இதற்காக வெளியுறவுத்துறை அமைச்சகமானது தொண்டு நிறுவனமான பகவான் மஹாவீர் விக்லாங் சகாயத்தா சமிதி (Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti -BMVSS) உடன் கூட்டிணைந்துள்ளது.
- BMVSS ஆனது உலகளாவிய அளவில் செயற்கை மூட்டுகளைப் பொருத்தும் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும்.
- 1975-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனத்தின் முத்திரை உறுப்புகளில் (Trademark limb) ‘ஜெய்ப்பூர் கால்’ மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

## 2018 ஆம் ஆண்டின் ஆக்ஸ்பேமின் உலக சமமின்மைக்கான குறியீடு

- ஐக்கிய இராஜ்ஜியத்தை அடிப்படையாகக் கொண்ட “ஆக்ஸ்பேம் இண்டர்நேஷனல்” (Oxfam International) என்ற அறக்கட்டளையானது சமமின்மையை குறைப்பதற்கான உறுதிக் குறியீட்டை (Commitment to Reducing Inequality - CRI) சமீபத்தில் வெளியிட்டது.
- வருடாந்திரக் குறியீட்டின் 2-வது பதிப்பில் மொத்தமுள்ள 157 நாடுகளில் இந்தியா 147வது இடத்தில் உள்ளது.
- ஆசிய நாடுகளுக்கிடையே ஜப்பான் 11-வது இடத்தைப் பிடித்து முன்னிலையில் உள்ளது.

- இக்குறியீட்டின் முதலிடத்தில் டென்மார்க் உள்ளது. இந்நாட்டைத் தொடர்ந்து ஜெர்மனி, பின்லாந்து, ஆஸ்திரியா மற்றும் நார்வே ஆகிய நாடுகள் உள்ளன.
- வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் சீனா 81வது இடத்தையும் பிரேசில் 39வது இடத்தையும் இரஷ்யா 50-வது இடத்தையும் பிடித்துள்ளன.
- இந்த அறிக்கையின்படி, சமமின்மையை குறைப்பதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை தென் கொரியா, நமீபியா மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் எடுத்துள்ளன.
- இருந்தபோதிலும் இந்தியா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் பின்தங்கிய இடத்தில் உள்ளன.

## சர்வதேச மொத்த சந்தை தொழிற்சங்கத்தின் 32-வது சர்வதேச கருத்தரங்கு

- ஹரியானாவின் குருகிராமில் சர்வதேச மொத்த சந்தை தொழிற்சங்கத்தின் (WUWM - World Union of Wholesale Markets) 32வது சர்வதேச கருத்தரங்கு தொடங்கப்பட்டது.
- சர்வதேச மொத்தச் சந்தை தொழிற்சங்கக் கருத்தரங்கு முதன்முறையாக இந்தியாவின் குருகிராமில் நடைபெறுகிறது.
- இக்கருத்தரங்கின் கருத்துருவானது, "டிஜிட்டல் சகாப்தத்தில் மொத்த சந்தைகள் : சவால்கள் மற்றும் வாய்ப்புகள்"
- இக்கருத்தரங்கை
  - ஹரியானா மாநில விவசாய சந்தைப்படுத்தல் மன்றம், பஞ்சுக்லா
  - மாநில விவசாய சந்தைப்படுத்தல் மன்றங்களின் தேசிய ஆணையம், புதுதில்லி
  - சர்வதேச மொத்த சந்தை தொழிற்சங்கம், ஹேக், நெதர்லாந்து

  ஆகியவை கூட்டாக இணைந்து நடத்தின.

## #MeToo (நானும் கூட) குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்வதற்கான 4 உறுப்பினர்கள் கொண்ட குழு

- சமீபத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது #MeToo (நானும் கூட) குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்வதற்காக 4 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- நீதித்துறை சார்ந்த மூத்த மற்றும் சட்ட உறுப்பினர்கள் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பர்.
- பணியிடத்தில் பெண்களின் பாலியல் வல்லுறவு (தடுத்தல், தடை செய்தல் மற்றும் குறைகளைக் களைதல்) சட்டம், 2013-ன்படி இது அமைக்கப்படவிருக்கிறது.

## இந்தியா - அமெரிக்க நாடுகளுக்கிடையேயான முதலாவது முப்படைகளுக்கான பயிற்சி

- இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையேயான முதலாவது முப்படைகளுக்கான பயிற்சி நடைபெறவிருக்கிறது.
- இரு நாடுகளின் அனைத்துப் படைகளும் இப்பயிற்சியில் கலந்துகொள்ளவிருக்கிறது. மேலும் சிறப்புப் படைகள் கலந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வருகின்றன.
- இந்தியாவுடனான முப்படைகளுக்கான பயிற்சியில் கலந்துகொள்ளும் இரண்டாவது நாடு அமெரிக்கா ஆகும். இந்தியாவுடனான முப்படைகளுக்கான பயிற்சியில் கலந்து கொண்ட முதல் நாடு இரஷ்யா ஆகும்.
- ஏற்கெனவே இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஒவ்வொரு படைகளின் தனித்தனி பயிற்சிகள் நடைபெற்றிருக்கின்றன.
    - இரு நாடுகளின் தரைப்படை - யுத் அபயாஸ் (வருடாந்திர பயிற்சி)
    - இரு நாடுகளின் கடற்படை - மலபார் (மேலும் ஜப்பானும் இதில் கலந்து கொண்டது)
    - வான் படைகள் - கோப் இந்தியா (இரு நாடுகளுக்கிடையேயான பயிற்சி)
- ஆனால் முதன்முறையாக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் முப்படைகள் கூட்டாக இணைந்து இப்பயிற்சியில் கலந்து கொள்கின்றன.

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம்


- சமீபத்தில் இந்தியா ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தின் (UNHRC- United Nation's Human Rights Council) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- UNHRC - ஆனது மனித உரிமைகளை ஊக்கப்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் பணியை மேற்கொள்ளும் ஐ.நா.வின் உயரிய அமைப்பாகும்.
- மொத்தமுள்ள 193 நாடுகளில் 188 நாடுகளின் வாக்குகளைப் பெற்று ஆசிய-பசுபிக் பிரிவில் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும் பங்குபெற்ற நாடுகளில் இந்தியா அதிக வாக்குகளைப் பெற்று UNHRC-ல் இடம் பிடித்துள்ளது.
- UNHRC-ன் 18 புதிய உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தனிப்பெரும்பான்மை வாக்குகள் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இம்மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பங்குபெறும் நாடுகள் குறைந்தபட்சம் 97 வாக்குகளைப் பெற வேண்டும்.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் மூன்று ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் பணியாற்றுவார்கள்.
- இதன்மூலம் UNHRC-க்கு இந்தியா 5வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்குமுன் இந்தியா 2006-2009, 2011-2014 மற்றும் 2014-2017 ஆகிய ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## இந்த் - இந்தோ கார்பட்

- இந்தோனேஷியாவின் பெலாவனில் இந்தியா-இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியின் 32வது பதிப்பு நடைபெறுகிறது.
- 2002 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு இருமுறை இரு நாடுகளின் கடற்படைகளும் இணைந்து ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.
- இந்த ரோந்துப் பயிற்சி 3 நிலைகளில் நடைபெறவிருக்கிறது. இப்பயிற்சியின் நிறைவு விழா அந்தமான் நிக்கோபர் தீவுகளின் போர்ட் பிளேயரில் நடைபெறவிருக்கிறது.
- இந்தியக் கடற்பகுதியைப் பாதுகாக்கும் முயற்சியாக சர்வதேச கடல் எல்லைக் கோட்டிற்கு அருகே இது நடத்தப்படவிருக்கிறது.

## உலகளாவிய ஆர்டிஐ மதிப்பீடு

- அக்ஸஸ் இன்போ ஐரோப்பா நிறுவனம் மற்றும் சட்டம் மற்றும் மக்களாட்சி மையம் ஆகியவை இணைந்து வெளியிட்ட உலகளாவிய ஆர்டிஐ (தகவல் அறியும் உரிமைச் சட்டம்) மதிப்பீட்டின்படி, மொத்தமுள்ள 123 நாடுகளில் இந்தியா 6 வது இடத்தில் உள்ளது.




Source: Access Info Europe and Centre for Law and Democracy; Transparency International India

- இந்தியா, 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தரவரிசையில் 2 வது இடத்தில் இருந்தது. இந்தியா, 2013 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட தரவரிசை வரையில் 2 வது இடத்திலேயே தொடர்ந்தது.
- "தடைகள் மற்றும் பாதுகாப்பு" பிரிவில் இந்தியா மோசமாக செயல்பட்டது என்று இந்த அறிக்கை கூறுகிறது. குற்றம் சார்ந்த தவறுகளை வெளிப்படுத்துபவர்களை பாதுகாக்க இந்தியா தவறிவிட்டதை இது வெளிப்படுத்துகிறது.
- இந்தக் களஆய்வு டிரான்ஸ்பெரன்சி இண்டர்நேசனல் இந்தியா (Transparency International India) என்ற அமைப்பால் மேற்கொள்ளப்பட்டது.
- இதில் ஆப்கானிஸ்தான் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து மெக்சிகோ, செர்பியா, இலங்கை மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகள் உள்ளன.
- இதில் ஆஸ்திரியா 33 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் உள்ளது.

## ஸ்வச் பாரத் யாத்ரா

- உலக உணவு தினமான அக்டோபர் 16 அன்று மத்திய அரசானது "ஸ்வச் பாரத் யாத்ரா" என்ற தேசிய அளவிலானப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இது பாதுகாப்பான உணவை உண்ணுதல் மற்றும் ஆரோக்கியமாக இருத்தலைப் பற்றி மக்களுக்கு உணர்த்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது மாநிலங்களுடன் இணைந்து இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் ஆணையத்தினால் (Food Safety and Standards Authority of India-FSSAI) தலைமை தாங்கி நடத்தப்படுகிறது.

## இளைஞர் சாலைப் பாதுகாப்பு கற்றலுக்கான உரிமத் திட்டம்

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது இளைஞர் சாலைப் பாதுகாப்பு கற்போருக்கான உரிமத் திட்டத்தை புதுடெல்லியில் தொடங்கியுள்ளது.
- இது டையாஜியோ இந்தியா மற்றும் சாலைப் போக்குவரத்து கல்வி நிறுவனத்துடன் (IRTE - Institute of Road Traffic Education) இணைந்த அரசு மற்றும் தனியார் கூட்டு (PPP – Public Private Partnership) முன்முயற்சியாகும்.
- நாட்டில் இத்துறையில் இதுவே முதலாவது இம்முறையிலான பயிற்சித் திட்டமாகும்.

## 'சௌபாக்கியா'வின் கீழ் விருது வழங்கும் திட்டம்

- மத்திய அரசானது சௌபாக்கியாவின் கீழ் விருது வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த புதிய விருது திட்டமானது 100% வீடுகளை மின்மயமாக்கலை அடைவதற்காக மின்விநியோக நிறுவனங்கள் (DISCOMs - distribution companies), மாநிலங்களின் மின்துறைகள் மற்றும் அவற்றின் ஊழியர்களுக்கு உத்வேகத்தை அளிக்கும்.
- இத்திட்டம் துவங்குவதற்கு முன்பே 99 சதவீதத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின்மயமாக்கத்தை ஏற்கனவே பெற்ற 8 மாநிலங்கள் இந்த விருதுகளுக்கு தகுதியற்றவை ஆகும்.
- அந்த 8 மாநிலங்களாவன : தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், கோவா, குஜராத், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகியனவாகும்.
- சௌபாக்யா திட்டமானது பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா என்ற பெயரிலும் அறியப்படுகிறது.

## தேசிய சுகாதார விவரம் 2018

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது தேசிய சுகாதார

சுயவிவரம் 2018 இன் 12வது பதிப்பை வெளியிட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது சுகாதாரச் சேவைகள் பொது இயக்குநரகத்தின் கீழ் (Directorate General of Health Services) மத்திய சுகாதார நுண்ணறிவு வாரியத்தால் (Central Bureau of Health Intelligence – CBHI ) தயாரிக்கப்படுகிறது.
- 2005 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தேசிய சுகாதார விவரங்களை CBHI வெளியிடுகிறது.

## வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கானத் தடைகள்

- வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தற்போது எவ்வித தடைகளுமின்றி அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியும்.
- முன்பு, தங்களுடைய வருகையிலிருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அங்குள்ள வெளிநாட்டுப் பதிவு அலுவலரிடம் பதிவு செய்வது கட்டாயமாக இருந்தது.
- தற்போதைய இந்த ஆணையானது, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் உள்ள 29 மக்கள் வசிக்கும் தீவுகளையும் 11 ஆளில்லாத் தீவுகளையும் வெளிநாட்டவர்கள் பார்க்க அனுமதித்த முந்தைய கொள்கை முடிவிற்குப் பிறகு வழங்கப்பட்டு இருக்கின்றது. இத்தீவுகள் முன்பு வெளிநாட்டவர்களுக்கு 1963ம் ஆண்டின் வெளிநாட்டவர் ஆணை (தடைசெய்யப்பட்ட பகுதிகள்) என்பதின் கீழ் அனுமதி மறுக்கப்பட்டவையாக இருந்தன.
- சுற்றுலாத்துறை அமைச்சகமானது ராஜஸ்தான், உத்தரகண்ட், ஜம்மு மற்றும் காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களின் எல்லைப் பகுதிகளிலும் இத்தகைய பயணத் தடைகளை நீக்க வேண்டும் என்று முன்மொழிந்திருக்கின்றது.

## மிக ஆழம் செல்லும் நீர்மூழ்கி மீட்பு வாகனம்

- மும்பையில் உள்ள தனது கப்பற்படை தளத்தில் தனது முதல் மிக ஆழத்தில் செல்லும் நீர்மூழ்கி மீட்பு வாகனத்தை இந்தியக் கடற்படையானது தனது படையில் இணைத்துள்ளது.
- இந்த வாகனமானது நீர்மூழ்கிகளின் இடர்பாடுகளில் இருந்து வீரர்களை துரிதமாக மீட்கும் திறனை கடற்படைக்கு அளிக்கின்றது.
- இந்த வாகனம் ஐக்கியப் பேரரசின் ஜேம்ஸ் பிஷர் & சன்ஸ் என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- இரண்டாவது வாகனம் 2019ம் ஆண்டு விசாகப்பட்டினத்தில் சேர்க்கப்பட இருக்கின்றது.

## 2018 ஆம் ஆண்டின் சமூக தொழில் முனைவோர் (SEOY)

- ஸ்வயம் ஷிக்ஷான் பிரயாக் (SSP - Swayam Shikshan Prayog) அமைப்பின் நிறுவனரான பிரேமா

கோபாலன் 2018 ஆம் ஆண்டின் இந்திய சமூக தொழில் முனைவோர் (SEOY - Social Entrepreneur of the Year) என கௌரவிக்கப்பட்டுள்ளார்.

- ❖ கிராமப்புற வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துவதிலும், அடிமட்ட அளவில் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதிலும் அவருடைய பணிகளைப் பாராட்டி இது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த SEOY விருதானது, ஜீபிலாந் பாரதிய பவுண்டேஷன் மற்றும் சமூக தொழில் முயற்சிகளுக்கான ஸ்வாப் பவுண்டேஷன் ஆகியவற்றால் இணைந்து 2010-ல் உருவாக்கப்பட்டது.
- ❖ இது நடைமுறை மற்றும் நிலையான தீர்வுகளை செயல்படுத்தும் உறுதியான மற்றும் உயர் தாக்க சமூக தொழில் முனைவோர்கள் மற்றும் உறுதியளிப்பு ஆகியவற்றை அங்கீகரிக்கிறது.
- ❖ சமூக தொழில் முயற்சிக்கான ஸ்வாப் அறக்கட்டளை என்பது உலகப் பொருளாதார மன்றத்தைச் சார்ந்த (World Economic Forum -WEF) அமைப்பாகும்.

## 12வது ஆசிய-ஐரோப்பிய சந்திப்பு உச்சி மாநாடு

- ❖ 12வது ஆசிய-ஐரோப்பிய சந்திப்பு (ASEM - Asia-Europe Meeting) உச்சிமாநாடானது பிரஸல்சில் நடைபெற்றது.
- ❖ இந்த இரண்டு நாள் மாநாட்டின் இந்தியக் குழுவிற்கு குடியரசு துணைத் தலைவர் M. வெங்கையா நாயுடு தலைமைத் தாங்கினார்.
- ❖ இந்த ஆண்டின் கருத்துரு : "உலகளாவிய சவால்களுக்கு, உலகளாவிய பங்கு தாரர்கள்"( Global Partners for Global Challenges).

## உலகளாவிய போட்டித்திறன் குறியீடு 2018

- ❖ 2018-க்கான உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய போட்டித்திறன் குறியீட்டில் (GCI 4.0 - Global Competitiveness Index) இந்தியாவானது 58வது இடத்தில் மிகவும் போட்டித்திறன் வாய்ந்த பொருளாதாரமாக உள்ளது.
- ❖ GCI 4.0 ஆனது பொருளாதாரத்தின் உற்பத்தி நிலையை நிர்ணயிக்கும் காரணிகள் மூலம் போட்டித்திறனை மதிப்பீடு செய்கிறது.
- ❖ இந்தியாவின் மதிப்பானது 2017ன் நிலையை விட 5 இடங்கள் முன்னேறியுள்ளது. இது G20 நாடுகளில் மிகப்பெரிய முன்னேற்றமாகும்.
- ❖ 140 பொருளாதாரங்களையுடைய பட்டியலில், அமெரிக்கா முதலிடத்தையும் அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி முறையே 2வது மற்றும் 3வது இடத்தையும் பிடித்துள்ளன.




- BRICS பொருளாதாரங்களில் சீனா 28வது இடத்தைப் பிடித்து முதலிடத்தில் உள்ளது. ஆயினும் தெற்காசியாவின் “முக்கிய உந்து சக்தியாக” இந்தியா தொடர்கிறது.
- உலகப் பொருளாதாரமானது 2018 - 2019 கால அளவில் சுமார் 4% உயரும் என இந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்துடன் லேடி இர்வின் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்


- மத்திய கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தீன்தயாள் அந்தியோதயா திட்டம்-தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டம் (DAY-NRLM/ Deendayal Antyodaya Yojana - National Rural Livelihood Mission) ஆனது லேடி இர்வின் கல்லூரியுடன் “ரோஷினி” அமைப்பை அமைப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ரோஷினி என்பது பெண்கள் குழுவிற்கான சமூக நடவடிக்கை மையமாகும். இது தொழில்நுட்ப ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் யுனிசெப் என்ற அமைப்பால் ஆதரிக்கப்படுகிறது.

## உலகின் மிகவும் மன அழுத்தமுடைய நாடு - இந்தியா

- உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி உலகிலேயே மிகவும் மன அழுத்தமுடைய நாடாக இந்தியா உள்ளது. இதனைத் தொடர்ந்து சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவை

உள்ளன.

- 2015-2016 தேசிய மன நல ஆரோக்கிய ஆய்வின்படி (NMHS - National Mental Health Survey) குறைந்தபட்சம் 6.5% இந்திய மக்கள் ஏதேனும் ஒருவித மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.




- இந்தியாவின் சராசரி தற்கொலை விகிதமானது ஒரு லட்சம் மக்களுக்கு 10.9 என்ற அளவில் உள்ளது. உலக அளவில் மன அழுத்தமானது 2005 லிருந்து 2015 வரை 18% உயர்ந்துள்ளது.
- உலகளாவிய குறைபாடுகளில் மன அழுத்தமானது மிகப்பெரிய ஒற்றைப் பங்களிப்பாளராக WHO-ஆல் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## தர்மா கார்டியன்

- இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான 'தர்மா கார்டியன்' என்ற முதல் கூட்டு ராணுவப் பயிற்சி 2018 நவம்பர் 1 முதல் 14 வரை மிசோரமின் வைரங்டேயில் நடைபெறவுள்ளது.
- இது இரு நாடுகளின் இராணுவத்திற்குமிடையே உள்ள பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் மரியாதையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் உலகளாவிய பயங்கரவாத நிகழ்வுகளை கண்காணிப்பதற்கும் இது உதவுகிறது.

## வட மத்திய இரயில்வே - கைபேசி செயலிகள்

- வட மத்திய இரயில்வேயானது (North Central Railways - NCR) இரண்டு கைபேசி செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - என்சிஆர் ராஸ்தா (NCR RASTA) - தனது பணியாளர்களுக்காக
    - யாத்ரி ராஸ்தா (Yatri RASTA) - தனது பயணிகளுக்காக
- "NCR RASTA" (தொகுக்கப்பட்ட இரயில்வே சொத்துக்களின் சுருக்கமான பின்தொடர்

செயலி) என்ற செயலியானது இரயில்வே அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்காகவும் அனைத்து இரயில்வே சொத்துகளை துல்லியமாகக் கணக்கிடுவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- "Yatri RASTA" என்ற செயலியானது (நிலைய கண்காணிப்பிற்கான இரயில்வே அணுகுமுறைக்கான செயலி) பொது மக்கள் இரயில் நிலையங்களை எளிதில் கண்டுபிடிக்க உதவுகிறது.

## ஆசாத் ஹிந்த் அரசு – 75 வது ஆண்டு

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலான ஆசாத் ஹிந்த் அரசின் 75வது ஆண்டின் நினைவாக அக்டோபர் 21 அன்று பிரதம அமைச்சர் செங்கோட்டையில் மூவர்ணக் கொடியை ஏற்றினார்.
- பாரம்பரியமாக பிரதம அமைச்சர் சுதந்திர விழாவான ஆகஸ்ட் 15 அன்று வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டையில் தேசிய மூவர்ணக் கொடியை ஏற்றுவார்.




- 1943 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று நாட்டின் முதலாவது சுதந்திர அரசாங்கமான 'ஆசாத் ஹிந்த் அரசாங்கம்' உருவானதை போஸ் அறிவித்தார்.
- இது 1940 ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்காக அச்சு நாடுகளுடன் (Axis Powers) இணையும் நோக்கத்துடன் இந்தியாவிற்கு வெளியே உருவான விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதியாகும்.

## தேசிய பிராண்டுகள் 2018 அறிக்கை

- பிராண்ட் பைனான்ஸ் என்ற அமைப்பால் (Brand Finance) சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய பிராண்டுகள் 2018 அறிக்கையின்படி, இந்தியாவானது 50 உயர் மதிப்புடைய தேசிய பிராண்டுகளில் 9வது இடத்தில் உள்ளது.

- ❖ இத்தாலியானது இந்தியாவை மாற்றி 8வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ கடந்த ஆண்டில் பிராண்ட் மதிப்பில் 5% வளர்ச்சியை எட்டிய போதிலும் இந்தியாவானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக கீழிறங்கியுள்ளது.
- ❖ கடந்த வருடத்தில் அமெரிக்காவானது தனது பிராண்ட் மதிப்பானது 23% உயர்ந்து மீண்டும் பட்டியலில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.
- ❖ சீனாவானது மீண்டும் இரண்டாவது இடத்திலும் அதனைத் தொடர்ந்து ஜெர்மனி, ஐக்கிய ராஜ்ஜியம், ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகியவை இடம் பிடித்துள்ளன.





- ❖ இந்த அறிக்கை இலண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட ஆலோசனை நிறுவனமான பிராண்ட் பைனான்ஸ் நிறுவனமானது உலகின் மிகப்பெரிய நிறுவனங்களை மதிப்பிடுவதற்காக அந்நிறுவனங்களின் வர்த்தக முத்திரை மற்றும் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்ட ராயல்டி நிவாரண முறையை உபயோகித்துள்ளது.

## இந்தியாவின் மிக நீண்ட ஆற்றுப்பாலம்

- ❖ அசாமின் துபிரி என்ற பகுதியை மேகலயாவின் புல்பரி என்ற பகுதிக்கு இணைக்கும் இந்தியாவின் மிக நீண்ட ஆற்றுப் பாலமானது பிரம்மபுத்ரா ஆற்றின் குறுக்கே 2026-27ல் கட்டப்படவுள்ளது.
- ❖ 19.3 கி.மீ. நீளத்திற்கு 4 வழித்தடத்தையுடைய இந்தப் பாலமானது 203 கி.மீ. வழியான சாலைப் பயணத்தைக் குறைக்கும். இந்த புதிய பாலமானது அசாமில் இருந்து மேகலயா வரையிலான NH 127-Bயின் விடுபட்ட இணைப்பை நிறைவு செய்யும்.
- ❖ 2017-ல் பிரதமரால் திறந்து வைக்கப்பட்ட 9.15 கி.மீ. நீளமுடைய டோலா-சடியா பாலமானது தற்போது இந்தியாவின் நீண்ட ஆற்றுப் பாலமாகும்.

## சுரங்கத்திற்குள் அமைக்கப்பட்ட முதலாவது இரயில் நிலையம்

- இந்தியாவிலேயே முதல்முறையாக சுரங்கத்திற்குள்ளேயே கட்டப்படும் இரயில் நிலையம் இமாச்சலப் பிரதேசத்தில் வரவுள்ளது.
- கெய்லாங் நிலையம் என்று பெயரிடப்பட்ட இந்த நிலையமானது இந்திய-சீன எல்லைக்கருகில் உள்ள பிலாஸ்பூர்-மணாலி லே தடத்தில் கட்டப்படவுள்ளது.




- டெல்லி மற்றும் பிற நகரங்களில் உள்ள பல மெட்ரோ நிலையங்கள் சுரங்கங்களின் உள்ளே அமைந்துள்ளன. ஆனால் சுரங்கப் பாதைக்கு உள்ளேயே இரயில்வே அமைப்பு அமைவது இதுவே முதன்முறையாகும்.

## EPFO-ன் செயல்பாடுகளை ஆய்வு செய்ய பாராளுமன்றக் குழு

- ஓய்வூதிய நிதிப் பிரிவான தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் (Employees Provident Fund Organisation) செயல்பாடு, அதன் உள்ளடக்கம் மற்றும் நிலுவைத் தொகை மீட்டெடுப்பு ஆகியவற்றை பாராளுமன்றக் குழு ஆய்வு செய்யும்.
- தொழிலாளர் குறித்த பாராளுமன்ற நிலைக்குழுவும் தொழிலாளர் சட்டத்தின் செயல்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர்களின் நல்வாழ்வுத் திட்டங்களை ஆய்வு செய்ய முடிவு செய்துள்ளது.
- இந்தக் குழுவானது பா.ஜ.க எம்பியான கிரித் சாமையாவின் தலைமையில் அமைந்துள்ளது.
- தற்பொழுது EPFO ஆனது நாட்டில் உள்ள ஒரே வருங்கால வைப்புநிதி (PF – Provident Fund) அமைப்பு அல்லது கட்டுப்படுத்தும் அமைப்பாக இல்லை.
- தனியார் நிறுவனங்கள்/அமைப்புகள்/பொதுத்துறை நிறுவனங்களின் வருங்கால வைப்பு நிதிகள் இந்த EPFO-ன் வரம்புக்குள் வருவனவாகும்.

## காப்பீட்டு கோரிக்கைகளை தவணை முறையில் செலுத்துவதை ஆய்வு செய்ய குழு

- ❖ காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (IRDAI - Insurance Regulatory and Development Authority of India) பொது மற்றும் சுகாதார காப்பீட்டு கோரிக்கைகளை தவணைகளாக செலுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ❖ இது IRDAI-ன் நிர்வாக இயக்குனர் (சுகாதாரம்) சுரேஷ் மாத்தூரால் தலைமை வகிக்கப்படுகிறது.
- ❖ இந்தக் குழுவானது பொது மற்றும் சுகாதாரக் காப்பீட்டு நிறுவனங்களால் தனி நபர் விபத்து மற்றும் சலுகை அடிப்படையிலான சுகாதாரக் காப்பீட்டு கோரிக்கைகளை தவணை முறையில் வழங்க அனுமதிப்பது குறித்த தேவைகளை ஆய்வு செய்யும்.

## இந்தியாவின் முதல் உள்நாடு சொகுசுக் கப்பல் - அங்க்ரியா

- ❖ இந்தியாவின் முதல் ஆடம்பர சொகுசுக் கப்பலான அங்க்ரியாவானது மும்பையில் தொடங்கப்பட்டது.
- ❖ மும்பையிலிருந்து கோவா வரை செல்லும் இந்த சொகுசுக் கப்பலை மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி மற்றும் மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்நாவிஸ் ஆகியோர் துவங்கி வைத்தனர்.




- ❖ மராத்தா கடற்படையின் முதல் அட்மிரல் கன்ஹோஜி அங்கிரே மற்றும் விஜய்துர்க் அருகே உள்ள அங்கிரியா பவளப்பாறை ஆகியோரின் பெயரே இதற்கு வைக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தம்

- இந்தியாவும் சீனாவும் உள்நாட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த இரண்டு நாடுகளுக்கிடையே இதுபோன்ற ஒப்பந்தம் கையெழுத்தாவது இதுவே முதன்முறையாகும்.
- இது பயங்கரவாத எதிர்ப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப் பொருட்கள் கட்டுப்பாடு, ஆட்கடத்தல் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றில் உதவுவதை வலுப்படுத்தவதையும் ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சிட்வி துறைமுகத்தை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- சிட்வி துறைமுகம், பலெட்வா உள்நாட்டு நீர்முனையம் ஆகியவற்றை இயக்குதல் & பராமரித்தல் (O&M / Operation and Maintenance) மற்றும் கலாதான் பல்மாதிரிப் போக்குவரத்து திட்டத்தில் உள்ளடங்கிய வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தனியார் துறைமுக செயல்பாட்டாளர்களை நியமிப்பதற்கான முக்கியமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் மியான்மர் நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- மியான்மரில் உள்ள சிட்வி துறைமுகமானது நிலத்தால் சூழப்பட்ட வடகிழக்கு இந்தியப் பகுதியை வங்காள விரிகுடாவோடு மிசோரம் வழியாக இணைக்கிறது.
- இது கொல்கத்தாவிற்கு மாற்றுவழி ஒன்றை வழங்குகிறது. மேலும் இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலும் முக்கியமான முன்னெடுப்பாக உள்ளது.

***<u>கலாதான் பல்வழி போக்குவரத்து திட்டம்</u>***

- இந்தத் திட்டமானது இந்தியாவின் கொல்கத்தா துறைமுகத்தை மியான்மரின் துறைமுகமான சிட்வியுடன் கடல் வழியாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- பின்னர் சிட்வி துறைமுகத்திலிருந்து மியான்மரின் லாஷியோ பகுதியை கலாதான் ஆற்றுப்படகு பாதை வழியாகவும் லாஷியோவிலிருந்து மிசோரம் (இந்தியா) வரையிலான தூரத்தை சாலைப் போக்குவரத்து வழியாகவும் இத்திட்டம் இணைக்கிறது.
- இந்தத் திட்டமானது கொல்கத்தாவிலிருந்து மிசோரம் வரையில் கிட்டத்தட்ட 1000 கி.மீ. தொலைவு பயணத்தைக் குறைத்து 3-4 நாட்கள் பயண நேரத்தை மிச்சப்படுத்துகிறது.

## இந்தியாவின் முதலாவது என்ஜினல்லாத இரயில் வண்டி -Train 18

- இந்தியாவின் முதல் என்ஜினல்லாத இரயில்வண்டியான Train 18, அக்டோபர் 29ம் தேதியன்று பரிசோதனைகளுக்காக சோதிக்கப்பட உள்ளது. இது 30 வருடமாக உள்ள சதாப்தி எக்ஸ்பிரஸ் வண்டிக்கு மாற்றாக கருதப்படுகின்றது.
- இந்த பளபளப்பான புதிய வண்டி 100 சதவிகிதம் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் (Integral Coach Factory - ICF) தயாரிக்கப்பட்டது.
- முழுவதும் குளிர்வசதி செய்யப்பட்ட இந்த இரயில் வண்டி சதாப்தியின் வேகமான மணிக்கு 130 கிலோ மீட்டர் என்பதைவிட அதிகமாக 15 சதவிகிதம் பயண நேரத்தை மிச்சப்படுத்தும் விதத்தில் மணிக்கு 160 கிலோமீட்டர் வேகத்தில் ஓடும் வசதியைப் பெற்றிருக்கின்றது.
- இந்த (Train 18) வண்டியின் பயணப் பெட்டிகள் LED விளக்குகளோடு பொருத்தப்பட்டு ஆற்றல் திறன் வாய்ந்ததாக உள்ளதோடு மட்டுமல்லாமல், மெட்ரோ ரயில் வண்டிகளில் உள்ளதைப் போல இந்த வண்டி தன்னிச்சையாக உந்தப்படும் வசதியுடைய என்ஜினல்லாத இரயில் வண்டி ஆகும்.

## நாகேஸ்வர் ராவ் - மத்தியப் புலனாய்வு அமைப்பின் இடைக்கால இயக்குநர்

- மத்தியப் புலனாய்வு அமைப்பின் இயக்குநரான அலோக் குமார் வர்மா மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்பின் சிறப்பு இயக்குநரான ராகேஷ் அஸ்தானா ஆகியோர் தங்களது பணிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.
- மத்தியப் புலனாய்வு அமைப்பின் மூத்த அதிகாரிகள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்ததையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது மத்தியப் புலனாய்வு அமைப்பின் இடைக்கால இயக்குநராக நாகேஸ்வர் ராவின் நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது உடனடியாக அமலுக்கு வரும் என்றும் (அக்டோபர் 24) அறிவிக்கப்பட்டுள்ளது.
- நாகேஸ்வர் ராவ் தற்பொழுது மத்தியப் புலனாய்வு அமைப்பின் இணை இயக்குநராக உள்ளார்.

## ஆராய்ச்சித் தொடர்பான இரண்டு திட்டங்களின் வலைதளங்கள் ஆரம்பம்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் இரண்டு திட்டங்களின் வலைதளங்களை ஆரம்பித்திருக்கின்றன.
    - IMPRESS (Impactual Policy Research in Social Science - சமூக அறிவியலில் மிகத் தீவிரமான கொள்கை ஆராய்ச்சி)
    - SPARC (Scheme for Promoting of Academic and Research Collaboration - கல்வி மற்றும்

ஆராய்ச்சிக்கான கூட்டு ஒத்துழைப்புத் திட்டம்)

- ❖ இந்த இரண்டு திட்டங்களின் நோக்கம் கல்வி நிலையங்களில் ஆராய்ச்சிக்கான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதாகும்.
- ❖ IMPRESS என்பது சமூக அறிவியல் தொடர்பான ஆராய்ச்சித் திட்டங்களில் பங்கேற்கும். இது இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் குழுவால் ஒருங்கிணைக்கப்படும்.
- ❖ SPARC என்பது கரக்பூர் ஐஐடியால் அறிவியல் ஆராய்ச்சியில் வெளிநாட்டு ஒத்துழைப்போடு சம்பந்தப்பட்டிருக்கும்.

## QS ஆசியத் தரவரிசைகள் 2019

- ❖ குவாக்கரேலி சைமண்ட்ஸ் என்ற நிறுவனத்தின் QS ஆசியப் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசை 2019 என்ற அறிக்கையின் படி, தரவரிசைப் பட்டியலில் இந்தியா தனது இருப்பை இரு மடங்காக முன்னேற்றியுள்ளது.
- ❖ ஆசியாவின் சிறந்த பல்கலைக் கழகமாக சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக்கழகம் மதிப்பிடப்பட்டிருக்கின்றது.
- ❖ இதனைத் தொடர்ந்து, ஹாங்காங் பல்கலைக்கழகம், சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம். சீனாவின் சிங்குவா மற்றும் பீகிங் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.
- ❖ சீனா (112) மற்றும் ஜப்பான் (89) ஆகியவற்றைத் தொடர்ந்து இந்தியா அதிக பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிலையங்களைக் கொண்டு மூன்றாவது இடத்தில் இருக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1 | National University of Singapore (NUS) | More | Singapore |
| 2 | The University of Hong Kong | More | Hong Kong |
| =3 | Nanyang Technological University, Singapore (NTU) | More | Singapore |
| =3 | Tsinghua University | More | China |
| 5 | Peking University | More | China |
| 6 | Fudan University | More | China |
| 7 | The Hong Kong University of Science and Technology | More | Hong Kong |
| 8 | KAIST - Korea Advanced Institute of Science & Technology | More | South Korea |
| 9 | The Chinese University of Hong Kong (CUHK) | More | Hong Kong |
| 10 | Seoul National University | More | South Korea |

- ❖ ஒட்டுமொத்தப் பட்டியலில் 500 என்ற எண்ணிக்கையில் புதிதாக 40 இந்திய நிறுவனங்கள்

உள்பட மொத்தம் 75 இந்திய நிறுவனங்கள் அதில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் எதுவும் முதல் 20 இடங்களில் வரவில்லை.

- ❖ பம்பாய் ஐஐடி அதிகபட்சமாக மதிப்பிடப்பட்ட நிறுவனமாகும். இது ஒரு இடம் முன்னேறி 33வது இடத்தை அடைந்து இருக்கின்றது.

## ஊழல் கண்காணிப்பு வாரம் 2018

- ❖ மத்திய ஊழல் ஆணையம் ஒவ்வொரு வருடமும் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தேதி (அக்டோபர் 31) எந்த வாரத்தில் ஏற்படுகின்றதோ அவ்வாரத்தை ஊழல் தடுப்பு வாரமாக அனுசரிக்கின்றது.
- ❖ 2018 ஆம் ஆண்டிற்கான ஊழல் தடுப்பு வாரம் அக்டோபர் 27 முதல் நவம்பர் 3 வரை அனுசரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- ❖ 2018 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்பு வாரத்திற்கான கருத்துரு - "ஊழலை ஒழிப்போம் - புதிய இந்தியாவைப் படைப்போம்" என்பதாகும்.

## சாகர் பிரசங்கம் 2.0

- ❖ இந்திய துணைக் குடியரசுத் தலைவர் கோவாவின் பனாஜியில் 3 நாட்கள் நடைபெறும் சாகர் பிரசங்கம் 2.0 என்ற மாநாட்டைத் துவக்கி வைத்தார்.
- ❖ கடற்சார் மாநாடான சாகர் பிரசங்கம் 2.0 ஆனது ஒருங்கிணைந்த தேசியப் பாதுகாப்பு மன்றத்தால் (Forum for Integrated National Security) ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ இது தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை கடற்பரப்பு மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றுடன் அடையாளப்படுத்திட எண்ணுகின்றது.

## ஜீன் மோனட் சிறப்புத்துவ மையத்திற்கான விருது

- ❖ ஐரோப்பிய ஒன்றியம் மணிப்பால் நிறுவனத்தின் உயர் கல்வியில் உள்ள ஐரோப்பியப் படிப்புகளுக்கான துறையை பெருமைமிகு ஜீன் மோனட் சிறப்புத்துவ மையத்திற்கான விருதிற்கான தேர்வாக அறிவித்திருக்கின்றது.
- ❖ இது நாட்டில் ஐரோப்பியப் படிப்புகளில் உள்ள ஒரே சிறப்புத்துவ மையமாக உருவெடுத்துள்ளது.
- ❖ முன்னதாக மணிப்பால் நிறுவனத்தின் உயர்கல்வியானது இந்திய அரசால் மாண்புமிகு நிறுவனம் என அடையாளப் படுத்தப்பட்டு இருக்கின்றது.

## உலகின் மிக உயர்ந்த ரயில்பாதை

- ❖ புதுடெல்லி மற்றும் லடாக் நகரங்களை இந்திய-சீன எல்லைப்பகுதி வழியாக செல்லக்கூடிய ஒரு ரயில்பாதையின் வழியாக இணைக்கும் திட்டத்தை இந்தியன்

இரயில்வே அறிவித்துள்ளது.

- ❖ அறிவிக்கப்பட்டுள்ள இத்திட்டம் இயக்கப்படும்போது பிலாஸ்பூர்- மணாலி- லே பாதையானது உலகின் மிக உயர்ந்த ரயில் பாதையாக இருக்கும்.
- ❖ சீனாவின் குவான்காய்-திபெத் ரயில்பாதையின் 2000 மீட்டர் உயர அளவை ஒப்பிடுகையில் இது கடல் மட்டத்திலிருந்து 5360 மீட்டர் உயரத்தில் அமையவுள்ளது.
- ❖ இத்திட்டம் முடிவடைந்த பின்பு, டெல்லி முதல் லே வரையிலான 40 மணிநேர பயணநேரமானது 20 மணி நேரமாக குறையும்.

*குறிப்பு*

- ❖ இப்பாதையில் 3000 மீட்டர் உயரத்தில் இந்தியாவில் முதலாவதாக சுரங்கப் பாதையினுள் கெய்லாங் இரயில் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

## ஸ்டேப்கார் - 2018 (STAPCOR)

- ❖ லட்சத் தீவு யூனியன் பிரதேசத்தின் பங்காராம் தீவில் பவளப் பாறைகளின் நிலை மற்றும் பாதுகாப்பு மீதான சர்வதேசக் கருத்தரங்கு (STAPCOR - 2018) நடத்தப் பட்டது.
- ❖ இக்கருத்தரங்கின் கருத்துருவானது, "வாழ்க்கைக்கான பாறைகள்" என்பதாகும்.
- ❖ இந்தக் கருத்தரங்கானது
  - ➢ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MOEFCC)
  - ➢ பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கம் (IUCN)
  - ➢ சுற்றுச்சூழல் தகவல் அமைப்பு

  ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு நிறுவனத்தின் (ZSI-Zoological Survey of India) தொழில்நுட்ப உதவியுடன் லட்சத் தீவு யூனியன் பிரதேச நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல், வனத்துறை ஆகியவற்றால் கூட்டாக இணைந்து நடத்தப்பட்டது.

- ❖ மேலும் இது 2018 ஆம் ஆண்டை சர்வதேசப் பவளப்பாறை ஆண்டின் மூன்றாவது பத்தாண்டுகளாக அறிவிக்கப்பட்டதுடன் ஒன்றிப் பொருந்துகிறது.
- ❖ 2018 ஆம் ஆண்டை சர்வதேசப் பவளப்பாறைகளுக்கான ஆண்டாக சர்வதேசப் பவளப் பாறைகள் முன்னெடுப்பு (ICRI - International Coral Reef Initiative) அறிவித்துள்ளது.

## பள்ளிக்கூட புத்தகப்பையின் சுமையைக் குறைப்பதற்கான வல்லுநர் குழு

- ❖ மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது பள்ளிக் குழந்தைகளின் புத்தகப்பையின் சுமையைக் குறைப்பதற்கான திட்ட வரைவை தயாரிப்பதற்காக வல்லுநர் குழுவை ஏற்படுத்தியுள்ளது.
- ❖ இக்குழு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆணையத்தின் (NCERT - National Council

of Educational Research and Training) பேராசிரியரான ரஞ்சன் அரோரா தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ஏற்கெனவே மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானா மாநிலங்கள் குழந்தைகளின் உடல் எடையில் 10 சதவீதத்திற்கு அதிகமாக பள்ளிக்கூட புத்தகப் பையின் எடை இருக்கக் கூடாது என்ற திட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

## வடகிழக்குத் திருவிழா

- வடகிழக்குத் திருவிழாவின் 6-வது பதிப்பு புதுடெல்லியில் அக்டோபர் 28 அன்று நடைபெற்றது.
- இந்திய சர்வதேச மைய விழாவின் 15-வது பதிப்பும் அக்டோபர் 27 முதல் 31 வரை நடைபெறுகிறது.
- இந்த திருவிழாவானது வடகிழக்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சகத்தின் வடகிழக்கு மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'வடகிழக்கு இலக்கு' என்ற நிகழ்வின் ஒரு பகுதியாகும்.
- இந்திய சர்வதேச மையத்தின் 15வது ஆண்டு விழாவாக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இதன் கருத்துரு "Experiencing the North East" என்பதாகும்.
- இவ்விழாவானது அசாம், அருணாச்சலப் பிரதேசம், மேகலாயா, மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து, திரிபுரா மற்றும் சிக்கிம் ஆகியவற்றின் புகழ்மிக்க கலாச்சாரப் பண்பாடுகளை சித்தரிக்கிறது.

## இந்திய கைபேசி மாநாடு

- புதுதில்லியில் ஏரோ சிட்டியில் 3 நாட்கள் நடைபெறும் இந்திய கைபேசி மாநாட்டின் 2வது பதிப்பு முடிவுற்றது.
- தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் மீது டிஜிட்டல் தொலைத் தொடர்புகளில் ஆய்வு செய்வதற்காக சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு வழக்கமான மேடை இதுவாகும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு : "புதிய டிஜிட்டல் வரைகோடுகள்: இணைத்து, உருவாக்கி, புதுமைப்படுத்து" (New Digital Horizons: Connect. Create. Innovate) என்பதாகும்.
- இது இந்திய கைபேசி இயக்குநர்கள் சங்கத்தாலும், இந்திய அரசின் தொலைத் தொடர்பு துறையாலும் இணைந்து நடத்தப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்கா-மெக்சிகோ-கனடா ஒப்பந்தம் (USMCA)

- அண்மையில் அமெரிக்கா, கனடா, மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகள் USMCA (The United States, Canada and Mexico) என்றழைக்கப்படும் திருத்தப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தின் மீது ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளன.




- 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 25 வருடமான வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு (North American Free Trade Agreement - NAFTA) பதிலாக USMCA என்ற இந்த ஒப்பந்தம் மாற்றாக அமையும்.
- இது அமெரிக்காவுக்கு கனடா மற்றும் மெக்ஸிகோவின் பால்வள சந்தைகளுக்கு அதிகமான அணுகலையும் கனடாவின் கார்களை அதிகமாக இறக்குமதி செய்யவும் அனுமதிக்கிறது.
- 18 ஆண்டுகளுக்கு நீடிக்கும் இது 6 வருடங்களுக்கு ஒருமுறை மறுமதிப்பீடு செய்யப்படும்.

## GCTF தீவிரவாத பயண முன்முயற்சி

- அமெரிக்கா மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகள் சர்வதேச தீவிரவாத எதிர்ப்பு மன்றத்தின் (GCTF - Global Counter Terrorism Forum) கீழ் GCTF தீவிரவாத பயண முன்முயற்சியைத் தொடங்கியுள்ளன.
- இந்த புதிய முன்முயற்சியானது தீவிரவாதிகள் இணைந்துப் பயணிப்பதை தடுக்கும் நோக்கம் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு அவைத் தீர்மானம் 2396-க்கு வலுசேர்க்கும்.
- தீவிரவாதிகளைக் கண்டறிதல் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம்

தீவிரவாதிகளின் பயணத்தைக் கண்டறிதல் மற்றும் தீவிரவாதிகளை தடை செய்தல் ஆகியவற்றிற்கான திறன்களை மேம்படுத்த முடியும்.

*சர்வதேச தீவிரவாத எதிர்ப்பு மன்றம்*

- சர்வதேச தீவிரவாத எதிர்ப்பு மன்றம் என்பது 29 நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் அரசியலற்ற, பன்முகத்தன்மை வாய்ந்த தீவிரவாத எதிர்ப்புத் தளமாகும்.
- இது 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று நியூயார்க்கில் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.

## சிரியாவிற்கு S-300 ஏவுகணை அமைப்பை வழங்கல்

- சிரிய நாட்டில் பணியாற்றும் தனது இராணுவ அதிகாரிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக சிரியாவிற்கு நிலத்திலிருந்து வான்வெளியை தாக்கும் ஏவுகணை அமைப்பான S-300ஐ ரஷ்யா அளித்துள்ளது.
- ரஷ்யாவின் Il-20 உளவு விமானத்தை சிரியாவின் ஏவுகணை தாக்கியதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சுகாதாரம் மற்றும் உடல்நலம் மீதான உலகளாவிய வழிகாட்டல்

- உலக சுகாதார நிறுவனமானது (WHO – World Health Organization) சுகாதாரம் மற்றும் உடல்நலம் பற்றிய முதல் உலகளாவிய வழிகாட்டல்களை தொடங்கியுள்ளது.
- இந்த வழி காட்டுதல்களானது துப்புரவு தலையீட்டு வரம்பின் விளைவுகள் குறித்த சான்றுகளை தொகுத்துள்ளது.
- இந்த மதிப்பீட்டின்படி, சுகாதாரத்தில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு அமெரிக்க டாலரும் கிட்டத்தட்ட ஆறு மடங்காக திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக இணைய மாநாடு (WIC – World Internet Confernece)

- 5 வது உலக இணைய மாநாட்டினை 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சீனா நடத்தவுள்ளது.
- இம்மாநாடானது கிழக்கு சீனாவின் ஜியாங் மாகாணத்தின் ஆற்றங்கரை நகரமான உஷென்-ல் நடைபெறும்.
- 5வது WIC-ன் கருத்துரு: 'பரஸ்பர நம்பிக்கை மற்றும் கூட்டு ஆட்சிக்கான டிஜிட்டல் உலகத்தை உருவாக்குதல் -- இணைய வெளியில் எதிர்காலப் பகிர்வுடன் கூடிய சமூகத்தை நோக்கி' என்பதாகும்.
- 2014லிருந்து ஆண்டுதோறும் நடைபெற்று வரும் இந்த மாநாடானது உஷென் மாநாடு என்றறியப்படுகிறது.
- இது இணையப் பிரச்சினைகள் மற்றும் கொள்கைகளைப் பற்றி விவாதிப்பதற்காக சீனாவின் அரசு நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

## கௌரவக் குடியுரிமை பறிப்பு

- ரோஹிங்கியா பிரச்சனைகளின் காரணமாக மியான்மர் தலைவர் ஆங்சான் சூ கி யின் கௌரவக் குடியுரிமையை பறிப்பதற்கான தீர்மானத்தின் மீது கனடாவின் பாராளுமன்றமானது ஒருமனதாக வாக்களித்துள்ளது.
- 2007 ஆம் ஆண்டு ஒட்டாவாவில் அவர் இந்த கௌரவக் குடியுரிமையைப் பெற்றார்.
- தலாய்லாமா, மலாலா யூசுப்சாய் மற்றும் நெல்சன் மண்டேலா உள்ளிட்ட மற்ற 5 பேருக்கு மட்டுமே இதுவரை கனாடவின் கௌரவக் குடியுரிமையானது வழங்கப்பட்டுள்ளது.

## ஈராக்கின் புதிய ஜனாதிபதி

- ஈராக் பாராளுமன்றம் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான பர்ஹாம் சலிஹ் என்பவரை நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்துள்ளது.



- இவர் சலிஹ் புயாத் ஹூசைன் என்பவருக்கு எதிராகப் போட்டியிட்டார்.
- ஈராக் அரசியலமைப்புச் சட்டத்தின்படி மொத்தமுள்ள 329 பாராளுமன்ற உறுப்பினர்களில் ஜனாதிபதியாக போட்டியிடுபவர் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு வாக்குகளை பெறவேண்டியது அவசியமாகும்.
- பர்ஹாம் அகமது சலிஹ் 2001 முதல் 2004 வரை ஈராக்கின் மித சுயச் சார்புடைய குர்திஸ்தான் மாகாணத்தின் முன்னாள் பிரதமராவார்.

***<u>பிண்ணனி</u>***

- 2003 ஆம் ஆண்டு அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட அதிகாரப் பூர்வமில்லாத அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தின்படி தலைமை அரசாங்க பதவிகள் பெரும்பான்மை சமயப் பிரிவுகளிடையே பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- அதன்படி
    - பிரதமர் - ஷியா அராபிய இனம்
    - பாராளுமன்றத்தின் சபாநாயகர் - சன்னி அராபிய இனம்
    - ஜனாதிபதி - குர்து இனம்

## அமெரிக்க உச்சநீதி மன்றத்தின் 114வது நீதிபதி

- அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் 114வது நீதிபதியாக பிரெட் கவனாக் என்பவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
- அமெரிக்க செனட் அவரை அப்பதவியில் நியமிப்பதற்காக 50-48 என்று வாக்களித்தது. இது 1881 ஆம் ஆண்டில் நடந்த வாக்குப் பதிவிற்குப் பிறகு மிகவும் நெருங்கிய உச்சநீதிமன்ற நீதிபதி நியமனமாகும்.
- தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் அரசியலமைப்பு பதவிப் பிரமாணத்தையும், ஓய்வுபெற்ற நீதிபதி ஆண்டனி கென்னடி நீதித்துறை பதவிப் பிரமாணத்தையும் செய்து வைத்தனர்.
- இவர் 1987ம் ஆண்டு ஜனாதிபதி ரீகனால் நியமிக்கப்பட்ட நீதிபதி கென்னடிக்குப் பதிலாக பதவி ஏற்கின்றார்.

## தீவிரவாத நிதித்தடுப்பு மசோதா - ஈரான்

- ஈரானின் பாராளுமன்றம் தீவிரவாதத்திற்கான நிதியைத் தடுப்பதற்கான மசோதா ஒன்றை அங்கீகரித்துள்ளது.
- இது பழமைவாதிகளால் கடுமையாக எதிர்க்கப்பட்ட போதிலும் ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுடனான அணு ஒப்பந்தத்தை உறுதி செய்வதில் முக்கியப் பங்காகத் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இம்மசோதாவின் நோக்கம் சர்வதேச தரங்களுடன் ஒப்பிட்டு அதனோடு ஒத்துப் போகும் வகையில் ஈரானின் சட்டங்களை ஏற்படுத்துவதும், ஐக்கிய நாடுகள் தீவிரவாத நிதி ஒப்பந்தத்தில் ஈரானை சேர்ப்பதற்கு வழிவகை செய்வதும் ஆகும்.
- ஈரானின் அரசால் முன்மொழியப்பட்ட இந்த மசோதா, சர்வதேச நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (Financial Action Task Force - FATF) நிபந்தனைகளை சந்திக்கும் விதத்தில் உள்ளது.

## முதலாவது பெண் மேஜர் ஜெனரல் - வங்க தேசம்

- வங்க தேசத்தின் 47 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக மேஜர் ஜெனரலாக டாக்டர் சுஸானி கிடி என்ற பெண் அதிகாரியை வங்கதேசம் நியமித்துள்ளது.
- வங்கதேச இராணுவப் படையில் மருத்துவப் பிரிவின் தலைவியாக 1986-ல் கிடி சேர்ந்தார்.

## ஐஎஸ்ஐ அமைப்பின் புதிய தலைவர்

- பாகிஸ்தானின் சக்திவாய்ந்த உளவு அமைப்பான ஐஎஸ்ஐ அமைப்பின் புதிய தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் அசிம் முனீர் சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.

- ராணுவ உளவுப்பிரிவின் தலைவராக முன்னர் செயல்பட்ட முனீர் சமீபத்தில் லெப்டினன்ட் ஜெனரல் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டார்.
- அவர் லெப்டினன்ட் ஜெனரல் நவீத் முக்தார் என்பவருக்குப் பதிலாக பதவியேற்கிறார்.
- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானின் இரண்டாவது உயரிய விருதான ஹிலால்-இ-இம்தியாஸ் என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டது.

## தற்கொலைத் தடுப்பிற்கான உலகின் முதல் அமைச்சர்

- உலக மனநல தின விழாவின் போது (அக்டோபர் 10) ஐக்கியப் பேரரசு உலகின் முதல் தற்கொலைத் தடுப்பிற்கான அமைச்சரை நியமித்திருக்கின்றது.
- பிரிட்டினின் பிரதமரான தெரசா மே பழமைவாத கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜாக்கி டொய்லே பிரைஸ் என்பவரை (தற்போதைய சுகாதார அமைச்சர்) தற்கொலைத் தடுப்பிற்கான அமைச்சராக நியமித்துள்ளார்.
- உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையின்படி, தற்கொலை என்பது உலகளவில் 15 முதல் 19 வயதிற்குட்பட்ட இளையோர்களின் மரணத்திற்கான இரண்டாவது காரணமாக குறைந்தபட்சம் ஒவ்வொரு 40 மரணங்களுக்கும் ஒன்று என்ற வீகிதத்தில் உள்ளது.

## அனைத்து குற்றங்களுக்கும் மரண தண்டனை ஒழிப்பு

- மலேசிய அமைச்சரவையானது அனைத்து குற்றங்களுக்கும் மரண தண்டனையை ரத்து செய்ய ஒப்புதல் அளித்து நிலுவையில் உள்ள மரண தண்டனைகளையும் நிறுத்தி வைத்துள்ளது.




- இந்த முடிவானது காலனித்துவ நடைமுறைகளுக்கு எதிராக வலுவான உள்நாட்டு எதிர்ப்பாலும் உலகின் மற்ற பகுதிகளில் மரண தண்டனையை ஒழித்த நாடுகளைப் பின்பற்றியும் எடுக்கப்பட்டுள்ளது.
- கொலை, கடத்தல், துப்பாக்கிகளை வைத்திருத்தல், தேசத் துரோகம் மற்றும் போதைப் பொருள்கள் கடத்தல் ஆகியவற்றிற்காக மலேசியாவில் தற்பொழுது மரணதண்டனை

விதிக்கப்பட்டு வருகிறது.

- தற்போது 103 நாடுகளில் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது.

## உலகின் மிகச்சிறந்த புத்தாக்க பல்கலைக்கழகம்

- ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவன தரவரிசைகளில் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் உலகின் மிகச்சிறந்த புத்தாக்க பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகமானது கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தப் பட்டியலில் முதலிடம் வகிக்கின்றது.
- அமெரிக்காவின் மாசசூட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT - Massachusetts Institute of Technology) மற்றும் ஹார்வார்டு பல்கலைக்கழகம் ஆகியவை இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்துள்ளன.
- இப்பட்டியலின் முதல் 100 இடங்களில் 46 பல்கலைக்கழகங்களுடன் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிறது. இதில் எந்தவொரு இந்தியப் பல்கலைக்கழகங்களும் இடம்பெறவில்லை.
- ராய்ட்டர்ஸின் உலகின் மிகச்சிறந்த 100 புத்தாக்க பல்கலைக்கழகத் தரவரிசையானது உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களை, அவற்றின் புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடித்தல், மேம்பட்ட அறிவியல் & ஆற்றல், புதிய சந்தைகள் மற்றும் தொழிலகங்களில் பணிகள் ஆகிய கூறுகளின் அடிப்படையில் அங்கீகரிக்கிறது.
- இது 2015-ல் முதன்முதலில் வெளியிடப்பட்டது. அதிலிருந்து எந்த இந்தியப் பல்கலைக்கழகங்களும் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.

## வங்காள தேசத்தின் டிஜிட்டல் பாதுகாப்பு மசோதா 2018

- வங்காள தேச அதிபர் சர்ச்சைக்குரிய டிஜிட்டல் பாதுகாப்பு மசோதா – 2018 க்கு கையொப்பமிட்டு சட்டமாக இயற்றினார்.
- இந்தச் சட்டமானது முந்தைய காலனித்துவ சகாப்தத்தின் அதிகாரப்பூர்வ ரகசிய சட்டத்தை, உத்தரவு இல்லாமல் கைது போன்ற கடுமையான புதிய விதிகளுடன் ஒருங்கிணைக்கிறது.
- 1971 ஆம் ஆண்டு விடுதலைப்போர் மற்றும் பங்காபந்து (ஷேக் முஜிபர் ரஹ்மான்) ஆகியோருக்கு எதிரான எதிர்மறையான தகவல்களை பரப்புதல், மத உணர்வுகளை புண்படுத்துதல் ஆகியவை உட்பட இணையக் குற்றங்களை கையாள்வதே இதன் நோக்கமாகும்.

## உலகளாவியப் பட்டினிக் குறியீடு 2018

- 2018 ஆம் ஆண்டு உலகளாவியப் பட்டினிக் குறியீட்டின்படி (GHI - Global Hunger Index), உலக அளவில் பசி மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை ஆகியவை 20.9 சதவீதமாக குறைந்துள்ளது. 2000 ஆம் ஆண்டு குறியீட்டின்படி இவை 29.2 சதவீதமாக இருந்தது.

- 2018 ஆம் உலகளாவியப் பட்டினிக் குறியீட்டின் அறிக்கையானது "கன்சர்ன் வேர்ல்டுவைடு" (அயர்லாந்து) மற்றும் "Welthungerhilfe" (ஜெர்மனி) என்ற இரண்டு அரசு சாரா நிறுவனங்களால் கூட்டாக தயாரிக்கப்பட்டது.
- இந்த GHI நான்கு கூறுகளைக் கொண்டது.
    1) ஒட்டுமொத்த மக்கள்தொகையில் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை உள்ளவர்களின் சதவிகிதம்.
    2) ஐந்து வயதிற்கு உட்பட்ட எடை குறைந்த குழந்தைகளின் விகிதம்.
    3) ஐந்து வயதிற்கு உட்பட்ட உயரம் குறைந்த குழந்தைகளின் விகிதம்.
    4) ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம்.
- 2016 ஆம் ஆண்டின்படி ஐந்து வயதுக்குக் கீழுள்ளவர்களின் இறப்பு விகிதம் 4.2% ஆக உள்ளது. இது 2000 ஆம் ஆண்டில் 8.1% ஆக இருந்தது.
- இந்த ஆய்வுகளிலிருந்து
    - 2030 ஆம் ஆண்டில் பட்டினிக் குறைப்பு இலக்கை 50 நாடுகள் எட்டாது
    - 79 நாடுகள் ஏற்கெனவே அந்த இலக்கை எட்டத் தவறிவிட்டன

  என்று இந்த அறிக்கை கூறுகிறது.

- முதல் 5 நாடுகள் : பெலாரஸ், கியூபா, எஸ்தோனியா, குவைத் மற்றும் லத்திவியா (அனைத்து நாடுகளும் முதலிடத்தில்).
- தரவரிசையில் கடைசி 5 இடங்களைப் பெற்ற நாடுகள் : ஜாம்பியா, மடகாஸ்கர், ஏமன், சாட் மற்றும் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு (119வது இடம்)
- இந்த அறிக்கையின்படி, உலகம் முழுவதும் ஏறத்தாழ 124 மில்லியன் மக்கள் கடுமையான பட்டினியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த எண்ணிக்கை 80 மில்லியனாக இருந்து தற்பொழுது அதிகரித்துள்ளது.

## பின்னணி

- 2006ல் உருவாக்கப்பட்ட GHI ஆனது ஆரம்பத்தில் சர்வதேச உணவு கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI - International Food Policy Research Institute) மற்றும் வெல்த்ஹங்கர்லைப்-ஆல் (Welthungerhilfe) வெளியிடப்பட்டது.
- 2007ஆம் ஆண்டில் அயர்லாந்தைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனமான கன்சர்ன் வேர்ல்டுவைடு (Concern Worldwide) ஆனது இணை வெளியீட்டாளராக இணைந்தது.
- GHI ஆனது 2018 ஆம் ஆண்டில், வெல்த்ஹங்கர்லைப் மற்றும் கன்சர்ன் வேர்ல்டுவைடு மட்டும் இணைந்த ஒரு கூட்டுத் திட்டமாக மாறியது, IFPRI ஆனது இந்த குறியீட்டின் ஈடுபாட்டிலிருந்து ஒதுங்கியது.

## இந்தியா மற்றும் அதன் அண்டை நாடுகள்

- இந்த அறிக்கையின்படி, மொத்தமுள்ள 119 நாடுகளில் இந்தியா 103-வது இடத்தில் உள்ளது.
- இந்தியா, "கடுமையான பசியில் வாடுபவர்கள்" என்ற பிரிவில் உள்ளது. இந்தப் பிரிவில் மொத்தம் 45 நாடுகள் உள்ளன.
- 13வது ஆண்டாக வெளிவரும் உலகளாவியப் பட்டினிக் குறியீடானது, நான்கு முக்கிய

குறிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. ஊட்டச்சத்துக் குறைவு, குழந்தை இறப்பு வீதம், குழந்தை மெலிதல் மற்றும் குழந்தைகளின் எடைக்கேற்ற உயரம் ஆகியவை இந்த நான்கு முக்கியக் குறிப்பீடுகளாகும்.

- சீனா (25வது இடம்), நேபாளம் (72), மியான்மர் (68), இலங்கை (67) மற்றும் வங்க தேசம் (86) உள்ளிட்ட பல அண்டை நாடுகளை விட பின்தங்கிய இடத்தில் இந்தியா உள்ளது.
- பாகிஸ்தான் 106-வது இடத்தில் உள்ளது.

## உலகின் மிகச் சிறந்த கடவுச்சீட்டு

- 2018-ன் ஹென்லி குறியீட்டின்படி ஜப்பானின் கடவுச்சீட்டானது சிங்கப்பூரை முந்தி மிகவும் சிறந்த கடவுச்சீட்டாக உள்ளது.

| rank | passport | no. of countries that can be accessed |
|---|---|---|
| 1 | Japan | 189 |
| 2 | Germany, Singapore | 188 |
| 3 | Finland, France, Italy, Sweden, Spain, South Korea | 187 |
| 4 | Norway, United Kingdom, Austria, Luxembourg, Netherlands, Portugal, United States | 186 |
| 5 | Denmark, Belgium, Switzerland, Ireland, Canada | 185 |
| 6 | Australia, Greece | 183 |
| 7 | New Zealand, Czech Republic, Malta | 182 |
| 8 | Iceland | 181 |
| 9 | Hungary, Slovenia, Malaysia | 180 |
| 10 | Slovakia, Latvia, Lithuania | 179 |

- இந்தக் குறியீடானது ஆலோசனை நிறுவனமான ஹென்லி & பார்ட்னர்-ஆல் தொகுக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் பிரத்தியேக தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.
- 189 நாடுகளுக்கு அணுகலையுடைய சிங்கப்பூருடன் ஒப்பிடும் போது ஜப்பானின் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் தற்போது நுழைவு இசைவு (VISA) இல்லாமலேயே 190 நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளலாம்.
- ஜெர்மனியானது 188 நாடுகளை நுழைவு இசைவு இல்லாத அணுகல்களைக் கொண்டு தென்கொரியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் சம நிலையில் 3வது இடத்தில் உள்ளது.
- டென்மார்க், ஸ்வீடன், பின்லாந்து, ஸ்பெயின், இத்தாலி ஆகியவை 4வது இடத்திலும் அமெரிக்கா மற்றும் ஐக்கிய ராஜ்யம் ஆகியவை 5வது இடத்திலும் உள்ளன.
- ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் 30 நாடுகளின் அணுகல்களுடன் கடைசியில் (106வது இடம்) உள்ளன.


- ரஷ்யா 47வது இடத்திலும் சீனா 71வது இடத்திலும், இந்தியா 60 நாடுகள் அணுகல்களுடன் 81வது இடத்திலும் உள்ளன.

## சர்வதேச இந்தியப் பெருங்கடல் மாநாடு

- இந்தியப் பெருங்கடல் மீதான இரண்டு நாள் சர்வதேச மாநாடு ஸ்ரீலங்காவின் கொழும்புவில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் கருத்துருவானது "இந்தியப் பெருங்கடல்: நமது எதிர்காலத்தை வரையறுக்கும்" (The Indian Ocean: Defining our Future) என்பதாகும்.

## பொழுதுபோக்குப் பயன்பாட்டிற்கான போதைப் பொருள் (கஞ்சா)

- பொழுதுபோக்குப் பயன்பாட்டிற்கான முதல் போதைப் பொருள் (கஞ்சா) (சட்டப்பூர்வமான முறையில்) கனடாவின் நியூபவுண்ட்லேன்ட் என்ற கிழக்குப் பகுதி தீவில் வாங்கப்பட்டது.




- உருகுவே நாட்டிற்குப் பிறகு பொழுதுபோக்குப் பயன்பாட்டிற்காக போதைப் பொருளை (கஞ்சா) சட்டப்பூர்வமாகப் பயன்படுத்துவதற்கும் வைத்திருப்பதற்கும் அனுமதித்த இரண்டாவது நாடாக கனடா ஆகியுள்ளது.
- கனடாவில் 2001ம் ஆண்டு முதல் மருத்துவ ரீதியிலான மரிஜூவானா என்ற பொருள் சட்டப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
- கனடாவில் 1923 ஆம் ஆண்டில் கஞ்சாவை வைத்திருத்தல் என்பது முதலில் குற்றமாகக் கருதப்பட்டாலும் 2001 ஆம் ஆண்டு முதல் அதன் மருத்துவப் பயன்பாடு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

## உலகின் முதல் இடைநில்லா விமானம்

- உலகின் முதல் நீண்ட இடைநில்லா விமானமானது சிங்கப்பூரிலிருந்து நியூயார்க்கிற்குப் பறந்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.
- சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் (SIA -Singapore Airlines) ஆனது அதிக விலையுயர்ந்ததாக இருந்த இந்த சேவையை ஐந்து ஆண்டுகளில் முதன்முறையாக மீண்டும் தொடங்கியுள்ளது.
- இந்த ஆடம்பரமான சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் A350-900ULR ஏர்பஸ் ஆனது 17 மணிநேரம் 52 நிமிட பயணத்திற்குப் பிறகு நியூயார்க் நகருக்கு அருகில் உள்ள நெவார்க் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

## ஃபுல்பதி திருவிழா

- ஃபுல்பதி திருவிழா சமீபத்தில் நேபாளத்தின் பல பகுதிகளில் பாரம்பரிய மேளதாளத்துடனும், சமயச் சடங்குகளுடனும் கொண்டாடப்பட்டது.
- தஷாயின் பண்டிகையின் (நவராத்திரி) 7வது தினத்தின் போது ஃபுல்பதி அனுசரிக்கப்படுகின்றது.
- நேபாள மொழியில் பூல் என்பது மலரையும் பதி என்பது இலைகள் மற்றும் செடிகளையும் குறிப்பிடும்.
- இந்த பாரம்பரியமானது பிரித்வி நாராயண் ஷா என்ற மன்னரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

## இந்திய யுக்திகள் குழுவில் நுழைதல் - இலங்கை

- இலங்கையைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையில் அதிகம் முதலீடு செய்வதற்கு உதவிடுவதற்கான யுக்தியை வடிவமைக்க 8-10 நபர்கள் கொண்ட இந்திய யுக்திகள் குழுவில் நுழைதல் என்ற குழுவை இலங்கை அமைத்துள்ளது.
- இக்குழுவானது இலங்கையின் சர்வதேச வர்த்தகம் மற்றும் யுக்திகள் மேம்பாட்டு நடவடிக்கைத்துறை அமைச்சகத்தால் வடிவமைக்கப்பட்டு உள்ளது.
- இக்குழு ஏற்றுமதி மேம்பாட்டு மையத்தின் தலைவர் இந்திரா மல்வத்தே மற்றும் இலங்கை வர்த்தக மையத்தின் முன்னாள் தலைவர் சுரேஷ் ஷா ஆகியோரால் தலைமை தாங்கப்படும்.
- இக்குழுவிற்கு 2018 ஆம் ஆண்டிற்குள்ளாக சந்தை அணுகல் மற்றும் அதற்கான இடைக்கால அறிக்கையை தயார் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## ஹாங்காங் - சுஹாய் - மக்காவ் பாலம்

- அக்டோபர் 24 அன்று உலகின் நீளமான கடல் பாலமான ஹாங்காங் - சுஹாய் - மக்காவ்

பாலம் போக்குவரத்திற்காக திறக்கப்படவிருக்கிறது.



- 55 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்தப் பாலமானது பியர்ல் நதி கழிமுகத்தின் லிங்டிங்யாங் கரையில் அமைந்துள்ளது. இது உலகின் நீளமான கடல் பாலம் ஆகும்.
- இது லிங்டிங்யாங் கால்வாயில் பரவியுள்ளது. இந்தப் பாலம் பியர்ல் நதி கழிமுகத்தில் அமைந்துள்ள மூன்று முக்கிய நகரங்களான ஹாங்காங், மக்காவ் மற்றும் சுஹாய் ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று இணைக்கிறது.




- ஹாங்காங் - சுஹாய் - மக்காவ் பாலமானது (HKZMB அல்லது HZMB - Hong Kong–Zhuhai–Macau Bridge) மூன்று கம்பிவடத்தாலான தொடர் பாலங்கள் மற்றும் கடலுக்கடியில் ஒரு சுரங்கம், 2 செயற்கைத் தீவுகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

## நீரிலும் நிலத்திலும் இயங்கக்கூடிய விமானம் - சீனா

- சீனா தனது உள்நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன் வடிவமைத்து கட்டமைக்கப்பட்ட AG600 என்ற விமானத்தின் முதலாவது மேலெழும்புதல் மற்றும் தரையிரங்கு சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது.



- இந்த விமானம் “குன்லாங்” என்ற குறியீட்டுப் பெயரைக் கொண்டது.

## செயற்கை நிலவு - சீனாவின் திட்டம்

- 2020-ம் ஆண்டிற்குள்ளாக நகரப் பகுதிகளில் இருக்கும் தெரு விளக்குகளை மாற்றி அமைத்து மின்கட்டணத்தை குறைக்கும் நடவடிக்கையாக சீனா தனக்கென்று சொந்தமாக ஒரு செயற்கை நிலவை நிறுவிட திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.
- இதற்காக, சீனாவானது உண்மையான நிலவுடன் இணைந்து செயல்படக் கூடிய அதே சமயம் அதைவிட எட்டு மடங்கு பிரகாசமான ஒளியூட்டு செயற்கைக் கொள்கைளை வடிவமைத்திருக்கின்றது.
- சூரியனிடமிருந்து வரும் ஒளியை பிரதிபலிப்பதன் மூலம் 50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு ஒளியூட்டக்கூடிய வகையில் நகரப் பகுதிகளில் தெரு விளக்குகளை மாற்றியமைக்கின்ற வகையில் இந்த செயற்கைக் கோள்கள் இருக்கும்.

***பின்னணி***

- சூரிய ஒளியைப் பிரதிபலித்து பூமிக்குத் திரும்ப அனுப்பும் முயற்சியில் ஈடுபடும் முதல் நாடு சீனா கிடையாது.
- 1990 ஆம் ஆண்டுகளில் ரஷ்ய விஞ்ஞானிகள் நாம்யா அல்லது பானர் என்றழைக்கப்பட்ட பரிசோதனைத் திட்டத்தில் விண்வெளியிலிருந்து ஒளியைப் பிரதிபலித்திட மிகப்பெரிய கண்ணாடிகளைப் பயன்படுத்தியதாக கூறப்படுகின்றது.




## அமெரிக்கத் தூதரகமும் இணைத் தூதரகமும் இணைதல்

- அமெரிக்கா ஜெருசலேத்தில் தனது இணைத் தூதரகத்தை இஸ்ரேலில் உள்ள புதிய தூதரகத்துடன் இணைத்து ஒற்றைத் தூதரக அலுவலகமாக மாற்றிட திட்டமிட்டிருக்கின்றது.
- இந்த முடிவு தனது தூதரக நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் விளைவு ஆகியவற்றை மேம்படுத்திட அமெரிக்காவால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய முயற்சிகளின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்டுள்ளது.
- மேலும் இது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் நிர்வாகம் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகரமாக அங்கீகரித்ததற்குப் பிறகு எடுக்கப்பட்டிருக்கின்றது.
- அமெரிக்கா தனது தூதரகத்தை 2018 ஆம் ஆண்டு மே மாதம், டெல் அவிவ் நகரத்திலிருந்து ஜெருசலேமிற்கு மாற்றியது.

## 12வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு மற்றும் 5வது ADMM Plus சந்திப்பு

- சிங்கப்பூரில் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 19 மற்றும் 20 தேதிகளில் 12வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடும் (Asian Defence Ministers Meeting - ADMM) 5வது ADMM Plus மாநாடும் நடத்தப்பட்டன.
- 2006 ஆம் ஆண்டு ADMM ஏற்படுத்தப்பட்டதற்குப் பிறகிலிருந்து இந்த அமைப்பின் மாநாட்டிற்கு சிங்கப்பூர் தலைமை தாங்குவது இது இரண்டாவது முறையாகும். மேலும் 2010-ம் ஆண்டு ADMM Plus ஏற்படுத்தப்பட்டதற்குப் பிறகு முதல்முறையாக அதன் மாநாட்டிற்கு சிங்கப்பூர் தலைமை தாங்குகிறது.
- பிராந்தியப் பாதுகாப்பு நடைமுறையில் ஆசியான் நாடுகளுக்கும் அதன் உறுப்பு

நாடுகளுக்கும் யுக்திசார் பேச்சுவார்த்தை மற்றும் நடைமுறை ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அமைச்சர்கள் மட்டத்திலான முக்கிய வடிவமாக ADMM மற்றும் ADMM Plus செயல்படுகின்றது.

## பூடான் பொதுத் தேர்தல்கள்

- ❖ 2018 ஆம் ஆண்டு பூடான் பொதுத் தேர்தல்களில், அதன் தேசிய சட்டமன்றத்தின் 47 இடங்களில் 30 இடங்களை வென்று தனிப்பட்ட பெரிய பெரும்பான்மை கட்சியாக டிரக் நியாம்ரப் சோக்பா என்ற கட்சி உருவெடுத்துள்ளது.
- ❖ பிரதமர் ஷேரிங் டோப்கேயின் ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சி இத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2008-ம் ஆண்டு பூடானில் ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்ட பிறகும் அவ்வருடமே முதல் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட பிறகும் நடத்தப்பட்ட தேர்தல்களில் ஒட்டுமொத்தமாக இது மூன்றாவது பொதுத் தேர்தலாகும்.
- ❖ டிரக் நியாம்ரப் சோக்பா கட்சியின் தலைவரான லோடேய் ஷேரிங் பூடானின் அடுத்த பிரதமர் ஆவார்.

## யுனிசெப்பின் உலகளாவிய பங்குதாரர்கள் கருத்துக் களம்

- ❖ 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 12 மற்றும் 13 தேதிகளில் உலகளாவிய பங்குதாரர்கள் கருத்துக் களத்தின் 4வது பதிப்பை புதுடெல்லியில் இந்தியா நடத்த உள்ளது.
- ❖ தாய், சிசு & குழந்தை நலன்களுக்கான கூட்டாண்மையானது (Partnership for Maternal, Newborn & Child Health-PMNCH) ‘ஒவ்வொரு பெண் ஒவ்வொரு குழந்தை’ இயக்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட 1200 பங்காளர்களை 100 நாடுகளிலிருந்து ஒருங்கிணைக்கிறது.
- ❖ 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா இதனை நடத்துவது இது இரண்டாவது முறையாகும்.
- ❖ இந்த கருத்துக் களமானது இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் PMNCH ஆல் இணைந்து நடத்தப்படுகிறது.
- ❖ இதன் முந்தைய பதிப்புகள் 2007-ல் தான்சானியாவின் தார் எஸ் சலாம் மற்றும் 2014- ல் தென் ஆப்ரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

## ஏமனின் புதிய பிரதமர்

- ❖ மாயின் அப்துல் மாலெக் சயீத் என்பவருக்கு நாட்டின் புதிய பிரதமராக ஏமனின் அதிபர் அப்த் ரப்போ மன்சூர் ஹதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- ❖ இந்த நடவடிக்கையானது அதிபர் அப்த் ரப்போ மன்சூர் ஹதி முன்னாள் பிரதமரான அகமது பின் தாஹர்-ஐ பதவி நீக்கம் செய்த பின்னர் நடைபெற்றுள்ளது.

## துருஷ்பா III

- ரஷ்யாவின் சிறப்புப் படைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான துருஷ்பா 2018 (நட்புறவு 2018) என்ற இருதரப்பு கூட்டு இராணுவப் பயிற்சியானது பாகிஸ்தானில் தொடங்கியது.
- பாகிஸ்தானின் கைபர் - பக்துன்க்வா பகுதியில் உள்ள நவ்ஷெரா மாவட்டத்தின் வடமேற்கு குன்றுப் பகுதிகளில் இந்தப் பயிற்சியானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இரண்டு வார கால இந்த கூட்டு இராணுவப் பயிற்சியானது இரு நாடுகளுக்குமிடையேயான இராணுவங்களை வலிமைப்படுத்துவதையும் ஒத்துழைப்பைக் கட்டமைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இருதரப்புப் பயிற்சி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் 3-வது கூட்டு இராணுவப் பயிற்சி இதுவாகும்.

***<u>துருஷ்பா இராணுவப் பயிற்சி</u>***

- இப்பயிற்சியானது ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் இடையே 2016-ல் தொடங்கப்பட்டது.
- துருஷ்பா என்ற ரஷ்ய வார்த்தைக்கு நட்பு என்று பொருள்.
- இதன் முதல் பதிப்பு அக்டோபர் 2016-ல் வடக்கு பாகிஸ்தானில் நடைபெற்றது.
- இதன் இரண்டாம் பதிப்பு ரஷ்யாவில் செப்டம்பர் 2017-ல் நடைபெற்றது.

## அயர்ன் மேஜிக் 19

- ஐக்கிய அரபு அமீரகம் (UAE – United Arab Emirates) மற்றும் அமெரிக்கா ஆகியவை இணைந்து நடத்தும் கூட்டு இராணுவப் பயிற்சியான அயர்ன் மேஜிக் 19 ஆனது துபாய் அருகே தொடங்கியது.
- ஆண்டு முழுவதும் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆயுதப்படையானது பிறநாடுகளுடன் மேற்கொள்ளும் கூட்டு இராணுவப் பயிற்சிகளின் ஒரு பகுதியே இந்த 2 வார காலப் பயிற்சியாகும்.

## இடைநிலை அணு ஆயுத (INF – Intermediate Range Nuclear Forces) ஒப்பந்தத்திலிருந்து வெளியேற முடிவு

- பனிப்போர் காலத்தில் ரஷ்யாவுடன் கையெழுத்திடப்பட்ட 30 வருட காலமாக நடைமுறையில் உள்ள இடைநிலை அணு ஆயுத (INF) ஒப்பந்தத்திலிருந்து வெளியேறப் போவதாக ஒருதலைபட்சமாக அமெரிக்க அதிபர் தெவித்துள்ளார்.
- 500-5000 கி.மீ. தொலைவுக்குப் பாயும் குறுகிய மற்றும் நடுத்தர தூர அணுசக்தி ஏவுகணைகளை உருவாக்குதல், சோதனை செய்தல், வைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றைத் தடை செய்யும் இது பனிப்போர் காலத்தின் முக்கியமான ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 1987 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் மற்றும் USSR அதிபர் மைக்கேல் கார்பச்சேவ் ஆகியோருக்கிடையே கையெழுத்தானதாகும்.

## சிரியா நெருக்கடி நிலை குறித்த 4 நாடுகள் உச்சி மாநாடு

- சிரியாவில் நடக்கும் சச்சரவுகள் மற்றும் அங்கு நடக்கும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு நீடித்த தீர்வுக்கான முயற்சிகள் குறித்து விவாதிப்பதற்காக துருக்கியின் இஸ்தான்புல்லில் சிரியாவின் நெருக்கடி நிலை குறித்த 4 நாடுகள் உச்சி மாநாட்டை துருக்கி நடத்தவுள்ளது.
- இந்த உச்சி மாநாடானது துருக்கி, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ரஷ்ய நாட்டின் தலைவர்களுக்கிடையே நடைபெறும்.

***பின்னணி***

- சிரியாவின் அதிபரான பஷார் ஆசாத்தின் அரசுக்கு ரஷ்யா முக்கிய ஆதரவாளராக உள்ளது. அதே வேளையில் துருக்கி நாடானது கிளர்ச்சியாளர்களுக்கு உதவி வருகிறது.

## கேமரூனின் ஜனாதிபதி - பால் பியா மறுமுறை தேர்ந்தெடுக்கப்படுதல்

- கேமரூனின் ஜனாதிபதி பால் பியா ஏழாவது முறையாக மீண்டும் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து 30 வருட ஆட்சியை நீட்டித்துக் கொண்டிருக்கின்றார்.
- எதிரணி வேட்பாளரான மௌரிஸ் காம்தோவின் 14.2 சதவிகிதத்தை விட அதிகமாக 71.3 சதவிகித வாக்குகளைப் பெற்று பியா வெற்றி பெற்றிருக்கின்றார்.
- தற்போது பியா ஆப்பிரிக்காவில் நீண்டகாலமாக ஆட்சி செய்யும் அரசு வம்சத்தைச் சாராத நபராவார்.
- 2017ம் ஆண்டில் ஜிம்பாபேயில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் ராபர்ட் முகாபே பதவியிறங்கிய பிறகு ஆப்பிரிக்காவில் சஹாராவின் துணைப் பகுதியில் உள்ள மிக மூத்த ஆட்சியாளரும் இவரேயாவார்.

## முதலாவது முத்தரப்பு சந்திப்பு - சாபஹார் துறைமுக திட்டம்

- ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய மூன்று நாடுகளுக்கிடையேயான சாபஹார் ஒப்பந்த ஒருங்கிணைப்பு ஆணையத்தின் முதலாவது சந்திப்பு நடைபெற்றது.




- 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் சாபஹார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பிராந்திய மையங்களில் ஒன்றாக சாபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி மூன்று நாடுகளுக்கிடையே சரக்குப் போக்குவரத்து மற்றும் பெருவழிப் போக்குவரத்திற்கான பாதைகளை அமைப்பதற்காக இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ள நிலையில், எண்ணெய் வளம் மிக்க ஈரானின் தெற்குக் கடற்கரையோரமாக பயன்படத்தக்க வகையில் அமைந்துள்ள சாபஹார் துறைமுகம் குறித்த இந்த சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

## தெற்காசியப் பிராந்தியத்திற்கான WASH புதுமைத் திட்டம்

- இந்தியாவின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரும், யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவிற்கானத் தூதருமான சச்சின் டெண்டுல்கர், பூடானின் தலைநகரான திம்புவில் தெற்காசியப் பிராந்தியத்திற்கான WASH (Water, Sanitation and Hygiene/நீர், துப்புரவு, சுகாதாரம்) புதுமைத் திட்டத்திற்கான வெற்றியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.
- இந்த நிகழ்ச்சியானது வங்க தேசத்தைச் சார்ந்த சர்வதேச நிறுவனமான BRAC என்ற அமைப்புடன் யுனிசெப்பும் இணைந்து நடத்தப்பட்டது.



- இதில் வங்கதேசத்திலிருந்து இரண்டு அணிகளும் பாகிஸ்தானிலிருந்து ஒரு அணியும் முதல் மூன்று இடங்களைப் பிடித்தன.

## முதல் பெண் அதிபர் – எத்தியோப்பியா

- எத்தியோப்பியாவின் பாராளுமன்றம் தனது நாட்டின் மூத்த வெளியுறவுத் துறை அதிகாரியான சாஹ்லே வொர்க் சேவ்டேவை தனது நாட்டின் முதல் பெண் அதிபராக நியமித்ததை அங்கீகரித்திருக்கின்றது.
- இவர் முலாடு டேஷோமீ விர்து என்பவருக்குப் பதிலாகப் பதவியேற்பார்.



- தற்சமயம் அவர் ஐக்கிய நாடுகள் அமைப்பில் கீழ்நிலைச் செயலாளர் மற்றும் ஆப்பிரிக்கா ஒன்றியத்தின் பொதுச் செயலாளருக்கான சிறப்புப் பிரதிநிதி ஆகிய பதவிகளில் உள்ளார்.

- எத்தியோப்பிய அமைச்சரவை 10 பெண்களை அமைச்சர்களாக நியமித்து ஆப்பிரிக்காவில் ருவாண்டா மற்றும் செசல்ஸ் ஆகிய நாடுகளுக்குப் பிறகு மூன்றாவது நாடாக தங்கள் அமைச்சரவையில் பாலின சமத்துவத்தை ஏற்படுத்திய நாடாக உருவெடுத்துள்ளது.

## முத்தரப்பு சந்திப்பு 2018

- நேட்டோ அமைப்பு (வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தம்) நார்வேயில் முத்தரப்பு சந்திப்பு எனப் பொருள்படும் Trident Juncture 2018 என்ற இராணுவப் பயிற்சியை ஆரம்பித்துள்ளது.
- பனிப்போருக்குப் பிறகு நேட்டோவின் (North Atlantic Treaty Organization - NATO) மிகப்பெரிய ராணுவப் பயிற்சி இதுவாகும். இந்தப் பயிற்சி 2018 ஆம் ஆண்டு நவம்பர் 7 வரை நடைபெறும்.
- இந்தப் பயிற்சி நார்வேயின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதி, வடக்கு அட்லாண்டிக் மற்றும் பால்டிக் கடல் ஆகிய பகுதிகளில் நடைபெறும்.

## இலங்கையின் புதிய பிரதமர்

- இலங்கையின் குடியரசுத் தலைவர் மைத்திரி பால சிறீசேனா ரணில் விக்கிரமசிங்கேவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி அப்பதவியில் முன்னாள் குடியரசுத் தலைவர் மகிந்தா ராஜபக்சேவை புதிய பிரதமராக அமர்த்தியுள்ளார்.



- ரணில் விக்கிரமசிங்கேவின் ஒன்றுபட்ட தேசியக் கட்சியுடனான கூட்டணி அரசிற்கான ஆதரவை ஜனாதிபதி மைத்ரிபால சிறீசேனாவின் ஒன்றுபட்ட மக்கள் சுதந்திரக் கூட்டணி திரும்பப் பெற்றுள்ளது.
- இந்த கூட்டணி அரசானது 2015-ல் ரணில் விக்கிரமசிங்கேவின் ஆதரவோடு சிறீசேனா குடியரசுத் தலைவராக பதவியேற்ற பொழுது ஆரம்பிக்கப்பட்டது.

## பாகிஸ்தானின் முதல் மனித விண்வெளித் திட்டம் அறிவிப்பு

- சீனாவின் உதவியுடன் 2022 ஆம் ஆண்டில் முதல் முறையாக மனிதரை விண்வெளிக்கு அனுப்பப் போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.
- இத்திட்டத்திற்கு பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இதற்காக பாகிஸ்தான் விண்வெளி மற்றும் புற வளிமண்டல ஆய்வு ஆணையம் (Space and Upper Atmosphere Research Commission -SUPARCO) மற்றும் சீன நிறுவனமொன்றிற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## அயர்லாந்தின் அதிபராக மைக்கேல் டி ஹிக்கின்ஸ் மறுதேர்வு

- 56% வாக்குகளைப் பெற்று மைக்கேல் டி ஹிக்கின்ஸ் மீண்டும் அயர்லாந்தின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1966 ஆம் ஆண்டு ஏமோன் டி வலேராவுக்குப் பிறகு இப்பதவிக்கு இரண்டாம் முறையாக மறுதேர்வு செய்யப்பட்ட அதிபர் இவரேயாவார்.



- 2011 ஆம் ஆண்டிலிருந்து அதிபராக பதவி வகிக்கும் ஹிக்கின்ஸ் மேலும் 7 ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார்.
- இவர் அயர்லாந்தின் 9-வது அதிபராவார்.

## ஒரு குடையின் கீழான உலகின் மிகப்பெரிய விமானநிலையம்

- துருக்கியின் இஸ்தான்புல் நகரத்தில் 90 மில்லியன் பயணிகளுக்கு அனைத்து சேவைகளையும் ஒரே குடையின் கீழ் வழங்கும் திறனுடைய உலகின் மிகப்பெரிய விமான நிலைய முனையம் திறக்கப்பட்டது.
- இந்த புதிய விமான நிலையம் இஸ்தான்புல்லின் ஐரோப்பியப் பகுதியோரம் உள்ள கருங்கடல் கரையோரத்தின் அருகில் அமைந்திருக்கின்றது.
- இது இஸ்தான்புல் புதிய விமான நிலையத் திட்டத்தின் பகுதி 1A என்ற பகுதியின் கீழ் ஒரு

பிரிவாக கட்டப்பட்டிருக்கின்றது.



- இது அரசு தனியார் பங்களிப்பு (PPP) மாதிரியில் IGA என்ற நிறுவனங்களின் கூட்டமைப்பில் கட்டப்பட்டிருக்கின்றது.

## பொருளாதாரச் செய்திகள்

### பொருட்களின் வகையீட்டு ஒப்பந்தத்தை துவங்க முதல் பங்குச்சந்தை

- மும்பை பங்குச் சந்தையானது நாட்டின் தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவற்றில் பொருட்களின் வகையீட்டு ஒப்பந்தத்தைத் தொடங்கிய முதல் பங்குச் சந்தையாக ஆகியுள்ளது.




- நாட்டில் இதுவரை பொருட்களின் ஒப்பந்தமானது கீழ்க்காணும் 2 சிறப்பு பொருட்களுக்கு


மட்டுமே இருந்தன.

- பல்பொருள் பரிமாற்றம் (MCX) மற்றும்
- தேசிய பண்டக வகையீட்டு பரிமாற்றம் (NCDEX)

- ❖ BSE மீதான பொருட்களின் வகையீட்டுத் தளங்களின் துவக்கமானது சிறந்த விலைக் கண்டுபிடிப்பில் உதவுகிறது. மேலும் காலக்கெடுவை குறைத்து செலவு குறைந்ததாகவும் மாற்ற உதவுகிறது.
- ❖ BSE ஆனது பொருட்களின் வகையீட்டுப் பிரிவில் முதல் ஆண்டிற்கான பரிவர்த்தனை கட்டணங்களைத் தள்ளுபடி செய்துள்ளது.

## மையப்படுத்தப்பட்ட தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு (CIMS - Centralised Information and Management System)

- ❖ ரிசர்வ் வங்கியானது மையப்படுத்தப்பட்ட தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பை செயல்படுத்த ஐந்து தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை தேர்வு செய்துள்ளது.




- ❖ CIMS ஆனது 130 நிறுவனங்கள் அல்லது வங்கிகளில் இருந்து தடையற்ற தரவுகளை சேகரிப்பதோடு பெருந்தரவு பகுப்பாய்வுகளையும் வழங்குகிறது.
- ❖ 5 நிறுவனங்களாவன
  - இன்போசிஸ்
  - டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ்
  - கேப்ஜெமினி டெக்னாலஜி சர்வீசஸ் இண்டியா
  - ஐபிஎம் இந்தியா
  - லார்சன் & ட்யூப்ரோ இன்ஃபோடெக்

## உயர்மட்ட ஆலோசனைக் குழு

- இந்தியாவின் உலகளாவிய வர்த்தக மூலோபாயங்களை மதிப்பாய்வு செய்வதற்காக உயர்மட்ட ஆலோசனைக்குழு ஒன்றை ஏற்படுத்த மத்திய வர்த்தக அமைச்சகமானது ஒப்புக் கொண்டுள்ளது.
- இந்தக் குழு ஆனது ஆக்ஸஸ் ஆய்வு மற்றும் முதலீடுகள் குழுமத்தின் இயக்குநரான சுர்ஜித் S வல்லா தலைமையில் இயங்கும்.
- இந்தக் குழுவானது சாத்தியமான அணுகுமுறைகளை கருத்தில் கொண்டு சர்வதேச வர்த்தகத்தில் இந்தியாவின் எதிர்கால ஈடுபாட்டிற்கான ஒரு நடைமுறை கட்டமைப்பைப் பரிந்துரைக்கும்.

## ஐ.எல் அண்ட் எப்.எஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள NCLT ஒப்புதல்

- தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயமானது (NCLT - National Company Law Tribunal) ஐ.எல். அண்ட் எப்.எஸ். (IL&FS) நிறுவனத்தின் மன்ற நிர்வாகத்தை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- IL&FS நிதிச்சேவை நிறுவனமானது கடந்த ஒரு மாதமாக கடன் வழங்கீடுகளைத் திருப்பிச் செலுத்தாமல் இருந்துள்ளது.
- புகழ்பெற்ற வங்கித் துறையைச் சேர்ந்தவரான உதய் கோடக் தலைமையிலான புதிய 6 உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது அந்நிறுவனத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தும்.
- இம்மன்றக் குழுவில் அதிகபட்சமாக 10 உறுப்பினர்கள் வரை நியமிக்க பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

## உலகளாவிய சிறந்த 100 பிராண்டுகள் 2018- அறிக்கை

- உலகளாவிய பொருள்களுக்கான ஆலோசனை நிறுவனமான இன்டர்பிராண்ட்ஸின் “உலகளாவிய சிறந்த 100 பிராண்டுகள் 2018” அறிக்கையின்படி, 2018 ஆம் ஆண்டின் உலகின் சிறந்த பிராண்டாக கூகுள் நிறுவனத்தை பின்தள்ளி ஆப்பிளானது முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- முகநூலானது தரவுமீறல் சிக்கல்களில் ஆழ்ந்துள்ள நிலையில் உலகளாவிய 100 பிராண்டுகளில் 9-வது இடத்தில் உள்ளது.
- அமேசான் 56% வளர்ச்சியைப் பெற்று உலகளவில் 3-வது பிராண்டாக உள்ளது.
- இந்த அறிக்கையின்படி ஆப்பிளின் பிராண்ட் மதிப்பானது 16% உயர்ந்து (ஆண்டில்) 214.5 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- அமெரிக்காவில் $1 ட்ரில்லியன் சந்தைத் திறனையடைந்த முதல் நிறுவனமாக ஆப்பிள் மாறியுள்ளது.

## மேலாண்மையின் கீழுள்ள சொத்துக்களின் (Assets Under Management) அதிகபட்ச சராசரியைக் கொண்ட மாநிலங்கள்

- இந்திய பரஸ்பர நிதிச் சங்கத்தின் தரவுகளின்படி, மேலாண்மையின் கீழுள்ள சொத்துக்கள் மற்றும் அவற்றின் அதிகபட்ச ஊடுருவல் கொண்ட மாநிலங்கள் பட்டியலில் மகாராஷ்டிரா முதலிடம் பிடித்திருக்கின்றது.
- அதனைத் தொடர்ந்து டெல்லியும், கர்நாடகாவும் உள்ளன.
- ஆகஸ்டு மாதம் வரையில் பரஸ்பர நிதிகளில் மேலாண்மையின் கீழுள்ள சொத்துக்களின் சராசரி ஆனது எப்பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக நாட்டிலேயே முதல் முறையாக 25.2 லட்சம் கோடிகள் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

## மின் வர்த்தக தளங்களுக்கான நெறிமுறைகள் அமைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது தகுதி வாய்ந்த கருவிகளில் பரிவர்த்தனை செய்வதற்காக செயல்படும் மின்னணு வர்த்தக தளங்களுக்கான (Electronic Trading Platforms-ETPs) வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.
- இந்த புதிய விதிமுறைகளின்படி ETP-கள் என்பன அங்கீகாரம் பெற்ற பங்கு பரிமாற்ற மையங்களைத் தவிர, தகுதியுள்ள கருவிகளில் பரிவர்த்தனைகள் நடைபெறும் எந்தவொரு மின்னணு அமைப்புகளையும் குறிப்பதாகும்.
- மின்னணு தளங்களில் வர்த்தகம் செய்வது விலையின் வெளிப்படைத்தன்மை, செயலாக்க செயல்திறன் மற்றும் இடர் கட்டுப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதால் உலகம் முழுவதும் ஊக்குவிக்கப்படுகிறது.

## நான்காவது தொழிற்புரட்சிக்கான மையம் - இந்தியா

- மத்திய வர்த்தகத் துறை அமைச்சகமானது அனைத்து மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் தொழிற்சாலைகளுடன் கலந்து ஆலோசித்து புதிய தொழிற்துறை கொள்கையை வெளியிட்டிருக்கின்றது.
- புது தில்லியில் உள்ள ஜெனீவாவைச் சேர்ந்த உலகப் பொருளாதார மன்றத்தால் (World Economic Forum - WEF) வடிவமைக்கப்பட்ட நான்காவது தொழிற்புரட்சிக்கான மையத்தின் ஆரம்ப விழாவில் இது வெளியிடப்பட்டது.
- இக்கொள்கை இந்தியாவை புதிதாக உருவெடுத்து வரும் செயற்கை நுண்ணறிவு, ஆளில்லா விமானங்கள் மற்றும் தொடர் சங்கிலி போன்றவைகளோடு ஒருங்கிணைக்க எண்ணுகின்றது.
- இதனோடு உடன்படும் வகையில், உலகப் பொருளாதார மன்றம் மகாராஷ்டிராவில் நான்காவது தொழிற்புரட்சிக்கான மையத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றது.
- மற்ற மையங்களாவன – சான் பிரன்சிஸ்கோ (அமெரிக்கா), ஜப்பான் மற்றும் சீனா.

## சிந்து உணவு - II வர்த்தக கண்காட்சி

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 14-15 தேதிகளில் கிரேட்டர் நொய்டாவில் சிந்து உணவு-II வர்த்தக கண்காட்சி நடைபெற உள்ளது.
- சிந்து உணவு - II ஆனது ஏற்றுமதியில் கவனம் செலுத்தும் வருடாந்திர உணவு மற்றும் பானங்களின் வர்த்தக கண்காட்சி ஆகும். இது இந்தியாவின் சிறந்த உணவுகள், பானங்கள் மற்றும் வேளாண் விளைபொருள்களை உலகளாவிய கொள்முதலாளர்களுக்கு காட்சிப்படுத்தும்.
- இது வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்துடன் இணைந்து வர்த்தக ஊக்குவிப்பு மன்றத்தால் (TPCI - Trade Promotion Council of India) ஏற்பாடு செய்யப்படுகிறது.

## CA நிறுவனத்தின் ஒன்பது உறுப்பினர்கள் குழு

- கடன் சுமையுள்ள IL&FS குழுமத்தின் அமைப்பு ரீதியான பிரச்சினைகளை ஆய்வதற்காக CA நிறுவனத்தின் தலைவர் நவீன் குப்தா ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளார்.
- சிவாஜி பி ஜவாரோ இந்த உயர்மட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.
- இந்தக் குழுவில் CA நிறுவனத்தின் முன்னாள் தலைவர்களான வெட் ஜெயின் மற்றும் நிலேஷ் எஸ் விகாம்ஸே ஆகியோரும் அடங்குவர்.
- இந்தக் குழுவானது அமைப்புகளில் தீர்வு நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றங்களைப் பரிந்துரை செய்யும்.

## பேங்க் பஜார் ஆலோசகர்

- பேங்க் பஜார் நிறுவனம், ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநரான S.S. முந்த்ராவை தனது நிறுவனத்தின் ஆலோசகராக நியமித்திருக்கின்றது.
- பேங்க் பஜார் என்பது நிதிச் சேவைகளுக்கான நேரடி இணையதள சந்தையாகும்.

## இந்தியாவின் முதல் இணைய சங்கேதப் பண (Cryptocurrency) தானியங்கி பணமளிப்பு இயந்திரம் (ATM)

- கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள கெம்ப் போர்ட் மாலில் இந்தியாவின் முதல் இணைய சங்கேதப் பணத்திற்கான ATM திறக்கப்பட்டது.




- இந்த ATM ஆனது வாடிக்கையாளர்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.1000 அளவுக்கு செலுத்தவும் பெறவும் மற்றும் மற்ற இணைய சங்கேதப் பணங்களான பிட்காயின், ஈத்தரம் மற்றும் பலவற்றை பரிமாற்றம் செய்யவும் அனுமதிக்கிறது.
- மெய்நிகர் நாணய பரிவர்த்தனை நிறுவனமான யுனோகாயின் ஆனது இந்த வைப்பு மற்றும் பெறுதலை அளிக்கும் ATMஐ நிறுவியுள்ளது.

## ஃபோர்ப்ஸ்-ன் உலகின் சிறந்த 2000 வேலையளிப்போர் பட்டியல்

- பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனமான லார்சன் & ட்யூப்ரோ (L&T) ஆனது ஃபோர்ப்ஸின் சிறந்த 2000 வேலையளிப்போர் பட்டியலின் முதல் 25 நிறுவனங்களில் 22 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பட்டியலின் முதல் 25 இடங்களுள் இடம் பிடித்த ஒரே இந்திய நிறுவனம் இதுவேயாகும்.
- தொடர்ந்து இரண்டாவது வருடமாக கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பபெட் முதலிடத்தையும் அதனைத் தொடர்ந்து மைக்ரோசாப்ட் மற்றும் ஆப்பிள் ஆகியவையும் இடம் பிடித்துள்ளன.
- முதல் 10 இடங்களில் ஜெர்மன் நிறுவனங்கள் இரண்டாவது அதிகபட்ச இடங்களைப் பிடித்துள்ளன.
- L&T நிறுவனத்தைத் தவிர இந்த பட்டியலின் முதல் 100 இடங்களில் மஹிந்திரா & மஹிந்திரா (55), கிராசிம் இன்டஸ்ட்ரீஸ் (59) மற்றும் எச்டிஎப்சி (91) ஆகிய நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன.

## துபாய் இணைய நகரத்துடன் நான்காம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்கள் கூட்டிணைவானது (NASSCOM - National Association of Software and Services Companies) மத்திய கிழக்கு நாடுகளில் இந்திய வர்த்தகங்களை விரிவுபடுத்துவதற்காக துபாய் இணைய நகரத்துடன் (Dubai Internet City)

ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- இந்த ஒப்பந்தமானது மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்க (MENA – Middle East and North Africa) பிராந்தியத்தில் ஏற்பட்ட முதலாவது ஒப்பந்தமாகும்.




- இது இந்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMEs/ small and medium-sized enterprises) ஐக்கிய அரபு அமீரகத்திற்கு ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## UNICITRAL மாதிரி பரிந்துரை

- பெருநிறுவன விவகார செயலாளரான இஞ்ஜெட்டி சீனிவாஸ் தலைமையிலான திவால் சட்டக் குழுவானது பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சர் அருண் ஜெட்லியிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.
- இந்தக் குழுவானது UNCITRAL-யின் (United Nations Commission on International Trade Law) எல்லை கடந்த திவால் மாதிரி சட்டம் 1997-யை ஏற்றுக் கொள்ளும்படி பரிந்துரை செய்கிறது.




- இந்த மாதிரி சட்டமானது உண்மையான திவால் சட்டங்களை ஒருங்கிணைக்க முயற்சி செய்வதை விட அதிகார வரம்புகளுக்கு இடையே ஒத்துழைப்பு, ஒருங்கிணைத்தலுக்கு

ஊக்கமளித்தல் மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

- இந்த UNCITRAL மாதிரி சட்டமானது 44 நாடுகளுக்கும் மேற்பட்ட நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- 1966-ல் ஏற்படுத்தப்பட்ட UNCITRAL ஆனது ஐ.நா. பொதுச் சபையின் துணை நிறுவனமாகும்.

## SBI-ன் செல்வ வளமையம் திறப்பு

- பாரத ஸ்டேட் வங்கியானது (SBI – State Bank of India) தனது மங்களூரின் லால்பாக் கிளையில் 'SBI செல்வ வள மையம்' என்ற மையத்தை திறந்ததின் மூலம் தனது வளமான வணிக சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த செல்வ வளமையமானது SBI தலைவர் ரஜ்னீஷ் குமாரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இதன் மூலம், அதன் வாடிக்கையாளர்களுக்கு விரிவான வளமான வணிக சேவைகளை அறிமுகப்படுத்தும் நாட்டின் முதல் பொதுத்துறை வங்கியாக SBI மாறியுள்ளது.
- வங்கியானது தனது வளமான வணிக சேவையை 'SBI Wealth' என்று மறு பெயரிட்டுள்ளது.
- இது மக்கள்தொடர்பு மேலாளர்களின் பிரத்தியேக குழு மூலம் உயர்தர நிகர மதிப்புடைய வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த முறையில் தனிப் பயனாக்கப்பட்ட வங்கி மற்றும் முதலீட்டு சேவைகளை வழங்குகிறது.

## பாதிக்கப்பட்ட சொத்துக்கள் விவகாரத்தைத் தீர்ப்பதற்காக 6 உறுப்பினர்கள் குழு

- பாதிக்கப்பட்ட சொத்துக்கள் (Stressed Assests) தீர்விற்காக கடனளிப்போர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழு 6 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.
- மேற்பார்வைக் குழுவானது இந்திய வங்கிகள் சங்க நிர்வாகத்தின் (Indian Banks' Association) கீழ் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது.
- மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு
  - ஜானகி பல்லாப் (முன்னாள் தலைவர், பாரத ஸ்டேட் வங்கி)
  - MBN ராவ் (கனரா வங்கியின் முன்னாள் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்)
  - M தாமோதரன் (செபியின் முன்னாள் தலைவர்)
  - HR கான் (ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர்)
- இந்த மேற்பார்வைக் குழுவானது டாடா குழுமத்தின் ஆற்றல் பிரிவிலிருந்து மூத்த நிர்வாகி ஒருவரையும், பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரையும் கொண்டிருக்கும்.

## 7வது உலக கூட்டுறவிற்கான கண்காணிப்பு அறிக்கை 2018

- 2018 ஆம் ஆண்டின் 7வது உலக கூட்டுறவிற்கான கண்காணிப்பு அறிக்கையின்படி உலகின் மிகப்பெரிய கூட்டுறவுச் சங்கமாக இந்தியாவின் மிகப்பெரிய உரத் தயாரிப்புத்

தொழிற்சாலையான இப்கோ (IFFCO) என்ற நிறுவனம் இடம் பெற்றிருக்கின்றது.

- 2016 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் இவ்விடத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது.
- இந்த அறிக்கை சர்வதேசக் கூட்டுறவிற்கான கூட்டணி (The International Cooperative Alliance - ICA), கூட்டுறவு மற்றும் சமூக நிறுவனங்கள் மீதான ஐரோப்பிய ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- இப்கோ நிறுவனம் அதனது விற்றுமுதல் மதிப்பு தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்போடு ஒப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டிருக்கின்றது.
- விவசாயம் மற்றும் உணவுத் துறை தொழிற்சாலைப் பிரிவில் உலகின் முதல் 20 கூட்டுறவுச் சங்கங்களில் இப்கோ நிறுவனம் முதலிடம் பிடித்திருக்கின்றது.

## மீன் பிடி மற்றும் மீன் வளர்ப்பு மேம்பாட்டு நிதி (FAIDF)

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது 2022 ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவதற்காக (Fisheries and Aquaculture Infrastructure Development Fund) FAIDF எனும் மீன்பிடித் துறை மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி என்ற நிதியை உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போதைய உற்பத்தியான 11.4 மில்லியன் டன்களில் இருந்து மீன் உற்பத்தியை கீழ்க்காணும் உற்பத்தி இலக்கிற்கு அதிகரிப்பதே இதன் முக்கிய குறிக்கோளாகும். அவையாவன
    - 2020 ல் 15 மில்லியன் டன்கள் மீன் உற்பத்தி
    - 2022-23 ஆண்டுகளில் 20 மில்லியன் டன்கள் மீன் உற்பத்தி
- இந்த இலக்கை அடையும் குறிக்கோளானது நீலப் புரட்சியின் கீழ் அமைக்கப்பட்டது.
- இந்த நிதிக்கான முதன்மை நிறுவனங்களாக வேளாண் மற்றும் கிராம மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (நபார்டு) தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் (NCDC - National Cooperatives Development Corporation) மற்றும் பட்டியலிடப்பட்ட வங்கிகள் ஆகியவை செயல்படும்.
- இந்த நிதியானது முதன்மை கடன் நிறுவனங்கள் மூலம் (NLE - Nodal Loaning Entities) திரட்டப்படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஜப்பானின் தரையிறக்க ஊர்தி குறுங்கோளில் தரையிறக்கம்

- ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனமானது (JAXA - Japan Aerospace Exploration Agency) 1 கிமீ அளவுடைய குறுங்கோளின் மீது இரண்டு தரையிறக்க ஊர்திகளை (Rovers) தரையிறக்கியதன் மூலம் புதிய வரலாற்றைப் படைத்துள்ளது.

- நகரும் ரோபோக்களின் மூலம் குறுங்கோள்களின் மேற்பரப்பை ஆராய்வது உலகில் இதுவே முதன் முறையாகும்.
- சிறிய அளவிலான தரையிறக்க ஊர்திகளான MINERVA-II - 1 (குறுங்கோளுக்கான 2-ம் தலைமுறை நுண் நானோ பரிசோதனை ரோபா) ஹயபுசா 2 விண்கலத்திலிருந்து பிரிக்கப்பட்டு தரை இறங்கியது.
- MINERVA-II - 1 ஆனது தரையிறக்க ஊர்திகளான 1A மற்றும் 1B ஆகியவற்றை உடையது.
- இந்த ஹயபுசா II-ன் 2 தரையிறக்க ஊர்திகளும் குறுங்கோள் பரப்பில் தரையிறக்கப்படுவதற்காக குறைந்த ஈர்ப்புத்தன்மையைப் பயன்படுத்தி மேற்பரப்பிற்கு உந்தச் செய்வதன் மூலம் 15 மீட்டர் உயர அளவிற்கு எட்டச் செய்து நிர்வகிக்கப்பட்டது.




- ஹயபுசா 2 ஆனது ருகு (Ryugu) என்றழைக்கப்படும் குறுங்கோளின் மேற்பரப்பை ஆராய்வதற்காக டிசம்பர் 2014-ல் தொடங்கப்பட்டது.

## இரயில் பாரம்பரியத்தை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம்

- மத்திய இரயில்வே அமைச்சகமானது கூகுள் கலை மற்றும் பண்பாட்டு சங்கத்துடன் இணைந்து இரயில் பாரம்பரியத்தை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதை https://artsandculture.google.com/project/indian-railways என்ற இணையதளம் மூலம் அணுக முடியும்.
- இது இந்தியாவின் இரயில் பாரம்பரியத்தை தேசிய மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு ஆன்லைனில் கதையாக சொல்லும் தளத்தில் வெளிப்படுத்துவதற்கான முதலாவது திட்டமாகும்.
- இது இந்தியாவிலும் முழு ஆசிய பசிபிக் பிராந்தியத்திலும் மிகப்பெரிய கலாச்சார பண்பாட்டு டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் ஆகும்.

## மைசூரக்ஷா செயலி

- ஆட்டோ மற்றும் வாடகை வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மைசூரு நகர காவல் துறையானது மைசூரக்ஷா என்ற செயலியைத் தொடங்குகிறது.
- இச்செயலியானது எஸ்ஓஎஸ் (SOS) என்ற அசாதாரண சூழ்நிலையில் அழுத்தக்கூடிய பொத்தானைக் கொண்டுள்ளது. இந்தப் பொத்தானை அழுத்தினால் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள புவி இடங்காட்டி அமைப்பு மற்றும் QR குறிமுறையின் மூலம் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவலை அனுப்பும்.

## டிஜி யாத்ரா

- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகமானது விமான நிலையங்களில் பயணிகளுக்கான முக அங்கீகார அடிப்படையிலான டிஜிட்டல் செயல்பாட்டுக் கொள்கையான டிஜி யாத்ராவை வெளியிட்டுள்ளது.
- இந்த முன்முயற்சியானது காகிதமற்ற மற்றும் தடங்கலற்ற விமானப் பயணத்தை ஊக்குவிக்க முற்படுகிறது. மேலும் பெங்களூரு மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்களில் 2019 பிப்ரவரி இறுதிக்குள் இது செயல்படுத்தப்படும்.
- டிஜி யாத்ராவின் கீழ், முதல்முறையாக விமானப் பயணம் செய்யும்போது விமான நிலையத்தில் ID-யைப் பயன்படுத்தி ஒரே ஒருமுறை சரிபார்ப்பு செய்யப்படும்.

## மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டம்

- மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முதலாவது திட்டமான ககன்யான் திட்டத்தில் ISRO மற்றும் விண்வெளி நடவடிக்கைகளுக்கான அரசு நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் (Roscosmos) ஆகியவை இணைந்து பணியாற்றுவதாக ஒப்புக் கொண்டுள்ளன.
- இது சம்பந்தமாக ISRO மற்றும் ரஷ்யாவின் மத்திய விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ரோஸ்கோஸ்மோஸ் ஆனது இந்திய விண்வெளி வீரர்களுக்கு சோயுஸ் (Soyuz) விண்கலத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS – International Space Station) ஒரு குறுகிய பயணத்தை வழங்குகிறது.
- ISS ஆனது குறைமட்ட புவிப்பாதையில் பயணிக்கும் செயற்கையான வாழத்தகுந்த செயற்கைக்கோளாகும்.

## பொருட்களின் இணையத்திற்கான(IOT – Internet of Things) சிறப்பு மையம்

- ஹரியானாவின் குருகிராமில் இந்திய தகவல் தொழில்நுட்பத்தின் உயர்மட்ட அமைப்பான NASSCOM ஆனது தனது பொருட்களின் இணையத்திற்கான (COE-IoT) சிறப்பு மையத்தைத் தொடங்கியுள்ளது

- இந்த மையமானது ஹரியானா அரசாங்கத்துடன் இணைந்து தொடங்கப்பட்டது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தை (MeiTY - Ministry of Electronics and Information Technology) உள்ளடக்கிய நாடு முழுவதுக்குமான ஒருங்கிணைந்த முன்முயற்சியின் ஒரு பகுதி இதுவாகும்.
- இது புத்தாக்க மற்றும் உயர்மட்ட தொழில்நுட்பங்களுக்கு சரியான ஒத்துழைப்புடன் செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சைபர் ஷிக்ஷா திட்டம்

- மைக்ரோசாப்ட் இந்தியா மற்றும் இந்திய தரவு பாதுகாப்பு ஆணையம் (DSCI - Data Security Council of India) ஆகியவை இணைந்து சைபர் ஷிக்ஷா என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.
- இந்த சைபர் ஷிக்ஷா திட்டமானது இணைய பாதுகாப்பு துறையில் பெண் பொறியியல் பட்டதாரிகளின் திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் (MeiTY) இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- முதல் மற்றும் இரண்டாம் நிலை (Tier) நகரங்களிலிருந்து போதிய அளவு பெண்களை இணைய பாதுகாப்பு துறையின் ஒரே தொழில் பாதையில் ஒருங்கிணைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையம் (CDAC - Centre for Development of Advanced Computing) இந்தியா முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு பயிற்சியளிக்கும்.

## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை - கௌரி

- பாகிஸ்தானானது தனது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான கௌரியை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.




- இது பல இந்திய நகரங்களை அதன் எல்லைக்குள் கொண்டு வருகிறது.

- கௌரியானது வழக்கமான மற்றும் அணு ஆயுதங்களை 1300 கி.மீ. தூரத்திற்கு சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- கடந்த ஏப்ரல் மாதத்தில் பாகிஸ்தானானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 700 கி.மீ. தூரம் பாயும் திறனுடைய "பாபர் வேவு" ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது.

## உலகின் முதல் உயிர் மின்னணு மருந்து

- அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் உலகின் முதல் உயிர் மின்னணு மருந்தை உருவாக்கியுள்ளதாக கூறியுள்ளனர்.
- இந்த உயிர் மின்னணு மருந்தானது உடலில் பொருத்தக்கூடியது. இது நரம்பு மீளுருவாகத்தை வேகப்படுத்தக்கூடியது மற்றும் சேதமடைந்த நரம்புகள் குணப்படுவதை விரைவுபடுத்தக் கூடிய, தானே மட்கக்கூடிய கம்பியில்லா சாதனமாகும்.
- இந்தக் கருவியானது இன்னும் மனிதர்களிடத்தில் சோதிக்கப்படவில்லை. ஆனால் விலங்குகள் (எலி) மீது வெற்றிகரமாக சோதிக்கப்பட்டு நரம்பு காயமடைந்த நோயாளிகளுக்கு எதிர்காலத்தில் சிகிச்சையளிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.




## ஆன்லைன் உத்தரவாத கண்காணிப்பு அமைப்பு (OAMS)

- பாராளுமன்ற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் விஜய் கோயல் சமீபத்தில் ஆன்லைன் உத்தரவாத கண்காணிப்பு அமைப்பை (Online Assurances Monitoring System-OAMS) தொடங்கி வைத்தார்.

- இது மத்திய நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.
- பாராளுமன்ற விவகாரங்களின் உத்தரவாதங்களில் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவதே இதன் குறிக்கோளாகும்.
- இந்த அமைப்பானது நாடாளுமன்ற அவையில் வழங்கப்பட்ட உத்தரவாதம் தொடர்பான தகவல்களை காகிதமற்ற முறையில் உருவாக்கி டிஜிட்டல் வடிவத்தில் கிடைக்கச் செய்கிறது.
- இதன் வழியாக, பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சகமானது இந்த மின் அலுவலகத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு உத்தரவாதமளிக்கும்.

## இந்தியாவின் முதலாவது 2 EMV சிப்புடைய (சில்லு) டெபிட்டுடன் கூடிய கிரெடிட் அட்டை

- இந்தியாவின் முதலாவது 2 EMV சிப்புடைய டெபிட்டுடன் கூடிய கிரெடிட் அட்டையான இண்டஸ்இண்ட் வங்கி இரட்டை உபயோக அட்டையை இண்டஸ்இண்ட் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்திய நுகர்வோர்களுக்காக ஒரு பிளாஸ்டிக்கில் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைகளின் பயன்பாட்டிற்காக 2 காந்தக நீள்வரிகள் மற்றும் 2 EMV சிப்கள் கொண்ட இரட்டைப் பயன்பாட்டு அட்டையாகும்.
- இரட்டை உபயோக அட்டையின் புதுமையை மேம்படுத்த மற்றும் மிகைப்படுத்துவதற்காக அனகிராம் செயல்முறையைப் பயன்படுத்தி இந்த அட்டை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதலாவது தளம் - விவசாய வணிக கற்றல்

- தெலுங்கானாவின் வாராங்கலின் எஸ்.ஆர். புத்தாக்க பரிவர்த்தனை வளாகத்தில் இந்தியா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து SRiX என்ற விவசாய-வணிக நிறுவனத்தைத் தொடங்குகிறது.
- இந்தியாவின் முதலாவது விவசாய மற்றும் உணவு வணிக ஆன்லைன் (நிகழ்நேர) கற்றல் தளமானது விவசாயம், தூய்மையான தொழில்நுட்பம், பொருட்களின் இணையம் ஆகியவற்றின் புதிய தொழில் முனைவில் கவனம் செலுத்துகிறது.
- SRiX ஆனது இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தொழில்நுட்ப வணிகக் காப்பகமாகும்.

## செயற்கை நுண்ணறிவு செயல்படுத்தப்பட்ட மின் மட்டை (Power Bat) -மைக்ரோசாப்ட்

- முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவரான அனில் கும்ப்ளேவின் தொழில்நுட்பத் தொடக்கமான ஸ்பெக்டகாம் தொழில்நுட்ப நிறுவனமானது (Spektcom Technologies) “மின் மட்டையை” (Power Bat) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இம்மட்டையின் பட்டையில் உணர்வியுடன் கூடிய எடை குறைவான ஒட்டுப்படத்துடன் இது

தயாரிக்கப்பட்டுள்ளது.

- இந்த மின்மட்டை மைக்ரோசாப்டின் அசூர் க்ளவுட் தளம், அதன் செயற்கை நுண்ணறிவு மற்றும் பொருள்களுக்கான இணையச் சேவைகள் ஆகியவற்றின் (IOT – Internet Of Things) மூலம் இயக்கப்படுகிறது.
- இது மைக்ரோசாப்டின் அசூர் ஸ்பியர் இயங்கு முறையில் செயல்படுத்தப்படுகிறது.
- மட்டையின் வேகம் மற்றும் செலுத்து தரம் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டு வீரரின் நிகழ்நேரத் திறன் குறித்த தகவலை இந்த “மின் மட்டை” அளிக்கும்.

## ஆஸ்க் திஷா

- இந்திய இரயில்வே உணவு வழங்குதல் மற்றும் சுற்றுலாக் கழகம் (IRCTC - Indian Railway Catering and Tourism Corporation) சமீபத்தில் பல்வேறு வினவல்களுக்கு விடையளித்து உதவுவதற்காக ஆஸ்க் திஷா (Ask Disha) என்ற பேசும் கருவியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த செயற்கை நுண்ணறிவால் இயங்கும் பேசும் கருவியானது IRCTC மற்றும் கோரோவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இது ரயில்வே பயணிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகளைப் பற்றிய பயனர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம் அணுகலை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்ட முதல் இம்முறையிலான முயற்சியாகும்.

## உலகின் அதிவேக கேமரா - டி-கப் (T-Cup)

- அமெரிக்க அறிவியலாளர்கள் உலகின் அதிவேக கேமராவான T-CUP என்ற கருவியை (அழுத்தப்பட்ட அதிவேக புகைப்படம் /compressed ultrafast photography) உருவாக்கியுள்ளனர்.
- இது ஒரு வினாடிக்கு 10 பில்லியன் சட்டங்களை பிடிக்கக்கூடியது - மிக மெதுவான இயக்கத்தில் ஒளியைக் காண்பதற்காக ‘நேரத்தை முடக்குவது’ இதில் சாத்தியமாகிறது.





**Fig. 1 Principle of operation for T-CUP.** The beam paths for time-unsheared and time-sheared views are illustrated using magenta and green colors, respectively

- இந்தக் கேமராவானது நிகழ்நேர தோற்றமாக்கலில் உலக சாதனையைப் படைத்துள்ளது.

- ஆராய்ச்சியாளர்கள் T-CUP அமைப்பை உருவாக்க வினாடிக்கு 10 பில்லியன் சட்டங்களை பிடிக்கும் (அழுத்தப்பட்ட அதிவேக புகைப்படத்துடன்) பெம்டோசெகண்ட் லேசரை ஒருங்கிணைத்துள்ளனர்.

## பயிர்க்கதிர்கள் எரிக்கப்படுவதைக் கண்டறிய 3 கைபேசி செயலி

- பயிர்க்கதிர்கள் எரிக்கப்படுவதைத் தடுப்பதற்காக 3 கைபேசி செயலிகளை பஞ்சாப் முதல்வர் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- அந்த 3 செயலிகளாவன
    - ஐ-கெட் மெஷின் (உள்ள இடத்திலேயே பயிர்க் கழிவு மேலாண்மை)
    - இ-பெஹால் (மரம் நடுதலை கண்காணிப்பு)
    - இ-பிரிவன்ட் (பயிர்க்கதிர்கள் எரிக்கப்படும் சம்பவங்கள் குறித்த தகவல்கள்)
- இந்த 3 ஆண்ட்ராய்டு செயலிகளும் பஞ்சாப் தொலையுணர் மையத்தால் (PRSC - Punjab Remote Sensing Centre) உருவாக்கப்பட்டன.


## பீபி கொலம்போ திட்டம்

- ஐரோப்பிய விண்வெளி ஏவுதளமான பிரெஞ்சு கயானாவின் கௌருவில் இருந்து பிரிட்டிஷால் வடிவமைக்கப்பட்ட பீபி கொலம்போ என்ற விண்கலம் விண்ணிற்கு ஏவப்பட்டது.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் ஜப்பானிய விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியான பீபி கொலம்போ என்ற விண்கலம் ஏரியன் 5 என்ற ஏவுவாகனத்தின் மூலம் பூமியை விட்டுச் சென்றது.
- இது சூரிய ஒளிக் குடும்பத்தின் மிகவும் உள்ளார்ந்த கோளான புதன் கோளைப் பற்றியத் தகவல்களையும் அதனைப் பற்றிய மர்மங்களையும் வெளிக் கொணர்வதற்கான 7 வருடத் திட்டமாகும்.
- 2025 ஆம் ஆண்டில் இது இரண்டு ஆய்வுகளை மேற்கொள்ளும்.
    - ஐரோப்பாவின் புதன் கோளிற்கான சுற்று வாகனம்
    - ஜப்பானின் புதன் கோளிற்கான காந்தப் புலத்திற்கான சுற்று வாகனம்.

  இவையிரண்டும் புதன் கிரகத்தைச் சுற்றியுள்ள சுற்றுவட்டப் பாதைகளில் ஆய்வு மேற்கொள்ளும்.
- இது வரையில் நாசாவின் மரைனர் 10 மற்றும் மெசஞ்சர் ஆகிய இரண்டு விண்கலங்கள் மட்டுமே புதன் கிரகத்திற்குச் சென்றுள்ளன.
- பீபி கொலம்போ என்ற பெயர், 1974 ஆம் ஆண்டில் மரைனர் 10 என்ற விண்வெளித் திட்டத்தில் முக்கியப் பங்காற்றிய இத்தாலியப் பொறியாளர் மற்றும் விஞ்ஞானியான மறைந்த ஜிசுப்பி பீபி கொலம்போ என்பவரது நினைவாக வைக்கப்பட்டுள்ளது.

***பீபி கொலம்போ - முக்கிய அம்சங்கள்***

- மேம்பட்ட மின் அயனி உந்த விசைத் தொழில்நுட்பத்துடன் அனுப்பப்பட்ட கோள்களுக்கிடையிலான முதல் திட்டம் இதுவே முதல்முறையாகும். இத்தொழில்நுட்பம், மின்னூட்டம் செலுத்தப்பட்ட செனான் வாயுவின் பட்டைகளை ஒரு அழுத்துதலில் இரண்டு முறை உமிழும் தொழில்நுட்பமாகும்.
- இது விண்கலத்தை வேகப்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படாது. மாறாக இது சூரியனின் மிகச்சக்தி வாய்ந்த ஈர்ப்பு விசைக்கு எதிராக தடுப்பு போல செயல்படும்.




## இணைவு ஆற்றல் மாநாடு

- 27வது இணைவு ஆற்றல் மாநாடு (Fusion Energy Conference - FEC 2018) குஜராத்தின் காந்தி நகரில் நடைபெற்றது.
- இது சர்வதேச அணு சக்தி முகமையால் (International Atomic Energy Agency - IAEA) ஒருங்கிணைக்கப்பட்டது. மேலும் இது அணுசக்தித் துறையாலும் காந்திநகரைச் சேர்ந்த பிளாஸ்மா ஆராய்ச்சி நிறுவனத்தாலும் நடத்தப்பட்டது.
- இது இயற்பியலின் முக்கிய விஷயங்களையும் தொழில்நுட்பக் கூறுகளையும் விவாதிப்பதற்கான ஒரு மன்றத்தை ஏற்படுத்த எண்ணுகின்றது. மேலும் அணுக்கரு இணைவினை ஒரு ஆற்றல் மூலமாக பயன்படுத்த நேரடித் தொடர்பிற்கான புதுமையான கருத்துக்களை ஏற்படுத்தவும் எண்ணுகின்றது.

## உலகின் மிகப்பெரிய ஆளில்லாப் போக்குவரத்து விமானம்

- சீனா உலகின் மிகப்பெரிய ஆளில்லாப் போக்குவரத்து விமானத்தை வெற்றிகரமாக சோதனை செய்திருக்கின்றது.
- 1.5 டன்கள் எடையை சுமக்கும் பெய்ஹாங்-98 (Feihong-98/FH-98) என்பது மிகப்பெரிய வர்த்தக ரீதியிலான ஆளில்லாத விமானமாகும்.
- சைபே Y5B என்ற மாதிரியிடமிருந்து இந்த விமானம் பெறப்பட்டதாகும்.
- 1957 ஆம் ஆண்டில் தனது முதல் பயணத்தை மேற்கொண்ட சைபே Y5B என்பது முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட சீனாவின் முதல் போக்குவரத்து விமானமாகும்.

## பாலி ஆக்சைம்

- இந்திய ஆய்வாளர்கள் புதிய தோல் கூழ்மமான 'பாலி-ஆக்சைம்' என்ற ஒன்றை உருவாக்கியுள்ளனர், இது பொதுவாக பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகளான ஆர்கனோபாஸ்பரஸ் கலவைகள் போன்றவை உறிஞ்சப்படுவதைத் தடுக்கிறது.
- இந்தக் கூழ்மமானது இரசாயனங்களை செயலிழக்கச் செய்து, தோல் மற்றும் மூளை, நுரையீரல் போன்ற உறுப்புகளில் ஆழமாக ஊடுருவுவதைத் தடுக்கிறது.
- வேதியியல் முறையில் மாற்றியமைக்கப்பட்ட சிட்டோசனால் செய்யப்பட்ட இந்த பாலி-ஆக்சைம் கூழ்மமானது கடல்நண்டுகள், நண்டுகள் மற்றும் இறால் வகை மீன்கள் போன்ற ஓட்டுடலிகளின் ஓடுகளில் காணப்படுகிறது.
- இந்தக் கூழ்மமானது பெங்களூரில் உள்ள ஸ்டெம் செல் அறிவியல் மற்றும் மீளுருவாக்க மருத்துவ நிறுவன (InStem - Institute for Stem Cell Science and Regenerative Medicine) ஆராய்ச்சியாளர்களால் ஒரு நியூக்ளியோபிலிக் பாலிமரில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இளஞ்சிவப்பு சிறிய நட்சத்திரங்களிலிருந்து ஒளிக் கீற்றுகள்


- ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி நாசா விஞ்ஞானிகள் இளஞ்சிவப்பு சிறிய நட்சத்திரங்களிலிருந்து வரும் கடுமையான ஊதாக் கதிர்கள், தன்னைச் சுற்றி வரும் கிரகங்களின் வளிமண்டலங்களைப் பாதிப்படையச் செய்து அவற்றை வசிக்க இயலாததாக மாற்றிவிடும் எனக் கண்டறிந்துள்ளனர்.
- ஹப்பிள் ஆனது ஹஸ்மத் (HAZMAT - Habitable Zones and M dwarf Activity across Time) என்ற ஒரு பெரிய திட்டத்தின் மூலம் இத்தகைய நட்சத்திரங்களைக் கண்டுபிடித்து வருகின்றது.
- சிறிய சிவப்பு நட்சத்திரங்களுக்கான வானவியல் பெயர் எம்.ட்வார்ப் (M. Dwarf) என்பதாகும்.
- குறைந்த நிறையுடைய நட்சத்திரங்களைச் சுற்றியுள்ள கிரகங்களின் வசிப்பிடத் தன்மையை அறிந்து கொள்ள உதவுவதே ஹஸ்மத் திட்டத்தின் நோக்கமாகும்.
- ஹஸ்மத் என்ற வார்த்தை சுற்றுப்புறத்திற்கும், உயிர்களுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் பொருட்கள் என்று விவரிக்கின்றது.
- ஹஸ்மத் திட்டம் மூன்று வித்தியாசமான பருவங்களில் உள்ள இளைய, நடுத்தர மற்றும்

வயதான சிறிய சிவப்பு நட்சத்திரங்களின் மீதான புறஊதாக் கதிர்கள் மீதான ஆய்வுத் திட்டமாகும்.

- இளஞ்சிவப்பு சிறிய நட்சத்திரம் (ட்வார்ப்/Dwarf) நமது அண்டத்தில் மிகச் சிறிய அளவில் நீண்ட வாழ்வைக் கொண்டு மிகுதியாக உள்ள ஒரு வகையான நட்சத்திரமாகும்.

## SPARC-ன் வலைப் பக்கம் – தொடக்கம்

- மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகமானது புதுதில்லியில் "கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் கூட்டுச் செயல்பாட்டினை ஊக்குவித்தல் திட்டத்திற்கான" (SPAAC - Scheme for Promotion of Academic and Research Collaboration) வலைப் பக்கத்தைத் தொடங்கியுள்ளது.




- இந்த வலைப் பக்கமானது www.sparc.iitkgp.ac.in என்ற முகவரியில் இருக்கும்.
- SPARC திட்டத்தின் நோக்கம் இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிக்குத் தகுந்த சூழலை இந்திய நிறுவனங்கள் மற்றும் உலகில் உள்ள சிறந்த நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே கல்வி மற்றும் ஆராய்ச்சியில் கூட்டுச் செயல்பாட்டினை ஏற்படுத்துவதன் மூலம் மேம்படுத்துவதாகும்.

## உயிரணு அளவிலான இயந்திர மனிதன் - சின்செல்ஸ் (Syncells)

- பெரும் எண்ணிக்கையிலான "Syncells" (செயற்கை உயிரணுக்கள்) என்று பெயர் கொண்ட இயந்திர மனிதனை வடிவமைப்பதற்கான முறையை மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த இயந்திர மனிதனை எண்ணெய் அல்லது வாயுக் குழாயின் உட்பகுதியினை கண்காணிக்கவும் இரத்த ஓட்டத்தில் ஏற்படும் நோயைக் கண்டறியவும் பயன்படுத்த முடியும்.
- அணுநிலை சார்ந்த மெல்லிய, நொறுங்கும் தன்மையுடைய பொருட்களில் இயற்கை முறிவு ஏற்படுவதை கட்டுப்படுத்துவதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலான "Syncells" -

க்களை உற்பத்தி செய்ய முடியும்.


- முறிவு ஏற்பட்டுள்ள இடங்களைக் கண்டறியக்கூடிய ஆட்டோபெர்பரேஷன் என்ற செயல்முறையைப் பயன்படுத்தி தேவையான அளவு மற்றும் தேவைப்படும் வடிவத்திலான மிகச்சிறிய பாக்கெட்டை (pocket) இதனால் உருவாக்க முடியும்.
- இந்த பாக்கெட்டிற்குள் தகவலை சேகரிப்பதற்காக மின்னணுத் தொடர்கள் மற்றும் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- Syncells-ன் வெளித் தோற்றமானது "கிராபைன்" என்ற இருபரிமாண வடிவமுள்ள கார்பன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

## மெய்ன் நஹீம் ஹம் - தளம் மற்றும் செயலி

- மெய்ன் நஹீம் ஹம் என்ற இணைய தளம் மற்றும் செயலியை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தினார்.
- மெய்ன் நஹீம் ஹம் என்ற தளமானது "Self4Society" என்ற கருத்துருவுடன் செயல்படும்.
- தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அமைப்புகள் தங்களின் சமூகப் பணிகள் மற்றும் சமூக சேவைகள் குறித்த முயற்சிகளை ஒன்றிணைத்து அளிப்பதற்கு தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உதவுவதற்காக ஒற்றைத் தளமாக இது செயல்படும்.
- இது சமுதாயத்தில் கீழ்நிலையில் உள்ள மக்களுக்கு சேவையளிப்பதற்கான ஒத்துழைப்பை தொழில்நுட்பத்தின் மூலம் அதிகரிக்கின்றது.

## UAE-ஆல் தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள்

- ஐக்கிய அரபு அமீரகத்தால் (UAE United Arab Emirates) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கலிஃபாசாட் புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை ஜப்பானின் ராக்கெட்டானது விண்வெளி சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது.
- இந்த புறப்பாடானது ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும் மிட்சுபிஷி ஹெவி இண்டஸ்ட்ரீஸ் ஆகியவை இணைந்து தனேகாஷிமா விண்வெளி மையத்திலிருந்து தொடங்கப்பட்டது.
- H - 2A என்ற பெயருடைய இந்த ஜப்பானிய ராக்கெட்டானது ஜப்பானின் பசுமை இல்ல வாயுக்கள் கண்காணிப்பு செயற்கைக் கோளான இபுகி-2-என்ற செயற்கைக் கோளையும் சுமந்து சென்றது.



# 1st UAE satellite launched from Japan

KhalifaSat Earth observation satellite is part of the Gulf nation's ambition under its fledging space programme

A Japanese rocket carrying the United Arab Emirates' first locally made satellite has lifted off from a space centre in southern Japan.

The KhalifaSat Earth observation satellite was launched by the Japan Aerospace Exploration Agency from its Tanegashima Space Centre.

The launch is part of the Gulf nation's ambition under its fledging space programme.

The country aims to send its first two astronauts to the International Space Station in 2019. The UAE aims to send a probe on its way to Mars in 2020 and to build a science city there by 2117. Japan aims to expand its commercial satellite launch services by Mitsubishi Heavy Industries and make them globally competitive. —AP

## Space rover to monitor environment

Japan's space agency on Monday launched a rocket carrying a satellite that will monitor greenhouse gases, as well as the first satellite built entirely in the United Arab Emirates.

The nation's H-IIA rocket lifted off on Monday afternoon at 1:08 pm (0508 GMT) from the Tanegashima Space Centre, according to the Japan Aerospace Exploration Agency (JAXA).

About 16 minutes later, it sent a Japanese satellite nicknamed Ibuki-2 into orbit. The satellite is officially named GOSAT-2, short for "greenhouse gases observing satellite-2", and is intended to provide data that will help Japan create and publish "emission inventories" of the CO2 output of various countries, as outlined in the Paris climate accord.

The satellite will also make precision observations of methane and other gases. The Japanese rocket also released "KhalifaSat", the first satellite built entirely in the UAE by local engineers.

"The launch of KhalifaSat is an unprecedented Emirati achievement," Abu Dhabi Crown Prince Mohammed bin Zayed said in a tweet. "Our dreams to embrace space have become a reality."

Five other smaller satellites are scheduled to be released from the Japanese rocket. —AFP

**REACHING FOR THE SKY**

- The satellite is meant to provide data that will help Japan publish 'emission inventories' of CO2 output of various countries, as outlined in the Paris climate accord

❖ UAE ஆனது 2019-ல் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு தனது முதல் இரண்டு விண்வெளி வீரர்களை அனுப்புவதை இலக்காகக் கொண்டுள்ளது.

❖ மேலும் 2020 ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்திற்கு ஆய்வு விண்கலத்தை அனுப்பவும் 2117 ஆம் ஆண்டில் அங்கே அறிவியல் நகரத்தை உருவாக்குவதையும் UAE இலக்காகக் கொண்டுள்ளது.

## பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்வதற்கான முதலாவது பிரான்ஸ்-சீனா செயற்கைக்கோள்

❖ கடற்பரப்பின் மேற்பரப்பில் வீசும் காற்றையும், அலைகளையும் ஆய்வு செய்வதற்காக முதலாவது பிரான்ஸ்-சீனா செயற்கைக் கோள் விண்வெளி சுற்றுவட்டப் பாதையில் செலுத்தப்பட்டது.

❖ இது சீனாவின் கோபி பாலைவனத்தில் உள்ள ஜியுகுவான் செயற்கைக் கோள் ஏவுதளத்தில் இருந்து Long March 2C என்ற ராக்கெட் மூலம் ஏவப்பட்டது.

❖ இது சூறாவளிகளை முன்கூட்டியே கணிப்பதற்கும், பருவநிலை மாற்றம் பற்றியும், பெருங்கடல் மற்றும் வளிமண்டலத்திற்கிடையே ஏற்படும் உள்ளிணைப்புகள் பற்றியும் விஞ்ஞானிகளின் புரிதலை மேம்படுத்துவதற்கும் உதவும்.

❖ சீனா மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றால் இணைந்து அனுப்பப்படும் முதல் செயற்கைக் கோள் இதுவாகும்.

❖ இந்த செயற்கைக் கோள் 2 ரேடார்களோடு பொருத்தப்பட்டுள்ளது.

   ○ பிரான்சால் தயாரிக்கப்பட்ட ஸ்விம் (SWIM) - அலைகளின் நீளம் மற்றும் திசையை அளப்பதற்கு உதவும்.

   ○ சீனாவின் SCAT - அலைகளின் வலிமை மற்றும் திசையை ஆய்விடுவதற்கு உதவும்.

❖ தகவல்கள் சீனா மற்றும் பிரான்ஸ் இரு நாடுகளாலும் இணைந்து சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## குடிமக்கள் அறிவியல் தளம்

- நாட்டில் ஹார்ன்பில் எனும் பறவையை காப்பாற்றுவதற்காகவும் பொதுமக்களிடையே இந்த தனித்துவம் வாய்ந்த பறவையை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் குடிமக்கள் அறிவியல் தளம் என்ற முன்முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த தளமானது இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தைச் (Nature Conservation Foundation) சேர்ந்த அப்ரஜித் தத்தா, ரோகித் நனிவதேகர் மற்றும் 'கன்சர்வேஷன் இந்தியா' என்ற அரசு சாரா நிறுவனத்தைச் சேர்ந்த ராம்கி ஸ்ரீனிவாசன், விக்ரம் ஹயர்சாவி ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது.
- நாட்டில் ஹார்ன்பில் எனும் பறவையின் வாழ்விடம் குறித்த தகவல்களை அளிப்பதற்காக இந்த தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியாவில் அனைத்து இடங்களிலும் ஹார்ன்பில் பறவை பற்றிய தகவலை மக்கள் அளிப்பதற்காக ஒரு ஊடாடு இணைய இடைமுக இணையதளமான "ஹார்ன்பில் வாட்ச் முன்முயற்சி" (www.hornbills.in) என்ற தளம் உதவும்.
- ஹார்ன்பில் என்ற பறவைகள் "காடுகளின் விவசாயி" என்று அழைக்கப்படுகின்றன. இப்பறவைகள் மரங்களிலிருக்கும் விதைகளை மற்ற இடங்களுக்கு பரவச் செய்தலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## உலகின் மிகப்பெரிய பறவை

- இலண்டன் விலங்கியல் சமூகமானது வோரோம்பி டைட்டன் என்னும் பறவையை உலகின் மிகப்பெரிய பறவையாக அறிவித்துள்ளது.
- வோரோம்பி டைட்டன் (மலகாசி மற்றும் கிரீக் மொழியில் பெரிய பறவை என்று பொருள்) என்னும் பறவையானது 800 கிலோ எடையையும் 3 மீட்டர் உயரத்தையும் கொண்டது என்று நம்பப்படுகிறது.
- இது ஒரு மறைந்த மடகாஸ்கன் இனமாகும். மேலும் இது "எலிபெண்ட் பறவை" வகையைச் சேர்ந்ததாகும்.
- "எலிபெண்ட் பறவைகள்" (அபியோரினிதிடே வகுப்பைச் சார்ந்தது) தற்கால தாவர விலங்கினங்கள் தோன்றிய காலத்திற்குப் பிறகு மடகாஸ்கரில் வாழ்ந்து மறைந்த பெரிய இறக்கையில்லாப் பறவையாகும்.

## செயற்கை கருவூட்டலைப் பயன்படுத்தி பிறந்த உலகின் முதலாவது சிங்கக் குட்டிகள்

- தென் ஆப்பிரிக்காவின் ப்ரிடோரியாவில் செயற்கைக் கருவூட்டல் முறையில் உலகின் முதலாவது சிங்கக் குட்டிகள் பிறந்திருக்கின்றன.
- அக்குட்டிகளைப் பராமரிப்பவர்கள் புதிதாகப் பிறந்த சிங்கக் குட்டிகளுக்கு இசபெல் மற்றும் விக்டர் என்று பெயரிட்டுள்ளனர்.
- ஆப்பிரிக்க பெண் சிங்கங்களின் இனப்பெருக்க முறையை ஆய்வு செய்து 18 மாத சோதனை மூலம் விஞ்ஞானிகள் இதை நிறைவேற்றியுள்ளனர்.
- ஆப்பிரிக்க சிங்கங்கள் தற்பொழுது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தினால் (International Union for Conservation of Nature - IUCN) "பாதிக்கப்படக் கூடிய விலங்கினமாக" வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## அல்போன்சா மாம்பழத்திற்கு புவிசார் குறியீடு

- சென்னையை அடிப்படையாகக் கொண்ட இந்திய புவிசார் குறியீட்டுப் பதிவு மற்றும் அறிவுசார் சொத்து மையம் ஆனது மகாராஷ்டிராவின் 5 மாவட்டங்களிலிருந்து கிடைக்கும் அல்போன்சா மாம்பழத்திற்கு புவிசார் குறியீட்டை (Geographical Indication - GI tag) வழங்கியுள்ளது.





- ரத்னகிரி, சிந்துதுர்க், பால்கர், தானே மற்றும் ராய்கட் ஆகிய ஐந்து மாவட்டங்கள், மகாராஷ்டிர மாநிலத்தின் மேற்கு கொங்கன் கடற்கரைப் பகுதியை சேர்ந்தவையாகும்
- இந்த அங்கீகாரத்துடன் அல்போன்சாவானது இந்தியாவில் GI குறியீடு பெற்ற 325 பொருட்களின் பட்டியலில் இணைந்துள்ளது.
- மஹாராஷ்டிராவில் 'ஹபுஸ்' என்று அறியப்படும் அல்போன்சாவானது மாம்பழங்களின் அரசனாக கருதப்படுகிறது.

## ஆசியாவின் முதல் ஓங்கில் *(டால்பின்)* ஆராய்ச்சி மையம்

- ❖ பீகாரின் தலைநகரான பாட்னாவில், பாட்னா பல்கலைக்கழக வளாகத்தில் கங்கை ஆற்றின் கரைப்பகுதியில் தேசிய ஓங்கில் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படவுள்ளது.
- ❖ இது ஆசியாவின் முதலாவது ஓங்கில் ஆராய்ச்சி மையமாக அமையவுள்ளது.
- ❖ பீகாரில் கடந்த அக்டோபர் 05ல் அனுசரிக்கப்பட்ட ஓங்கில் தினத்தன்று இந்த மையத்தின் அமைப்பிறகான அறிவிப்பானது வெளியிடப்பட்டது.

### *கங்கை நதி வாழ் ஓங்கில்*

- ❖ கங்கை நதி வாழ் ஓங்கிலானது (அறிவியல் பெயர்: பிளாட்டனிஸ்டா கஞ்செட்டிகா) உலகில் உள்ள நான்கு நன்னீர் ஓங்கில் இனங்களில் ஒன்றாகும்.
- ❖ மற்று மூன்று இனங்களானது யாங்சீ ஆறு, பாகிஸ்தானின் சிந்து நதி மற்றும் அமேசான் ஆறுகளில் காணப்படுகின்றன. கங்கை நதி வாழ் ஓங்கிலானது இந்தியா, வங்காளதேசம் மற்றும் நேபாளத்தில் காணப்படுகின்றன.



A Gangetic dolphin at Bakshi near Bagnan

- ❖ கங்கை நதி வாழ் ஓங்கிலானது இந்தியாவின் தேசிய நீர்வாழ் விலங்கு ஆகும்.
- ❖ கங்கை நதி வாழ் ஓங்கிலானது இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் 1 வது அட்டவணையின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. மேலும் IUCN (International Union for Conservation of Nature) -ஆல் அருகிவரும் இனமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ பீகாரில் பாகல்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள விக்ரமஷீலா கங்கை வாழ் ஓங்கில் சரணாலயமானது இந்தியாவில் அமைந்துள்ள ஒரே ஓங்கில் சரணாலயமாகும்.

## இந்தியாவின் முதல் 'மெத்தனால் சமையல் எரிபொருள் திட்டம்'

- ❖ நம்ருப்-ஐ மையமாகக் கொண்ட அசாம் பெட்ரோ கெமிக்கல் லிமிடெட் (APL - Assam Petrochemicals Limited) நிறுவனமானது ஆசியாவின் முதலாவது உலோக கொள்கலன் அடிப்படையிலான மற்றும் இந்தியாவின் முதலாவது மெத்தனால் சமையல் எரிபொருள் திட்டத்தை அசாமில் தொடங்கியுள்ளது.

- இந்த திட்டமானது நிதி ஆயோக் மூலம் ஊக்குவிக்கப்பட்டது.
- பாதுகாப்பாக கையாளக்கூடிய உலோக கொள்கலன்கள் அடிப்படையிலான இந்த சமைக்கும் அடுப்புகள் ஸ்வீடன் தொழில்நுட்பத்திடமிருந்து பெறப்பட்டது ஆகும்.
- நம்ருப்பைச் சேர்ந்த ரித்து போர்டோலி இந்தியாவின் முதலாவது மெத்தனால் அடிப்படையிலான சமையல் அடுப்பின் உரிமையாளர் மற்றும் பயனாளராக ஆகியுள்ளார்.
- இயற்கை எரிவாயுவை ஊட்டுதிறனாகக் கொண்டு மெத்தனால் மற்றும் பார்மாலின் தயாரிக்கும் இந்தியாவில் முதல் பொதுத்துறை உற்பத்தியாளராக APL நிறுவனம் உள்ளது.

## சுற்றுச்சூழல் மாசுபாடு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையம் மீண்டும் அமைப்பு

- மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகமானது உச்சநீதிமன்றத்தால் அதிகாரமளிக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாசுபாடு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையத்தை (Environment Pollution (Prevention and Control) Authority-EPCA) மீண்டும் அமைத்துள்ளது.
- இது கடைசி EPCA-வின் காலாவதி தேதியான 2018, அக்டோபர் 31-க்கு பிறகு அமைக்கப்பட்டுள்ளது.
- முன்னாள் IAS அதிகாரியான புரேலால் மீண்டும் அமைக்கப்பட்டுள்ள EPCA-ன் தலைவராக தொடர்கிறார்.
- தேசிய தலைநகர் பிராந்தியத்தில் (NCT – National Capital Territory) காற்று மாசுபாட்டை சமாளிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும் பணியில் EPCA-வானது ஈடுபடும்.
- மேலும் EPCA-வானது நகரின் மாசு அளவைப் பொறுத்து சீராக்கப்பட்ட பதில் செயல் திட்டத்தை (Graded Response Action Plan-GRAP) நடைமுறைப்படுத்த கட்டாயப்படுத்தப்படுகிறது.

## சுற்றுச்சூழல் ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்


- நீடித்த வளர்ச்சியின் சுறறுச்சூழல் பரிமாணத்தில் ஒங்கிணைந்து செயல்படுவதற்காக இந்திய தொழிலக கூட்டமைப்பானது (CII - Confederation of Indian Industry) ஐ.நா. சுற்றுச்சூழலுடன் (UN Environment) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது CII மற்றும் ஐ.நா. ஆகிய இரண்டிற்குமிடையே விருப்பமான பொதுவான துறைகளில் உள்ள முக்கியமானவற்றை உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் CII மற்றும் ஐ.நா-வால் #ஐ.நா நெகிழி முன்முயற்சி (#Un-plastic Initiative) எனும் பிரதானமான செயல்பாடு திட்டமிடப்பட்டுள்ளது.
- இது பிளாஸ்டிக் மாசுபாட்டை கட்டுப்படுத்தும் நடவடிக்கைளை எடுக்க தொழிலகங்களின் வாக்குறுதிகளை உள்ளடக்கிய 'நடவடிக்கைக்கான அழைப்புடன்' தொடங்கும்.

## இந்தியாவின் 2017 ஆம் ஆண்டின் சுற்றுப்புற இரைச்சல் அளவு அறிக்கை

- இந்தியாவின் 2017 ஆம் ஆண்டின் சுற்றுப்புற இரைச்சல் அளவு அறிக்கையின்படி டெல்லியானது மிகவும் இரைச்சல் மிகுந்த பெருநகரமாக உள்ளது. இதனைத் தொடர்ந்து கொல்கத்தா, பெங்களூரு மற்றும் சென்னை ஆகியவை இடம் பிடித்துள்ளன.
- இது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் (CPCB - Central Pollution Control Board) வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.
- தேசிய சுற்றுச்சூழல் கொள்கை (NEP - National Environment Policy) 2006-ன்படி, சுற்றுச்சூழல் தர அளவுருவாக சுற்றுப்புற இரைச்சலும் சேர்க்கப்பட்டு குறிப்பிட்ட நகர்ப்புற பகுதிகளில் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.
- இதனால், CPCB ஆனது தேசிய சுற்றுப்புற இரைச்சல் கண்காணிப்பு அமைப்பு திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது இரைச்சல் கண்காணிப்பு நிலையங்களை இந்தியா முழுவதும் நிறுவுதலை உள்ளடக்கியது ஆகும்.
- பெங்களூரு, சென்னை, டெல்லி, ஐதராபாத், கொல்கத்தா, லக்னோ மற்றும் மும்பை ஆகிய நகரங்கள் இதில் அடங்கும்.

## ஆபத்தான கேனைன் டிஸ்டம்பர் (Canine Distemper Virus - CDV) வைரசிற்கு எதிரான தடுப்பூசி

- குஜராத் வனத்துறையானது கிர் சரணாலயத்தில் ஆபத்தான கேனைன் டிஸ்டெம்பர் வைரஸ் (CDV ) மற்றும் புரோட்டோசோவா தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதற்காக சிங்கங்களுக்கு தடுப்பூசி போடுவதைத் தொடங்கியுள்ளது.
- இந்த வைரஸானது குஜராத்தின் கிர் சரணாலயத்தில் குறைந்தபட்சம் 23 சிங்கங்களின் மரணத்திற்கு காரணமாகச் சொல்லப்படுகிறது.
- 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கடைசி கணக்கெடுப்பின்படி கிர் சரணாலயத்தில் சிங்கங்களின் எண்ணிக்கை 523 ஆக இருந்தது.



**Battling infection**

**What's killing the Gir lions?**

- 23 lions have died since Sept. 12 at the sanctuary. Four lions died of Canine Distemper Virus infection while 17 died of Babesiosis Protozona infection, which is spread by ticks. Reason for the deaths of two lions is yet to be ascertained.
- Currently, 33 lions are being treated at the Jamvala rescue centre while 3 are undergoing treatment at the Jasadhar rescue centre. All 36 lions under treatment have been isolated.
- As per a 2015 count, there were 523 lions in the Gir forest areas and also in revenue areas in as many as eight districts in the Saurashtra region of Gujarat. As per the census figures, there were 109 males, 201 females and 213 cubs.

- ❖ உலகின் ஆசிய சிங்கங்களின் ஒரே வனவாழ்விடம் கிர் சரணாலயம் ஆகும்.
- ❖ CDV ஆனது எளிதில் தொற்றக்கூடியதாகும். இது விலங்குகளின் இரைப்பை, சுவாசமண்டலம், மத்திய நரம்பு மண்டலம், நோயெதிர்ப்பு மண்டலம் மற்றும் பிற முக்கிய உறுப்புகளைத் தாக்குகிறது.
- ❖ CDV ஆனது மிகவும் ஆபத்தான வைரசாக கருதப்படுகிறது. மேலும் இது கிழக்கு ஆப்பிரிக்க காடுகளின் 30% ஆப்பிரிக்க சிங்கங்களின் அழிவிற்கு காரணமாகியுள்ளது எனக் கூறப்படுகிறது.

## எலிகளில் ஏற்படும் கல்லீரல் அழற்சி (Hepatitis E) உலகில் முதன்முறையாக மனிதனிடம் கண்டுபிடிப்பு

- ❖ உலகில் முதன்முறையாக எலிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கல்லீரல் அழற்சி E வைரஸானது ஹாங்காங்கைச் சேர்ந்த 56 வயதுடைய நபரிடம் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ எலிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கல்லீரல் அழற்சி E வைரஸானது மனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் மருத்துவ நோய்த் தொற்றை ஏற்படுத்தும் என்றும் உலகில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வானது உறுதி செய்துள்ளது.
- ❖ எலிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் கல்லீரல் அழற்சி E வைரஸானது மனித கல்லீரல் அழற்சி - E வைரஸிலிருந்து மிகவும் வேறுபட்டுள்ளது.

## திரவியாவதி நதி புனரமைப்புத் திட்டம்

- ❖ புகழ்பெற்ற திரவியாவதி நதி புனரமைப்புத் திட்டத்தை ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே தொடங்கி வைத்தார்.
- ❖ இத்திட்டம் டாடா திட்ட நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இத்திட்டம் ஜெய்ப்பூர் நகரம்

வழியே பாயும் திரவியாவதி நதியின் 47.5 கிலோ மீட்டர் பரப்புள்ள மழைபிடிப்பு அல்லது நீர்பிடிப்புப் பகுதியில் பரவியுள்ளது.

## முதலாவது தேசிய சுற்றுச்சூழல் ஆய்வு (NES)

- இந்தியாவின் முதலாவது தேசிய சுற்றுச்சூழல் ஆய்வு (NES - National Environment Survey) ஆனது வரும் 2019 ஜனவரி மாதம் முதல் 24 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் உள்ள 55 மாவட்டங்களில் தொடங்கப்படவுள்ளது.
- இது அனைத்து மாவட்டங்களையும் சுற்றுச்சூழல் செயல்திறன்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துவதையும் அவற்றின் சிறந்த சுற்றுச்சூழல் நடைமுறைகளை ஆவணப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் கணக்கெடுப்பின் ஆவணங்கள் 2020-ல் கிடைக்கப்பெறும்.
- இந்த ஆய்வானது சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்றம் (MoEFCC) அமைச்சகத்தினால் சுற்றுச்சூழல் தகவல் அமைப்பு வழியாக நடத்தப்படும்.
- MoEFCCயின் பசுமைத்திறன் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பயிற்சியளிக்கப்பட்ட திறமையான நபர்களில் இருந்து ஆய்வுக்கு தேவையான திறமையான மனிதவளம் வழங்கப்படும்.

## ஹரித் தீபாவளி- ஸ்வஸ்த் தீபாவளி பிரச்சாரம்

- மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது ஹரித் தீபாவளி - ஸ்வஸ்த் தீபாவளி என்ற பிரச்சாரத்தைத் துவங்கியுள்ளது.
- தீபாவளிக் கொண்டாட்டங்களுக்குப் பிறகு நாட்டின் சுற்றுச்சூழல் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதை, குறிப்பாக காற்று மாசுபாட்டைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2017-2018ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரச்சாரமானது குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்கும் பட்டாசுகள் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் அவர்களை தீபாவளி கொண்டாடிட ஊக்கப்படுத்தவும் உருவாக்கப்பட்டது.
- மேலும் இப்பிரச்சாரமானது இந்த வருடம் 'கிரீன் குட் டீட்' (Green Good Deed) என்ற இயக்கத்துடன் இணைந்துள்ளது.

## பயோஃபேக் (BIOFACH) இந்தியா

- இந்தியாவின் இயற்கை விவசாயத் துறையின் மிகப்பெரிய கண்காட்சியான 3 நாள் BIOFACH -இன் 10 வது பதிப்பை மத்திய அமைச்சர் சுரேஷ்பிரபு புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.
- இவ்விழாவானது,

- நியூரன்பர்க் மெஸ்ஸி இந்தியா மற்றும்
- வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA - Agricultural and Processed Food Products Export Development Authority)

ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டு இந்தோ-ஜெர்மன் வர்த்தக சபையால் ஆதரவளிக்கப்பட்டது.

- இவ்வருட BIOFACH India மாநாட்டின் கருத்துரு : "இந்தியாவில் இருந்து இயற்கை விவசாயப் பொருட்களின் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்கான உத்திகள் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை அதிகப்படுத்துவது" என்பதாகும்.
- உலக அளவில் இந்தியாவானது இயற்கை விவசாய உற்பத்தியாளர்கள் எண்ணிக்கையில் முதலிடத்திலும், இயற்கை விவசாய நிலப்பரப்பு அடிப்படையில் 9-வது இடத்திலும் உள்ளது.

## மனித சிறுநீரிலிருந்து உலகின் முதல் உயிரி செங்கல்

- தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மனித சிறுநீரிலிருந்து உருவான உலகின் முதல் உயிரி செங்கல்லை உருவாக்கியுள்ளனர்.
- இந்த உயிரி செங்கல்லானது, 'நுண்ணுயிர் கார்பனேட் வீழ்படிவாக்கல்' முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.






- இந்த கண்டுபிடிப்பானது கழிவுகளை மறுசுழற்சி மற்றும் உட்சுழற்சி செய்தலின் விளைவாகும்.
- இந்த உயிரி செங்கல் உருவாக்கும் செயல்முறையானது வணிக ரீதியிலான உரங்களின் முக்கிய கூறுகளான நைட்ரஜன் மற்றும் பொட்டாசியத்தை துணைப் பொருட்களாக உற்பத்தி செய்கிறது.

## இந்திய பாலூட்டிகளுக்கான "குடிமகன்" அறிவியல் களஞ்சியம்

- பெங்களூரில் உள்ள உயிரியல் அறிவியலுக்கான தேசிய மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்தியப் பாலூட்டிகள்

என்றழைக்கப்படுகின்ற, ஒரு புதிய, இந்தியப் பாலூட்டிகள் மீதான குடிமகன் - அறிவியல் களஞ்சியத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

- இது இந்தியாவின் திட்டமான பல்லுயிர்ப் பெருக்க வரைபடத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பல்லுயிர்ப் பெருக்க வரைபடத் திட்டம் என்பது உயிர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு உயிர்த் தகவலியல் அமைப்பாகும்.
- இது இலவசமாக அணுகக்கூடிய ஒரு நேரடி இணைய தளமாகும் (mammalsofindia.org).



- இது அனைத்து இந்தியப் பாலூட்டிகள், அதனைப் பற்றிய அடையாளங் காணுதல், வித்தியாசங்கள், வசிப்பிடங்கள், இனப்பெருக்க மற்றும் இனப்பெருக்கமல்லாத சூழலியல், உயிரினங்களின் பாதுகாப்பு ஆகிய தகவல்களுடன் பயிர்களுக்கான தனிப்பட்ட தகவல் பக்கங்களை உருவாக்கிட எண்ணுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் சோள திருவிழா

- நாட்டின் முதல் சோளத் திருவிழா மத்தியப் பிரதேசத்தின் சிந்த்வாராவில் நடைபெறுகிறது.
- இத்திருவிழாவானது ஒரு சர்வதேச நிகழ்வாகும்.
- இந்தியாவின் மிக அதிக அளவில் சோளம் உற்பத்தி செய்யும் மாவட்டமான சிந்த்வாரா மாவட்டத்துடன் அதிக அளவில் சோளம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஒன்றாகவும் மத்தியப் பிரதேசம் உள்ளது.

## மத்தியப் பிரதேசத்தின் 52வது மாவட்டம் - நிவாரி

- மத்தியப் பிரதேச மாநில அரசானது நிவாரி என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்படுவதாக அறிவித்துள்ளது.

- நிவாரி மத்தியப் பிரதேசத்தின் 52வது மாவட்டம் ஆகும். இது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 1 அன்று நடைமுறைக்கு வந்தது.
- திகம்கார்க் மாவட்டத்திலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து நிவாரி மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- நிவாரி மாவட்டமானது தற்போதைய திகம்கார்க் மாவட்டத்தின் 3 வட்டங்களை (tehsil) உள்ளடக்கியது ஆகும். நிவாரி, ஓர்ச்சா மற்றும் பிருத்விபூர் ஆகியவை அந்த 3 வட்டப் பகுதிகளாகும்.
- புதிய மாவட்டமான நிவாரியின் முதலாவது ஆட்சியராக அக்ஷய்குமார் சிங் (பொறுப்பு ஆட்சியர்) பதவி வகிப்பார்.

## பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா

- 11 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்டித் தந்ததன் மூலம் ‘பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா’ என்ற திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக உத்தரப் பிரதேச அரசு முதலிடம் பெற்றுள்ளது.
- 2015 ஆம் ஆண்டு பிரதம மந்திரியால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், 2022 ஆம் ஆண்டு மார்ச் 31-ற்குள் 20 மில்லியன் வாழத்தகுந்த வீடுகள் கட்டி ஏழைக் குடும்பங்களுக்கு அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## மாநிலம் தழுவிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்

- அஸ்ஸாம் மாநில அமைச்சரவையானது 60 வயதிற்கு மேற்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மற்றும் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள, உணவுப்பொருள் வழங்கல் அட்டை வைத்துள்ள அனைவருக்கும் மாநிலம் தழுவிய முதியோர் ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.
- இத்திட்டமானது மகாத்மா காந்தியடிகளின் 150வது பிறந்த தினமான அக்டோபர் 2 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

## 8 வது ஆசிய யோகா விளையாட்டு சாம்பியன்ஷிப்

- 8வது ஆசிய யோகா விளையாட்டு சாம்பியன்ஷிப்பை திருவனந்தபுரமானது நடத்துகிறது.
- 2வது பதிப்பை ஹைதராபாத் நடத்திய பிறகு கேரளாவானது ஆசிய அளவிலான நிகழ்ச்சியினை நாட்டில் இரண்டாவது முறையாக நடத்துகிறது.
- தங்கள் நாடுகளில் யோகாவைப் பிரபலப்படுத்துவதற்கு காரணமாக இருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு யோகரத்னா விருது வழங்கப்படும்.

## பிரதம அமைச்சரின் குஜராத் பயணம்

- ராஜ்காட்டின் ஆல்பிரெட் உயர்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகாத்மா காந்தி அருங்காட்சியகத்தை பிரதம அமைச்சர் தொடங்கி வைத்தார். மகாத்மா காந்தி 1887 ஆம் ஆண்டில் இப்பள்ளியில் கல்வி பயின்றார்.
- மேலும் பிரதம அமைச்சர் அஞ்சர் நகரத்தில் அஞ்சர்-முந்த்ரா குழாய்த் திட்டமான முந்த்ரா எல்என்ஜி (நீர்ம இயற்கை வாயு) முனையத்தையும் பலன்பூர்-பாலி-பார்மேர் குழாய்த் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.
- மேலும் பிரதம அமைச்சர் ஆனந்த் மாவட்டத்தில் அமுல் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட நவீன சாக்லெட் தொழிற்சாலையையும் தொடங்கி வைத்தார்.

## உணவுப் பாதுகாப்புத் திட்டம் - ஒடிசா

- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ல் விடுபட்ட 25 லட்சம் மக்கள் பயனடையும் வகையில் மாநில உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை ஒடிசா மாநில அரசு தொடங்கியுள்ளது.
- காந்தி ஜெயந்தி நிகழ்ச்சியின்போது ஒடிசா முதலமைச்சர் இத்திட்டதைத் தொடங்கி வைத்தார்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலைக் கடைகளில் விற்பனையின்போது மின்னணு முறையில் பணம் செலுத்தும் சாதனம் மூலம் (e-pos/electronic point of sale) அரிசி விநியோக முறை மேற்கொள்ளப்படும்.

## நிர்மான் குசுமா திட்டம்

- ஒடிசா மாநிலத்தில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் தொழில்நுட்ப கல்விக்கு நிதியுதவியளிப்பதற்காக ஒடிசா மாநிலமானது நிர்மான் குசுமா என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இத்திட்டத்தையல்லாமல், மாநில அரசானது மாணவிகளுக்கான நிதியுதவியை 20% உயர்த்தியுள்ளது.
- கட்டுமானப் பணியாளர்களுக்கான இறப்பு உதவிகள் மற்றும் விபத்திற்கான உதவிகளை இரண்டு மடங்காக, மாநில அரசானது மாற்றியுள்ளது.

## வறட்சி நிலையை ஆய்வு செய்வதற்கான வலைதளம் மற்றும் செயலி

- மகாராஷ்டிரா மாநிலத்தில் மழைப்பொழிவு, பயிர் நிலைமைகள் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றின் தரவுகளை சேகரிப்பதன் மூலம் வறட்சி நிலைமையைப் பகுப்பாய்வு செய்வதற்காக கைபேசி செயலி மற்றும் வலைதளத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.
- 'மஹா மதத்' என்ற இணைய தளத்தை மகாராஷ்டிரா தொலை உணர்வி பயன்பாட்டு

மையத்தின் (MRSAC - Maharashtra Remote Sensing Application Centre) உதவியுடன் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டில் மத்திய அரசால் வழங்கப்பட்ட இரண்டு வரைமுறைகளைக் கொண்டு இந்த பிராந்தியமானது வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- எந்தவொரு பகுதியையும் 21 நாட்கள் கால அளவில் மழைப்பொழிவு இல்லையெனில் வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்கமுடியும்.

## ஊதிய இழப்பீட்டுத் திட்டம்

- மாநிலத்தின் தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊதிய இழப்பீட்டுத் திட்டத்தை வழங்கும் முதல் இந்திய மாநிலமாக அசாம் திகழ்கிறது.
- கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறந்த ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து துணைப் பொருட்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், ரூ.12,000 ஆனது 4 தவணைகளில் வழங்கப்படும். இதனுடன் மகப்பேறு விடுப்பும் வழங்கப்படும்.

## கர்நாடகாவின் உன்னதி திட்டம்

- கர்நாடகாவின் சமூக நலத்துறையானது கிராமப்புறங்கள் மற்றும் சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் தொழில்நுட்பங்களில் பணிபுரியும் தொழில்முனைவோர்களை மேம்படுத்துவதற்காக உன்னதி திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- உன்னதி திட்டத்தின் முதல் பிரிவு தொழில்நுட்ப புத்தாக்கமாகும்.
- இந்த பிரிவானது SC/ST சமூகத்தைச் சார்ந்த வாய்ப்புகள் மறுக்கப்பட்ட தொழில்முனைவோரை அடையாளம் காண்பது மற்றும் அவர்களை ஊக்குவிப்பதாகும்.
- உன்னதி திட்டத்தின் இரண்டாம் பிரிவு சமூக தாக்கமாகும்.
- இந்தப் பிரிவானது அரசாங்கமும் சமுதாயமும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளுக்காக பணிபுரியும் நிறுவனங்களைக் கண்டறிவதாகும்.

## ஜம்மு காஷ்மீரில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்

- ஜம்மு மற்றும் காஷ்மீரில் இரண்டாம் கட்ட உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது.
- ஜம்முவில் சுமார் 80 சதவீத வாக்காளர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.
- காஷ்மீரில் 3.4 சதவீத வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தனர்.
- ஷரத்து - 35Aன் மீதான மத்திய அரசின் நிலைப்பாட்டின் காரணமாக, மாநிலத்தின் இரண்டு முக்கிய கட்சிகளான தேசிய மாநாட்டுக் கட்சி மற்றும் மெஹ்பூபா முப்தியின் பிடிபி (மக்கள் ஜனநாயகக் கட்சி) ஆகிய இரண்டும் தேர்தலில் பங்கேற்கவில்லை.

*ஷரத்து 35A*

- ஷரத்து 35A ஆனது ஜவஹர்லால் நேரு தலைமையிலான அமைச்சரவையின் அறிவுரையின்படி அப்போதைய குடியரசுத் தலைவரான ராஜேந்திர பிரசாத்தின் உத்தரவின் பேரில் 1954ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டது.
- அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 35A ஆனது 'நிரந்தர குடியிருப்பாளர்களை' வரையறை செய்யவும் மற்றும் அவர்களுக்கான சிறப்பு உரிமைகள் மற்றும் சலுகைகளை வழங்கவும் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தின் சட்ட சபைகளுக்கு அதிகாரமளிக்கிறது.

## பூரி ஜெகன்நாத் கோவிலில் காவல்துறை நுழைய அனுமதி மறுப்பு

- பூரி ஜெகன்நாத் கோவிலில் (ஒடிசா) பக்தர்களுக்கு வரிசை முறை அறிமுகப்படுத்தப்பட்டதை எதிர்த்து அக்டோபர் 3 அன்று நடைபெற்ற போராட்டத்தில் நடந்த வன்முறையை அடுத்து உச்ச நீதிமன்றமானது ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- அதன்படி உச்ச நீதிமன்றமானது காவல் துறையினர் ஆயுதங்கள் மற்றும் காலணிகளுடன் கோவிலுக்குள் நுழைய தடை விதித்துள்ளது .

## நாட்டின் முதல் உயிரி எரிபொருள் ஆலை - ஒடிசா

- பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (BPCL - Bharat Petroleum Corporation Ltd) ஆனது தனது இரண்டாம் தலைமுறை (2G) எத்தனால் உயிரி சுத்திகரிப்பு ஆலையை ஒடிசாவின் பார்கர் மாவட்டத்தின் பவுல்சின்ஹா கிராமத்தில் 2020ல் செயல்நிலைப்படுத்தலை முடிக்கவுள்ளது.
- நாட்டில் இதுவே நெல் வைக்கோலிலிருந்து எத்தனாலைத் தயாரிக்கும் முதலாவது உயிரி எரிபொருள் ஆலையாகும்.
- எத்தனாலானது பெட்ரோலுடன் கலந்து எரிபொருளாக பயன்படுத்தப்படும்.
- தேசிய உயிரி எரிபொருள் கொள்கை - 2018ன் படி இந்தியாவானது 2030 க்குள் 20% எத்தனாலை பெட்ரோலுடன் கலப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது உயிரி எரிபொருள் பற்றாக்குறை காரணமாக 3 அல்லது 4 சதவீத எத்தனால் மட்டுமே பெட்ரோலுடன் கலக்கப்படுகிறது.

## சர்வதேச திரைப்படத் திருவிழா - கோவா

- 2018 ஆண்டின் கோவா சர்வதேச திரைப்படத் திருவிழா ஆனது நவம்பர் 20 முதல் நவம்பர் 28 வரை நடைபெறவிருக்கிறது.
- இந்த ஆண்டு ஜார்க்கண்ட் பங்குதாரர் மாநிலமாக செயல்படவிருக்கிறது.
- இது ஜார்க்கண்ட் மாநில அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சாதகமான திரைப்படத் தயாரிப்பு ஊக்கத் தொகைகள் மற்றும் ஜார்க்கண்ட் மாநில கலாச்சாரத்தை வெளிப்படுத்த அனுமதிக்கிறது.

## முதலமைச்சரின் நகர்ப்புற தலைவர்கள் தோழமை திட்டம்

- டெல்லி அரசானது முதலமைச்சரின் நகர்ப்புற தலைவர்கள் தோழமை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மிகக்கடுமையாக பாதிக்கும் நகர்ப்புற சவால்களில் சிலவற்றை கையாள்வதில் அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்காக நாடு முழுவதும் உள்ள இளம் தலைவர்களை ஈர்க்கும் முயற்சியாகும்.

## ஹரியானாவின் முதல் மன இறுக்கத்திற்கான ஆராய்ச்சி மையம்

- ஹரியானாவில் குருகிராமில் உள்ள ஃபோர்டிஸ் நினைவு ஆராய்ச்சி மையத்தில் முதல் தேசிய மன இறுக்க தலையீட்டு ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டது.
- மன இறுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இம்மையமானது பிஹேவியர் மொமண்டம் இந்தியாவுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.

## தரப்படுத்தப்பட்ட பதில்செயல் திட்டம்

- சுற்றுச்சூழல் மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆணையமானது (EPCA - Environment Pollution (Prevention and Control) Authority) டெல்லி-தேசியத் தலைநகர் பிராந்தியங்களில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்காக ஒரு தரப்படுத்தப்பட்ட பதில்செயல் திட்டத்தை (GRAP - Graded Response Action Plan) செயல்படுத்தத் தொடங்கியது.
- டெல்லி-தேசியத் தலைநகர் பிராந்தியங்களில் காற்று மாசுபாடானது மிகவும் மோசமான நிலைக்கு சென்று கொண்டுள்ளது.
- டெல்லி-தலைநகர் பிராந்திய பகுதிகளில் காற்று மாசுபாட்டை சமாளிப்பதற்கான உச்சநீதிமன்றத்தால் அதிகாரமளிக்கப்பட்ட EPCA ஆனது நடவடிக்கைகள் எடுக்க கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

## முன் கூட்டிய எச்சரிக்கை அமைப்பு - காற்று மாசுபாடு

- டெல்லி மற்றும் தேசிய தலைநகரப் பகுதியைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள காற்றின் தரத்தை மூன்று நாட்களுக்கு முன்னதாகவே கணித்துவிடக்கூடிய முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பை அரசு தொடங்கியுள்ளது.
- இது குளிர்காலங்களில் ஏற்படும் அதிகபட்ச மாசுவைக் கட்டுப்படுத்துவதற்காக மாசுக்கட்டுப்பாட்டு கொள்கைகளை செம்மைப்படுத்துவதற்கு உதவும்.
- இந்த காற்றுத் தரத்திற்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பானது மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு இருக்கின்றது.
- இந்த அமைப்பு PM2.5 (நுண்ணிய, சுவாசிக்கக்கூடிய துகள்கள்), PM10 (கரடுமுரடான துகள்கள்), நைட்ரஜன் ஆக்சைடுகள் (NOx), ஓசோன் (O3), சல்பர் டை ஆக்சைடு (SO2) மற்றும்

கார்பன் மோனாக்சைடு (CO) ஆகியவற்றின் உமிழ்வுகளை முன்கூட்டியே கணிக்கும்.

- மேலும் இவ்வமைப்பு செயற்கைக்கோள் படங்கள், தூசிப் படலங்கள் மற்றும் இதர காரணிகளைக் கொண்டு தீ பற்றிய தகவல்களையும் அளிக்கும்.
- இந்த அமைப்பு, டெல்லி மற்றும் தேசிய தலைநகரப் பகுதியைச் சுற்றியுள்ள இடங்களில் வாயு மாசுவின் அளவினைக் கணக்கிடுவதற்காக அமெரிக்காவின் தேசிய வளிமண்டல மையத்திடமிருந்தும், பின்லாந்து வானிலை ஆய்வு நிறுவனத்திடமிருந்தும் மாதிரிகளை உபயோகப்படுத்தும்.

## காத்யா சக்தி திட்டம்

- மேற்கு வங்க முதல்வர் உலக உணவு தினத்தை முன்னிட்டு (அக்டோபர் 16-ம் தேதி) காத்யா சக்தி திட்டத்தை ஆரம்பித்தார்.
- இது அம்மாநிலம் முழுவதும் உள்ள 8.6 கோடி மக்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும்.
- சிறப்புச் சலுகைகள் ஜங்கல் மகால் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் டோடோ பழங்குடியினருக்கும் வழங்கப்படும்.

## பாரோசா - வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மையம்.

- பாரோசா எனப் பெயரிடப்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மையத்தை ஹைதராபாத் காவல்துறை ஆணையர் V.C. சாஜ்னார் துவக்கி வைத்தார்.
- இது 24 மணி நேரமும் வன்முறையால் பாதிக்கப்பட்ட மற்றும் பிரச்சினையில் சிக்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உதவி செய்வதற்கான அதிநவீன வசதிகளைக் கொண்ட மையமாகும்.
- இந்த மையம் போக்சோ (POCSO - Protection of Children from Sexual Offences Act) வழக்குகளில் சிக்கியுள்ளவர்களோடு சேர்ந்து இவ்வாறான பெண்களுக்கும் உதவிடும்.

## முசாபர்பூரின் ஷாஹி லிச்சிக்கு புவிசார் குறியீடு

- முசாபர்பூரின் ஷாஹி லிச்சியானது புவிசார் குறியீட்டினைப் பெற்று அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- புகழ்பெற்ற ஷாஹி லிச்சியானது அதன் இனிப்பு, சாறுத்தன்மை, தனித்துவமான சுவை மற்றும் நறுமணத்திற்கு பிரபலமானது. இது பீகாரின் முசாபர்பூர் மற்றும் அதனருகில் உள்ள பகுதிகளில் விளைகிறது.
- இந்த புவிசார் குறியீடானது இதற்காக விண்ணப்பித்த பீகார் லிச்சி வளர்ப்போர் கூட்டமைப்பின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

### *பீகாரில் ஏற்கனவே புவிசார் குறியீடு பெற்ற பொருள்கள்*

- கட்ராணி அரிசி, ஜர்தாலு மாம்பழம், மகாஹி பான் (வெற்றிலைக் கொடி)



## கோவா கடற்சார் கருத்தரங்கு 2018

- கோவா கடற்சார் கருத்தரங்கு 2018 ஆம் ஆண்டின் பதிப்பானது கோவாவின் INS மண்டோவியில் கடற்படை தளபதி அட்மிரல் சுனில் லம்பாவால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்தக் கருத்தரங்கமானது இந்தியப் பெருங்கடல் பிராந்தியங்களில் (Indian Ocean Region-IOR) கடற்சார் பாதுகாப்பை மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த கருத்தரங்கின் கருத்துருவானது: "IOR-ல் வலிமையான கடற்சார் கூட்டுப் பங்காண்மையை கட்டமைத்தல்" என்பதாகும்.

## மேகாலயாவில் நீலப்புரட்சி

- வரும் அக்டோபர் 26 அன்று மேகாலயாவில் "நீலப்புரட்சி: ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் மீன் வள மேலாண்மை" எனும் முதன்மைத் திட்டம் தொடங்கப்படவுள்ளது.
- இந்த திட்டத்தின் துவக்கத்திற்குப் பின்னர் அம்மாநிலமானது மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்ததாக மாறும்.

## மனித-மிருக மோதல் இறப்புகள் மாநிலப் பேரிடராக அறிவிப்பு

- மனித மிருக மோதலினால் ஏற்படும் இறப்புகளை மாநிலப் பேரிடராக அறிவித்த முதல் மாநிலமாக உத்திரப் பிரதேசம் ஆகியுள்ளது.
- சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் நிவாரணத்தை உறுதி செய்வதற்காக இதுபோன்ற விபத்துக்களை மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்தின் வரம்புக்குள் அம்மாநிலம் கொண்டு வந்துள்ளது.
- ஒரு நபர் விலங்குகளால் தாக்கப்பட்டு இறக்கும்போது இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் இழப்பீடாக மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வழங்கப்படும்.

## புகையில்லா முதல் மாநிலம் - கேரளா


- கேரளா மாநிலமானது நாட்டின் முதல் புகையில்லா மாநிலமாக மாறியுள்ளது. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் திரவ பெட்ரோலிய எரிவாயுவானது (LPG) சற்றேறக்குறைய 100% அனைத்து பகுதிகளையும் அடைந்துள்ளது.
- கொச்சி, கோழிக்கோடு, கொல்லம் ஆகிய LPG நிரப்பும் மையங்களுடன், 308 விநியோகிப்பாளர்களால் 49.79 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு LPG விநியோகிக்கப்படுகின்றது.

## காடி பிஹூ திருவிழா

- அசாம் மாநிலமானது தனது 3வது காடி பிஹூ அல்லது கொங்காலி பிஹூ என்று அறியப்படும் பிஹூ திருவிழாவை மாநிலம் முழுவதும் கொண்டாடியது.
- இந்த பிஹூ திருவிழாவின் மற்ற பெயர்களாவன: ரோங்காலி மற்றும் பொஹாகி பிஹூ.
- இந்த திருவிழாக்கள் அசாமிய மாதமான காதி என்பதிலிருந்து இப்பெயர்களை பெறுகின்றன.
- காதி பிஹூ விழாக் கொண்டாட்டத்தின்போது தீய சக்திகளை விரட்டுவதற்காகவும் மற்றும் அறுவடைகளைப் பெருகுவதற்காகவும் வேண்டுதல் செய்து பெண்கள் அகல் விளக்குகளை ஏற்றுகின்றனர்.
- இந்தத் திருவிழாவானது இந்த முறை தானியங்கள் ஏதுமின்றி வெறுமையாக இருப்பதால் இது கொங்காலி (வெறுமை) பிஹூ என்றழைக்கப்படுகிறது.

## பஞ்சாபில் க்ளைபோசாட்டிற்குத் தடை

- பஞ்சாப் மாநில அரசு புற்றுநோயை ஏற்படுத்தும் களைக்கொல்லியான க்ளைபோசாட்டின் விற்பனையைத் தடை செய்திருக்கின்றது.




- இந்த முறைப்படுத்தப்பட்ட களைக்கொல்லியானது தொகுதி - 2A புற்றுநோயை உண்டாக்கும் பொருளாகும். மேலும் இது மனிதனின் டிஎன்ஏவையும் பாதிப்பிற்குள்ளாக்கும் ஆபத்துடையதாகும்.
- ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு இந்த

களைக்கொல்லியின் விற்பனையை முறைப்படுத்தும் நான்காவது மாநிலம் பஞ்சாப் ஆகும்.

## TECH 2018

- TECH 2018 என்ற சர்வதேச மாநாட்டை யுனெஸ்கோவின் மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்துடன் இணைந்து நடத்த ஆந்திரப் பிரதேச அரசானது அறிவித்திருக்கின்றது.
- இது அமைதியான மற்றும் நீடித்த சமூகங்களை உருவாக்குவதற்காக கல்வி கற்கும் கல்வியமைப்பிலிருந்து உருமாற்றும் கல்வியமைப்பு முறைக்கு மாறுவதில் விளையாட்டுகள் மற்றும் எண்முறை (Digital) கற்றலின் பங்கினை எடுத்துக் காட்டிட எண்ணுகின்றது.
- இந்த 3 நாள் நிகழ்வு ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் நகரத்தில் நோவோடெல் என்னுமிடத்தில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 15 முதல் 17 வரை நடைபெற இருக்கின்றது.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள முதலாவது மற்றும் ஒன்றே ஒன்றான “வகை 1” என்ற ஆராய்ச்சி நிறுவனம் யுனெஸ்கோவின் மகாத்மா காந்தி கல்வி நிறுவனம் ஆகும். வகை 1 என்பது கல்வி அமைப்புகளில் சமூக உணர்ச்சிகளுக்கான கல்வியை முக்கியமாக்குவதில் கவனம் செலுத்துகின்றது.

## கிருஷி கும்பம் 2018

- லக்னோவில் மூன்று நாள் நடைபெறும் கிருஷி கும்பம் 2018-ஐ காணொளிக்காட்சி மூலம் பிரதமர் துவங்கி வைத்தார்.
- இதன் நோக்கமானது, விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ரீதியாக செயல்படும் தீர்வுகளை அளிப்பதும் அவர்களின் வருமானத்தை இரண்டு மடங்காக மாற்றுவதுமாகும்.
- கிருஷி கும்பமானது
  - ஹரியானா மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவற்றை பங்காளர் மாநிலங்களாகவும்
  - ஜப்பான் மற்றும் இஸ்ரேலை பங்காளர் நாடுகளாகவும் கொண்டுள்ளது.
- இதன்கீழ் அரசானது, பயிர்க் கதிர்கள் எரிப்பதைத் தடுப்பதற்காக இயந்திரங்களுக்கு 50% முதல் 80% வரை மானியங்களை விவசாயிகளுக்கு அளிக்கிறது.

## ஒடிய மொழி மற்றும் இலக்கியங்களை ஊக்குவிக்க புதிய தளம்

- ஒடிய மொழி மற்றும் இலக்கியங்களை ஊக்குவிப்பதற்காக புதிய தளமான ‘ஒடியா மெய்நிகர் நிறுவனம்’ என்ற தளத்தை ஒடிசாவின் முதல்வர் தொடங்கி வைத்தார்.
- இந்த தளமானது (www.ova.gov.in) மாநில அரசால் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் ஒடியா மென்பொருள் உருவாக்கத்திற்கென கீழ்க்கண்ட நிறுவனங்களுடன் கையொப்பமிடப்பட்ட 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விளைவாக உருவானதாகும். அவையாவன

- சிக்காகோ பல்கலைக்கழகத்தின் நூலகம்
- C - DAC (Centre for Development of Advanced Computing) மற்றும்
- பெங்களூருவின் இணையம் மற்றும் சமுதாயத்திற்கான மையம்

## ஒடிசா பேரிடர் தயார் நிலை தினம் - அக்டோபர் 29

- 1999 ஆம் ஆண்டு மிகப்பெரிய சூறாவளியானது ஒடிசாவைத் தாக்கி அதனால் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்த தினத்தை அனுசரிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 29-ம் தேதி ஒடிசா பேரிடர் தயார் நிலை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினத்தின்போது, ஒடிசா முதல்வர் அடுத்து நிகழப்போகும் பேரிடர்களின் போது முன்கூட்டியே மக்களுக்குத் தகவல்களை அளிப்பதற்காக முன்கூட்டிய எச்சரிக்கைத் தகவல் பரப்பும் முறையையும், மிகுதியாக செய்தியனுப்பும் முறையையும் ஆரம்பித்து வைத்தார்.
- சூறாவளி மற்றும் சுனாமி ஆகிய பேரிடர்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை மக்களுக்கு அறிவித்து எச்சரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது தானியங்கி முறையிலான பொதுச் சேவை அமைப்பு முறை இதுவேயாகும்.

## கோகா தாஹேஜ் ரோ-பாக்ஸ் படகுச் சேவை

- சௌராஷ்டிராவில் உள்ள கோகாவையும் தெற்கு குஜராத்தில் உள்ள தாஹேஜ்ஜையும் இணைக்கும் படகுச் சேவையான ரோ-பாக்ஸ் (RO-PAX/ roll on/off passenger) என்ற படகுச் சேவையை குஜராத் முதல்வர் தொடங்கி வைத்திருக்கின்றார்.
- பாவ்நகரின் கோகாவில் உள்ள RORO (Roll On – Roll Off) முனையத்தில் இருந்து முதலாவது படகுப் பயண அமைப்பு துவக்கி வைக்கப்பட்டது. இது காம்பே வளைகுடா வழியாக செல்லும்.




- இந்த சேவை சூரத்தைச் சேர்ந்த இண்டிகோ கடல்பாதைகள் லிமிடெட் என்ற தனியார்

நிறுவனத்தாலும் குஜராத் கடல்சார் மன்றத்தாலும் இணைந்து அரசு - தனியார் பங்களிப்பு மாதிரியின் மூலம் இயக்கப்படும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஐ.நா அகதி விருது

- தெற்கு சூடானின் மருத்துவர் Dr. ஈவன் அடார் அடஹா, 2018 ஆம் ஆண்டின் UNHCR-ன் (UN High Commissioner for Refugees) நான்சென் அகதிகள் விருதை பெறுகிறார்.
- சூடான் மற்றும் தெற்கு சூடானில் நடைபெற்ற துன்புறுத்தல்கள் மற்றும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதில் கடந்த 20 வருடங்களாக இருந்த ஈடுபாட்டிற்காக இவ்விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்.




- நான்சென் பரிசானது, உலக நாடுகளின் சங்கத்தின் முதல் அகதிகளுக்கான உயர் ஆணையராக பணியாற்றிய நார்வே நாட்டைச் சேர்ந்த துருவ ஆராய்ச்சியாளர் ஃப்ரித்ட்ஜோப் நான்சென் பெயரின் நினைவாக ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்களுக்கு அசாதாரண சேவையளித்தோர்க்கு வழங்கப்படுகிறது.
- கடந்த ஆண்டு நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஜன்னா முஸ்தபாவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

## சரியான வாழ்வாதாரத்திற்கான விருது (Right Livelihood Award)


- 2018 ஆம் ஆண்டிற்கான கௌரவ விருதுகளானது ஊழலுக்கு எதிரான போராளிகளான தெல்மா அல்தனா (கவுதமாலா) மற்றும் இவான் வேலஸ்கியுஸ் (கொலம்பியா) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- இது அதிகாரத்தில் இருப்பவர்களின் ஊழல்களை வெளிப்படுத்தி வழக்கு தொடுத்து அரசுக் கட்டமைப்பின் மீது மக்களுக்கு மறுநம்பிக்கையை ஏற்படுத்திய புதுமையான பணிகளுக்காக வழங்கப்பட்டது.
- மூன்று பணமளிப்பு விருதுகள் பின்வரும் நபர்களுக்கு வழங்கப்பட்டன.
  - சவுதி அரேபியாவைச் சேர்ந்த, அங்கு சிறைப்படுத்தப்பட்டு இருக்கும் மூன்று மனித உரிமை ஆர்வலர்களான அப்துல்லா அல் ஹமீத், முகமது பகத் அல்-கஹ்தனி மற்றும் வாலித் அபு அல் கஹிர்.
  - பர்கினா பசோ என்ற பகுதியைச் சேர்ந்த விவசாயியான யாகூபா சவாகோகோ மற்றும்,
  - ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி டோனி ரினாடோ
- முதல்முறையாக இவ்வகையான விருதுகள் சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### *சரியான வாழ்வாதாரத்திற்கான விருது*

- இந்த விருதானது 1980 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது உலகளாவியப் பிரச்சனைகளுக்கு அடிப்படைத் தீர்வுகளாக தொலைநோக்குப் பார்வைகளையும் உயர்வான தீர்வுகளையும் வழங்கும் தைரியமான மனிதர்களையும், நிறுவனங்களையும் கௌரவப்படுத்தி ஆதரவு தெரிவிக்க ஏற்படுத்தப்பட்டதாகும்.
- இது வருடத்திற்கு ஒருமுறை ஸ்டாக்ஹோமில் வழங்கப்படும். இது பிரபலமாக மாற்று நோபல் பரிசு என அறியப்படுகின்றது.

## 2018 ஆம் ஆண்டின் உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு

- 2018 ஆம் ஆண்டின் உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசானது அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் அலிசன் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த தசுக்கூ ஹோஞ்சோ ஆகிய இரண்டு நோய் எதிர்ப்பியல் வல்லுநர்களுக்கு கூட்டாக வழங்கப்படுகிறது.




- இது சுவீடனின் கரோலின்ஸ்கா மருத்துவ நிறுவனத்தில் நடைபெற்ற நோபல் பொதுச் சபைக் கூட்டத்தின்போது அறிவிக்கப்பட்டது.
- நோய் எதிர்ப்புச் சக்தி தடை உடைப்பு சிகிச்சை முறையை கண்டறிந்ததற்காக இவர்கள் நோபல் பரிசினை வென்றுள்ளனர்.



- நோயாளியின் சொந்த எதிர்ப்புத் திறனைக் கொண்டு புற்றுநோயை விரைவாக குணப்படுத்துவதை இந்த இரு அறிவியலாளர்களும் கண்டறிந்துள்ளனர்.
- புற்றுநோய் செல்களை நேரடியாகத் தாக்கி அழிக்கும் பழங்கால சிகிச்சை முறையிலிருந்து இது வேறுபடுகிறது.

## சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார வல்லுநர்

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF - International Monetary Fund ) தலைமைப் பொருளாதார வல்லுநராக இந்தியாவில் பிறந்த கீதா கோபிநாத் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார வல்லுநராக பதவி

வகிக்கும் மவுரீஸ் ஆப்ஸ்பீல்ட் 2018 ஆம் ஆண்டு டிசம்பரில் ஓய்வு பெற்ற பின்பு, அவருக்கு அடுத்ததாக கீதா கோபிநாத் பொறுப்பேற்க உள்ளார்.



- சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார வல்லுநராக பதவி வகித்த ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜனுக்குப் பின், 2வது இந்தியராக அப்பதவிக்கு கீதா கோபிநாத் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் கேரள முதலமைச்சரின் கௌரவ பொருளாதார ஆலோசகராக பணியாற்றுகிறார். மேலும் ஜி-20 நாடுகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு இந்தியாவின் நிதி அமைச்சகத்திற்கு ஆலோசனை வழங்கும் குழுவில் கீதா கோபிநாத் பணியாற்றினார்.
- 2014 ஆம் ஆண்டில் 45 வயதுக்குட்பட்ட 25 நபர்கள் அடங்கிய பொருளாதார வல்லுநருக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பட்டியலில் கீதா கோபிநாத் இடம் பிடித்தார். மேலும் இவர் 2011 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதார மன்றத்தினால் ‘உலகத்தின் இளம் தலைவராக’ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## சர்வதேச கோல்கீப்பர்கள் விருதுகள்

- தான் பிறந்தபோது இருந்த உலகத்தை விட தற்பொழுது மிகச்சிறந்த உலகத்தை அமைத்ததற்காக 3 இளம் வயதுடையவர்களுக்கு சர்வதேச கோல்கீப்பர்கள் விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 18 வயதுடைய அமிகா ஜார்ஜ் என்ற இளம்பெண் “வறுமையின் காலம்” தொடர்பான பிரச்சாரத்திற்காக “பிரச்சார விருதை” வென்றுள்ளார்.
- ஈராக் நாட்டைச் சேர்ந்த 24 வயதுடைய நடியா முரட் என்ற பெண் “மாற்றத்தை உருவாக்குபவருக்கான” விருதை வென்றுள்ளார். மேலும் நோபல் அமைதிப் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலிலும் இவர் இடம் பெற்றுள்ளார்.



- மனிதக் கடத்தலில் இருந்து மீண்டு வாழ்பவர்களின் கண்ணியத்திற்கான ஐ.நா. நல்லிணக்கத் தூதுவராக நடியா செயல்படுகிறார்.
- கென்யாவைச் சேர்ந்த 28 வயதுடைய டயஸ்முஸ் கிசிலு என்ற இளைஞர் "முன்னேற்றத்திற்கான" விருதை வென்றுள்ளார்.
- ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மீதான சர்வதேச நடவடிக்கைகள் மற்றும் அடைந்துள்ள முன்னேற்றத்தை கண்காணித்து உந்தப்படுத்துவதற்காக பில் மற்றும் மெலிந்தா கேட்ஸ் பவுண்டேஷனால் 2017 ஆம் ஆண்டில் "கோல்கீப்பர்கள்" தொடங்கப்பட்டது.
- கோல் கீப்பர்களுக்கான சர்வதேச கோல் விருதுகள் பொதுவாக "சமூக முன்னேற்றத்திற்கான ஆஸ்கார்" என்று அழைக்கப்படுகிறது.

## சாந்தி ஸ்வரூப் பட்னாகர் பரிசு

- சமீபத்தில் 2018 ஆம் ஆண்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான சாந்தி ஸ்வரூப் பட்னாகர் பரிசை அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம் (CSIR - Council of Scientific and Industrial Research) அறிவித்துள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த 45 வயதுக்குட்பட்ட விஞ்ஞானிகளுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் அறிவியல் துறையில் சிறப்பாகப் பணியாற்றிய விஞ்ஞானிகளுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

***உயிரியல் அறிவியல்***

- டாக்டர் தாமஸ் புக்கடயில் - இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் , புனே.

- கணேஷ் நாகராஜ் - இந்திய அறிவியல் நிறுவனம் , பெங்களூரு.

***வேதியியல் அறிவியல்***

- ராகுல் பானர்ஜி - இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கொல்கத்தா.
- சுவாதின் குமார் மண்டல் - இந்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கொல்கத்தா.

***புவி, வளிமண்டலம், கடல் மற்றும் கிரக அறிவியல்***

- டாக்டர் மதினேனி வெங்கட் ரத்னம் - தேசிய வளிமண்டல ஆராய்ச்சி ஆய்வகம் , திருப்பதி.
- பார்த்தசாரதி சக்கரவர்த்தி - அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம், தேசிய கடலியல் நிறுவனம் , கோவா.

***பொறியியல் அறிவியல்***

- அமீத் குமார் - இந்திய தொழில்நுட்ப நிறுவனம் , பம்பாய்
- அஸ்வின் அனில் குமாஸ்தே - இந்திய தொழில்நுட்ப நிறுவனம் , பம்பாய்

***கணித அறிவியல்***

- அமீத் குமார் - இந்திய தொழில்நுட்ப நிறுவனம் , தில்லி
- நிதின் சக்சேனா - இந்திய தொழில்நுட்ப நிறுவனம் , கான்பூர்

***மருத்துவ அறிவியல்***

- டாக்டர் கணேசன் வெங்கட சுப்பிரமணியன் – மனநிலை சார்ந்த இந்திய ஆரோக்கியம் மற்றும் நரம்பியல் நிறுவனம், பெங்களூரு.

***இயற்பியல் அறிவியல்***

- டாக்டர் அதீதி சென் டி - ஹரிஷ் சந்திரா ஆராய்ச்சி நிறுவனம், அலகாபாத்
- டாக்டர் அம்பாரிஷ் கோஷ், இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு

## தேசிய சுற்றுலா விருதுகள் 2016 - 2017

- மத்திய சுற்றுலாத்துறை அமைச்சரான K.J. அல்போன்ஸால் 2016-17 ஆம் ஆண்டிற்கான தேசிய சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டன.
- மேலும் சுற்றுலாத்துறை அமைச்சர் “வியத்தகு இந்தியா அலைபேசி செயலி” மற்றும் “வியத்தகு இந்தியா சுற்றுலா உதவியாளர் நற்சான்றிதழ் திட்டம்” ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.
- இந்த செயலியானது டெக் மகேந்திராவால் வடிவமைக்கப்பட்டது. மேலும் நிகழ்நேர சான்றிதழ் கற்றல் தளமானது “விப்ரோ” நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டது.

***சிறந்த மாநிலம்/யூனியன் பிரதேசங்கள் - சுற்றுலாத் துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சி (இந்தியாவிலிருந்து)***

- முதல் பரிசு - ஆந்திரப் பிரதேசம்
- இரண்டாவது பரிசு - கேரளா
- மூன்றாவது பரிசு - இராஜஸ்தான் மற்றும் கோவா (இரு மாநிலங்களும் இணைந்து)

*சிறந்த மாநிலம்/யூனியன் பிரதேசங்கள் - சுற்றுலாத் துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சி (ஜம்மு காஷ்மீர் மற்றும் சிக்கிம்)*

- ❖ சிக்கிம்

*சிறந்த பாரம்பரிய நகரம்*

- ❖ அகமதாபாத் மற்றும் மாண்டு (இரு நகரங்களும் இணைந்து)

*மிகவும் பொறுப்பு வாய்ந்த சுற்றுலாத் திட்டம் / முன் முயற்சி*

- ❖ வயநாடு, கேரளா

## கோவிந்தப்பா வெங்கடசாமியின் 100வது பிறந்த ஆண்டு

- ❖ கூகுள் டூடிள் ஆனது அக்டோபர் 1 அன்று புகழ்பெற்ற கண் மருத்துவரான கோவிந்தப்பா வெங்கடசாமியின் 100வது பிறந்த தினத்தன்று அவருக்கு மரியாதை செலுத்தியது.
- ❖ இவர் உலகில் கண் மருத்துவச் சேவையை வழங்கும் மிகப்பெரிய நிறுவனமான அரவிந்த் கண் மருத்துவமனையின் நிறுவனர் மற்றும் முன்னாள் தலைவர் ஆவார்.




- ❖ இவர் 1918 ஆம் ஆண்டு அக்டோபர் 1 அன்று தமிழ்நாட்டின் வடமலபுரத்தில் பிறந்தார். வெங்கடசாமி கண்பார்வையற்றோருக்கு சிகிச்சை அளிப்பதில் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.
- ❖ நாட்டிற்கு சிறப்பான சேவையாற்றியதற்காக 1973 ஆம் ஆண்டு வெங்கடசாமிக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

## நால்சாவின் நிர்வாகத் தலைவர்

- ❖ இந்திய தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (National Legal Services Authority of India - NALSA) நிர்வாகத் தலைவராக உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான மதன் பீமாராவ் லோகுரை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.


- சட்ட சேவைகள் ஆணையச் சட்டம், 1987-ன்படி NALSA அமைக்கப்பட்டது.
- இந்தியாவில் உள்ள எந்தவொரு நீதிமன்றங்களிலும் தீர்ப்பாயங்களிலும் வழக்குரைஞர்களின் சேவையைப் பெற முடியாத ஏழை மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு சிவில் மற்றும் குற்றவியல் நடைமுறைகளில் இது இலவச சட்ட உதவிகளை வழங்குகிறது.

## புதிய துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்

- அமைச்சரவையின் நியமனக் குழுவானது (ACC -Appointments Committee of the Cabinet) புலனாய்வுக் குழுவின் இணைத் தலைவரான RN ரவியை துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக (உள்நாட்டு விவகாரங்கள்) மறு நியமனம் செய்துள்ளது.
- இவர் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான (NSA – Natioanl Security Advisor) அஜித் தோவல் என்பவருக்கு 3வது துணை ஆலோசகராக, முன்னாள் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் (RAW – Research and Analysis Wing) தலைவரான ராஜிந்தர் கண்ணா மற்றும் வெளியுறவுத் தூதுவராக உள்ள பங்கஜ் சரண் ஆகியோரையடுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது இந்தியாவில் கீழ்க்காணும் மூன்று அடுக்கு உள்நாட்டுப் பாதுகாப்பு கட்டமைப்பு உள்ளது.
    - பிரதமர் தலைமையிலான தேசியப் பாதுகாப்பு ஆணையம் (NSC - National Security Council)
    - அமைச்சரவைச் செயலாளர் தலைமையிலான மூலோபாயக் கொள்கை குழு (SPG - Strategic Policy Group)
    - தேசியப் பாதுகாப்பு ஆலோசனை வாரியம் (NSAB - National Security Advisory Board)

## இயற்பியலுக்கான நோபல் பரிசு 2018


- ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆப் சயின்ஸ் ஆனது கீழ்க்காணும் 3 விஞ்ஞானிகளை இயற்பியலுக்கான நோபல் பரிசிற்காக தேர்ந்தெடுத்துள்ளது.
    - ஆர்தர் ஆஷ்கின் (அமெரிக்கா)
    - ஜெரார்டு மௌரோ (பிரான்ஸ்)
    - டோன்னா ஸ்டிரிக்லேண்ட் (கனடா)
- இவர்கள் லேசர் இயற்பியல் துறையில் சாதனை படைத்துள்ள கண்டுபிடிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.




- இதுவரையில் நோபல் பரிசைப் பெற்ற மிக வயதான அறிவியலாளராக 96 வயதான ஆர்தர் ஆஷ்கின் உள்ளார்.
- இவர் ஒளியியல் இடுக்கி மற்றும் உயிரியலில் அவற்றின் பயன்பாடு ஆகியவற்றிற்காக இப்பரிசைப் பெறுகிறார்.
- ஜெரார்டு மௌரோ மற்றும் டோன்னா ஸ்டிரிக்லேண்ட் ஆகிய இருவரும் தங்களது புதுமையான தொழில்நுட்பமான குற்றொலி துடிப்புப் பெருக்கத்தின் கண்டுபிடிப்பிற்காக (chirped pulse amplification- CPA) கூட்டாக பரிசு பெறுகின்றனர்.
- 1903ல் மேரி கியூரி மற்றும் 1963ல் மரியா கோபர்பெர்ட்மேயர் ஆகியோருக்கு அடுத்து இயற்பியலில் நோபல் பரிசு பெறும் 3வது பெண்மணியாக டோன்னா ஸ்டிரிக்லேண்ட் ஆகியுள்ளார்.

## வேதியியலுக்கான நோபல் பரிசு 2018

- ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆப் சயின்ஸ் ஆனது கீழ்க்காணும் 3 விஞ்ஞானிகளை வேதியியலுக்கான நோபல் பரிசிற்காக தேர்ந்தெடுத்துள்ளது.
  - அமெரிக்க அறிவியலாளர்களான பிரான்செஸ் அர்னால்டு மற்றும் ஜார்ஜ் ஸ்மித்
  - பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளரான கிரிகோரி வின்டர்.




- புதிய மருந்துகள் மற்றும் உயிரி எரிபொருள்களுக்கு வழிவகுக்கக்கூடிய நொதிகள் மற்றும் எதிர்மங்களை உருவாக்குதலில் பரிமாண வளர்ச்சியின் சக்தியை மெருகேற்றியதற்காக இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இந்த ஆண்டின் நோபல் பரிசுகளில் மூன்றாவது இடத்தை வேதியியலானது பிடித்துள்ளது.
- 117 ஆண்டு கால வரலாற்றில் வேதியியல் நோபல் பரிசை வென்ற 5 வது பெண்மணி பிரான்செஸ் அர்னால்டு ஆவார்.
- புரதங்கள் உருவாக்குவதற்கு புதிய வழிகளை ஜார்ஜ் ஸ்மித்தும், வளரும் எதிர்மங்களை உருவாக்க புதிய வழிகளை கிரிகோரி வின்டரும் கண்டறிந்துள்ளனர்.

## ஐ.நா ஆயுதக் குறைப்பு மாநாடு - பங்கஜ் ஷர்மா

- ஜெனீவாவின் ஆயுதக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டிற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் தூதராகவும் பங்கஜ் ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் அமந்தீப் கில்-க்கு பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### *ஆயுதக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு*

- ஆயுதக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடானது (CD - Conference on Disarmament)

முறைப்படியான ஐக்கிய நாடுகளின் (UN - United Nations) அமைப்பு அல்ல.


❖ இது ஐ.நா. பொதுச் செயலாளரின் தனிப்பட்ட பிரதிநிதி மூலம் ஐ.நா. சபையுடன் இணைக்கப்பட்டது.

❖ பலதரப்பு ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தையை நடத்த இந்த பலதரப்பு மன்றானது 1979-ல் சர்வதேச சமுதாயத்தால் உருவாக்கப்பட்டது.

❖ ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள பலாஸ் டேஸ் நேஷன்ஸ்-ஐ இது தலைமையகமாகக் கொண்டுள்ளது.

## 2018 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு

❖ நார்வேவைச் சேர்ந்த நோபல் குழுவானது 2018 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசிற்கு டாக்டர் டெனிஸ் முகாவேஜ் (63) மற்றும் நாடியா முரட் ஆகியோரை கூட்டாகத் தேர்ந்தெடுத்துள்ளது.



WHO ARE THE WINNERS?

FROM SLAVE OF JIHADIS TO NOBEL WINNER

NADIA MURAD survived the worst cruelties ever inflicted on her people, the Yazidis of Iraq, before becoming a global champion of their cause and winning the Nobel Peace Prize.

■ The 25-year-old Murad once lived a quiet life in her village near the mountainous northern Iraq, close to the border with Syria.

■ But, in 2014, pick-up trucks bearing the black flag of the IS jihadists swept into her village, Kocho. IS fighters set about killing the men, taking children captive to train them as fighters and condemning thousands of women to a life of labour and sexual slavery.

■ After being captured by IS fighters, she was held captive and repeatedly gangraped, tortured and beaten.

■ Murad escaped and reached Iraqi Kurdistan. There, she learnt that six of her brothers and her mother had been killed.

■ She has since dedicated herself to what she calls 'our peoples' fight'.

BRAVE HEALER OF HORRIFIC WOUNDS

DENIS MUKWEGE is a crusading gynaecologist who has spent over two decades treating injuries inflicted on women in DRC, whose work was the subject of a 2015 film: *The Man Who Mends Women*.

■ In Democratic Republic of Congo, they call him 'Doctor Miracle' for his surgical skill and dedication in helping women overcome the injuries and trauma of sexual abuse and rape.

■ A father to five children, the tireless 63-year-old is an outspoken critic of the abuse of women in war, and has repeatedly accused the world of failing to act.

■ He had been repeatedly nominated for his work with gangrape victims.

■ Mukwege has called on the world to take a tougher line on rape as a weapon of war.

■ He has set up the Panzi hospital in Bukavu, which serves as a clinic for gynaecological and obstetric care. There, he lives under the permanent protection of UN peacekeepers.

❖ போர் மற்றும் ஆயுதம் ஏந்தி தாக்குதல் நடத்துதல் ஆகியவற்றில் பாலியல் வன்முறையை கருவியாகப் பயன்படுத்துவதை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டதற்காக இவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

❖ டாக்டர் டெனிஸ் முகாவேஜ் காங்கோவைச் சேர்ந்த மகப்பேறு அறுவை சிகிச்சை மருத்துவர் ஆவார்.

❖ ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான காங்கோ மக்களாட்சிக் குடியரசில் போர் நடைபெற்ற காலங்களில் பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து உதவி செய்ததற்காக இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

❖ ஐ.எஸ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஆயிரம் யாசிதி பெண்களில் நாடியா முரட்டும் ஒருவர். இவர் ஐ.எஸ் தீவிரவாதிகளிடமிருந்து தப்பித்து, ஐ.எஸ் தீவிரவாதிகளிடம் இவரும் யாசிதி பெண்களும் அடைந்த துன்பத்தை பொது வெளியில் பேசினார்.

❖ முரட், 2016 ஆம் ஆண்டில் மனிதக் கடத்தல்களிலிருந்து மீண்டவர்களின் கண்ணியத்திற்கான ஐ.நா. அமைப்பின் முதலாவது நல்லிணக்கத் தூதராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

## ஏகலபியா விருது - 2018

- 2018ம் ஆண்டிற்கான சிறப்புமிக்க 26வது ஏகலபியா விருதினை ஒடிசாவைச் சேர்ந்த ஹாக்கி வீரரான லீலிமா மின்ஸ் பெற உள்ளார்.
- இந்திய மெட்டல்கள் மற்றும் ஃபெரோ அலாய்ஸ் நிறுவனத்தின் அறக்கட்டளைப் பிரிவால் (IMPaCT) நிறுவப்பட்ட இவ்விருதானது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.



- இவர் நவம்பர் 5, 2017-ல் ஜப்பானில் நடைபெற்ற ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் 13 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியின் ஆட்டகாரராகவும் இருந்துள்ளார்.

## இந்தியாவின் தலைமைப் புள்ளியியலாளர்

- பிரவீன் ஸ்ரீவஸ்தவாவை இந்தியாவின் தலைமைப் புள்ளியியலாளராக (Chief Statistician of India -CSI) அரசு நியமித்துள்ளது.
- ஸ்ரீ வஸ்தவா இந்தியாவின் மூன்றாவது தலைமைப் புள்ளியிலாளராவார்.
- இவர் ரங்கராஜன் குழு என பிரபலமாக அறியப்பட்ட இந்திய புள்ளியியல் ஆணையத்தின் செயலாளராக இருந்தார்.
- ரங்கராஜன் குழுவே நவீன புள்ளிவிவர முறையின் அடித்தளத்தை அமைத்தது.

## அன்னா பொலிட்கோவ்ஸ்கயா விருது

- அன்னா பொலிட்கோவ்ஸ்கயா விருதின் போரில் அனைத்து பெண்களையும் அடைதல் (RAW in war) என்ற பிரிவில் பினலெஷ்மி நெப்ராம் வென்றுள்ளார்.
- இவர் வடகிழக்கு இந்தியாவில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளிக்கும் உரிமை ஆர்வலர் ஆவார்.
- இந்த விருதினை பெலராஸைச் சேர்ந்த புலனாய்வு பத்திரிக்கையாளர் மற்றும்

எழுத்தாளரான ஸ்வெட்லானா அலெக்ஸிவிச் உடன் பினலஷ்மி பகிர்ந்து கொள்கிறார்.



- இவ்விருதானது அநீதி, வன்முறை மற்றும் தீவிரவாதம் ஆகியவற்றைக் குறித்து தைரியமாக பேசும் மற்றும் எதிர்க்கும் பெண்களை அங்கீகரிக்கிறது.
- இந்த விருதானது ஊழல் மற்றும் உரிமை மீறல்களை குறிப்பாக செசன்யாவில் வெளிப்படுத்திய ரஷ்ய புலனாய்வு செய்தியாளரான பொலிட்கோவ்ஸ்கயா கொல்லப்பட்ட 12வது ஆண்டு நிறைவையொட்டி வழங்கப்படுகிறது.

## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு - 2018

- ராயல் ஸ்வீடிஷ் அகாடெமியானது ஆல்ஃபிரெட் நோபலின் நினைவாக ஸ்வீரிகிஸ் ரிக்ஸ்பேங்க் வழங்கும் 2018ஆம் ஆண்டிற்கான பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசை வில்லியம் D. நார்த்ஹவுஸ் மற்றும் பால் M. ரோமெருக்கு வழங்க முடிவு செய்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சியுடன் காலநிலை மற்றும் புத்தாக்கங்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்காக இவ்விருதுக்கு இவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



- டாக்டர் நார்த்ஹவுஸ் ஒரு ஒருங்கிணைந்த மதிப்பீட்டு மாதிரியை உருவாக்கிய முதல் மனிதர் ஆவார். அதாவது, பொருளாதாரம் மற்றும் காலநிலை ஆகியவற்றிற்கிடையில் உலகளாவிய விளைவை விளக்கும் அளவுகோல் மாதிரியை உருவாக்குதல் என்பதாகும்.
- டாக்டர் ரோமெர் உள்ளார்ந்த வளர்ச்சி கோட்பாட்டின் அடித்தளத்தை அமைத்துள்ளார்.
- இந்த கோட்பாடானது, மற்ற பொருட்களுக்கு கருத்துகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்றும் சந்தையில் செழிப்படைய எந்தெந்த குறிப்பிட்ட நிபந்தனைகள் தேவை எனவும் விளக்குகின்ற கருத்தியல் மற்றும் நடைமுறை செயல்பாடு ஆகிய இரண்டையும் உடையதாகும்.
- டாக்டர் நார்த்ஹவுஸ் மற்றும் டாக்டர் ரோமர் ஆகிய இருவருமே அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

## ISSA நல்ல நடைமுறை விருது

- அரசு தொழிலாளர்கள் காப்பீட்டுக் கழகமானது தொழிலாளர்களின் காப்பீட்டு விரிவாக்கத்திற்கான நிர்வாக தீர்விற்காக ISSA-இன் நல்ல நடைமுறைகளுக்கான விருதினை வென்றுள்ளது.
- இந்த விருதானது மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசிய மற்றும் பசுபிக் பகுதிக்கான பிராந்திய சமூகப் பாதுகாப்பு மன்றத்தில் வழங்கப்பட்டது.
- இந்த விருதானது ESIC (Employees' State Insurance Corporation) ஆல் எடுக்கப்பட்ட கீழ்க்காணும் நடவடிக்கைகளை அங்கீகரிக்கிறது.
    - காப்பீட்டு விரிவாக்கம் - (Scheme for Promoting Registration of Employers and Employees-SPREE) தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் பதிவினை மேம்படுத்துவதற்கான திட்டம்
    - புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதியில் 24 மாதங்களுக்கு பங்களிப்பு வீதங்கள் குறைப்பு மற்றும்
    - ESI சட்டத்தின் கீழ் காப்பீட்டுக்கான ஊதிய வரம்பை உயர்த்துதல்.

## சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருது - விக்கு விநாயக ராம்

- புகழ்பெற்ற தாள இசைக்கலைஞரான விக்கு விநாயக ராமுக்கு தி மியூசிக் அகாடமியால் சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- தி மியூசிக் அகாடமியிலிருந்து சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறும் மூன்றாவது இசைக்கலைஞர் திரு. விநாயகராம் ஆவார்.




## இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குநர்கள்

- ❖ மத்திய அரசாங்கமானது இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய மன்றத்திற்கு சச்சின் சத்தூர்வேதியை நச்சிகத் மோரின் இடத்திற்குப் பதிலாக நியமித்துள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் மன்றத்திற்கு ரேவதி அய்யரும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதியிலிருந்து 4 வருடங்களுக்கு இவர்கள் இருவரும் இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய மன்றத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ இவர்களது நியமனங்களுக்குப் பிறகு தற்பொழுது இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய மன்றத்தில் ஆளுநர் மற்றும் நான்கு துணை ஆளுநர்கள் உள்பட 18 உறுப்பினர்கள் உள்ளனர்.



## சொலிசிட்டர் ஜெனரல் - துஷர் மேத்தா

- ❖ மத்திய அரசாங்கமானது கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக பணியாற்றிய துஷர் மேத்தாவை இந்திய சொலிசிட்டர் ஜெனரலாக நியமித்துள்ளது.

- இவர் 2020 ஆம் ஆண்டு ஜூன் 30 வரை இப்பதவி வகிப்பார்.



- சொலிசிட்டர் ஜெனரலானது அட்டர்னி ஜெனரலுக்கு அடுத்து மிக முக்கியமான சட்ட அதிகாரிப் பதவியாகும்.
- மூத்த வழக்குரைஞர் இரஞ்சித் குமார் இப்பதவியிலிருந்து விலகியதையடுத்து 2017ஆம் ஆண்டு அக்டோபர் 20 முதல் இப்பதவி காலியாக இருந்தது.

## இந்தியாவின் முதல் 'மிஸ் டிரான்ஸ் குயின்'

- சத்தீஸ்கரைச் சேர்ந்த வீனா சென்ட்ரே இந்தியாவின் முதல் 'மிஸ் டிரான்ஸ் குயின்' ஆக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மும்பையில் நடைபெற்ற தேசிய அளவிலான அழகிப்போட்டியில் தமிழ்நாட்டின் நமிதா அம்முவை வீழ்த்தி அவர் இப்பட்டத்தை வென்றார்.
- சென்ட்ரோ ராய்ப்பூரின் மந்திர் ஹசவுத் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

## FAO-ன் எதிர்கால கொள்கை விருது 2018

- வடகிழக்கு மாநிலமான சிக்கிமானது உலகின் 100% இயற்கை வேளாண் மாநிலமாக திகழ்வதால் ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO - Food and Agriculture Organization) எதிர்கால கொள்கை விருது 2018-ஐ வென்றுள்ளது.
- சிக்கிமானது 25 நாடுகளிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட 51 கொள்கைகளை தோற்கடித்து 'சிறந்த கொள்கைகளுக்கான ஆஸ்கார்' என அழைக்கப்படும் எதிர்கால கொள்கை விருது 2018-ன் தங்கப் பரிசை வென்றுள்ளது.
- 2015-ல் சிக்கிம் ஆனது உலகின் முதல் இயற்கை வேளாண் மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- இந்த வருட விருதானது கீழ்க்காண்பனவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
    - ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO)

- உலக எதிர்கால சபை (WFC - World Future Council) மற்றும்
- ஆர்கானிக் இன்டர்நேஷனல் – IFOAM

## இலக்கியத்தில் புதிய அகாடமி பரிசு

- கௌதலோப் என்ற நாட்டைச் சேர்ந்த பாரிஸ் காண்டே (81) என்பவருக்கு இலக்கியத்திற்கான புதிய அகாடமி பரிசு வழங்கப்பட்டது.
- தேசிரடா, சேகு மற்றும் கிராசிங் தி மாங்குரோவ் உட்பட 20 நாவல்களை காண்டே எழுதியுள்ளார்.
- இவருடைய எழுத்துக்கள் பெரும்பாலும் காலனித்துவம் மற்றும் அதற்கு பின்னான அழிவுத்தடங்களைப் பற்றி விவரிக்கின்றன.
- இலக்கியத்திற்கான புதிய அகாடமிப் பரிசானது புதிய அகாடமியால் (New Academy) உருவாக்கப்பட்டது. இது இலக்கியத்திற்கான நோபல் பரிசிற்கு மாற்றாக உருவாக்கப்பட்ட விருதாகும்.

## வாழ்நாள் சாதனையாளர் 2018க்கான ஹிருதயநாத் விருது

- இந்த வருடத்தின் வாழ்நாள் சாதனையாளருக்கான ஹிருதயநாத் விருதுக்காக "கய்யாம்" என பிரபலமாக அறியப்படும் தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் முகமது ஜஹூர் ஹஷ்மியின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த விருது வழங்கும் விழாவானது, இவ்விருதின் பெயர்க் காரணமான ஹிருதய்நாத் மங்கேஸ்வரின் 81வது பிறந்தநாளுடன் ஒத்திசைகிறது.
- இந்த விருதானது 2011ம் ஆண்டில் இசையமைப்பாளர் மற்றும் பாடகரான ஹிருதயநாத் மங்கேஸ்வரை கௌரவப்படுத்தும் வகையில் மும்பையைச் சேர்ந்த சமூக கலாச்சார அமைப்பான ஹிருதயேஷ் ஆர்ட் என்ற அமைப்பால் உருவாக்கப்பட்டது.

## மேன்புக்கர் பரிசு - 2018

- அன்னா பர்ன்ஸ் என்பவர் தனது மில்க்மேன் என்ற புதினத்திற்காக புனைவுக் கதைகளுக்கான பெருமைமிகு மேன்புக்கர் பரிசினை வென்றுள்ளார்.
- உலகம் முழுவதும் உள்ள ஆங்கில மொழி நூலாசிரியர்களுக்கான இந்தப் பரிசினை வடக்கு அயர்லாந்தைச் சேர்ந்த ஆசிரியராக முதலில் வெல்வது இவரேயாவார்.




- மற்ற வெற்றியாளர்கள்:
    - ரசேல் குஷ்னர் - மார்ஸ் ரூம்
    - ராபின் ராபர்ட்சன் - லாங் டேக்
    - டெய்ஸி ஜான்சன் - கிரீக் டிராஜடி
    - ரிச்சர்ட் பவர் - ஓவர் ஸ்டோரி
    - எசி எதுகியான் - வாஷிங்டன் பிளாக்

***மேன் புக்கர் பரிசு***

- மேன் புக்கர் பரிசு (The Man Booker Prize) என்பது ஆங்கில மொழியில் எழுதப்படும் சிறந்த முழுநீள புதினங்களுக்கு வழங்கப்படும் பரிசாகும். இப்பரிசு 1969 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இப்பரிசினைப் பெறும் நாவல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, இங்கிலாந்து நாட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனை ஆகும்.
- இதைப்போன்று, மேன் புக்கர் சர்வதேசப் பரிசு (The Man Booker International Prize) 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பரிசு இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்தது. எந்தவொரு மொழியிலும் முதலில் எழுதப்பட்டு, ஆங்கிலத்தில் பரவலாக கிடைக்கப்பெறும் படைப்புகள் இப்பரிசுக்கு தகுதி பெறும். புதினங்களும், சிறுகதைத் தொகுப்புகளும் இப்பரிசுக்கு தகுதி உடையவையாகும்.
- இந்த விருது துவங்கப்பட்ட காலத்தில் காமன்வெல்த் நாடுகள், அயர்லாந்து மற்றும் தென்னாப்பிரிக்க (பின்னர் ஜிம்பாப்வே) குடிமக்கள் பரிசு பெற தகுதிப் பெற்றிருந்தார்கள்.
- 2016 ஆம் ஆண்டில் இந்த விருது மறுசீரமைக்கப்பட்டு, தற்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு புத்தகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- இந்த விருதோடு வழங்கப்படும் ஐம்பது ஆயிரம் பிரிட்டன் பவுண்டுகள் (£50,000), ஆசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் இடையில் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே பால் பேட்டி மற்றும் ஜார்ஜ் சான்டர்ஸ்

ஆகிய அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இப்பரிசினை வென்றனர்.

## விஸ்வ கொங்கணி புத்தக விருது

- 2018 ஆம் ஆண்டிற்கான பெருமைமிகு "விமலா வி பாய் விஷ்வா" கொங்கணி மொழி சிறந்த புத்தக விருதை, கொங்கணி மொழியில் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுப்பின் 'பீக் அனி பீகத்' என்ற புத்தகம் வென்றுள்ளது.
- இந்தப் புத்தகம் மிகப் பிரபலமான எழுத்தாளர், பத்திரிக்கையாளர் மற்றும் விமர்சகரான H.M. பேர்னல் என்பவரால் எழுதப்பட்டது.
- H.M. பேர்னல் என்பது ஹென்றி எம் மென்டோன்கா என்பவரின் புனைப் பெயராகும்.
- சிறந்த கவிதைக்கான விஸ்வ கொங்கணி விருனை கொச்சியைச் சேர்ந்த கொங்கணிக் கவிஞரான சரச் சந்திர ஷெனாய் தனது 'இடம் நா மாமா' என்ற புத்தகத்திற்காக வென்றார்.
- விஸ்வ கொங்கணி வாழ்நாள் சாதனையாளர் விருதினை உத்தர கன்னடாவைச் சேர்ந்த விஸ்வநாத் எம் சேத் வென்றிருக்கின்றார்.

## கார்னட் பரிசு - பியூஷ் கோயல்

- பென்சில்வேனியாவின் வடிவமைப்பு பயிலகப் பல்கலைக்கழகமானது தனது ஆற்றல் கொள்கையின் மிக உயர்ந்த பரிசை இந்திய நிலக்கரி மற்றும் இரயில்வே அமைச்சரான பியூஷ் கோஷலுக்கு வழங்கியுள்ளது.
- பல்கலைக்கழகத்தின் ஆற்றலுக்கான கிலெய்ன்மேன் மையமானது 4-வது வருடாந்திர கார்னாட் பரிசை கோயலுக்கு வழங்கவுள்ளது.
- இவர் இந்தியாவின் தொலை தூரங்களில் உள்ள 18000க்கும் மேற்பட்ட கிராமங்களில் மின் மயமாக்குதலுக்கும் ஆற்றல் வேறுபாடுகளை களைவதற்கும் மேற்கொண்ட விரைவான முயற்சிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
- இந்த கார்னாட் பரிசானது பிரான்சைச் சேர்ந்த அறிவியலாளரான சாடி கார்னாட்டின் நினைவாக இப்பெயரிடப்பட்டுள்ளது.
- கார்னாட் பரிசானது ஆற்றல் கொள்கையில் முன்னனிப் புரட்சிகளை அடுத்த கட்ட முன்னேற்றத்திற்கும் செழிப்பிற்கும் கொண்டு செல்ல உதவுவோரை கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2018 புகுவோகா கலை மற்றும் பண்பாட்டு விருது

- சத்தீஸ்கரின் நாட்டுப்புற கலைஞரான டாக்டர் டீஜன் பாய், ஜப்பானின் உயர் கௌரவ விருதான 2018 புகுவோகா கலை மற்றும் பண்பாட்டு விருதினைப் பெற்றுள்ளார்.
- பாண்டாவானி என்ற தனது கலைக்காக வெளிநாட்டிலிருந்து அதிகாரப்பூர்வமாக இவர் அங்கீகரிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

- பாண்டவாணி என்பது பண்டைய இந்திய காவியமான மகாபாரதத்தை விவரிக்கும் பாடல் ஆகும்.
- 2003 ஆம் ஆண்டில் டீஜன் அவரது கலைக்காக பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.

## உலக எஃகு மன்றம் - சாஜன் ஜிண்டால்

- உலக எஃகு மன்றத்தின் (World Steel Association) பொருளாளராக சாஜன் ஜிண்டால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஜேஎஸ்டபிள்யூ எஃகு என்ற நிறுவனத்தை நிறுவியவர் சாஜன் ஜிண்டால் ஆவார்.



- மேலும் இந்த மன்றமானது டி.வி. நரேந்திரன் (டாடா எஃகு நிறுவனத்தின் மேலாண் இயக்குநர்) மற்றும் எல்.என். மிட்டல் ஆகியோரையும் (அர்சிலர் மிட்டலின் தலைவர்) தனது உறுப்பினர்களாக நியமித்துள்ளது.

## ஆண்டின் சிறந்த வனவிலங்கு புகைப்படக் கலைஞர்

- 2018 ஆம் ஆண்டின் 10 வயது மற்றும் அதற்கு உட்பட்டோருக்கான பிரிவில் சிறந்த வனவிலங்கு புகைப்படக் கலைஞர் விருதினை பெறுவோரில் ஒருவராக அர்ஷ்தீப் சிங்கும் (10) தனது ‘பைப் ஒளல்ஸ்’க்காக (Pipe Owls) இடம் பெற்றுள்ளார்.



- இந்த வருடத்திற்கான சிறந்த வனவிலங்கு புகைப்படக் கலைஞர் போட்டியானது பிரிட்டனைச் சேர்ந்த இயற்கை வரலாறு அருங்காட்சியகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.
- அர்ஷ்தீப் சிங் சமீபத்தில் இந்த ஆண்டின் ஆசிய இளையோர் சிறந்த வனவிலங்கு புகைப்படக் கலைஞர் விருதைப் பெற்றார்.



- அர்ஷ்தீப்பின் தந்தை ரன்தீப் சிங்கும் நன்கு அறியப்பட்ட புகைப்படக் கலைஞர் ஆவார்.

## உஸ்தத் சந்த் கான் வாழ்நாள் சாதனையாளர் விருது

- கிராமி விருது பெற்ற ஹிந்துஸ்தானி பாரம்பரிய இசைக்கலைஞர் பண்டிட் விஸ்வா மோகன் பட்டுக்கு இந்த ஆண்டிற்கான உஸ்தத் சந்த் கான் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- இது தில்லி கரானாவின் சர்சாகர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்திய பாரம்பரிய விழாவில் அறிவிக்கப்பட்டது.
- இவர் 1993 ஆம் ஆண்டில் ரை கூடர் உடன் 'எ-மீட்டிங் பை த ரிவர்' என்ற பாடல்

தொகுப்பிற்காக கிராமி விருதினைப் பெற்றார்.

- ❖ மேலும் இவர் 2017-ல் பத்மபூஷன், 2002-ல் பத்ம ஸ்ரீ மற்றும் 1998-ல் சங்கீத நாடக அகாடமி விருது போன்றவற்றையும் பெற்றுள்ளார்.
- ❖ 1940 ஆம் ஆண்டில் "உஸ்தத் சந்த் கான் சாஹப் ஆல் சர்சாகர்" சங்கம் நிறுவப்பட்டது.
- ❖ இது பாரம்பரியக் கலைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் உயர்ந்த மற்றும் பல்வகைத் தன்மையுடைய பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆசிய காது கேளாதோர் அழகிப் போட்டி

- ❖ ஹரியானாவைச் சேர்ந்த நிஷ்தா துடேஜா என்ற பெண் பிராகாவில் நடைபெற்ற போட்டியில் 2018-ன் ஆசிய காதுகேளாதோர் அழகி பட்டத்தை வென்றுள்ளார்.
- ❖ ஐரோப்பா-ஆசிய காதுகேளாதோருக்கான ஆணழகன் மற்றும் அழகிகள் அணிவகுப்பின் (2018) 18வது பதிப்பானது செக் குடியரசின் பிராகாவில் நடைபெற்றது.



- ❖ காதுகேளாதோருக்கான உலக அணிவகுப்பில் பட்டம் வென்ற முதல் இந்தியர் இவரேயாவார்.
- ❖ இவர் சிவாந்தோஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விளம்பரத் தூதுவராக உள்ளார்.

## சக்தி பட் முதல் புத்தக பரிசு 2018


- ❖ அமெரிக்காவைச் சேர்ந்த தலித் எழுத்தாளரான சுஜாதா கித்லா (55) தனது முதல் புத்தகமான "Ants Among Elephants: An Untouchable Family and the Making of Modern India" என்ற புத்தகத்திற்காக 2018-ன் சக்தி பட் முதல் புத்தக பரிசை வென்றுள்ளார்.
- ❖ இந்த புத்தகமானது நவீன இந்தியாவில் வளர்ந்து வரும் 'தீண்டத்தகாத' குடும்பத்தைப்

பற்றிய தொகுப்பாகும். இது ஹார்பர் காலின்ஸ் இந்தியாவால் பிரசுரித்து வெளியிடப்பட்டது.

- உள்நாட்டுப் போரின் பின்னணியில் அமைந்த “The Story of a Brief Marriage” என்ற அவரது முதல் நாவலுக்காக 2017 ஆம் ஆண்டில் இலங்கை எழுத்தாளரான அனுக் அருட் பிரகாசம் இப்பரிசை வென்றார்.

***சக்தி பட் முதல் புத்தக பரிசு***

- சக்தி பட் முதல் புத்தக பரிசானது சக்தி பட் அறக்கட்டளையால் நிதியளிக்கப்படுகிறது.
- இது இளம் எழுத்தாளர் மற்றும் ஆசிரியரான சக்தி பட்டின் நினைவாக 2008 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.




- இந்திய துணைக்கண்டத்திலிருந்து புனைக்கதை அல்லது கற்பனையல்லாத படைப்புகளுக்காக ஒரு எழுத்தாளரை கௌரவிப்பது இதுவே முதன்முறையாகும்.
- இது 2 லட்சம் ரொக்கப் பரிசை உடையது.

## லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது

- புகழ்பெற்ற நீதிபதியான பாலி எஸ். நாரிமனுக்கு (89) பொது நிர்வாகத்தில் சிறப்புத்துவத்திற்கான 19-வது லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் துணைத் தலைவரால் இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டது.

***<u>லால்பகதூர் சாஸ்திரி விருது</u>***

- இந்த விருதானது, இந்தியாவின் இரண்டாவது பிரதமரான லால் பகதூர் சாஸ்திரியின் நினைவாக லால்பகதூர் சாஸ்திரி மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தால் 1999 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- இது தனிப்பட்ட மற்றும் சிறந்த வர்த்தகப் பங்களிப்பாளர், மேலாண்மைப் பயிற்றுநர், பொது நிர்வாகி, கல்வியாளர் அல்லது கல்வி நிறுவனத்தை நிறுவியவர்களுக்கு அவர்களின் நீடித்த, தனிப்பட்ட பங்களிப்பு மற்றும் சாதனைகளுக்காக வருடந்தோறும்

வழங்கப்படுகிறது.

- 2017 ஆம் ஆண்டு சுலாப் இன்டர்நேஷனலின் நிறுவனர் பிந்தேஸ்வர் பதக்குக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

## வியாஸ் சம்மான் விருது

- புகழ்பெற்ற ஹிந்தி எழுத்தாளர் மம்தா காலியாவிற்கு 27வது வியாஸ் சம்மான் விருது அவரது "டுக்ஹம் சுக்ஹாம்" என்ற நாவலுக்காக வழங்கப்பட்டுள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் வெளியான டுக்ஹம் சுக்ஹாம் நாவலானது கீழ் நடுத்தர வர்க்க குடும்பத்தின் மூன்று தலைமுறையினரின் சரித்திரமாகும்.

***<u>வியாஸ் சம்மான்</u>***

- வியாஸ் சம்மான் விருதானது கே.கே. பிர்லா ஃபவுண்டேஷன் மூலம் 1991ல் நிறுவப்பட்டது.
- இது முதன்முதலில் கவிஞர் ராம் விலாஸ் ஷர்மாவிற்கு 1991 இல் வழங்கப்பட்டது.
- இந்தி எழுத்தாளரால் எழுதப்பட்ட சிறந்த இலக்கியப் படைப்புகள் மற்றும் கடந்த 10 ஆண்டுகளில் இந்தியக் குடிமகனால் வெளியிடப்பட்ட சிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது.
- இவ்விருதானது ரூ 3.5 லட்சம் பணப்பரிசு, சான்றிதழ் மற்றும் கேடயம் (பதக்கம்) ஆகியவற்றுடன் வழங்கப்படுகிறது.

## சிறப்புத்துவத்திற்கான ஐ.நா விருது

- நீடித்த மேம்பாட்டிற்கான துறையில் முதலீடுகளை ஊக்குவித்தமைக்காக இந்தியாவின் முதலீட்டு மேம்பாட்டுக் கழகமான இன்வெஸ்ட் இந்தியா சிறப்புத்துவத்திற்கான ஐக்கிய நாடுகள் விருதினை (United Nations - UN) வென்று இருக்கின்றது.
- உலகின் மிகப்பெரிய காற்றாலை இயந்திரங்களை அதற்கான காற்றாலை இறக்கைத் தயாரிப்புத் தொழிற்சாலைகளை இந்தியாவில் அமைப்பதில் ஏற்படுத்திய சிறப்புத்துவத்திற்காக இவ்விருது கிடைக்கப் பெற்றுள்ளது.
- இவ்விருது ஜெனீவாவில் உலக முதலீட்டு மன்றத்தில் (World Investment Forum) அர்மேனியாவின் குடியரசுத் தலைவர் அர்மேன் சர்க்கிசியன் என்பவரால் இன்வெஸ்ட் இந்தியா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான தீபக் பாக்லா என்பவருக்கு வழங்கப்பட்டது.
- இவ்விருதுகளைப் பெற்ற மற்ற வெற்றியாளர்கள்
    - பஹ்ரைன் பொருளாதார வளர்ச்சி மன்றம்
    - லெசோதோ தேசிய வளர்ச்சிக் கழகம்
    - தென்னாப்பிரிக்கா (தென்னாப்பிரிக்கா முதலீட்டு நிறுவனம்).

### *ஐக்கிய நாடுகள் முதலீட்டு ஊக்குவிப்பு விருது*

- இந்த விருதுகள் ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால் (United Nations Conference on Trade and Development - UNCTAD) வருடந்தோறும் வழங்கப்படுகின்றன.
- 2002ம் ஆண்டு முதல் இவ்விருது முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டு வருகின்றது.




- இது முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனங்களையும் அதன் அரசுகளையும் அவர்களின் சாதனைகளுக்காகப் பாராட்டுகின்றது.
- 2017ம் ஆண்டின் வெற்றியாளர்கள் எத்தியோப்பிய முதலீட்டு ஆணையம், ஸ்பெயினின் கோஃபைட்ஸ் நிறுவனம் மற்றும் மொரீசியஸின் முதலீட்டு மன்றம் ஆகியவையாகும்.

## **2018 ஆம் ஆண்டு சியோல் அமைதி விருது**

- சியோல் அமைதி விருதுக்கான தேர்வுக் குழுவானது 2018 ஆம் ஆண்டின் சியோல் அமைதி விருதை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்க முடிவு செய்துள்ளது.
- இவ்விருதைப் பெறும் 14-வது நபர் மோடி ஆவார். மேலும் இவ்விருது மோடிக்கு சியோல் அமைதி விருது பவுண்டேஷனால் வழங்கப்படவிருக்கிறது.
- சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக தன்னை அர்ப்பணித்தல், இந்திய மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சியில் இவரது பங்கு ஆகியவற்றை அங்கீகரிக்கும் விதமாக மோடிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- மேலும் இவ்விருது “மோடிநோமிக்ஸ்” என்ற ஏழை மற்றும் பணக்காரர்களுக்கிடையேயான சமூக மற்றும் பொருளாதார இடைவெளியை குறைத்ததற்காகவும் வழங்கப்படுகிறது.

### *சியோல் அமைதி விருது*

- தென் கொரியாவில் சியோலில் நடைபெற்ற 24-வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் வெற்றி பெற்றதன் நினைவாக 1990-ஆம் ஆண்டில் சியோல் அமைதி விருது ஏற்படுத்தப்பட்டது.
- கொரிய தீபகற்பம் மற்றும் உலகத்தில் உள்ள பிற பகுதிகளில் அமைதி ஏற்பட விரும்பும்

கொரிய மக்களுக்காக இவ்விருது ஏற்படுத்தப்பட்டது.

- மனிதவர்க்கத்தின் ஒற்றுமை, உலக நாடுகளுக்கிடையே அமைதிக்காக சமரசம் ஏற்படுத்துதல் ஆகியவற்றில் பங்களிப்பு ஏற்படுத்திய தனிப்பட்ட நபர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்விருது வழங்கப்படுகிறது.
- கடந்த காலங்களில் இவ்விருதைப் பெற்றுள்ளவர்களில் உலகப் புகழ்பெற்ற பிரபலங்கள் ஜெர்மனியின் ஏஞ்சலா மெர்க்கல், ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் உள்ளிட்டோரும் அடங்குவர்.

## ICFAவின் முதலாவது உலக வேளாண்மைக்கான பரிசு

- வேளாண் விஞ்ஞானி M.S. சுவாமிநாதன், புதுதில்லியில் இந்திய உணவு மற்றும் விவசாயக் குழுவால் (Indian Council of Food and Agriculture - ICFA) ஏற்படுத்தப்பட்ட முதலாவது உலக வேளாண் பரிசினைப் பெற்றிருக்கின்றார்.
- குடியரசுத் துணைத் தலைவர், ICFA-வால் ஏற்பாடு செய்யப்பட்ட "சுவாமிநாதன் பருவநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான உலகளாவிய பேச்சுவார்த்தை" என்று பெயரிடப்பட்ட சிறப்பு நிகழ்ச்சியில் இவ்விருதை வழங்கினார்.
- மரபணுவியல், குழியமுறைப் பரம்பரையியல், கதிர்வீச்சு மற்றும் வேதியியல் முறையிலான மரபணு மாற்றவியல், உணவு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தின் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இவரது அடிப்படையான மற்றும் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சிக்காக உலகம் முழுவதும் இவர் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றார்.




- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தால் இவர் பொருளாதாரச் சுற்றுச் சூழலியலின் தந்தை எனப் புகழப்படுகின்றார்.

### *உலக விவசாயப் பரிசு*

- இந்தப் பரிசானது விவசாயத்தின் மூலமாக மனித குலத்திற்குச் சேவை புரிந்த தனிநபர்களின் சேவையை அங்கீகரித்திடும் எண்ணத்துடன் ICFA அமைப்பால் நிறுவப்பட்டிருக்கின்றது.
- இது ஒரு லட்சம் டாலர்கள் பரிசுத் தொகையைக் கொண்ட ஒரு வருடாந்திர பரிசாகும்.

## INSA ஆசிரியர்கள் விருது 2018

- இந்திய தேசிய அறிவியல் நிறுவனமானது (Indian National Science Academy - INSA) பெருமைமிகு இந்திய தேசிய அறிவியல் நிறுவனத்தின் 2018ம் ஆண்டிற்கான ஆசிரியர்கள் விருதிற்கு தேஜ்பூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆசிஷ் முகர்ஜியைத் தேர்ந்தெடுத்திருக்கின்றது.
- இவர் மாணவர்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் தொழில் புரிபவர்களாக ஈடுபாடு கொண்டிட ஏற்படுத்திய வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காகவும் தனது சீரான மற்றும் உயர்தர ஆசிரியப் பணிக்காகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார்.
- 2018 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் நடைபெறும் இந்திய தேசிய அறிவியல் நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் அவர் விருது வழங்கி கவுரவிக்கப்படுவார்.
- புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய அறிவியல் நிறவனத்தால் நிறுவப்பட்ட இந்த விருதானது நாட்டில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் ஆசிரியர்களுக்கான அதிகபட்ச அங்கீகாரங்களில் ஒன்றாகும்.

## இலக்கியத்திற்கான JCB விருது

- புதினம் மற்றும் சிறுகதை எழுத்தாளரான பென்யாமினின் ஜாஸ்மின் டேஸ் (மல்லிகை நாட்கள்) என்ற நாவல் புது தில்லியில் புதிதாகத் தொடங்கப்பட்ட இலக்கியத்திற்கான JCB விருதினை வென்று இருக்கின்றது.



- இந்த விருது ஒரு பரிசுக் கோப்பையையும், 25 லட்ச ரூபாய் பரிசுத் தொகையையும் கொண்டிருக்கின்றது. 2018 ஆம் ஆண்டின் விருது பெற்ற புத்தகம் மலையாளத்திலிருந்து ஆங்கில மொழிக்கு ஷாநாஸ் ஹபீபால் மொழிபெயர்க்கப்பட்டது. இதற்காக அவர் கூடுதலாக 5 லட்ச ரூபாயை பரிசாக பெற்றார்.
- பென்யாமின் முன்னதாக தனது ஆடுஜீவிதம் என்ற புத்தகத்திற்காக கேரள சாகித்ய அகாடமி விருதினையும் வென்றிருந்தார்.

### *இலக்கியத்திற்கான JCB விருது*

- இலக்கியத்திற்கான JCB விருது ஒரு லாபம் சாராத தனியார் நிறுவனமான JCB இலக்கிய அமைப்பால் அளிக்கப்படுகின்றது. இது 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இவ்விருதிற்கு ஐக்கியப் பேரரசைச் சார்ந்த கட்டுமான நிறுவனமான JCB நிறுவனத்தால் நிதியளிக்கப்படுகின்றது.

## அமலாக்கத் துறை இயக்குநரகத்தின் தலைவர் - சஞ்சய் குமார் மிஸ்ரா

- நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது சஞ்சய் குமார் மிஸ்ராவை அமலாக்கத் துறை இயக்குநரகத்தின் தலைவராக (ED - Enforcement Directorate) நியமித்துள்ளது.
- இவரை அமலாக்கத் துறை இயக்குநரகத்தின் சிறப்பு முதன்மை இயக்குநராகவும் கூடுதல் பொறுப்பாக மூன்று மாத காலம் அல்லது நிரந்தரத் தலைவர் நியமிக்கப்படும் வரை அமலாக்கத் துறையின் இயக்குநராகவும் செயல்பட நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு நியமித்துள்ளது.
- அமலாக்கத் துறை இயக்குநராக பதவி வகித்த கர்னல் சிங் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதி ஓய்வு பெற்றதையடுத்து, இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஐ.நா. மனித உரிமைகள் விருது 2018

- 2018 ஆம் ஆண்டிற்கான ஐ.நா. மனித உரிமை விருதுகளின் வெற்றியாளர்களை ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தலைவரான மரியா எஸ்பினோசா என்பவரால் அறிவிக்கப்பட்டது.
- மனித உரிமைகள் தினமான 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று அமெரிக்காவின் நியூயார்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு இவ்விருது வழங்கப்படவிருக்கிறது.
- 2018 ஆம் ஆண்டிற்கான இவ்விருதை வென்றவர்கள்
    - ஆஸ்மா ஜஹாங்கீர் - பாகிஸ்தானின் மறைந்த மனித உரிமை ஆர்வலர்
    - ரெபகா கியூமி - தான்சானிய மனித உரிமை ஆர்வலர்
    - ஜியோனியா வபிசானா - பிரேசிலின் முதலாவது உள்நாட்டு வழக்குரைஞர்
    - பிரெண்ட் லைன் டிபெண்டர்ஸ் - அயர்லாந்தின் மனித உரிமைகள் அமைப்பு.

### *2018 ஆம் ஆண்டிற்கான விருதை வென்றவர்களின் பின்னணி*

- பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற பார் கவுன்சிலின் தலைவராகப் பணியாற்றிய முதலாவது பெண்மணி ஆஸ்மா ஜஹாங்கீர் ஆவார்.
- இந்த புகழ்பெற்ற விருதைப் பெற்ற 4வது பாகிஸ்தானியப் பெண்மணி இவராவார்.
- 2016 ஆம் ஆண்டில் யுனிசெப்பின் க்ளோபல் கோல்ஸ் என்ற விருதை கியூமி பெற்றுள்ளார்.

மேலும் இவர் புதிய ஆப்பிரிக்கப் பெண்கள் பத்திரிக்கையால் ஆண்டின் சிறந்த பெண்மணியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- பிரேசில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது உள்நாட்டுப் பெண்மணி வபிசானா ஆவார்.
- 2001 ஆம் ஆண்டில் அயர்லாந்தின் டப்ளினில் அயர்லாந்தை அடிப்படையாகக் கொண்ட அறக்கட்டளையான பிரெண்ட் லைன் டிபெண்டர்ஸ் உருவாக்கப்பட்டது.

***ஐ.நா. மனித உரிமைகள் விருது***

- 1966 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் இவ்விருதுகள் உருவாக்கப்பட்டன.
- இவ்விருதுகள் முதன்முறையாக 1968 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. அன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருது

- 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருதுகளை மத்திய அரசின் கலாச்சார அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்த விருது பெறுவோர்கள் பிரதமர் தலைமையில் கீழ்க்காணும் நபர்களை உள்ளடக்கிய குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
  - இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி - ரஞ்சன் கோகோய்
  - முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் - N. கோபாலஸ்வாமி
  - பாஜக தேசிய துணைத் தலைவர் - வினய் சஹாஸ்ரபுத்தே

***விருதுகளைப்பெறுவோர்***

| | | |
|---|---|---|
| 2014 | ராஜ்குமார் சிங்ஹாஜித் சிங் | • இவர் மணிப்புரி நடனத்தில் அதிக அனுபவமுள்ளவர்<br>• மேலும் இவர் ஆசிரியர், நடிகர் மற்றும் நடன இயக்குநர் ஆவார். |
| 2015 | சயனௌத் | • இது 1961-ல் நிறுவப்பட்ட வங்காள தேசத்தின் கலாச்சார சங்கம் ஆகும்.<br>• வங்காள கலாச்சாரம், இசை மற்றும் இலக்கியங்களில் அமைந்த தாகூரின் படைப்புகளை உலகெங்கிலும் ஊக்குவிப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. |
| 2016 | ராம் வஞ்சி சுடர் | • இவர் ஒரு புகழ்பெற்ற சிற்பியாவார்.<br>• மத்தியப் பிரதேசத்தின் காந்தி சாகர் அணையில் உள்ள 45 அடி உயர 'சம்பல் நினைவுச் சின்னம்' இவரது குறிப்பிடத் தகுந்த முதல் வேலையாகும்.<br>• மேலும் இவர் பத்மபூஷன் மற்றும் பத்ம ஸ்ரீ ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார். |

***கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருது***

- குருதேவ் இரவீந்திரநாத் தாகூரின் 150வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 2011ஆம் ஆண்டு இந்திய அரசால் உருவாக்கப்பட்ட இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற ஒரு விருதாகும்.




- முதன்முறை 2012-ல் புகழ்பெற்ற சித்தார் கலைஞர் பண்டிட் ரவி ஷங்கருக்கும் இரண்டாம் முறை 2013-ல் ஜுபின் மேத்தாவுக்கும் இவ்விருது வழங்கப்பட்டது.

## முதல்நிலை சாதனையாளர்கள் விருது 2018 மற்றும் சிறந்த சுரங்கக் கருவிகள் விற்பனை விருது

- 2017 - 18 ஆம் நிதியாண்டில் சிறப்பான செயல்பாட்டிற்காக 2018 ஆம் ஆண்டிற்கான முதல்நிலை சாதனையாளர்கள் விருதை பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனம் வென்றுள்ளது (Bharat Earth Movers Limited - BEML).
- மேலும் இந்நிறுவனம் சுரங்கத் துறைக்காக மண் லாரி மற்றும் வலிமையானவற்றை தூக்கிக் கொட்டும் வாகனம் ஆகிய ஊர்திக் கருவிகளை விற்பனை செய்ததற்காக சிறந்த விற்பனையாளர் விருதையும் வென்றுள்ளது.
- பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனமானது மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மினி ரத்னா பொதுத் துறை நிறுவனமாகும்.
- இந்த விருது ஏஎஸ்ஏஏபி உலகளாவிய தகவல் குழுவால் ஏற்படுத்தப்பட்டது.
- மேல்நிலை நோக்கிய மற்றும் கீழ்நிலை நோக்கிய உயர்வு, லாபத்தை தக்க வைத்தல் மற்றும் நிதியியல் ஆதாரத்தை குறிப்பிட்ட எல்லைக்குள் வைத்துக் கொள்ள சிறந்த நிர்வாகத்தை அளித்தல் ஆகியவற்றின் செயல்பாட்டு மதிப்பீடு அடிப்படையில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய கோப்பை 2018

- இந்தியா வங்கதேசத்தை வென்று 2018 ஆம் ஆண்டு யுனிமோனி ஆசியக் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.
- தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்தியா வங்கதேசத்தை இறுதிப் போட்டியில் தோற்கடித்து கோப்பையைக் கைப்பற்றியிருக்கின்றது.
- ஒட்டுமொத்தமாக இது இந்தியாவின் 7-வது வெற்றியாகும்.
- லித்தன் தாஸ் ஆட்ட நாயகன் விருதையும், ஷிகர் தவான் தொடர் நாயகன் விருதையும் வென்றனர்.

## நீளம் தாண்டுதலில் ஸ்ரீசங்கர் புதிய தேசிய சாதனை

- புவனேஸ்வரில் நடந்த 58-வது தேசிய ஓபன் தடகளப் போட்டிகளில் 8.20 மீட்டர் தூரத்தை தாண்டி நீளம் தாண்டுதல் வீரர் எம். ஸ்ரீசங்கர் புதிய உலக சாதனை படைத்தார்.
- கேரளாவைச் சேர்ந்த 19 வயதான இந்த வீரர் 2016 ஆம் ஆண்டு ஜூலையில் அங்கித் சர்மாவால் ஏற்படுத்தப்பட்ட 8.19 மீட்டர் என்ற சாதனையை இவர் தற்பொழுது முறியடித்துள்ளார்.
- அவரது இந்த 8.20 மீட்டர் தாண்டுதல் தூரமானது 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தடகளப் போட்டிகளில் இவ்வருடத்தில் உலகின் முதல் நீளம் தாண்டிய சாதனையாகும். இது இவ்வருடம் ஜுன் மாதம் கியூபாவைச் சேர்ந்த மைகேல் யோர்ஜெஸ் விடாலின் 8.12 மீட்டர் சாதனையை விட அதிகமானதாகும்.

## 5-வது டிராக் ஆசிய கோப்பை (சைக்கிள் போட்டி) - 2018

- புது தில்லியில் நிறைவு பெற்ற டிராக் ஆசிய கோப்பை சைக்கிள் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த சைக்கிள் வீரர்கள் 6 தங்கம், 5 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் ஆகிய பதக்கங்களைப் பெற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இப்போட்டியில் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தியாவிற்கு அடுத்து இந்தோனேஷியா 4 தங்கம், 3 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் ஆகிய பதக்கங்களைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தது. ஹாங்காங் 4 தங்கம் மற்றும் 2 வெண்கலம் ஆகிய பதக்கங்களைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தது.



- தங்கம் வென்ற இந்திய வீரர்கள்
    - மயூரி லூட் - இளம் பெண்களுக்கான 500 மீட்டர்.
    - எசோ, அபிஷேக், ஜெம்ஸ் சிங் - இளம் ஆடவர் தடகள குழு
    - E. சொபா தேவி - பெண்களுக்கான 3 கி.மீ. தனிநபர் சைக்கிள் போட்டி
    - சுவஸ்தி சிங் - இளம் பெண்களுக்கான 2 கி.மீ. தனிநபர் சைக்கிள் போட்டி
    - எசோ அல்பீன் - இளம் ஆடவருக்கான 200 மீ தடகளம்
    - மயூரி லூட் - இளம் பெண்களுக்கான 200 மீ தடகளம்.

## அதிக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய 2வது இந்திய வீரர்

- மகேந்திரசிங் தோனி 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று பாகிஸ்தானுக்கு எதிரான தனது 505-வது ஆட்டத்திற்குப் பின்பு அதிக கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய 2வது வீரராக உருவெடுத்துள்ளார்.




- மகேந்திர சிங் தோனிக்கு முன்பு சர்வதேச போட்டிகளில் 504 போட்டிகளில் விளையாடி இந்தியாவின் 2வது கிரிக்கெட் வீரராக ராகுல் டிராவிட் உள்ளார்.

- இந்தியாவிற்காக 664 போட்டிகளில் விளையாடி சச்சின் டெண்டுல்கர் முதலிடத்தில் உள்ளார்.

## சர்வதேச சிலிசியான் மகளிருக்கான குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்

- போலந்தின் கிலிவைஸில் நடைபெற்ற 13வது சர்வதேச சிலிசியான் மகளிருக்கான குத்துச்சண்டை சாம்பின்ஷிப் போட்டியில் கஜகஸ்தானின் ஐஜிரீம் கசன்யேவாவை வீழ்த்தி இந்தியாவின் MC மேரி கோம் (48 கிலோ) தங்கம் வென்றுள்ளார்.
- மணீஷா (54 கிலோ) இறுதிப் போட்டியில் தோல்வியுற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- இளையோருக்கான பிரிவில் முன்னாள் உலக சாம்பியனான ஜோதி குலியா 51 கிலோ எடைப் பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.

## வில்வித்தை உலகக் கோப்பை

- இந்தியாவின் அபிஷேக் வர்மா இரண்டு பதக்கங்களை வென்றுள்ளார். இவர் தனிநபர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் கலப்புப் பிரிவில் தனது அணியைச் சேர்ந்தவரான ஜோதி சுரேகா வென்னாம் என்பவருடன் உடன் இணைந்து வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளார்.
- துருக்கியின் சாம்சனில் நடைபெற்ற உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஜெர்மனியைச் சேர்ந்த லிசா உன்ருக்-ஐ இந்தியாவின் தீபிகா குமாரி வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் தீபிகா குமாரி பெற்ற வெண்கலப் பதக்கம் இவருடைய ஐந்தாவது பதக்கமாகும். இதற்கு முன் இவர் 2011, 2012, 2013 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

## ஆசிய ஜூனியர் தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்

- சென்னையில் நடைபெற்ற 25வது ஆசிய ஜூனியர் தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் 13 வயதுக்குட்பட்ட ஆடவருக்கானப் பிரிவில் பாகிஸ்தானின் அனாஸ் அலி ஷாவை இந்தியாவின் யுவராஜ் வத்வாணி வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.
- 13 வயதுக்குட்பட்ட பட்டத்தைப் பெற்ற இரண்டாவது இந்திய வீரர் யுவராஜ் வத்வாணி ஆவார். இதற்கு முன் 2014 ஆம் ஆண்டில் ஈரானில் நடைபெற்ற போட்டியில் வீர் சோத்ராணி பட்டம் வென்றுள்ளார்.
- இந்தியா இப்போட்டியை 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைப் பெற்று நிறைவு செய்துள்ளது.
- பெண்களுக்கான பிரிவில் மலேசியாவைச் சேர்ந்த சன் யுய்வென் பட்டம் வென்றுள்ளார்.

## 2018 கோடைக்கால இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுகள் - டூடுல்

- கூகுளானது 2018 கோடைக்கால இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டின் 3வது பதிப்பின் தொடக்கத்தை அக்டோபர் 6 அன்று அசைவூட்டப்பட்ட டூடுலுடன் கொண்டாடியது.
- இது அர்ஜென்டினாவின் ப்யூனோஸ் ஏர்ஸ் நகரில் அக்டோபர் 18 வரை நடைபெறும்.
- இந்த விளையாட்டில் உள்ள பல்வேறு ஆட்டங்களை (Games) காட்டும் இந்த GIF டூடுலானது சிந்தியா யுவான் செங்க் மற்றும் விருந்தா ஜவேரி ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- இந்த ஆண்டின் சின்னமானது அர்ஜென்டினாவை தாயகமாகக் கொண்ட பதின்பருவ சிறுத்தையான (jaguar) பாண்டி ஆகும்.
- இந்த விளையாட்டின் கோடை மற்றும் குளிர்கால பதிப்புகள் வெவ்வேறு நாடுகளில் உள்ள நகரங்களில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.
- முதல் விளையாட்டுப் போட்டியானது 2010-ல் சிங்கப்பூரில் நடைபெற்றது.

## முதல் டெஸ்ட் போட்டியில் 100 ஓட்டங்கள் எடுத்த இளம் இந்திய வீரர்

- 18 வருடம் 329 நாட்கள் வயதான பிருத்வி ஷா தான் அறிமுகமான முதல் டெஸ்ட் போட்டியிலேயே சதமடித்த முதல் இளம் இந்திய வீரராகியுள்ளார்.
- இந்த சாதனையானது இதற்கு முன்னதாக அப்பாஸ் அலி பைக் (20 வருடம் 126 நாட்கள்) மற்றும் குண்டப்பா விஸ்வநாத் (20 வருடங்கள் 276 நாட்கள்) ஆகியோரால் நிகழ்த்தப்பட்டது.
- மேலும் ஷா 2017ம் ஆண்டில் துலீப் டிராபியில் அறிமுக ஆட்டத்தில் 100 ஓட்டங்களை எடுத்த இளம் வீரர் ஆவார்.
- டோபரில் அர்ஜெண்டினாவில் நடைபெறவிருக்கும் இளையோர் ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியாவிலிருந்து தகுதி பெற்ற ஒரே குத்துச்சண்டை வீரர் ஜோதி குலியா ஆவார்.

## IBSF உலக U-16 ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்

- இந்தியாவின் கர்நாடகாவைச் சேர்ந்த கீர்த்தனா பாண்டியன் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்ற IBSF (International Billiards and Snooker Federation) 16 வயதிற்குட்பட்டோருக்கான உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில் பெண்களுக்கானப் பட்டத்தை வென்றார்.
- இதன் இறுதிப் போட்டியில் பெலாரஸின் போட்டியாளரான ரிவல் அல்பினா லெட்சுக்கைத் தோற்கடித்து தனது முதல் சர்வதேசப் பட்டத்தை வென்றுள்ளார்.

## ஜப்பானிய பார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ்

- ஜப்பானிய பார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ்-ஐ இங்கிலாந்தைச் சேர்ந்த மெர்சிடிஸின் ஓட்டுநர் லெவிஸ் ஹாமில்டன் வென்றுள்ளார்.

- இது அவருடைய விளையாட்டுப் பயணத்தின் 71வது வெற்றியாகும். இவர் 7 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற மைக்கேல் சுமேச்சரின் சாதனையை விட 20 இடங்கள் மட்டுமே பின்தங்கியுள்ளார்.
- ஃபின்லாந்தின் வால்டெரி போட்டாஸ் (மெர்சிடிஸ்) இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அதே வேளையில் டச்சு (Dutch) ஓட்டுநரான மேக்ஸ் வெர்ஸ்ட்பேன் (ரெட் புல்) பந்தயத்தை மூன்றாவதாக முடித்தார்.

***ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ்***

- 1963-ல் தொடங்கிய இது 1999-ல் மலேசியா இணையும் வரை இப்போட்டியை நடத்திய ஒரே ஆசிய நாடாகும்.
- 2018 ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ்-ன் 2018 பார்முலா ஒன் சீசனின் 4வது சுற்று சுசாகாவில் நடைபெறுகிறது.

## காது கேளாதோருக்கான ICC T20 உலக கோப்பை

- இந்தியா தான் நடத்தும் காது கேளாதோருக்கான ICC T20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை நவம்பர் 23-30 தேதிகளில் குருகிராமில் தொடங்க திட்டமிட்டுள்ளது.
- இந்த தொடரானது, தலைமை நிர்வாக ஆணையமான காதுகேளாதோர் கிரிக்கெட் கழகத்தால் (Deaf Cricket Society -DCS) நடத்தப்படும்.
- DCS ஆனது சர்வதேச காது கேளாதோர் கிரிக்கெட் கழகத்துடன் இணைக்கப் பெற்றது ஆகும்.

## ஆஸ்பின் கோப்பை - 2018

- உலகின் இளையோர் சாம்பியனான எகிப்தைச் சேர்ந்த முஸ்தபா அஸால் என்பவரைத் தோற்கடித்து ஆஸ்பின் கோப்பை 2018-ஐ இந்தியாவின் விக்ரம் மல்ஹோத்ரா வென்றுள்ளார்.
- இது கனடாவின் சார்லோட்டி டவுனில் நடைபெற்ற வல்லுநர் ஸ்குவாஷ் கூட்டமைப்பின் சேலஞ்சர் சுற்றுப்பயணம் ஆகும்.
- இது விக்ரமின் ஒட்டுமொத்த ஏழாவது PSA (Professional Squash Association) பட்டம் மற்றும் இவ்வருடத்தின் அவரது இரண்டாவது பட்டமுமாகும்.

## இளைஞர் ஒலிம்பிக்-ஜெர்மி லல்ரின்னுங்கா

- அர்ஜென்டினாவின் ப்யூனஸ் அயர்ஸில் நடைபெற்ற இளைஞர் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை ஜெர்மி லல்ரின்னுங்கா வென்றுள்ளார்.
- இவர் ஆண்களுக்கான 62 கிலோ பிரிவின் குரூப் A-யின் பளுதூக்கும் போட்டியில் ஒருங்கிணைந்த எடையான 274 கிலோவை தூக்கினார்.



- இது ஷாஹு துஷார் மேனே, மெஹுலி கோஷ் (துப்பாக்கி சூடுதல்) மற்றும் தபாபி தேவி தங்க்ஜம் (ஜூடோ) ஆகியோர் பெற்ற வெள்ளிப் பதக்கங்களுடன் சேர்த்து ப்யூனஸ் அயர்ஸில் இந்தியாவின் நான்காவது பதக்கம் ஆகும்.

## ஹால் ஆஃப் பேம் - ஆஸ்திரேலிய விளையாட்டு

- ரிச்சி பெனாவுட் ஆஸ்திரேலிய விளையாட்டு அமைப்பின் ஹால் ஆஃப் ஃபேம்' மூலம் 'புகழ்பெற்றவர்' (Legend) என மரணத்திற்குப் பிறகு கௌரவிக்கப்பட உள்ளார்.



- மிக உயர்ந்த இவ்விருதினால் கௌரவிக்கப்படும் ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற 40வது விளையாட்டு வீரர் மற்றும் 3வது கிரிக்கெட் வீரர் இவர் ஆவார்.
- டான் பிராட்மேன் (1993) மற்றும் கெய்த் மில்லர் (2004) ஆகிய இருவரும் புகழ்பெற்றவர்கள் என அழைக்கப்பட்ட மற்ற கிரிக்கெட் வீரர்களாவர்.

## ஹர்விந்தர் சிங் - ஆசிய பாரா விளையாட்டுகள்

- ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் வில்வித்தையில் இந்தியாவின் முதலாவது தங்கப் பதக்கத்தை ஹர்விந்தர் சிங் வென்றுள்ளார்.
- டபிள்யூ 2 / எஸ்.டி. பிரிவின் இறுதிச் சுற்றில் ஹர்விந்தர் சிங் சீனாவின் ஜாவ் லிக்ஸை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.
- டபிள்யூ 2 பிரிவு - கால்கள் வாதமுடக்கம், இருபக்க வாதம், முழங்கால் முட்டுக்குக் கீழே இரு கால்கள் நீக்கம் ஆகியவற்றை உடைய சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் தடகள வீரர்கள்.
- எஸ்டி பிரிவு - குறைந்தபட்ச மாற்றுத் திறனுடைய வில்வித்தை வீரர்கள். மேலும் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தாமல் குறி பார்த்து வில் எய்தும் வீரர்கள்.



## துப்பாக்கி சுடுதல் - இளையோர் ஒலிம்பிக்ஸ்

- இளையோர் ஒலிம்பிக்ஸில் ஆண்களுக்கான “10 மீ ஏர் பிஸ்டல் துப்பாக்கி சுடுதலில்” சுவரப் சௌத்ரி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- நான்கு நாட்களில் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் நான்காவது பதக்கத்தை சவுரப் சௌத்ரி வென்றுள்ளார்.
- இந்தப் போட்டியில் தனிநபர் துப்பாக்கி சுடுதலில் சகு மானே, மெகுலி கோஷ், மேனி பேக்கர் மற்றும் சௌத்ரி ஆகியோர் 2 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

## ஆசிய பாரா விளையாட்டு 2018

- இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டு போட்டியில் 12 பதக்கங்களை வென்றதன் மூலம் இந்தியா தனது சிறப்பான போட்டியாக இதை பதிவு செய்துள்ளது.

- 15 தங்கப் பதக்கங்கள், 24 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 33 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்த வரிசையில் இந்தியா 9 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2014ல் நடைபெற்ற கடைசிப் பதிப்பில் இந்தியா 33 பதக்கங்களை வென்றது.
- 319 பதக்கங்களை வென்று சீனா பட்டியலின் முதலிடத்தில் உள்ளது.
- தென் கொரியா மற்றும் ஈரான் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாமிடத்தில் உள்ளன.
- 2018 ஆசிய பாரா விளையாட்டின் அதிகாரப் பூர்வ சின்னமானது செயலூக்கம் மற்றும் இயக்கத்திறன் ஆகியவற்றை உவமைப்படுத்தும் மோமோ எனப் பெயரிடப்பட்ட பாண்டோல் கழுகு ஆகும்.

## இளைஞர் ஒலிம்பிக் 2018

- தங்க்ஜம் தபாபீ தேவி (16) ஒலிம்பிக் போட்டியில் ஜூடோவில் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையாக ஆகியுள்ளார்.
- அர்ஜென்டினாவின் தலைநகரான ப்யூனஸ் அயர்ஸில் நடைபெறும் இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதன் மூலம் இவர் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.
- இவர் வெனிசுலாவின் மரியா கிமினெடம் தோல்வியுற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
- இளைஞர் ஒலிம்பிக் போட்டியில் பங்கற்கும் வீரர்களுக்கான வயது வரம்பு 14 முதல் 18 வரை ஆகும்.
- கடந்த இளைஞர் ஒலிம்பிக் (2014) ஆனது சீனாவின் நான்ஜிங்கில் நடைபெற்றது.

## உலக சாம்பியன்ஷிப்பிற்கு தகுதிபெற்ற முதல் இந்திய மல்யுத்த வீரர்

- ஹங்கேரியின் புத்தபெஸ்டில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கான பட்டியலில் இடம் பிடித்த முதல் இந்திய மல்யுத்த வீரராக CWG (Common Wealth Games) மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற பஜ்ரங் புனியா ஆகியுள்ளார்.
- 65 கிலோ ஆண்கள் ப்ரீஸ்டைல் நிகழ்வுப் பிரிவில் ஐக்கிய உலக மல்யுத்தம் வெளியிட்டுள்ள தரவரிசைப்பட்டியலில் 45 புள்ளிகள் பெற்று இவர் மூன்றாவது இடத்தில் உள்ளார்.



- 65 கிலோ பிரிவில் 50 புள்ளிகளுடன் துருக்கியின் செலாத்தீன் கிளிக்ஸல்லயன் முதலிடத்திலும் ரஷ்யாவின் இலியாஸ் பெக்புலடோவ் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.
- மல்யுத்திற்கான தாய் அமைப்பான ஐக்கிய உலக மல்யுத்தமானது உலக சாம்பியன்ஷிப்பில் வீரர்கள் வைப்பு முறையை முதல்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

## 2019 IAAF உலக தொடர் ஓட்டம் (Relays)

- சர்வதேச தடகள கூட்டமைப்பு கழகத்தின் (International Association of Athletics Federations - IAAF) உலகத் தொடர் ஓட்டத்தின் (World Relays) 4வது பதிப்பானது 2019 ஆம் ஆண்டு மே 11-12 தேதிகளில் டோக்கியோவிற்கு அருகில் ஜப்பான் தடகள கூட்டமைப்பு கழகத்தால் நடத்தப்படுகிறது.
- இந்த 2019 IAAF உலகத் தொடர் ஓட்டத்தின் பதிப்பானது கீழ்க்காணும் போட்டிகளுக்கு தகுதிச் சுற்றாகவும் உள்ளது.
    - 2019ல் டோகாவில் நடைபெறும் IAAF உலக தடகள சாம்பியன்ஷிப்.
    - 2020ல் டோக்கியோவில் நடைபெறும் கோடைக்கால ஒலிம்பிக்.

## 2018 சுல்தான் ஜோஹோர் கோப்பை இளையோர் ஹாக்கி

- மலேசியாவின் ஜோஹோர் பஹ்ருவில் நடைபெற்ற சுல்தான் ஜோஹோர் கோப்பை இளையோர் ஹாக்கிப் போட்டியின் 8வது பதிப்பின் கோப்பையை இங்கிலாந்து கைப்பற்றியது.
- இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இங்கிலாந்திடம் தோல்வியுற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது.
- இந்தப் போட்டியில் ஜப்பான், ஆஸ்திரேலியா, மலேசியா மற்றும் நியூசிலாந்து ஆகிய அணிகளும் கலந்து கொண்டன.

## 2018 ஷாங்காய் மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டித் தொடர்

- ❖ சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற 2018-ம் ஆண்டின் ஷாங்காய் மாஸ்டர்ஸ் பூப்பந்து போட்டித் தொடரை செர்பியாவின் நோவாக் ஜோகோவிக் வென்றுள்ளார்.
- ❖ இவர் குரோஷியாவின் போர்னா கோரிக்கை வீழ்த்தி தனது 4வது ஷாங்காய் பட்டம் மற்றும் இந்த ஆண்டின் 2 வது மாஸ்டர் பட்டத்தை வென்றார்.
- ❖ ஜோகோவிக் தற்பொழுது 18 தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

## டச்சு பாட்மிண்டன் ஓபன் 2018

- ❖ அல்மெரில் நடைபெற்ற டச்சு ஓபனில் மலேசியாவின் ஜின்வெய் சியாம்-ஐ தோற்கடித்து சவுரப் வர்மா பட்டத்தை வென்றார்.
- ❖ பெண்கள் ஒற்றையர் பிரிவில் டென்மார்க்கின் மியா ப்ளைச்பெல்ட் வென்றார். இவர் சீனாவின் கி ஜீபெய் என்பவரைத் தோற்கடித்து டச்சு ஓபன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

## சூரஜ் பன்வார் - நடைப் பந்தயம்

- ❖ 18 வயதான சூரஜ் பன்வார் ஆண்களுக்கான 5000 மீட்டர் நடைப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.



- ❖ பியுனஸ் அயர்ஸில் நடைபெறும் 2018 ஆம் ஆண்டின் இளையோர் ஒலிம்பிக் போட்டிகளில் தடகளப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் முதல் இந்திய விளையாட்டு வீரர் சூரஜ் ஆவார்.
- ❖ சூரஜ் ஈக்வடாரைச் சேர்ந்த ஆஸ்கார் படின் என்பவருக்குப் பின்னதாக இடம் பிடித்தார்.

## இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுகள் 2018

- ❖ அர்ஜென்டினாவின் ப்யூனோஸ் ஏயர்ஸ்-ல் நடைபெற்ற இளைஞர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் வில்வித்தைப் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை வென்ற

இந்தியாவின் வீரராக ஆகாஷ் (ஹரியானா) மாலிக் ஆகியுள்ளார்.

- இந்தியாவானது மூன்று தங்கம், ஒன்பது வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் இளைஞர் ஒலிம்பிக் போட்டியை முடித்துள்ளது.

### தங்கப் பதக்கம் வென்றோர்

- ஆண்களுக்கான 62 கிலோ பளு தூக்கும் பிரிவில் வென்று ஜெரேமி லால்ரின்னுங்கா தங்கப் பதக்கத்தை வென்ற முதலாவது இந்தியரானார்.
- மனு பாகேர் - தங்கம் (பெண்களுக்கான 10 மீட்டர் காற்று கைத்துப்பாக்கி)
- சவுரப் சவுத்ரி - தங்கம் (ஆண்களுக்கான 10 மீட்டர் காற்று கைத்துப்பாக்கி)

## 2018 பார்முலா த்ரீ ஐரோப்பிய பந்தயம்

- பார்முலா ஒன் சாம்பியனான மைக்கேல் சூமேக்கரின் 19 வயதான மகன் மிக் சூமேக்கர் ஜெர்மனியின் ஹாகென்ஹெய்மில் 2018 ஆம் ஆண்டிற்கான ஐரோப்பியப் பந்தயத்தின் பார்முலா த்ரீ பட்டத்தை வென்றுள்ளார்.
- மிக் சூமேக்கர் அன்றைய ஆட்டத்தின் இரண்டாவது பந்தயத்தில் இரண்டாவது நிலையோடு வெற்றி பெற்றார். மேலும் தனது முதல் இளையோர் சாம்பியன்சிப்பை 347 புள்ளிகளுடன் வென்றார்.
- தனது முதல் F3 வெற்றியுடன் அவர் FIA சூப்பர் லைசன்ஸ் என்ற உரிமைக்கு தகுதி பெற்றுள்ளார்.
- FIA சூப்பர் லைசென்ஸ் என்பது பார்முலா ஒன் பந்தயங்களில் கலந்து கொள்வதற்கான முன்கூட்டிய தேவையாகும்.

## அதிகமாக சம்பளம் பெறும் தடகள வீரர்

- கேனலோ அல்வரேஸ், விளையாட்டு வரலாற்றிலேயே முதன்முறையாக மிகப்பெரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.



- 5 ஆண்டுகளுக்கான 11 குத்துச் சண்டைப் போட்டிகளுக்காக ‘ஸ்போர்ட்ஸ் ஸ்ட்ரீமிங்

சர்வீஸ் DAZN' உடனான கேன்லோ அல்வரேஸின் ஒப்பந்த மதிப்பு 365 மில்லியன் டாலர் ஆகும்.

## விஜய் ஹசாரே டிராபி 2018-19 (கிரிக்கெட்)

- ❖ மும்பை அணியானது டெல்லி அணியை 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி தனது 3வது விஜய் ஹசாரே டிராபி பட்டத்தை பெங்களூருவின் M. சின்னசாமி விளையாட்டு அரங்கத்தில் வென்றது.
- ❖ இதற்கு முன்னர் 2006-2007 ஆம் ஆண்டில் ராஜஸ்தானைத் தோற்கடித்து மும்பை அணியானது வென்றது.
- ❖ தமிழ்நாடு அணியானது 5 முறை டிராபியை வென்று மிக வெற்றிகரமான அணியாக உள்ளது.

## டென்மார்க் ஓபன் BWF சூப்பர் 750 போட்டித் தொடர்

- ❖ டென்மார்க்-இன் ஓடென்ஸ்-ல் நடைபெற்ற டென்மார்க் ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதலிட ஆட்டக்காரரான சீன தைபேவின் தாய் ஜீ யிங்-கிடம் இந்தியாவின் பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நெய்வால் தோல்வியுற்றார்.
- ❖ இதன்மூலம் இவர் சீன தைபேயிலிருந்து டென்மார்க் ஓபன் பட்டத்தை வென்ற முதல் பேட்மிண்டன் வீரர் என்ற புதிய வரலாற்றைப் படைத்துள்ளார்.
- ❖ இந்திய பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நெய்வால் தாய் ஜீ-வை 2013-ல் கடைசியாகத் தோற்கடித்தார்.

## 2018 மோட்டோ GP உலக சாம்பியன்

- ❖ ஜப்பானின் மோட்டிகியில் நடைபெற்ற ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸை வென்ற பிறகு 2018 மோட்டோ ஜிபியின் உலக சாம்பியனாக ரெப்சல் ஹோண்டாவின் மார்க் மார்க்கஸ் வெற்றி வாகை சூடியுள்ளார்.




- ஹோண்டா ஓட்டுநரான இவர் ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸில் டுகாட்டியின் ஆண்ட்ரியா டோவிஸியோஸோவுக்கு எதிரான பந்தயத்தில் கடைசிப் பந்தயத்தின் 4வது போட்டியில் வெற்றி பெற்றார்.
- இது இவரது 7வது உலக சாம்பியன்ஷிப் பட்டம் மற்றும் ப்ரீமியர் வகுப்புத் தொடரில் 5வது உலக பட்டம் ஆகும்.

## சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 10,000 ரன்களை வேகமாக அடைதல்


- இந்திய கிரிக்கெட் அணித் தலைவரான விராட் கோலி சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் 10000 ரன்களை துரிதமாக கடந்து சாதனை படைத்துள்ளார்.
- இவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக தனது 205வதுப் போட்டியில் இச்சாதனையைப் படைத்தார்.
- 2001ம் ஆண்டு ஆஸ்திரேலியாவிற்கு எதிராக தமது 259வதுப் போட்டியில் 10,000 ரன்களை கடந்த சச்சின் டெண்டுல்கரின் சாதனையை 29 வயதான கோலி முறியடித்தார்.
- ஒருநாள் கிரிக்கெட்டில் 10,000 ரன்களை கடந்த 5வது இந்திய வீரர் கோலி ஆவார்.
- கோலியைத் தவிர டெண்டுல்கர், சவுரவ் கங்குலி, ராகுல் டிராவிட், MS தோனி ஆகியோரும் ஒருநாள் கிரிக்கெட்டில் 10000 ரன்களை கடந்தவர்களாவர்.

## உலக மல்யுத்த சாம்பின்ஷிப்

- மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா, ஹங்கேரியின் புத்தபெஸ்டில் நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பின்ஷிப் போட்டியில் 65 கிலோ எடைப்பிரிவின் இறுதிப் போட்டியில் ஜப்பானின் டகுடோ ஒடோகுரோ என்பவரிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றிருக்கின்றார்.
- உலகளவில் இது அவருக்கு இரண்டாவதுப் பதக்கமாகும். 2013 ஆம் ஆண்டின் இறுதிப்

போட்டியில் பஜ்ரங் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.

- இவர் உலக சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்ற நான்காவது இந்தியர் ஆவார்.
- 19 வயதில் ஒடோகுரோ ஜப்பானின் மிக இளைய உலக சாம்பியனாக உருவெடுத்துள்ளார்.




- நாட்டின் புகழ்பெற்ற மல்யுத்த வீரரான சுஷில் குமார், உலகப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற ஒரே இந்தியர் ஆவார். அவர் 2010 ஆம் ஆண்டில் மாஸ்கோவில் 66 கிலோ எடைப்பிரிவில் நடந்த போட்டியில் இதைச் சாதித்தார்.

## உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் 2018

- ஹங்கேரியின் புத்தபெஸ்டில் அக்டோபர் 20 முதல் அக்டோபர் 28 வரை உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் கூட்டுப் போட்டிகளின் 15வது பதிப்பான 2018 ஆம் ஆண்டிற்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன.
- இந்த முறைசாரா உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியானது ஐக்கிய உலக மல்யுத்த மன்றத்தால் நடத்தப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டிற்கான போட்டிகளில் ஜப்பான் பெரும்பாலான பதக்கங்களைப் பெற்றுள்ளது. ஜப்பான் 10 பதக்கங்களைப் பெற்றுள்ளது. இரஷ்யா 8 பதக்கங்களுடன் 2வது இடத்தில் உள்ளது.
- இந்தியா 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் என மொத்தம் 2 பதக்கங்களை வென்று 17 வது இடத்தில் உள்ளது.
- பாஜ்ராங் புனியா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- பூஜா தண்டா வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் பெற்ற 4வது இந்தியப் பெண்மணியாக பூஜா தண்டா உருவெடுத்துள்ளார்.

## WBL உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் 2018

- இங்கிலாந்தின் லீட்ஸில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான WBL (World Billiards Limited) உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த சவுரவ் கோத்தாரி வெற்றி பெற்றுள்ளார்.
- சவ்ரவ் கோத்தாரி இறுதிப் போட்டியில் சிங்கப்பூரைச் சேர்ந்த பீட்டர் கில்கிறிஸ்டை வீழ்த்தி 2018 ஆம் ஆண்டிற்கான உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- சவ்ரவ் கோத்தாரி என்பவர் முன்னாள் தேசிய மற்றும் ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன் ஆவார்.

## டென்மார்க் ஓபன்

- டென்மார்க்கின் ஓடென்சில் நடைபெற்ற டென்மார்க் ஓபன் போட்டியில் பஞ்சாப்பைச் சேர்ந்த சர்வதேச பாரா பூப்பந்தாட்ட வீரரான சஞ்சீவ் குமார் 2 தங்கப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதக்கம் ஆகியவற்றை வென்றுள்ளார்.
- இவர் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் லுகா ஒல்கியாடி என்பவரை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் இவர் பிரேசிலின் மார்சிலோ ஆல்வீஸ் என்பவருடன் இணைந்து இஸ்ரேலைச் சேர்ந்த அமிர் வெவி மற்றும் மோசா ஆகியோரை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## வாலன்சியா பாதி மாரத்தான்

- கென்யாவின் நீண்டதூர ஓட்ட வீரரான ஆபிரகாம் கிபிதும் ஸ்பெயினில் நடந்த பாதி மாராத்தான் போட்டியின் ஆண்கள் பந்தயத்தில் பாதி மாராத்தானிற்கான ஒரு புதிய உலக சாதனையாக 58 நிமிடங்கள் 18 நொடிகளில் சாதனை படைத்து வென்றார்.
- முந்தைய சாதனையானது 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் லிஸ்பன் பாதி மாராத்தான் போட்டியில் 68 நிமிடங்கள் 23 விநாடிகளில் தூரத்தைக் கடந்த எத்தியோப்பியாவின் ஜெர்சேனாய் சுதேசி என்பவரது சாதனையாகும்.




## ஸ்விஸ் உள்ளரங்க டென்னிஸ்

- சுவிட்சர்லாந்தில் பசேலில் நடந்த ஸ்விஸ் உள்ளரங்க இறுதிப் போட்டியில் தனது ATP பந்தயத்தின் 99வது பதக்கத்தை ரோஜர் பெடரர் வென்றார்.
- ரோஜர் பெடரர் இறுதிப் போட்டியில் மரியஸ் கோப்பிலைத் தோற்கடித்து தனது 9வது ஸ்விஸ் உள்ளரங்கப் பதக்கத்தை வென்றிருக்கின்றார்.



- புதிய உலக சாதனைக்கு இவர் இன்னமும் 10 வெற்றிகளை மட்டுமே குறைவாக கொண்டுள்ளார்.
- ஒற்றையர் பதக்கங்களின் உச்சகட்ட சாதனையாளர் பட்டியல் ஜிம்மி கானர்ஸ் (109 பதக்கங்கள்) என்பவரை முதலிடத்தில் கொண்டிருக்கின்றது.

## ஆஸ்திரேலியன் மோட்டோ கிராண்ட் பிரிக்ஸ்

- ஆஸ்திரேலியாவில் நடந்த ஆஸ்திரேலியன் மோட்டோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் மாவேரிக் வினாலிஸ் வெற்றி பெற்றுள்ளார்.
- இது இந்தப் பருவத்தில் மாவேரிக் வினாலிஸின் (யமஹா) முதலாவது வெற்றியாகும்.
- இத்தாலியின் ஆண்ட்ரியா இயாநந்நோன் (சுசூகி) இரண்டாவதாக வந்தார். 3வது இடம் இத்தாலியின் ஆண்ட்ரியா டோவிஜியோசோ (டுகாடி) என்பவரால் பிடிக்கப்பட்டது.

## கிறிஸ் எவர்ட் பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் முதலாவது உலகக் கோப்பை

- உலகின் முதல்நிலை வீரரான சிமோனா ஹலெப் கிறிஸ் எவர்ட் பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் முதலாவது உலகக் கோப்பையின் முதல் வெற்றியாளராக உருவெடுத்துள்ளார்.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அவர் உலகின் முதல்நிலை வீரர் என்று தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளார்.
- கிறிஸ் எவர்ட் முதலாவது உலகக் கோப்பை என்ற பெயரானது 1975 ஆம் ஆண்டு நவம்பர் 3-ம் தேதியன்று உலக டென்னிஸ் சங்கத்தின் உலகின் முதல்நிலை வீரர் என்ற தகுதியை முதல்முறையாக அடைந்த கிறிஸ் எவர்ட் என்ற வீரரின் பெயரிலிருந்து எடுத்து வைக்கப் பட்டிருக்கின்றது. அவர் தொடர்ந்து 260 வாரங்களாக முதல் இடத்திலேயே இருந்தார்.

# முக்கிய தினங்கள்

## உலக இருதய தினம் - செப்டம்பர் 29

- ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 29-ம் தேதி இருதய நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த உலக இருதய தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2018 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “உங்கள் இருதயமும் எங்கள் இருதயமும்” (Your heart, my heart).
- இது ஒரு வருடாந்திர நிகழ்வாக 2000-ம் ஆண்டு உலக இருதய கூட்டமைப்பால் ஏற்படுத்தப்பட்டது.
- ஆரம்பத்தில் உலக இருதய தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை அனுசரிக்கப்பட்டது. ஆனால் 2011ம் ஆண்டு முதல் செப்டம்பர் 29-ம் தேதி அதற்கான தினமாக நிர்ணயிக்கப்பட்டது.

## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று இரண்டாவது சர்வதேச மொழிபெயர்ப்பு தினமானது ஐக்கிய நாடுகள் அவையால் அனுசரிக்கப்பட்டது.
- உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகை செய்து வளர்ச்சிற்கு வழிவகுக்குகின்ற சர்வதேச இராஜதந்திரப் பணிகளில் மொழி வல்லுனர்களாக பணியாற்றுகின்ற போற்றப்படாத மொழி பெயர்ப்பாளர்களின் பங்களிப்பை இத்தினம் அங்கீகரிக்கிறது.
- 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் ஐ.நா. பொதுச் சபையால் நிறுவப்பட்டது.
- மொழிபெயர்ப்பாளர்களின் தலைவராக கருதப்படும் பைபிள் மொழிபெயர்ப்பாளர் செயின்ட் ஜெரோம் என்பவரின் நினைவாக செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## உலக வாழ்விட தினம் - அக்டோபர் 01

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதலாவது திங்களன்று உலக வாழ்விட தினம் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று உலக வாழ்விட தினம் அனுசரிக்கப்பட்டது. இதன் கருத்துரு, "நகராட்சி திடக் கழிவு மேலாண்மை" என்பதாகும்.
- இந்நாளின் நோக்கமானது போதுமான தங்கும் இடத்திற்காக நகரங்கள், சிறுநகரங்கள் மற்றும் அடிப்படை மனித உரிமைகளின் நிலைமைகளை பிரபலிப்பதாகும்.
- 1985 ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தின் மூலம் ஐ.நா பொதுச் சபையால் இத்தினம் ஏற்படுத்தப்பட்டது. இத்தினம் முதன்முறையாக 1986 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

## சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01


- முதியோர்களை தவறாக நடத்துதல் மற்றும் வயது முதிர்வு போன்ற முதியோர்களை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1 அன்று சர்வதேச முதியோர் தினம் (International Day of Older Persons) அனுசரிக்கப்படுகிறது.
- மேலும் இத்தினத்தின் நோக்கம் சமூகத்திற்கு முதியோர்கள் ஆற்றிய பங்களிப்பை ஊக்கப்படுத்துவதாகும்.
- இந்த ஆண்டின் கருத்துரு, "மனித உரிமைகளுக்கான பழைய போராளிகளைக் கொண்டாடுதல்".
- 1990 ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் ஐ.நா. பொதுச் சபையால் சர்வதேச முதியோர் தினம் ஏற்படுத்தப்பட்டது.

## சர்வதேச காபி தினம் - அக்டோபர் 01

- காபியை பானமாக அனுசரிக்க மற்றும் ஊக்கப்படுத்த ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1 அன்று சர்வதேச காபி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச காபி அமைப்பானது "காபித் துறையில் பெண்கள்" என்ற சிறப்பான கருத்துருவை இந்த வருடத்திற்காகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- சர்வதேச காபி தினம் எப்போது தொடங்கப்பட்டது என்று சரியாக தெரியவில்லை. அனைத்து ஜப்பான் காபி மன்றத்தினால் 1983 ஆம் ஆண்டு ஜப்பானில் முதன்முறையாக சர்வதேச காபி தினம் அனுசரிக்கப்பட்டது.
- காபி தினத்தின் அதிகாரப்பூர்வத் தேதி சர்வதேச காபி அமைப்பினால் (ICO - International Coffee Organisation) ஏற்றுக் கொள்ளப்பட்டு, 2015-ஆம் ஆண்டு இத்தாலியின் மிலனில் ஆரம்பிக்கப்பட்டது.

## சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 2

- மகாத்மா காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் 2 அன்று உலகம் முழுவதும் சர்வதேச அகிம்சை தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினம் கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு மூலம் அகிம்சைக்கான கொள்கைகளை ஊக்கப்படுத்த விழைகிறது. ஐ.நா-வில் உறுப்பினராக உள்ள அனைத்து நாடுகளும் இத்தினத்தை அனுசரிக்கின்றன.




- இந்தியாவில் இத்தினம் காந்தி ஜெயந்தி தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு

மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த தினமாகும்.

❖ 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் ஐ.நா. பொதுச் சபையால் இத்தினம் ஏற்படுத்தப்பட்டது.

## உலக விலங்குகள் தினம் - அக்டோபர் 04

❖ உலகம் முழுவதும் விலங்குகளின் மதிப்பை உயர்த்துவதன் மூலம் விலங்குகளின் நலம் சார்ந்த தரங்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 4 அன்று உலக விலங்குகள் தினம் (WAD - World Animal Day) அனுசரிக்கப்படுகிறது.

❖ இத்தினம் ஹென்றிச் ஜிம்மர்மன் என்பவரால் தொடங்கப்பட்டது. இவர் ஜெர்மனியின் பெர்லினில் உள்ள விளையாட்டு அரங்கில் 1925 ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று முதலாவது உலக விலங்குகள் தினத்தை நடத்தினார்.

❖ இந்த தினமானது 1929 ஆம் ஆண்டு முதன்முறையாக அக்டோபர் 4க்கு மாற்றப்பட்டது.

❖ அக்டோபர் 4 ஆம் தேதியானது விலங்குகள் நல ஆர்வலரான அசிசி பிரான்சிஸின் விருந்து தினத்தைக் குறிக்கிறது.

❖ இத்தினம் 2003 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய இராஜ்ஜியத்தை அடிப்படையாகக் கொண்ட விலங்குகள் நல அறக்கட்டளையான 'நேச்சர்வாட்ச் பவுண்டேஷன்' (Naturewatch Foundation) என்ற அமைப்பால் நடத்தப்படுகிறது.

## உலக ஆசிரியர்கள் தினம் - அக்டோபர் 05

❖ உலக ஆசிரியர்கள் தினம் (WTD - World Teacher's Day) ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 05 அன்று அனுசரிக்கப்படுகிறது. இத்தினம் சர்வதேச ஆசிரியர்கள் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

❖ 2018 ஆம் ஆண்டிற்காக யுனெஸ்கோ ஏற்றுக் கொண்டுள்ள கருத்துரு: "கல்வி உரிமை என்பது தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் உரிமையாகும்"

❖ யுனிசெப் (UNICEF - United Nations Children Fund), யுஎன்டிபி (UNDP - United Nations Development Programme), சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச கல்வி (Education International) என்ற நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ 1994 ஆம் ஆண்டு முதல் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ மேலும் ஆசிரியர்களின் மதிப்பு தொடர்பான 1966 ஆம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பு/யுனெஸ்கோ பரிந்துரைகள் மீது கையொப்பமிட்டதின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

## உலக விண்வெளி வாரம் (WSW - World Space Week) - அக்டோபர் 4 - 10

❖ உலக விண்வெளி வாரமானது உலகின் பல்வேறு பகுதிகளில் அக்டோபர் 4 முதல் 10 வரை அனுசரிக்கப்படுகிறது.

- 2018ம் ஆண்டின் கருத்துருவானது “விண்வெளி உலகத்தை ஐக்கியப்படுத்துகிறது” ( Space Unites the World) என்பதாகும்.
- உலக விண்வெளி வாரமானது அதிகாரப் பூர்வமாக “அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் ஒரு சர்வதேச கொண்டாட்டம் மற்றும் மனித குலத்தின் நலனுக்காக அவற்றின் பங்களிப்பு” (an international celebration of science and technology, and their contribution to the betterment of the human condition) என்று விவரிக்கப்படுகிறது.
- டிசம்பர் 6, 1999 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது உலக விண்வெளி வாரத்தை ஆண்டுதோறும் கொண்டாடப்படும் நிகழ்வாக அறிவித்தது.
- இந்தத் தேதிகளின் தேர்வானது விண்வெளி வரலாற்றில் கீழ்க்காணும் குறிப்பிடத்தக்க தேதிகளின் அங்கீகாரம் ஆகும்.
  - அக்டோபர் 4, 1957 - பூமியின் முதலாவது செயற்கைக்கோள் (மனிதனால் தயாரிக்கப்பட்ட) ஸ்புட்னிக் 1 ஏவப்பட்ட நாள்.
  - அக்டோபர் 10, 1967 – வெளிப்புற விண்வெளி ஒப்பந்தம் கையெழுத்தான நாள்.

## இந்திய வனவிலங்கு வாரம் - அக்டோபர் 2 - 8

- வனவிலங்குகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 முதல் 8 வரை நாடு முழுவதும் வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுகிறது.
- இது 1952-ம் ஆண்டில், தீர்க்கமான நடவடிக்கைகள் மூலம் வன உயிர்களைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கருத்துருவாக்கப்பட்டது.

## விமானப்படை தினம் - அக்டோபர் 8

- 86வது இந்திய விமானப்படை (IAF – Indian Air Force) தினமானது அக்டோபர் 8, 2018 அன்று அதன் அதிகாரப்பூர்வ துவக்க தினத்தை நினைவுகூறும் வகையில் கொண்டாடப்பட்டது.
- இந்த நாளின் கொண்டாட்டமானது தேசிய பாதுகாப்பின் ஒரு பகுதியாக இந்திய விமானப்படையைக் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க முற்படுகிறது.
- இந்திய விமானப்படையானது அமெரிக்கா, ரஷ்யா, சீனாவிற்கு அடுத்து 4வது மிகப்பெரிய விமானப்படையாகும்.
- அக்டோபர் 8, 1932-ல் முதன்முறையாக விமானப்படை தினமானது அதிகாரப்பூர்வமாக இந்திய பேரரசின் துணை விமானப்படையால் கொண்டாடப்பட்டது.

## உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 9

- உலக தபால் தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 9 அன்று உலகளாவிய தபால் யூனியன் நிறுவப்பட்டதன் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- இதன் நோக்கமானது மக்களின் அன்றாட வாழ்க்கையில் தபால் துறையின் பங்கு பற்றியும் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பு பற்றியும்

விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

- ஆனால் இந்தியாவில் அக்டோபர் 10-ம் நாள் உலக தபால் தினத்தின் நீட்டிப்பாக கொண்டாடப்படுகிறது.
- இந்த நாள் உலகளாவிய தபால் யூனியன் (Universal Postal Union-UPU) ஆனது 1874 ஆம் ஆண்டு ஸ்விட்சர்லாந்தின் பெர்ன் நகரில் தொடங்கப்பட்டதை நினைவூட்டுகிறது.
- UPU ஆனது 1948 ஆம் ஆண்டு ஐ.நா.வின் நிறுவனமாக மாறியது.
- இந்நாளானது, ஜப்பானின் டோக்கியோவில் 1969ல் நடைபெற்ற உலகளாவிய தபால் யூனியன் கூடுகையில் அறிவிக்கப்பட்டதிலிருந்து வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.


## உலக மனநல நாள் - அக்டோபர் 10

- உலக மனநல நாள் 2018 ஆனது உலகெங்கிலும் அக்டோபர் 10 ஆம் நாள் அனுசரிக்கப்பட்டது.
- மனநல ஆரோக்கியம் மற்றும் ஒரு நபரின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் மன நலனின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டின் மனநல நாளானது 'மாறும் உலகில் இளைஞர்கள் மற்றும் மனநலம்' (Young people and mental health in a changing world) என்ற கருத்துருவுடன் கடைப்பிடிக்கப்பட்டது.
- உலக மனநல நாள் 2018-ன் கருத்துருவானது, பருவ வயதினர்கள் மீதும் அவர்கள் கையாளும் மனநலப் பிரச்சினைகள் மீதும் கவனம் செலுத்துகிறது.




## சர்வதேச பெண் குழந்தைகள் தினம் - அக்டோபர் 11

- 2011ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அக்டோபர் 11ஆம் தேதியை சர்வதேச பெண் குழந்தைகள் தினமாக அறிவிப்பதற்கான தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- 2012ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 11ஆம் தேதி சர்வதேச பெண் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- 2018ஆம் ஆண்டின் கருத்துரு - பெண் குழந்தைகளுடன்; திறனுள்ள சிறுமிகள் படை.
- "பெண் குழந்தைகளுடன் : திறனுள்ள சிறுமிகள் படை" என்ற கருத்துருவுடன் சர்வதேச பெண் குழந்தைகள் தினமானது பெண் குழந்தைகளின் வேலை வாய்ப்பிற்கான திறன்களை அடைய அவர்களுக்கான தேவைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்து குரல் கொடுக்கும் பங்குதாரர் மற்றும் கூட்டாளிகள் ஆகியோர் இணைந்து ஒரு ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் முயற்சியின் தொடக்கத்தைக் குறிக்கிறது.




## உலக உடல் பருமன் தினம்

- உலக உடல்பருமன் தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 11ம் தேதியன்று உலகம் முழுவதும் உலகளாவிய உடல் பருமன் பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வுகளை ஊக்குவிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த வருடத்திற்கான கருத்துரு - "இத்தருணம் எடைப் பிரச்சினையை குறைப்பதற்கானதாகும்".
- இத்தினம் உலக சுகாதார மையத்துடன் அலுவல் ரீதியாக தொடர்புகள் கொண்ட லாப நோக்கற்ற அமைப்பான உலக உடல் பருமன் கூட்டமைப்பால் நடத்தப்படுகின்றது.
- மேலும் இந்த அமைப்பு உடல் பருமனுக்கான லான்செட் ஆணையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் அமைப்பாகும்.
- முதல் உலக உடல்பருமன் தினமானது 2015ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது.

## உலக முட்டை தினம் - அக்டோபர் 12

- ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமை உலக முட்டை தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- இத்தினம் 1996ம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச முட்டை ஆணையத்தால் ஒரு மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது.
- இத்தினம் முட்டைகளின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வையும் மனிதனின் ஊட்டச்சத்திற்கான முக்கியத்துவத்தையும் அதிகரிக்க எண்ணுகின்றது.

## தேசிய மனித உரிமைகள் ஆணைய வெள்ளி விழா - அக்டோபர் 12

- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது (NHRC - National Human Rights Commission) அக்டோபர் 12, 2018 அன்று தனது வெள்ளி விழாவைக் (25வது ஆண்டு) கொண்டாடியது. NHRC ஆனது அக்டோபர் 12,1993-ல் நிறுவப்பட்டது.
- இந்த வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள் புதுடெல்லியில் நடைபெற்றன.
- NHRC ஆனது சிறப்பு வெள்ளி விழா முத்திரையை (Logo) வெளியிட்டது. மேலும் “NHRC: 25 வருடங்கள் பில்லியன் நம்பிக்கைகள்” என்ற தலைப்பிலான 25 வருட பயணத்தின் நிகழ்வுகளைக் கொண்ட ஆவணப்படத்தை செயல்நிலைப்படுத்தியது.




## உலக புலம்பெயரும் பறவைகள் தினம் - அக்டோபர் 13

- உலக புலம்பெயரும் பறவைகள் தினமானது அக்டோபர் 13, 2018 அன்று உலகமெங்கும் அனுசரிக்கப்பட்டது.
- 2017-ல் சர்வதேச புலம்பெயர் பறவைகள் தினம் (IMBD - International Migratory Bird Day) மற்றும் உலக புலம்பெயர் பறவைகள் தினம் (WMBD - World Migratory Bird Day) ஆகியவை இணைக்கப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டுமுதல் உலக புலம்பெயர் பறவைகள் தினமானது மே மற்றும் அக்டோபர் மாத இரண்டாவது சனிக்கிழமைகளில் வருடத்திற்கு இரண்டுமுறை இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2018 ஆம் ஆண்டு மே 12 மற்றும் அக்டோபர் 13 ஆகிய தேதிகளில் அனுசரிக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டின் WMBD-ன் கருத்துரு: "பறவை பாதுகாப்பிற்காக நமது குரல்களை ஒன்றிணைத்தல் மற்றும் பறவைகளின் வருடம்" (Unifying our Voices for Bird Conservation' and also Year of the Bird).

## ராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸ் - அக்டோபர் 15

- விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 15-ம் நாள் ராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.
- 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் நாளை ராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸ் என அனுசரிக்க அமைச்சகமானது முடிவு செய்தது.

## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15

- கிராமப்புறப் பெண்களின் முக்கியப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15-ம் தேதி சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2018-ம் ஆண்டிற்கான கருத்துரு: நீடித்த கட்டமைப்பு, சேவைகள் மற்றும் பாலின சமத்துவத்திற்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புறப் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளித்தல்.
- 2017-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ.நா. பொதுச்சபையில் (UNGA – United Nations General Assembly) தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் உருவாக்கப்பட்டது.
- இது முதன்முதலில் 2018 அக்டோபர் 15 -ல் அனுசரிக்கப்பட்டது.

## உலக மாணவர்கள் தினம் - அக்டோபர் 15

- இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் APJ அப்துல் கலாம் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15ம் தேதி உலக மாணவர்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- அக்டோபர் 15-ம் நாள் உலக மாணவர்கள் தினமாக 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளால் (UN – United Nations) அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச உணவு தினம் - அக்டோபர் 16

- 1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தொடங்கப்பட்ட நாளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 ஆம் நாள் உலக உணவு தினமாக கொண்டாடப்படுகிறது.




- இவ்வருடத்தின் கருத்துருவானது: நமது செயல்களே நமது எதிர்காலம். பட்டினியற்ற உலகம் 2030ல் சாத்தியமாகும்.

## உலக மயக்கவியல் தினம் - அக்டோபர் 16

- உலக மயக்கவியல் தினமானது 1846 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் அன்று ஈத்தர் மயக்கவியலின் முதல் செயல்விளக்க வெற்றியின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- மயக்கவியலானது அமெரிக்க பல் மருத்துவரான சர் வில்லியம் மோர்டன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலக மயக்கவியல் சமுதாயத்தின் சம்மேளனமானது, 150 நாடுகளில் உள்ள 134க்கும் மேற்பட்ட சமூகங்களிலிருந்து மயக்கவியலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உலக மயக்கவியல் தினத்தை ஒவ்வொரு வருடமும் கொண்டாடுகிறது.

## வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் - அக்டோபர் 17

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 17-ம் நாள் வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டுடன் ஐ.நா. பொதுச் சபையானது அக்டோபர் 17-ஐ வறுமை ஒழிப்பிற்கான சர்வதேச தினமாக அறிவித்து 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.
- இந்த ஆண்டின் கருத்துரு : மனித உரிமைகள் மற்றும் கௌரவத்திற்கான உலகளாவிய மதிப்பை உள்ளடக்கிய உலகத்தை கட்டமைக்க பின்தங்கிய மனிதர்களுடன் இணைந்து முன்னேறுதல்.




- மேலும், மனித உரிமைகள் பற்றிய உலகளாவியப் பிரகடன அறிவிப்பின் 70ஆம் ஆண்டு நிறைவாக இந்த ஆண்டு அமைவது குறிப்பிடத்தக்கது.

## தேசிய ஆயுர்வேத தினம் - அக்டோபர் 17

- தேசிய ஆயுர்வேத தினமானது நாடு முழுவதும் தன்வந்திரி ஜெயந்தியான அக்டோபர் - 17 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஆயுர்வேதத்தின் தெய்வீக பரப்புநராக தன்வந்திரி கருதப்படுகிறார்.
- ஆயுஷ் அமைச்சகத்தால் ஒவ்வொரு வருடமும் தேசிய ஆயுர்வேத தினத்தன்று தேசிய தன்வந்திரி ஆயுர்வேதா விருது வழங்கப்படுகிறது.




- மேலும் ஆயுஷ் அமைச்சகமானது 2018 நவம்பர் 4 அன்று ஆயுஷ்-ல் முதலீடு சம்பந்தமான தேசிய அளவிலான முதல் உச்சிமாநாட்டை புது டெல்லியில் நடத்தவுள்ளது.
- நிதி ஆயோக் மற்றும் தொழில் & கொள்கை ஊக்குவிப்புத் துறை ஆகியோர் இந்த முதல் உச்சி மாநாட்டின் பங்குதாரர்கள் ஆவர்.

## தேசிய ஒற்றுமை நாள் - அக்டோபர் 20

- இந்தியாவில் தேசிய ஒற்றுமை தினமானது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 20 ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.
- நமது நாட்டின் பரந்த எல்லைகளை பாதுகாக்கும் ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- அக்டோபர் 20, 1962 ல் சீனா இந்தியாவைத் தாக்கத் தொடங்கியது. அதனையடுத்து சீன-இந்தியப் போர் தொடங்கியது.

## உலக எலும்புப் புரை நாள் - அக்டோபர் 20

- உலக எலும்புப் புரை தினமானது (WOD - World Osteoporosis Day) ஆண்டுதோறும் அக்டோபர் 20 அன்று எலும்புப் புரை மற்றும் எளிதில் ஏற்படக்கூடிய எலும்புமுறிவு குறித்து உலகளாவிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாளானது எலும்புப் புரை நோய் தடுப்பு, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- அக்டோபர் 20, 1996 அன்று தொடங்கப்பட்ட இந்த நாளானது 1997 ஆம் ஆண்டு முதல் சர்வதேச எலும்புப் புரை அமைப்பு மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில், உலக சுகாதார நிறுவனமானது உலக எலும்புப் புரை தினத்தின் இணை ஏற்பாட்டாளராக செயல்பட்டது.
- எலும்புப் புரை என்பது எலும்புகளை பலவீனமாகவும் எளிதில் நொறுங்கக் கூடியதாகவும் மாற்றக்கூடிய ஒரு நோயாகும், இது எலும்புகள் உடையும் ஆபத்தை அதிகரிக்கிறது.

## காவல்துறை நினைவு தினம் - அக்டோபர் 21

- காவல்துறை தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அக்டோபர் 21-ம் தேதியன்று ஒவ்வொரு வருடமும் காவல்துறை நினைவு தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1959 ஆம் ஆண்டில் சீனாவுடனான எல்லைப் பகுதிகளை பாதுகாப்பதில் தங்கள் உயிர்களை தியாகம் செய்த 10 காவல்துறை அதிகாரிகளின் தியாகத்தை இத்தினம் நினைவு படுத்துகின்றது.
- 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் காவல்துறை பொது ஆய்வாளர்களின் (Inspector General of Police) வருடாந்திர மாநாட்டில் காவல் துறை நினைவு தினம் ஏற்படுத்தப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டிலிருந்து டெல்லியில் உள்ள சாணக்கியபுரியில் காவல் துறை நினைவகத்தில் தேசிய அளவிலான காவல்துறை நினைவு தின அணிவகுப்பு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24

- ஐக்கிய நாடுகள் சாசனம் நடைமுறைக்கு வந்து 73வது ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிப்பிடும் வகையில் அக்டோபர் 24ம் தேதி உலகம் முழுவதும் ஐக்கிய நாடுகள் தினம் அனுசரிக்கப்பட்டது.
- 1945ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிறகு ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திய சாதனைகள் எல்லாவற்றையும் நினைவில் கொண்டு அனுசரிப்பதற்காக 1948ம் ஆண்டு முதல் இத்தினம் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- 2018ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் தின நிகழ்ச்சியானது நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் உள்ள பொது அவைக் கூடத்தில் நடத்தப்பட்டது.
- ஐக்கிய நாடுகளுக்கான இந்தியாவின் நிரந்தர தூதரகத்தால் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- 2018ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் தினத்தின் கருத்துரு "அமைதி மற்றும் அகிம்சைக்கான பாரம்பரியங்கள்" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் தினம் என்பது அக்டோபர் 20 முதல் 26 வரை கொண்டாடப்படும் ஐக்கிய நாடுகள் வாரத்தின் ஒரு பகுதியாகும்.

## உலக வளர்ச்சிக்கான தகவல் தினம் - அக்டோபர் 24

- ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 24ம் தேதி உலக வளர்ச்சிக்கான தகவல் தினம் (World Development Information Day - WDID) அனுசரிக்கப்படுகின்றது.
- உலகின் வளர்ச்சிக்கான பிரச்சினைகளை நோக்கி உலகத்தின் கவனத்தை ஈர்க்கவும் அவற்றை சரி செய்வதற்காக சர்வதேச ஒத்துழைப்பை பலப்படுத்தவும் இது எண்ணுகின்றது.
- 1972ம் ஆண்டிலிருந்து இத்தினம் ஐக்கிய நாடுகள் தினத்தோடுப் பொருந்திப் போகும் வகையில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால் (The United Nations Conference on Trade and Development - UNCTAD) முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை 1972ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக் கொண்டு உலக வளர்ச்சிக்கான தகவல் தினத்தை ஏற்படுத்தியது.

## உலக போலியோ தினம் - அக்டோபர் 24

- உலகம் முழுவதும் அக்டோபர் 24-ம் தேதி உலக போலியோ தினமானது போலியோ நோயால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.




- 2018 ஆம் ஆண்டிற்கான உலக போலியோ தினத்தின் கருத்துரு : "தற்பொழுதே போலியோவை நிறுத்துங்கள்" என்பதாகும்.
- இந்த தினம், 1955 ஆம் ஆண்டில் போலியோமெயிலிட்டிஸ் அல்லது போலியோவிற்கென்று முதலாவது வெற்றிகரமான தடுப்பு மருந்தைக் கண்டறிந்த ஜோனஸ் சால்க் என்ற அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர் மற்றும் வைரஸ் நிபுணரின் பிறந்த தினத்தை நினைவுபடுத்துகின்றது.
- உலக சுகாதார நிறுவனத்தின் படி 1988 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உலகளாவிய போலியோ ஒழிப்புத் திட்டம் 99 சதவிகிதம் அளவிற்கு போலியோவை ஒழித்திருக்கின்றது.
- தற்போதைய நிலவரப்படி, உலக நாடுகளில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜிரியா ஆகிய நாடுகளில் மட்டுமே போலியோ நோய் இருக்கின்றது.
- போலியோவை ஒழிப்பதற்கு 2 வகையிலான தடுப்பு மருந்துகள் உள்ளன.
    - வாய் வழியிலான போலியோ தடுப்பு மருந்து
    - வீரியம் அழிக்கப்பட்ட போலியோ தடுப்பு மருந்து
- வாய்வழியிலான போலியோ தடுப்பு மருந்து ஆல்பர்ட் சபீன் என்பவரால் உருவாக்கப்பட்டது.

## உலக கேட்பொலிக் காட்சிக்கான பாரம்பரிய தினம் - அக்டோபர் 27

- உலகம் முழுவதும் அக்டோபர் 27-ம் தேதி உலக கேட்பொலிக் காட்சிக்கான பாரம்பரிய தினம் அனுசரிக்கப்பட்டது.
- இத்தினம் கேட்பொலிக் காட்சிக்கான ஆவணங்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. மேலும் அந்த ஆவணங்களின் இழப்பைத் தடுக்கும் பொருட்டு அதனை எண்ணிலக்க அல்லது டிஜிட்டல் முறைக்கு மாற்றுவதற்கான அவசர நடவடிக்கைகளினுடைய தேவைகளின் அவசியம் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.

- 2018ம் ஆண்டிற்கான உலக கோட்பொலிக் காட்சிக்கான பாரம்பரியத் தினத்தின் கருத்துரு - "உங்கள் நிலை முன்னேறுகின்றது" என்பதாகும்.
- 2005 ஆம் ஆண்டு யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனம்/ UNESCO - United Nations Educational, Scientific and Cultural Organization) பொது மாநாடு அக்டோபர் 27-ம் தேதியை உலக கேட்பொலிக் காட்சிக்கான பாரம்பரிய தினமாக அறிவித்தது.

## 72வது காலாட்படை தினம் - அக்டோபர் 27

- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 27-ம் தேதி இந்தியாவில் 72வது காலாட்படை தினமாக அனுசரிக்கப்பட்டது.
- சுதந்திரத்திற்குப் பிறகான காலாட்படையின் முதல் நடவடிக்கை காரணமாக இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 27-ம் தேதி காலாட்படை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 27-ம் தேதி, சீக்கியப் படைப் பிரிவின் முதல் படைப்பிரிவைச் சேர்ந்த இந்திய ராணுவ வீரர்கள் ஸ்ரீநகரில் தரையிறங்கி பாகிஸ்தான் ராணுவத்தால் ஆதரிக்கப்பட்ட தீவிரவாதிகளிடம் சண்டையிட்டனர்.

## சர்வதேச அனிமேஷன் தினம் - அக்டோபர் 28

- உலகம் முழுவதும் அக்டோபர் 28 அன்று சர்வதேச அனிமேஷன் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அனிமேஷனின் சிறப்பை இத்தினம் சுட்டிக் காட்டி அனுசரிக்கிறது.
- ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அனிமேஷன் தினத்திற்கான விளம்பரப் பதாகையை உருவாக்குவதற்காக முக்கிய அனிமேஷன் கலைஞர்களை ASIFA வரவேற்கிறது.




- 2018 ஆம் ஆண்டின் சர்வதேச அனிமேஷன் தின விளம்பரப் பலகையானது ASIFA-ன் மெக்சிகோ பிரிவின் ரெனி கேஸ்டில்லோ மற்றும் அவரது அனிமேஷன் படப்பிடிப்புக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டது.

- 2002 ஆம் ஆண்டு ASIFA (அசோஷியேஷன் இண்டர்நேஷனலே டியு பிலிம் d' அனிமேஷன் அல்லது சர்வதேச அனிமேஷன் பட மன்றம்) அக்டோபர் 28 ஆம் தேதியை சர்வதேச அனிமேஷன் தினமாக அறிவித்தது.

## உலக பக்கவாத தினம் - அக்டோபர் 29

- பக்கவாதத்தைத் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் ஆதரவளித்தல் ஆகியவை மீதான விழிப்புணர்வை அதிகப்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 29-ம் தேதி உலக பக்கவாத தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- 2018 ஆம் ஆண்டின் உலக பக்கவாத தினத்திற்கான கருத்துரு: "பக்கவாதத்திற்குப் பிறகு மீண்டும் எழுந்திரு : பக்கவாதத்திற்குப் பிறகான வாழ்க்கைக்கு ஆதரவளி" என்பதாகும்.
- இத்தினத்தை அனுசரிப்பதற்கான அறிவிப்பு தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனில் அக்டோபர் 29, 2006-ல் நடந்த 5வது உலக பக்கவாத மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- பக்கவாதத்தின் முக்கிய அறிகுறிகள் "FAST" என்ற வார்த்தையின் மூலம் அறியப்படக் கூடும்.

## உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அக்டோபர் 31ம் தேதியை  உலக நகரங்கள் தினமாக அறிவித்தது.
- உலகளாவிய நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக உள்ளடக்கத்தில் நகர்ப்புறங்களின் பங்குகள் குறித்து விழிப்புணர்வை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- 2018 ஆம் ஆண்டு நகரங்கள் தினத்தின் கருத்துரு: "நீடித்த மற்றும் நெகிழ்திறன் கொண்ட நகரங்களைக் கட்டமைத்தல்" என்பதாகும்.
- உலக நகரங்கள் தினத்தின் பொதுவான கருத்துரு: "சிறந்த நகரம், சிறந்த வாழ்க்கை" என்பதாகும்.

## உலக சேமிப்பு நாள் / உலக சிக்கன நாள் - அக்டோபர் 31

- ❖ உலக சேமிப்பு தினம் அல்லது உலக சிக்கன நாள் அக்டோபர் 31 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ வங்கிகளில் தங்கள் பணத்தை சேமிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி இந்த நாளானது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ❖ உலக சேமிப்பு தினம் அல்லது சிக்கன தினமானது 1924ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி இத்தாலியின் மிலனோவில் முதலாம் சர்வதேச சேமிப்பு வங்கி (உலக சேமிப்பு வங்கிகள் சங்கம்) கூடுகையின் போது நிறுவப்பட்டது.
- ❖ இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி 1984ம் ஆண்டு அக்டோபர் 31 அன்று மறைந்ததையொட்டி இந்தியாவில் இந்த தினம் அக்டோபர் 30 அன்று கொண்டாடப்படுகிறது.

# இதரச் செய்திகள்

## சர்வதேச ரைபெய்சென் தொழிற்சங்கத்தின் மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்திய பெண்

- ❖ ஜெர்மனியின் சர்வதேச ரைபெய்சென் தொழிற்சங்கத்தின் (IRU - International Raiffeisen Union) மன்றத்திற்கு இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் நந்தினி ஆசாத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இம்மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்தியப் பெண்மணி இவராவார்.
- ❖ இவர் இந்தியப் பெண்கள் கூட்டுறவு அமைப்பின் (ICNW - Indian Co-operative Network for Women) தலைவர் ஆவார்.
- ❖ IRU என்பது உலகின் பழமையான கூட்டுறவு தொழிற்சங்கமாகும். மேலும் இது தேசிய கூட்டுறவு அமைப்புகளின் உலகளாவிய தன்னார்வ சங்கமாகும்.
- ❖ டாக்டர் ஆசாத் தலைமையிலான இந்தியப் பெண்கள் கூட்டுறவு அமைப்பானது தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா உள்ளிட்ட பல மாநிலங்களின் கூட்டுறவு அமைப்பாகும்.

## தேசிய நிதிச் செயல்பாடுகள் கண்காணிப்பு ஆணையத்தின் முதலாவது தலைவர்

- ❖ தேசிய நிதிச் செயல்பாடுகள் கண்காணிப்பு ஆணையத்தின் (NFRA - National Financial Reporting Authority) முதலாவது தலைவராக முன்னாள் இந்திய ஆட்சிப்பணி அதிகாரியான ரங்காச்சாரி ஸ்ரீதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இவர் 3 ஆண்டுகள் அல்லது 65 வயதை எட்டும் வரை NFRA-ன் தலைவராக செயல்படுவார்.
- ❖ மேலும் தேசிய நிதிச் செயல்பாடுகள் கண்காணிப்பு ஆணையத்தின் முழு நேரப்

பணியாளராக பிரசென்ஜித் முகர்ஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

- கணக்குத் தணிக்கையாளர்களை கண்காணிப்பதற்கான தனிச் சுதந்திர ஒழுங்குமுறை ஆணையமாக NFRA செயல்படும்.

## ஏரோ இந்தியா 2019

- ஏரோ இந்தியா 2019-ன் 12வது பதிப்பானது பெங்களூருவில் நடைபெறவிருக்கிறது.
- ஆசியாவின் மிகப்பெரிய இராணுவ வான்படை கண்காட்சியான ஏரோ இந்தியா இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.
- 1996 ஆம் ஆண்டு இந்த கண்காட்சி தொடங்கியதிலிருந்து பெங்களூரு இதை நடத்தி வருகிறது.
- 2019 ஆம் ஆண்டிற்கான ஏரோ இந்தியாவின் வலைதளம் (http://aeroindia.gov.in).

## ஒடிசா ஹாக்கி ஆண்கள் உலகக் கோப்பைக்கான அதிகாரப் பூர்வ சின்னம்

- ஒடிசா ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பையின் அதிகாரப்பூர்வ சின்னமாக "ஆலி" ஆமை அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒடிசாவின் கலிங்கா விளையாட்டு அரங்கில் நடைபெறும்.
- ஆலி ஆனது அழிந்துவரும் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகளை பிரதிபலிக்கிறது.
- 2017-ல் ஒடிசாவின் கலிங்கா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஆசிய தடகள சாம்பியன்ஷிப்புக்கான சின்னமாகவும் 'ஆலி' இருந்தது.

## இந்தியாவின் மிக உயர்ந்த மூவர்ண கொடி

- இந்தியாவின் மிக உயர்ந்த மூவர்ணக் கொடியை மும்பையில் உள்ள புகழ்பெற்ற மெஜஸ்டிக் ஹஜ் மாளிகையின் மேல்தளத்தில் மத்திய சிறுபான்மை நல அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி ஏற்றி வைத்தார்.
- இந்த தேசியக் கொடியானது 20x30 அடி அளவுடையது. தரைமட்டத்திலிருந்து 350 அடி உயரத்தில் இது பறக்க விடப்பட்டது.
- இந்தக் கொடியானது தெற்கு மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜா முனையத்தின் அருகில் உள்ள புகழ்பெற்ற கட்டிடத்தின் உச்சியில் 20 மீட்டர் உயரக் கம்பத்தில் ஏற்றப்பட்டது.
- இது நாட்டில் இதுவரையல்லாத அளவில் உயர்ந்த கட்டிடத்தின் உச்சியில் அதிக உயரத்தில் ஏற்றப்பட்ட மிக உயர்ந்த மூவர்ணக்கொடியாகும்.

## உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனை

- உலகின் மிகப்பெரிய புத்தக விற்பனையான 'பிக் பேட் வோல்ப் புக் சேல் துபாய்' (Big Bad

Wolf Book Sale Dubai) ஆனது துபாயின் எமிரேட்டில் 2018 அக்டோபர் 18-ல் தொடங்கப்பட்டது.

- 2009 ஆம் ஆண்டு மலேசியாவின் கோலாலம்பூரில் பிக்பேட் வோல்ப் புக்ஸ் நிறுவப்பட்டது.
- இது ஜகர்த்தா, மணிலா, சேபு, கொழும்பு, பாங்காங் மற்றும் தைபே உள்ளிட்ட பல ஆசிய நகரங்களில் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்றுள்ளது.

## 2018 ஆம் ஆண்டில் ஹெச்-1பி விசா வைத்திருப்பவர்கள்

- அமெரிக்கக் குடியுரிமை மற்றும் புலம்பெயர்வு சேவைகள் அறிக்கையின்படி (USCIS - U.S. Citizenship and Immigration Services), இவ்வாண்டு அக்டோபர் 5 ஆம் தேதி வரையில் ஹெச்-1பி விசா வைத்திருக்கும் 4 நபர்களில் மூன்று பேர் இந்தியர்கள் ஆவர்.
- இந்த அறிக்கை மிகப்பெரிய அளவில் பாலின வேறுபாடு உள்ளது என்பதை காட்டுகிறது. ஹெச் - 1பி விசா வைத்திருக்கும் நான்கு நபர்களில் ஒருவர் மட்டுமே பெண் ஆவார்.
- இந்தியர்களுக்கிடையே பாலின வேறுபாடு மிக அதிக அளவில் இருக்கிறது.
- அமெரிக்காவில் ஹெச் - 1பி விசா வைத்திருப்பவர்களில் 73.9 சதவீதம் பேர் இந்தியர்கள் ஆவர். இந்தியர்களுக்கு அடுத்த இடத்தில் சீனர்கள் உள்ளனர்.
- இந்தப் பட்டியலில் இந்தியா மற்றும் சீனாவுக்கு அடுத்து கனடா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் உள்ளன.

## இமயமலையின் 4 சிகரங்களுக்கு அடல் பிஹாரி வாஜ்பாயின் பெயர்

- கங்கோத்ரி பனிப்பாறைகளுக்கு அருகில் உள்ள 4 இமயமலைச் சிகரங்களுக்கு முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பெயர் சூட்டப்பட்டுள்ளன.
- இந்த சிகரங்கள் அடல் 1, 2, 3 மற்றும் 4 என்று பெயரிடப்பட்டுள்ளன. இவை 6557, 6566, 6160 மற்றும் 6100 மீட்டர் தொலைவில் கங்கோத்ரி பனிப்பாறைக்கு வலது புறமாக அமைந்துள்ளன.
- கர்னல் பிஷ்ட் தலைமையிலான மலையேறும் குழு சமீபத்தில் புதிதாக பெயரிடப்பட்ட சிகரங்களை அடைந்து ஒவ்வொரு சிகரத்திலும் மூவர்ணக் கொடியை ஏற்றின.
- கர்னல் பிஷ்ட் நேரு மலையேறும் கல்வி நிறுவனத்தில் (Nehru Institute of Mountaineering) முதல்வராக உள்ளார்.
- இந்த மலையேற்றமானது நேரு மலையேறும் கல்வி நிறுவனம் மற்றும் சுற்றுலாத் துறையால் இணைந்து நடத்தப்பட்டது.

## விஷ்வ சாந்தி அஹிம்சா சம்மேளன்

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், நாசிக்கிலிருந்து சுமார் 125 கி.மீ. தொலைவில் உள்ள சாதானா தாலுகாவின் மாங்கி துங்கியில் மூன்று நாள் ‘விஷ்வ சாந்தி அஹிம்சா சம்மேளன்’ என்ற சம்மேளனத்தைத் துவங்கி வைத்தார்.
- இது பகவான் ரிஷபதேவ் மூர்த்தி நிர்மாணக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.

- உத்திரப் பிரதேசத்தின் மொராதாபாத்தில் உள்ள தீர்த்தங்கர மஹாவீர் பல்கலைக் கழகத்திற்கு அவர் முதல் சர்வதேச 'பகவான் ரிஷபதேவ் விருது' என்ற விருதினை வழங்கினார்.

## UTS கைபேசி செயலி (முன்பதிவு அல்லாத பயணச்சீட்டு முறை)

- முன்பதிவு அல்லாத பயணச் சீட்டுகளை இணைய தளத்தில் வாங்குவதற்கான இந்திய ரயில்வேயின் UTS (Unreserved Ticketing System) கைபேசி செயலியானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் 1 முதல் இந்தியா முழுவதும் கிடைக்கும்.
- 4 வருடங்களுக்கு முன்பு இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இது மும்பையில் மட்டும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பிறகு இது சென்னை மற்றும் டெல்லி-பல்வல் ஆகிய நகரங்களிலும் வெளியிடப்பட்டது.
- UTS கைபேசி செயலியைப் பயன்படுத்துவதற்கு ஒரு பயணி இரயில்நிலையத்தைச் சுற்றி 25-30 மீட்டர்கள் தொலைவிற்குள் இருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு பயணி அந்த கைபேசி செயலியின் மூலம் ஒரு சமயத்தில் நான்கு பயணச் சீட்டுகளை மட்டும் பதிவு செய்ய முடியும்.

## மெட்ரோ ஐநாக்ஸ்

- மும்பையின் மெட்ரோ ஐநாக்ஸ் தற்போது தெற்கு மும்பையின் மிகப்பெரிய சினிமாவாகும். மேலும் இது இந்தியாவின் முதல் மேற்தளத்தில் சூரிய மின்கருவி பதிக்கப்பட்ட முதல் சினிமாத் திரையரங்கமாகும்.
- இது 100 சதவிகிதம் சூரிய ஒளியால் இயங்குகின்ற இரண்டு இன்சிக்னியா அரங்குகளை (INSIGNIA) வெளியிட்டு இருக்கின்றது. இந்தியாவில் சூரிய ஒளிப்புரட்சியில் இணைந்த முதல் மல்டிபிளெக்ஸ் திரையரங்கமாக இது உருவாகியிருக்கின்றது.
- இன்சிக்னியா அரங்குகள் தனது வாழ்நாள் செயல்பாட்டு முறையின் போது 282 டன்கள் அளவிற்கு கார்பன் டை ஆக்சைடு வெளியிடுவதைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குப் பங்களிக்கின்றது.

- - - - - - - - - - - - - - -